# பெயரியல்

நன்னூல் சொல்லதிகாரத்தில் சொல்லின் இலக்கணம் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் ஆகிய ஐந்து பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

நன்னூலார் 60 நூற்பாக்களில் பெயரியலை விவரிக்கிறார். இவற்றின் மூலம் சொல்லின் பொது இலக்கணம், வழக்கு, சொற்பாகுபாடு, பெயர்ச்சொல், ஆகுபெயர், வேற்றுமை ஆகிய சொல் இலக்கணக் கூறுகளை விவாதித்துள்ளார்.

**சொல்லின் பொது இலக்கணமும் பாகுபாடுகளும்**

தமிழ் மொழி இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து பிரிவுகளை உடையது. முதல் பிரிவான எழுத்து பற்றிய விதிகளும் விளக்கங்களும் எழுத்ததிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. சொல்லதிகாரம் இரண்டாம் அதிகாரமாக அமைந்தள்ளது. பெயர், வினை, உரி, இடை எனும் நான்கு சொற்களும் தனித்தனி இயல்கள் வழி விளக்கப்படுகின்றன. இயற்சொல், திரிசொல். திசைச்சொல், வடசொல் எனும் நான்கு வகைகளும் தொடக்கத்தில் விளக்கப்பட்டுள்ளன. எல்லாச் சொற்களுக்கும் பொதுவான செய்திகள் பொதுவியலானது. இவற்றை நன்னூலாரின் சொல்லதிகார அமைப்புக் கோட்பாடுகளாகக் கொள்ளலாம்..

**சொல்லின் பொது இலக்கணம்**

ஓர் எழுத்து தனித்தோ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்தோ நின்று ஒரு பொருளைத் தருவது சொல் எனப்படும். இது ஒரு மொழி, தொடர்மொழி, பொதுமொழி என்னும் பாகுபாட்டிற்குள் அடங்கி இருதிணை ஐம்பாற் பொருளையுத் தன்னையும் மூவகை இடத்தையும் கொண்டதாய் உலக வழக்கு, செய்யுள் வழக்குகளில் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ அமைந்து பொருளைத் தருவதாகும். சொல்லின் அமைப்பு, அது பொருள் தரும் நிலை முதலானவற்றை நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் ஒரு நூற்பாவில் தொகுத்து விளக்குகிறார். இதனை,

**ஒரு மொழி தொடர்மொழி பொதுமொழி என்றா**
**இரு திணை ஐம்பால் பொருளையும் தன்னையும்**
**மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்**
**வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே** (நன் : 259)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**பொது இலக்கணங்கள்**

1. சொல் என்பது ஒரு மொழி, தொடர் மொழி, பொது மொழி என்னும் மூன்று பிரிவுகளை உடையது.

2. இருதிணை, ஐம்பால் பொருளை உணர்த்தும்

3. மூவிடங்களை உணர்த்தும்

4. பிற பொருளை உணர்த்துவதோடு தன்னையும் உணர்த்தும்

5. உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இரு நிலைகளில் பொருள் உணர்த்தும்

6. பொருளை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தும்.

**மூவகை மொழி**

மொழி என்பது சொல் என்னும் பொருள் உணர்த்தும். இம்மொழி ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.

ஒருமொழி என்பது சொல் தனித்து நின்று பொருள் உணர்த்தும்.

எ.கா – நிலம், தீ, பூ, வான்

இரண்டிற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் உணர்த்தினால் அது தொடர்மொழி எனப்படும்.

எ.கா – மலர் பறித்து மாலை தொடுத்தான்.

ஒருமொழியாக நின்று ஒரு பொருளையும் அதுவே பிரிந்து தொடர் மொழியாக நின்று பல பொருட்களையும் தருமாயின் அது பொதுமொழியாகும்.

எ.கா - இராமன் தாமரையைக் கண்டான்.

இராமன் தா மரையைக் கண்டான்

தாமரை என ஒரு மொழியாய் நிற்கும்பொழுது மலரையும் தா + மரை எனப் பிரிந்து தொடர் மொழியாய் நிற்கும்பொழுது தாவுகின்ற மான் என்னும் பொருளையும் உணர்த்துவதைக் காணலாம். எனவே இது பொதுமொழியாகும். இதனை,

**ஒரு மொழி ஒரு பொருளனவாம் தொடர் மொழி**
**பல பொருளனவாம் பொது இருமையும் ஏற்பன** (நன் : 260)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**இருதிணை**

திணை என்னும் சொல் பகுப்பை உணர்த்தும். திணை இருவகைப்படும். அவை உயர்திணை, அஃறினை ஆகும். இதனை,

திணை

உயர்திணை    அஃறிணை

என்னும் அட்டவணை வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

மக்கள், தேவர், நரகர் ஆகிய பகுப்பு உயர்திணையின் பாற்படும். பிற உயிர் உள்ளனவும் உயிர் இல்லாதனவும் அஃறிணையின் பாற்படும்.

| | | |
|---|---|---|
| எ.கா – அரசன், அமைச்சன் | - மக்கள் | - உயர்திணை |
| மும்மூர்த்திகள் | - தேவர் | |
| அரக்கர்கள் | - நரகர் | |
| மான் | - உயிர் உள்ளது | - அஃறிணை |
| வீடு | - உயிரற்றது | |

உயர்திணைப் பகுப்பினுள் வரையறை செய்யப்பட்டவை உயிர் நீப்பின் அவை அஃறிணையின்பாற் சுட்டப்பெறும்.

உயர்திணை – மனிதன் (உயிர்நிலை)

அஃறிணை – வீடு (உயிர் அற்றவை)

எனவே மக்கள், தேவர், நரகர் ஆகிய பகுப்புக்கள் உயிர் உள்ள நிலையில் உயர்திணையாகும். ஏனைய உயிர் உள்ள உயிர் அற்ற அனைத்தும் அஃறிணையாகும் என்பது அறியத்தக்கது.

**மக்கள், தேவர், நரகர் உயர்திணை**
**மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை** **(நன் :261)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**ஐம்பால்**

பால் என்பது இயல்பு அல்லது தன்மையைக் குறிக்கும். இது ஐந்து வகைப்படும். அவை உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைக்கும் உரியதாக அமைகின்றன. ஆண்பால், பெண்பால், பலர்பால். ஆகிய மூன்றும் உயர்திணைக்கு உரியன. ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டும் அஃறிணைக்கு உரியன. இதனை,

| | | |
|---|---|---|
| உயர்திணை பால் | ஆண்பால் | - அவன், மகன், வீரன் |
| | பெண்பால் | - அவள், மகள், தலைவி |
| | பலர்பால் | - அவர்கள், புதல்வர்கள் |

| | | |
|---|---|---|
| அ.ஃ.றிணை பால் | ஒன்றன்பால் | - ஆடு, மாடு, அது |
| | பலவின்பால் | - ஆடுகள், மாடுகள், அவை |

இவ்அட்டவணைகள் எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கின்றன.

**ஆண் பெண் பலர் என முப்பாற்று உயர்திணை** (நன் : 262)

**ஒன்றே பல என்று இருபாற்று அ.ஃ.றிணை** (நன் : 263)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**திணை பால்களுக்குப் புறநடை**

உயர்திணை சார்ந்த ஆணும் பெண்ணும் தத்தமது தன்மையை விட்டு பிற பால் தன்மையை விரும்பும் போது ''பேடு'' ஆகின்றனர். அவர்களில், பெண் தன்மை குறைந்து ஆண் தன்மை மிகுந்து காணப்படும் பேடுகளைப் பேடன் அல்லது அலி என அழைப்பர். இத்தன்மை உடையோர் ஆண்பால் உயர்திணை முடிவினைப் பெறுவர்.

எ.கா – பேடன் வந்தான், அலி வந்தான்,

ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்து காணப்படும் பேடுகளைப் பேடி என அழைப்பர். இத்தன்மை உடையோர் பெண்பால் உயர்திணை முடிவினைப் பெறுவர்.

எ.கா – பேடி வந்தாள்

இவ்வாறு ஆண்பால், பெண்பால் முடிவுகளைப் பெற்று வந்த பேடுகள் பொதுநிலையில் குறிக்கப்படும்பொழுது அ.ஃ.றிணை முடிவினைப் பெறும்.

எ.கா – அலி வந்தது, பேடி வந்தது

எனவே ஆண்தன்மை, பெண்தன்மை மிகுந்து அமையும் பேடுகள் பொதுநிலையில் குறிக்கப்படும் பொழுது அ.ஃ.றிணை முடிவைப் பெறும். இதனை,

**பெண்மைவிட்டு ஆண்அவா வுவபேடு ஆண்பால்**
**ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்**
**இருமையும் அ.ஃ.றிணை அன்னவும் ஆகும்.** (நன் : 264)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**மூவிடச் சொற்கள் திணைபால் உணர்த்தும் முறை**

சொற்கள் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை வெளிப்படையாக உணர்த்தும்.

எ.கா- அவன் வந்தான்

இத்தொடரில் அவன் என்பது உயர்திணை ஆண்பால் படர்க்கைப் பெயர் ஆகும். இது உயர்திணை ஆண்பால் படர்க்கை வினைமுற்றினைக் (வந்தான்) கொண்டு முடிந்துள்ளது.

எ.கா - அது வந்தது

இத்தொடரில் அது என்பது அஃறிணை ஒன்றன்பால் படர்க்கைப் பெயர் ஆகும். இது அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்றினைக் (வந்தது) கொண்டு முடிந்துள்ளது. இவ்வாறு படர்க்கை இடத்தைச் சுட்டிக்காட்டி அமையும் தொடர்கள் மட்டுமே திணைபால் பகுப்பைத் தெளிவுடன் காட்டும்.

படர்க்கை இடம் அல்லாத தன்மை, முன்னிலை இடங்களைச் சுட்டும் பெயர்ச்சொல்லும் வினைமுற்றும் மேற்குறிப்பிட்டது போன்று திணை, பால் பகுப்புகளை உணர்த்தாது. ஆனால் அவை ஒருமை, பன்மை எண்களை மட்டும் குறித்து நிற்கும்.

எ.கா – நீ நடந்தனை - முன்னிலை ஒருமை

நீவீர் நடந்தீர் - முன்னிலைப் பன்மை

யான் நடப்பேன் - தன்மை ஒருமை

யாம் நடப்போம் - தன்மைப் பன்மை

மூவிடங்களுள் படர்க்கை இடம் மட்டுமே திணை, பால் பகுப்பைக் காட்டும். தன்மை, முன்னிலை, இடங்கள் ஒருமை, பன்மை எண்களை மட்டும் குறிக்கும். இக்கருத்துக்களை

**படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின்**
**பெறப்படும் திணைபால் அனைத்தும் ஏனை**
**இடத்தவற்று ஒருமைப் பன்மைப் பாலே** (நன் : 265)

என்னும் நூற்பா வாயிலாக விவரிக்கலாம்.

**மூவிடங்கள்**

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடங்கள் மூன்றாகும்.

எ.கா - யான் வந்தேன் - இத்தொடர் கூறுபவரை மட்டும் குறிக்கும்.

நீ வந்தாய் - இத்தொடர் கூறுபவரின் எதிரில் நிற்பவரை மட்டும் குறிக்கும்.

அவன் வந்தான் - இத்தொடர் கூறுபவரையோ எதிரில் நிற்பவரையோ குறிக்காது. அயலிடத்திலுள்ளவரை மட்டும் குறிக்கும்.

எனவே சொற்களைப் பயன்படுத்தும் நிலையில் அவற்றை தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவகை இடங்களில் அடக்கலாம்.


**தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே** (நன் : 266)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

## வழக்கு

ஒரு பொருளுக்கு எச் சொல் அமைந்ததோ அச்சொல்லாலேயே பொருட்களை வழங்கும் முறையை வழக்கு என்பர். அதனை இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இரு நிலைகளில் விளக்கியுள்ளார் நன்னூலார்.


மரம் என்பது தொன்று தொட்டு எவ்வாறு வழங்கப்பட்டு வந்ததோ அதை அவ்வாறே இன்றும் வழங்கி வருவதே வழக்கு ஆகும். வழக்கின் இரு நிலைகளை




இவ்அட்டவணை வாயிலாக அறியலாம். இவற்றை அறிவது அவசியம்.

### இயல்பு வழக்கு

ஒரு பொருளுக்கு எச்சொல் அமைந்ததோ அச்சொல்லாலேயே அப்பொருளை இன்றும் இயல்பாக வழங்கி வருவது இயல்பு வழக்கு ஆகும். இது மூன்று பிரிவுகளை உடையது. அவற்றை




இவ்அட்டவணை வாயிலாக அறியலாம்.

1. **இலக்கணமுடையது** : அனைவராலும் எளிதாக பொருள் புரிந்து கொள்ளக் கூடிய எவ்வித மாற்றமும் இல்லாது தொன்று தொட்டு வழங்கி வருவதாகும். இது இலக்கண நெறி வழுவாத இயல்புடையதாகும்.

எ.கா - நிலம், தண்ணீர், காற்று, தென்றல்

2. **இலக்கணப்போலி** : இலக்கணம் உடையது போலத் தோன்றும். உண்மையில் இலக்கண நெறியில் அமையாதது. ஆனால் பொருள் மாறாது அமைவது ஆகும்.

எ.கா - இல்முன், நகர்ப்புறம், கோவில் என்பன முறையே

மூன்றில், புறநகர், கோயில் என மாற்றி வழங்கப்படுவதைக் காணலாம்.

தொன்று தொட்டு வழங்கி வந்த சொற்கள் பொருள் மாறாது மாற்றம் பெற்று வழங்குதல் உண்டு. இது இலக்கணமுடையது போலத் தோன்றி இலக்கணமற்றிருப்பதினாலும் பொருள் மாறாதத் தன்மையினாலும் இத்தகைய இயல்புடையன இலக்கணப்போலி ஆகும்.

3. **மரூஉ** : வழக்கு மாறி வழங்கும் இயல்புடைய, ஆயினும் பொருள் மாறாதத் தன்மை உடைய சொற்கள் மரூஉ சொற்கள் ஆகும்.


எ.கா - என் தந்தை என்பது எந்தை என்றும்

சோழ நாடு என்பது சோணாடு என்றும்

இலக்கண நெறி சிதைந்து மருவி வந்துள்ளது. எனவே இத்தகைய இயல்புடையன மரூஉ ஆகும்.

**தகுதி வழக்கு**

ஒரு பொருளுக்குரிய பெயரை அதற்கு இட்டு வழங்குதல் சிறப்பாகாது எனக் கருதி தகுதியான வேறொரு சொல்லால் குறிப்பிடுவது வழக்காகும். இது பொருளின் தகுதி அடிப்படையில் வழங்கப்படுவதால் தகுதி வழக்கு எனப்படும். இது மூன்று பிரிவுகளை உடையது. இதனை




என்னும் அட்டவணை வாயிலாக அறியலாம்.

**இடக்கர் அடக்கல்**

சபையில் கூறத் தகாதவற்றை மறைத்து, பண்பான வேறு சொல்லால் கூறுதல். இடக்கான சொற்களை அடக்கி நல்ல சொற்களைப் பயன்படுத்துவது இடக்கர் அடக்கல் ஆகும்.

எ.கா - மலம் கழுவி வந்தான் என்னும் சொற்றொடரை

கால் கழுவி வந்தான் என பண்பான சொற்களால் கூறுவதாகும்.

**மங்கலம்**

அமங்கலச் சொற்களை விடுத்து, மங்கலச் சொல்லாக மாற்றிக் கூறுவது மங்கலம் ஆகும்.

எ.கா - விளக்கை அணை என்பதை

விளக்கைக் குளிர வை என கூறுவதாகும்.

**குழூஉக்குறி**

ஒரு குழுவினர் அல்லது குறிப்பிட்ட இனத்தவர் ஒரு பெருளை அதற்குரிய சொல்லால் கூறாது, அவர்களுக்கு மட்டும் புரியுமாறு குறியீடாக மாற்றிக் கூறுவது குழூவுக்குறி ஆகும்.

எ.கா - விளம்பி என்பது

கள்ளைக் குறிக்கும் சொல் ஆகும். இதனை வேடர் மட்டுமே அறிவர்.

பறி என்ன விலை? என்பதில்

பறி என்பது பொன்னைக் குறிக்கும் சொல் ஆகும். இதனை பொற்கொள்ளர் மட்டுமே அறிவர்.

**இலக்கணம் உடையது இலக்கணப்போலி**

**மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்**

**இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக்குறி**

**எனும்முத் தகுதியோடு ஆறாம் வழக்கியல்** (நன் : 267)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**செய்யுள் வழக்கு**

உயிருக்கு இடமாக அமையும் உடல் இரத்தம், இறைச்சி, நரம்பு, எலும்பு, தோல், மூளை, இந்திரியம் என ஏழு தாதுக்களால் ஆனது. அது போல் பல்வகைச் சொற்களால் ஒரு பொருள் உணர்த்துமாறு அழகுறச் செய்வது செய்யுள் ஆகும். அவ்வாறே பொருளுக்கு இடனாக அமையும் செய்யுள் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களைக் கொண்டு அமையும். உடல் இயற்கை மற்றும் செயற்கையாக அழகுபடுத்தப்படுகிறது. அவ்வாறே செய்யுளும் சொல்லணி, பொருளணி ஆகியவற்றால் அழகுபடுத்தப்படுகிறது. உயிரற்ற உடல் அழிவது போன்று பொருளற்ற செய்யுளும் அழிந்தொழியும். எனவே செய்யுள் என்பது மேற்குறித்த நால்வகைச் சொற்களும் சொல்லணியும் பொருளணியும் கொண்டு அமைக்கப்படுவனவாகும்.

**பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல்போல் பல**

**சொல்லால் பொருட்கு இடனாக உணர்வினில்**

**வல்லோர் அணிபெறச் செய்லன செய்யுள்** (நன் : 268)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**குறிப்பால் பொருள் தருவன**

சொற்கள் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ பொருள் உணர்த்துவனவாகும். எனவே சொற்கள் பொருள் தரும் முறைகள் இரண்டாகும்.

1. வெளிப்படை - நேரடியாகப் பொருள் தருவது வெளிப்படை ஆகும்.
எ.கா தலை, கண், வந்தான்.

2. குறிப்பு - வெளிப்படையாகப் பொருள் தராமல் ஏதெனும் ஒரு நுட்பக் குறிப்பினால் பொருள் தருவதாகும். குறிப்பால் பொருள் தரும் சொற்களை நன்னூலார் எட்டுப் பிரிவுகளில் விளக்கியுள்ளார். அவை ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழித்தொகை, குறிப்பு வினை, முதற்குறிப்பு, தொகைக் குறிப்பு என்பனவாகும். அவற்றை அறிவது அவசியம்.

**ஒன்றொழி பொதுச் சொல்**

இவர்க்கு மஞ்சள், குங்குமம் நிலைக்க வேண்டும். ‘இவர்க்கு’ என்பது ஆண்பாலையும் பெண்பாலையும் குறிக்கும் பொதுச்சொல் ஆகும். ஆனால் ‘மஞ்சள், குங்குமம்’ பெண்களுக்கே உரிய மங்கலப் பொருட்களாகும். எனவே இவர்க்கு என்னும் சொல் ஆண்பாலை உணர்த்தாது பெண்பாலை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு ஒரு பொதுச்சொல் ஒரு பாலைக் குறிக்காது, தொடர்புடைய மற்றொரு பாலைக் குறிப்பதால் இது ஒன்றொழி பொதுச் சொல் எனப்படும்.

எ.கா - மாடுகள் கறந்தன

கறந்தன என்பதால் காளையை ஒழித்து மாடுகள் என்பது பசுவைக் குறித்தது.

**விகாரம்**

விகாரம் என்பது இயல்பிலிருந்து மாறி அமைந்து பொருள் மாறாமல் நிற்பதாகும். இது தோன்றல், திரிதல், கெடுதல், வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என ஒன்பதாக அமையும். விகாரச்சொற்கள் குறிப்பால் பொருளை உணர்த்தும் தன்மை உடையன.

எ.கா - மரை பூத்து

மரை என்பது முதற்குறை விகாரமாகி தாமரையைக் குறித்தது.

**தகுதி**

நன்மக்களிடத்தில் சொல்லத் தகாத ஒன்றினைத் தகுதியான சொல்லால் குறித்துப் பொருள் உணர்த்துதல் தகுதி ஆகும்.

எ.கா - சுடுகாட்டை - நன்காடு என தகுதியான ஒரு சொல்லால் குறிக்கப்பெறுவதாகும்.

**ஆகுபெயர்**

ஒன்றன் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொன்றிற்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயர் ஆகும்.

எ.கா - கம்பனைக் கற்றேன்

கம்பன் என்பது இங்கு அவனது படைப்பைக் குறித்து, ஆகுபெயர் ஆனது.

**அன்மொழித்தொகை**

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை ஆகிய ஐந்து தொகைநிலைத் தொடர் மொழிகட்குப் புறத்தே நின்று அவையல்லாத பிறமொழிகள் தொக்கி வருவது அன்மொழித்தொகை ஆகும்.

எ.கா - வேல்விழி ஆடினாள்

வேல் போன்ற விழியை உடைய பெண் ஆடினாள் என அமைந்து ஆடும் பெண்ணைக் குறித்தது. எனவே இது உவமைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையானது.

**குறிப்பு வினை**

பெயர்ப்பொருளைக் குறிக்காது வினைக் குறிப்புப் பொருளைக் குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினை ஆகும்.

எ.கா - நல்லவன்

ஒருவன் முன்பு தீயவனாய் இருந்திருக்கலாம் எனவும் காலம் குறிப்பால் உணர்த்தப்பட்டும் அமைந்து குறிப்புப் பொருளை உணர்த்துகிறது. எனவே இது குறிப்புவினை ஆகும்.

**முதற் குறிப்பு**

முதற்பொருளான நூலையும் அதனுள் அடங்கியுள்ள செய்யுளையும் குறிப்பது முதற் குறிப்பு ஆகும்.

எ.கா - அகர முதல

அ முதலான உயிர், மெய் எழுத்துக்களைக் குறித்து முதற்குறிப்பானது.

**தொகைக் குறிப்பு**

குறிப்பால் பொருள் உணர்த்தும் தொகைச் சொற்கள் தொகைக் குறிப்பு ஆகும்.

எ.கா - தமிழ் மூன்றும் தா

இச் சொற்றொடர் இயல், இசை, நாடகம் எனத் தமிழ் மூன்று ஆகும் என்பதை உணர்த்துகிறது. எனவே இது தொகைக் குறிப்பு ஆகும்.

**பிற குறிப்பு**

மேற்குறிப்பிட்ட இவை ஏழும் குறிப்பால் பொருளை உணர்த்தவல்லன. இவை தவிரத் தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று, விணையாலனையும் பெயர், பெயரெச்சம், வினையெச்சம், செய்யும் என்னும் வினைமுற்று, அன்று இன்று என்னும் வினையெச்சக் குறிப்பு, கேட்குந போலவும் இயக்குந போலவும் இயற்று போலவும் முதலிய அஃறினையிடத்துச் சொல்லப்படுவன போலவும் குறிப்பால் பொருள் உணர்த்தும் சொற்கள் ஆகும். இவை அல்லாதன வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்.

**ஒன்றொழி பொதுச் சொல் விகாரம் தகுதி**
**ஆகுபெயர் அன்மொழி வினைக் குறிப்பே**
**முதல் தொகை குறிப்போடு இன்ன பிறவும்**
**குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை (நன் : 269)**

என்னும் நூற்பா வாயிலாக நன்னூலார் இதனை விவரிக்கிறார்.

**சொல் பாகுபாடு**

பொருளுக்கு இடமாக அமையும் செய்யுள் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நால்வகை சொற்களால் உருவாகும். இவற்றுள் இயற்சொல், திரிசொல் ஆகியவற்றை சிறப்பு நிலையிலும் திரிசொல், வடசொல் ஆகியவற்றை சிறப்பற்ற நிலையிலும் பகுத்துக் கூறுவர். திசைச்சொல், திரிசொல் ஆகியவற்றின் சிறப்பின்மையை மனதில் கொண்டு இயற்சொல்லையும் திரிசொல்லையும் இலக்கண முறைக்கேற்ப பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகிய நான்கு வகைகளுக்குள் அடக்குவர். எனவே சொல் இத்தகைய நான்கு வகைகளை உடையது எனக் கொள்ளலாம். சிறப்பு நிலையில் குறிப்பிடப்படும் இயற்சொல், திரிசொல் ஆகியவற்றின் அடிப்படையில் நான்கு வகைச் சொற்களும் எட்டாக விரியும். இதனை,

பெயர்ச்சொல் - பெயர் இயற்சொல்
பெயர்திரிசொல்

வினைச்சொல் - வினை இயற்சொல்
வினை திரிசொல்

இடைச்சொல் - இடை இயற்சொல்
இடை திரிசொல்

உரிச்சொல் - உரி இயற்சொல்

உரி திரிசொல்

என்னும் அட்டவணை வாயிலாக விளங்கிக்கொள்ளலாம். இவற்றுடன் சிறப்பற்ற நிலையில் அமையும் திசைச்சொல், வடசொல் இணைந்து சொல்லின் வகை பத்தாக விரியும். ஆயினும் சொல்லின் வகைகளாக மேற்குறித்த பெயர், வினை, இடை, உரி எனும் நான்கையே கொள்வர். இதனை,

**இயற்சொல், திரிசொல், இயல்பில் - பெயர் வினை**
**என இரண்டும் ஆகும் இடை உரி அடுத்து**
**நான்கும் ஆம் திசை வட சொல் அணுகாவழி"** (நன் : 270)

என்னும் நூற்பா சொல் வகைகளைத் தொகுத்து உணர்த்துகிறது.

**இயற்சொல்**

- இயற்சொல் என்பது அனைவராலும் பொருள் விளங்க ஏற்றுக் கொள்ளும் சொற்களாகும்.
- செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொல்லாக இருக்கும்
- வடிவமோ பொருளோ திரியாது விளங்கும்
- கற்றோராலும் மற்றோராலும் எளிதில் பொருள் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கும்.

எ.கா - பெயரியற் சொல் - மண், கல்
வினையியற் சொல் - வந்தான், நடந்தது
இடையியற் சொல் - மற்று, ஒன்று, ஐ
உரியியற் சொல் - உறு புகழ்

**செந்தமிழ் ஆகித் திரியாது யார்க்கும்**
**தம் பொருள் விளக்கும் தன்னே இயற்சொல்** (நன் : 271)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**திரி சொல்**

கற்றவர்களால் மட்டும் பொருள் உணரக் கூடிய அருமை உடைய சொற்கள் திரி சொல் எனப்படும். திரி சொல் என்பது இயற்சொல்லில் இருந்து திரிந்த சொற்கள் ஆகும். இத்திரி சொல் இரண்டு வகைப்படும்.

ஒரு பொருள் குறித்த பல சொல்

பல பொருள் குறித்த ஒரு சொல்

எ.கா - மலை, குன்று, வரை - இவை ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரி சொல்

படர்ந்தான், சென்றான் - இவை போயினான் என்னும் ஒரு பொருள் குறித்த பல வினைத்திரிச்சொல்

சேறும், வருதும் - றும், தும் விகுதிகள் தன்மை, பன்மை, எதிர்காலம் என ஒரு பொருள் குறித்த பல இடை திரிசொல்

சால. தவ, நனி, உறு கூர், கழி - இவை மிகுதி என்னும் ஒரு பொருள் குறித்த பல உரித்திரி சொல்.

வாரணம் - யானை, கோழி, சங்கு எனப் பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்

வரைந்தான் - கொண்டான், நீங்கினான் எனப் பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்

கொல் - ஐயம், அசைநிலை, என பல பொருள் குறித்த ஒரு இடை திரிசொல்

கடி - காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு, மணம் எனப் பல பொருள் குறித்த ஒரு உரித்திரிசொல்

எனவே ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாகியும் இயற்சொல் போலின்றி அரிதாக பொருள் அறியப்படும் சொல்லாக திரிசொல் விளங்குவதைக் காணலாம். இதனை,

**ஒரு பொருள் குறித்த பல சொல் ஆகியும்**

**பல பொருள் குறித்த ஒரு சொல் ஆகியும்**

**அரிதுணர் பொருளை திரி சொல் ஆகும். (நன் : 272)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**திசைச் சொல்**

செந்தமிழ் நாடு பண்டைய நாளில் பன்னிரு நிலங்களைத் தன்னுள் அடக்கியதாகக் காணப்பட்டது. அப்பன்னிரு நிலங்களிலுள்ள மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த பல்வேறு சொற்களைக் கையாண்டனர். அச்சொற்கள் செந்தமிழ் நாட்டு மக்களாலும் பயன்படுத்தப்பட்டு வந்தன. இது தவிர்க்க முடியாதது. அவ்வாறு பன்னிரு நில மக்களால் பயன்படுத்ப்பட்ட சொற்கள் செந்தமிழ் நாட்டில் பயன்படுத்தப்படும்பொழுது அவை திசைச் சொற்கள் என்றழைக்கப்பட்டன.

பன்னிரு நிலம் என்பது தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா வேணாடு, பூழி பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலாடு, புனல் நாடு முதலியனவாகும்.

| பன்னிரு நிலம் | செந்தமிழ்ச்சொல் | பன்னிருநிலம் சொல் |
|---|---|---|
| தென்பாண்டி நாடு | பசு | பெற்றம் |
| குட்டநாடு | தாய் | தள்ளை |
| குடநாடு | தந்தை | அச்சன் |
| கற்காநாடு | வஞ்சர் | கையர் |
| வேணாடு | தோட்டம் | கிழார் |
| பூழிநாடு | சிறுகுளம் | பாழி |
| பன்றிநாடு | வயல் | செறு |
| அருவாநாடு | சிறுகுளம் | கேணி |
| தலை நாடு | புளி | எகின் |
| சீதநாடு | தோழன் | எலுவன் |
| மலைநாடு | நீர் | வெள்ளம் |
| சோழநாடு | தாய் | ஆய் |

தமிழ்நாடு தவிர்த்த பிற பதினேழு நாடுகளின் சொற்களும் செந்தமிழ் நாட்டில் பயன்படுத்தப்பட்டன. இவையும் திசைச் சொற்களே. சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், சுங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம் முதலியன 17 நாடுகள் ஆகும்.

| | | |
|---|---|---|
| அந்தோ | (ஐயோ) | - சிங்களச்சொல் |
| சிக்குதல் | (அகப்படுதல்) | - கன்னடச்சொல் |
| செப்புதல் | (சொல்லுதல்) | - தெலுங்குச்சொல் |
| கொக்கு | (மாமரம்) | - துளுவச்சொல் |
| மேஜை, ராஜா, வக்கீல் | | - உருதுச் சொற்கள் |
| அலமாரி, பாதிரி, பறங்கி | | - போர்த்துக்கீசிய சொற்கள் |
| பொன், பென்சில், ரெயில், ரோடு | | - ஆங்கிலச்சொல் |

எனவே பன்னிரு நிலச் சொற்களும் பதினேழு நாட்டுச் சொற்களும் பிறவும் தமிழ்நாட்டில் வழக்கிலிருந்தமையால் இது திசைச்சொல் வழக்கு எனப்பட்டது. இதனை,

**செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்திலும்**

**ஓன்பதிற்று இரண்டினில் தமிழ் ஒழி நிலத்தினும்**

**தம் குறிப்பினவே திசைச் சொல் என்ப (நன் :273)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**வட சொல்**

தமிழில் கலந்து வழங்கும் வட மொழிச் சொற்களை வட சொல் என்பர். வட மொழி என்பது சமஸ்கிருதம் மொழி ஆகும். வடமொழியும் தமிழ் மொழியும் ஒன்றுக்கொன்று கலந்து தொன்றுதொட்டே வழக்கில் இருந்துள்ளன. அதற்குக் காரணம் இரு மொழிகளுக்கும் பொதுவாக அமைந்த எழுத்துக்களாகும்.

வடமொழியில் உயிரெழுத்துக்கள் 16 ஆகும். அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய பத்து எழுத்துக்களும் இருமொழிக்கும் பொதுவாய் அமையும்.

வடமொழி மெய்யெழுத்துக்கள் 37 ஆகும். க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ள ஆகிய பதினைந்து மெய்யெழுத்துக்களும் இருமொழிக்கும் பொதுவாக அமையும். இவை ஒழிந்த 25 எழுத்துக்கள் வடமொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்களாகும். இவ்வாறு வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவான எழுத்துக்களால் அமைந்த சொற்களும் சிறப்பெழுத்துக்களால் அமைந்த வடசொற்களும் தமிழில் இடம் பெறலாயின.

இவ்வாறு தமிழில் இடம்பெற்ற வட சொற்களைத் தற்சமம், தற்பவம் என இருவகைப்படுத்தினர். இதனை,

**வடசொல்**

**தற்சமம் தற்பவம்**

என்னும் அட்டவணை வாயிலாக அறியலாம். இவற்றை விளங்கிக்கொள்வது அவசியம்.

**தற்சமம்**

இருமொழிக்கும் உரிய பொது எழுத்துக்களாகி மாற்றமின்றித் தமிழில் வந்து வழங்கும் வட சொற்கள் தற்சமம் எனப்படும்.

எ.கா - கமலம், காரணம், குங்குமம்

இச்சொற்கள் வடமொழி, தமிழ்மொழி இரண்டிற்கும் பொதுவான எழுத்துக்களால் அமைந்த சொற்கள் ஆகும்.

**தற்பவம்**

வடமொழிக்குரிய சிறப்பெழுத்துக்களோ பொதுவும் சிறப்புமாகிய இருவகை எழுத்துக்களோ ஆகி தமிழ் எழுத்துக்களின் ஒலிக்கு ஏற்பத் திரிந்து வழங்கும் வட சொற்கள் தற்பவம் ஆகும்.

எ.கா - ஸஹி (சகி),

வடமொழிக்கே உரிய சிறப்பு எழுத்தால் அமைந்த சொல் ஆகும்.

ஹரி, ஜெபம், பூஜை

ஆகிய சொற்கள் வடமொழிக்குரிய பொது மற்றும் சிறப்பு எழுத்துக்களாலாகி இருவகை மொழிக்கும் பொதுவாக அமைந்துள்ளது. இது தமிழில் அரி, செபம், பூசை என வழங்கப்படும். இத்தன்மை உடைய வட சொற்களை தற்பவம் என்பர். இதனை,

**பொது எழுத்தானும் சிறப்பு எழுத்தானும்**
**ஈரெழுத்தானும் இயைவன வடசொல்** (நன் : 274)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**பெயர்ச்சொல்**

கண்ணால் காணப்படுவதாகவோ கருத்தால் உணரப்படுவதாகவோ விளங்கும் பொருட்களைக் குறிக்கப் பயன்படும் சொல் பெயர்ச்சொல் ஆகும். ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். இப்பெயர்கள்,

- இடுகுறியாகவும் காரணமாகவும் வரும்
- இடுகுறி காரணம் இரண்டிலும் தொன்று தொட்டு வரும் மரபுப் பெயராகவும் புதிய ஆக்கப் பெயராகவும் வரும்.
- காலம் காட்டாது (விதி விலக்காக வினையால் அணையும் பெயர் மட்டும் காலம் காட்டும்
- வேற்றுமை உருபுகள் வந்து சேர இடமாகி நிற்கும்
- திணை, பால், இடம் முதலியவற்றை ஏற்று நிற்கும்.

ஆண், பெண், மரம், மண் - இப்பெயர்கள் தொன்று தொட்டு மரபின் அடிப்படையில் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. இவை இடுகுறி மரபுப் பெயர் ஆகும்.

தந்தை தன் மகனுக்கு முருகன் எனப் பெயரிடுவது - இது காலம் காலமாக நடந்து வருவதால் இடுகுறி ஆக்கப் பெயர் எனப்படும்.

பறவை - இப்பெயர் தொன்றுதொட்டு காரணத்தின் அடிப்படையில் பெயர் பெறுகிறது. எனவே

இது காரண மரபுப் பெயர் ஆகும்.

பொன்னன், வானவூர்தி - இப்பெயர்கள் ஏதோ ஒரு காரணத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பெயர்களாகும். இது காரண ஆக்கப் பெயர் ஆகும்.

இவ்வாறு இடுகுறியின் அடிப்படையிலும் காரணக்குறியின் அடிப்படையிலும் தொன்று தொட்டும் ஆக்கப்பட்டும் அமையும் சொற்கள் பெயர்ச்சொற்கள் எனப்படும். இவை இலக்கண நிலையில் பின்வரும் இயல்புகளை உடையது.

**காலம் காட்டாது**

பெயர்ச்சொற்கள் காலம் காட்டாது. ஆனால் வினையாலணையும் பெயர் காலம் காட்டும்.

நடத்துவன, நடந்தானை - இவ்வினைச் சொற்கள் ஒரு பெயரைச் சார்ந்து அமைகின்றன. இவை முறையே எதிர்காலத்தையும் இறந்த காலத்தையும் காட்டுகின்றன. இவ்வாறு ஒரு வினைச்சொல் பெயரைச் சார்ந்து நின்று காலத்தை உணர்த்துமாயின் அது வினையாலணையும் பெயர் எனப்படும். எனவே வினையாலணையும் பெயர்கள் மட்டுமே காலம் காட்டும் என்பதையும் ஏனைய பெயர்கள் காலம் காட்டாது என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

**வேற்றுமை ஏற்கும்**

பெயர்ச்சொற்கள் ஒன்று முதல் எட்டு வேற்றுமைகளை ஏற்று நிற்கும்.

இராமனைக் கண்டான் - ஐ இரண்டாம் வேற்றுமை உருபு

இராமனால் வீழ்ந்தான் - ஆல் மூன்றாம் வேற்றுமை உருபு

இவ்வாறு பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்று அமையும்.

**இருதிணை உணர்த்தும்**

பெயர்ச்சொற்கள் உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகளையும் உணர்த்தும்.

இராமன், சீதை - உயர்திணை

மரம், குரங்கு - அஃறிணை

இவ்வாறு பெயர்ச்சொற்கள் இரு திணைகளை வெளிப்படுத்தி அமையும்.

**ஐம்பால் உணர்த்தும்**

பெயர்ச்சொற்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், ஆகிய ஐந்து பால்களையும் வெளிப்படுத்தும்.

அவன் - ஆண்பால்

அவள் - பெண்பால்

அவர் - பலர்பால்

அது - ஒன்றன்பால்

அவை - பலவின்பால்

இவ்வாறு பெயர்ச்சொற்கள் ஐம்பாலையும் உணர்த்தும் தன்மை உடையன.

**மூவிடம் காட்டும்**

பெயர்ச்சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களை காட்டி அமையும்.

நான் - தன்மையிடம்

நீ - முன்னிலையிடம்

அவன் - படர்க்கையிடம்

இவ்வாறு பெயர்ச்சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களைச் சார்ந்து அமையும்.

பெயர்ச் சொல்லின் பொது இலக்கணத்தை,

**இடுகுறி காரணம் மரபோடு ஆக்கம்**

**தொடர்ந்து தொழில்அல காலம் தோற்றா,**


**வேற்றுமைக்கு இடனாய், திணைபால் இடத்துஒன்று**

**ஏற்பவும் பொதுவம் ஆவன பெயரே (நன் : 275)**

என்னும் நூற்பா விளக்குகிறது.

**அறுவகைப் பெயர்**

பெயர் ஆறு வகைப்படும். இதனை,




என்னும் அட்டவணை விவரிக்கின்றது.

கல், மண், கம்பன் முதலிய பெயர்கள் பொருட்களை உணர்த்துவன. ஆதலின் இவை பொருட்பெயர் ஆகும்.

கானம், வானம், வீடு, மதுரை முதலிய பெயர்கள் இடங்களை உணர்த்துவன. ஆதலின் இவை இடப்பெயர் ஆகும்.

திங்கள், ஆண்டு, சித்திரை முதலிய பெயர்கள் காலத்தை உணர்த்துவன. எனவே இவை காலப்பெயர் ஆகும்.

பூ, இலை, வேர், கண் முதலிய பெயர்கள் சினைகளை (உறுப்பு) உணர்த்துவன. ஆதலின் இவை சினைப் பெயர் ஆகும்.

நன்மை, தீமை, அன்பு, அழகு முதலிய பெயர்கள் பண்புகளை உணர்த்துவதால் பண்புப் பெயர் ஆகும். இதனை குணப்பெயர் என்றும் அழைப்பர்.

பாடல், ஆடல், எழுதுதல், படித்தல் முதலியன தொழிலை உணர்த்துவதால் தொழிற்பெயர் ஆகும்.

எனவே பெயர்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுவகைப்படும்.

**பெயர்ச்சொல்லின் வகைகள்**

1. உயர்திணை ஆண்பால் பெயர்
2. உயர்திணை பெண்பால் பெயர்
3. உயர்திணை பலர்பால் பெயர்
4. அஃறிணை ஒன்றன்பால் பெயர்
5. அஃறிணை பலவின்பால் பெயர்

6. பால் பகா அஃறிணைப் பெயர்

7. இருதிணைப் பொதுப் பெயர்

8. தொழிற் பெயர் - வினையாலணையும் பெயர்

9. ஆகுபெயர்

முதலியன பெயர்ச்சொல்லின் வகைகள் ஆகும்.

**உயர் திணை ஆண்பால் பெயர்கள்**

தமன், நுமன், வெற்பன், கார்த்திகையான், நெடுங்கையான். பெரியன், ஓதுவான், அவன், இவன், எவன், பிறன் ஆகிய பெயர்கள் 'ன' கர ஈறு பெற்ற உயர்திணைப் பெயர்களாகும். இவை 'ன' கர ஈறு பெற்றுள்ளமையால் ஆண்பாலை உணர்த்துகின்றன. இவையாவும் உயர் திணை ஆண்பால் பெயர்களாகும். இவ்வாறு 'ன' கர ஈறு பெற்று உயர்திணையை உணர்த்தும் ஆண்பால் பெயர்கள் அறுவகைப் பெயர்களின் அடிப்படையிலும் சுட்டு, வினா, பிற, மற்று ஆகிய நான்கின் அடிப்படையிலும் இடம்பெறும்.

**பொருட்பெயர்**

பொருட்பெயர் நிலையில் அமையும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள் கிளை, எண், குழு ஆகிய மூன்று பகுப்புகளில் இடம்பெறும். இவை 'ன' கர ஈறு பெற்று அமையும்.

எ.கா- தமன், நமன், நுமன் - கிளையால் வருபெயர்

ஒருவன் - எண்ணால் வருபெயர்

சங்கத்தான், அவையத்தான் - குழுவால் வருபெயர்

இம்மூன்றையும் தவிர பொன்னன், தடியன், முடியன் என்பனவும் 'ன' கர ஈறு பெற்றுப் பொருளை உணர்த்தும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள் ஆகும்.

**இடப்பெயர்**

இடப்பெயர் நிலையில் அமையும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள் திணை, தேயம், ஊர், வான், அகம், புறம் என்னும் பிரிவுகளில் 'ன' கர ஈறு பெற்று அமையும்.

எ.கா- வெற்பன் ( குறிஞ்சி), ஆயன் - திணையால் வருபெயர்

ஊரன், சீனத்தான் - ஊரால் வருபெயர்

மலைநாட்டான் - தேயத்தால் வருபெயர்

வானத்தான், அகத்தான், புறத்தான் - வான், அகம், புறம் இவற்றால் வருபெயர்

இவை தவிர விண்ணூலான், பூதலத்தான் என்பனவும் 'ன' கர ஈறு பெற்றுப் பொருளை உணர்த்தும் உயர்திணை ஆண்பால் இடப்பெயர்கள் ஆகும்.

**காலப்பெயர்**

காலப்பெயர் நிலையில் அமையும் உயர்திணை ஆண்பாற்பெயர்கள் ஆண்டு, மாதம், நாள், மீன் ஆகியவற்றின் அடிப்படையில் 'ன' கர ஈறு பெற்று அமையும்.

எ.கா- மூவாண்டினன் - ஆண்டால் வருபெயர்

வேனிலான் - பருவத்தால் வருபெயர்

கார்த்திகையான் - மாதத்தால் வருபெயர்

ஓணத்தான் - நாளால் வருபெயர்

ஆதிரையான் - மீனால் வருபெயர்

**சினைப்பெயர்**

சினைப்பெயர் நிலையில் அமையும் உயர்திணை ஆண்பாற்பெயர்கள் புயம், மயிர், மார்பு, கண், காது ஆகியவற்றின் அடிப்படையில் 'ன' கர ஈறு பெற்று அமையும்.

எ.கா- எண் தோளான் - புயத்தால் வருபெயர்

கருங்குஞ்சியான் - மயிரால் வருபெயர்

திடமார்பன் - மார்பால் வருபெயர்

வெள்ளிக்கண்ணன் - கண்ணால் வருபெயர்

வட்டக்காதன் - காதால் வருபெயர்

இவை தவிர கரைமிடற்றான், கருங்கையன், குறுந்தாளன், என்பனவும் 'ன' கர ஈறு பெற்று அமையும் உயர்திணை ஆண்பாற் சினைப் பெயர்களாகும்.

**பண்புப் பெயர்**

பண்புப் பெயர் நிலையில் அமையும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள் அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், கதி, சாதி, குடி, சிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் 'ன' கர ஈறு பெற்று அமையும்.

எ.கா- பெரியன், சிறியன் - அளவால் வருபெயர்

| | |
|---|---|
| அறிஞன் | - அறிவால் வருபெயர் |
| பொன்மனத்தான் | - ஒப்பால் வருபெயர் |
| கூனன் | - வடிவால் வருபெயர் |
| கரியன் | - நிறத்தால் வருபெயர் |
| தேவன் | - கதியால் வருபெயர் |
| அந்தணன் | - சாதியால் வருபெயர் |
| சோழன் | - குடியால் வருபெயர் |
| ஆசிரியன் | - சிறப்பால் வருபெயர் |

இவை தவிர நல்லன், தீயன், ஓதுவான், ஈவான், என்பனவும் 'ன' கர ஈறு பெற்று அமையும் உயர்திணை ஆண்பாற் பண்புப் பெயர் ஆகும்.

**தொழிற்பெயர்**

தொழிற்பெயர் நிலையில் அமையும் உயர்திணை ஆண்பாற்பெயர்கள் ஓதல், ஈதல் என்பனவற்றின் அடிப்படையில் ன கர ஈறுபெற்று அமையும்.

| | | |
|---|---|---|
| எ.கா- | தூதுரைப்பான், ஓதுவான் | - ஓதாலால் வருபெயர் |
| | ஈவான் | - ஈதலால் வருபெயர் |

இவை தவிர ஒற்றன், கணக்கன், தச்சன் என்பனவும் தொழிலை உணர்த்தும் 'ன' கர ஈறு பெற்று அமையும் உயர்திணை ஆண்பாற் தெரிழிற்பெயர்களாகும்.

**இடைச்சொற்பெயர்**

சுட்டு, வினா, பிற, மற்று என்னும் இடைச்சொற்கள் 'ன' கர ஈறு பெற்று உயர்திணை ஆண்பாற் பெயரை உணர்த்தும்.

| | | |
|---|---|---|
| எ.கா- | அவன், இவன், உவன் | - சுட்டால் வருபெயர் |
| | எவன், ஏவன், யாவன் | - வினாவால் வருபெயர் |
| | பிறன், மற்றையான் | - பிற, மற்று என்பனவால் வருபெயர் |

'ன' கர ஈறு பெறாத நிலையில் நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல் என்னும் ஏழு பெயர்களும் உயர்திணை ஆண்பாற் பெயர்களாகும்.

எனவே பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் 'ன' கர ஈறு பெற்றும் சுட்டு, வினா, பிற, மற்று என்னும் இடைச்சொற்கள் 'ன'கர ஈறு பெற்றும் நம்பி, ஆடூஉ அடிப்படையில் 'ன' கர ஈறு பெறாமலும் பிறநிலைகளிலும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள் அமையும்.

கிளைஎண் குழுஉ முதல் பல்பொருள் திணைதேம்

ஊர்வான் அகம்புறம் முதல்நிலன் யாண்டு

இருது மதிநாள் ஆதிக் காலம்

தோள்குழல் மார்புகண் காதுமுதல் உறுப்பு

அளவு அறிவு ஒப்புவடிவு நிறம்கதி

சாதி குடிசிறப்பு ஆதிப் பல்குணம்

ஓதல் ஈதல் அதிப் பல்வினை

இவை அடைசுட்டு வினாப்பிற மற்றோடு

ஊற்ற னவ்வீறு நம்பி ஆடுஉ

விடலை கோவேள் குரிசில் தோன்றல்

இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப. (நன் : 276)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

உயர்திணைப் பெண்பால் பெயர்கள்

தமள், நுமள், ஓணத்தாள், நெடுமார்பள், மூக்கி, இவள், பிறள், மற்றையாள் என்பன பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு வகைகளில் அமைவன ‘ள’ கர ‘இ’ கர ஈறு பெற்ற உயர்திணைப் பெயர்களாகும். ‘ள’ ‘இ’ ஈறு பெற்றுள்ளமையால் பெண்பாலை உணர்த்துகின்றன. இவ்வாறு ‘ள’ கர ‘இ’ கர ஈறு பெற்று உயர்திணையை உணர்த்தும் பெண்பாற் பெயர்கள் அறுவகைப் பெயர்களின் அடிப்படையிலும் சுட்டு, வினா, பிற, மற்ற என்பனவற்றின் அடிப்படையிலும் இடம்பெறும்.

பொருட்பெயர்

பொருட்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் கிளை எண், குழு எண்ணம் பகுப்புகளில் ‘ள’ கர ‘இ’ கர ஈறு பெற்றமையும்.

எ.கா- தமள், நமள், நுமள் - கிளையால் வருபெயர்

ஒருத்தி - எண்ணால் வருபெயர்

அவையத்தாள் - குழுவால் வருபெயர்

இவை தவிரப் பொன்னாள், பொன்னி என்பனவும் ‘ள’ கர ‘இ’ கர ஈறு இறுதி பெற்றமையும் உயர்திணைப் பெண்பாற் பொருட்பெயர்களாகும்.

**இடப்பெயர்**

இடப்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் திணை, தேயம், ஊர், வான், அகம், புறம் என்னும் பிரிவுகளில் ‘ள’ கர ‘இ’ கர ஈறு பெற்று அமையும்.

எ.கா- குறத்தி - திணையால் வருபெயர்

உழத்தி - தேயத்தால் வருபெயர்

கருவூராள் - ஊரால் வருபெயர்

வானத்தாள், அகத்தி, புறத்தி - வான், அகம், புறம் இவற்றால் வருபெயர்

இவை தவிர மண்ணகத்தி என்பனவும் ‘ள’ கர ‘இ’ கர ஈறு பெற்றமையும் உயர்திணைப் பெண்பாற் இடப் பெயர்களாகும்.

**காலப்பெயர்**

காலப்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் ஆண்டு, பருவம், மாதம், நாள், மீன் ஆகியவற்றின் அடிப்படையில் ‘ள’ கர ‘இ’ கர ஈறு பெற்று அமையும்.

எ.கா- மூவாடையாள் - ஆண்டால் வருபெயர்

இளவேனிலாள் - பருவத்தால் வருபெயர்

சுவாதி, ரேவதி - மாதத்தால் வருபெயர்

ஓணத்தாள், ஓணத்தி - நாளால் வருபெயர்

ஆதிரையாள் - மீனால் வருபெயர்

இவை தவிர கார்த்திகையாள், காலையாள் என்பனவும் ‘ள’ கர ‘இ’ கர ஈறு பெற்றமையும் உயர்திணைப் பெண்பாற் காலப் பெயர்களாகும்.

**சினைப்பெயர்**

சினைப்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் புயம், மயிர், மார்பு, கண், காது, என்பனவற்றின் அடிப்படையில் ‘ள’ கர ‘இ’ கர ஈறு பெற்று அமையும்.

எ.கா- திணிதோள் - புயத்தால் வருபெயர்

நெடுங்கழுத்தாள் - கழுத்தால் வருபெயர்

சிற்றிடையாள் - சிற்றிடையால் வருபெயர்

குழைகாதாள் - காதால் வருபெயர்

பெருங்கண்ணி - கண்ணால் வருபெயர்

இவை தவிர மூக்கி, பல்லி, வாயாடி என்பனவும் ‘இ’ கர ஈறு பெற்றமையும் உயர்திணைப் பெண்பாற் சினைப் பெயர்களாகும்.

**பண்புப் பெயர்**

பண்புப்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், கதி, சாதி, குடி, சிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ‘ள’ கர ‘இ’ கர ஈறு பெற்றமையும்.

எ.கா- நெட்டச்சி, சிறியள் - அளவால் வருபெயர்

புலமையாள் - அறிவால் வருபெயர்

பொன்மனத்தாள் - ஒப்பால் வருபெயர்

கூனி - வடிவால் வருபெயர்

கறுப்பி - நிறத்தால் வருபெயர்

மானுடத்தி - கதியால் வருபெயர்

நாடாத்தி, பாப்பாத்தி - சாதியால் வருபெயர்

உழத்தி - குடியால் வருபெயர்

குடும்பத்தலைவி - சிறப்பால் வருபெயர்

இவை தவிர நல்லள், தீயள் என்பனவும் ‘ள’ கர ஈறு பெற்ற உயர்திணைப் பெண்பாற் பண்புப்பெயர்கள் ஆகும்.

**தொழிற்பெயர்**

தொழிற்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் ஓதல், ஈதல் என்பனவற்றின் அடிப்படையில் ‘ள’ கர ஈறு பெற்றமையும்.

எ.கா- ஓதுவாள் - ஓதலால் வருபெயர்

ஈவாள் - ஈதலால் வருபெயர்

**இடைச்சொற் பெயர்**

சுட்டு, வினா, பிற, மற்று என்னும் இடைச்சொற்கள் ‘ள’ கர ஈறு பெற்று உயர்திணைப் பெண்பாற் பெயரை உணர்த்தும்.

எ.கா- அவள், இவள், உவள் - சுட்டால் வருபெயர்

எவள், ஏவள், யாவள் - வினாவால் வருபெயர்

பிறள், மற்றையள் - பிற, மற்று என்பனவற்றால் வருபெயர்

இவை தவிர தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையல் என நூற்பாவில் சுட்டப்படுவனவும் பேதை, பெதும்பை, இகுளை, மடந்தை, மாது, பாங்கி, பெண்டு, பெண்டாட்டி என நூற்பாவில் சுட்டப்பெறாதனவும் உயர்திணைப் பெண்பாற் பெயர்களாகும்.

எனவே பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்களின் அடிப்படையில் 'ள' கர 'இ' கர ஈறு பெற்றும் சுட்டு, வினா, பிற, மற்று என்னும் இடைச்சொற்கள் 'ள' கர ஈறு பெற்றும் தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையல் என்பனவும் இவைபோல் அமையும் பிறவும் உயர்திணைப் பெண்பாற் பெயர்களாகும்.

**கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்**
**ளவ்வொற்று இகரக்கு ஏற்ற ஈற்றவும்**
**தோழி செவிலி மகடூஉ நங்கை**
**தையலோடு இன்னன பெண்பால் பெயரே** **(நன் : 277)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**உயர்திணைப் பலர்பால் பெயர்கள்**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு வகைகளில் அமைவன ஆகும். சுட்டு, வினா, பிற, மற்று எனும் இடைச் சொற்களாய் வருவனவாகும். மாந்தர், மக்கள் முதலான பிற பெயர்கள் இவை ர், அர், ஆர், மார் என்னும் 'ர' கர ஈற்று முடிவு பெற்று வரும். தமர், நுமர், கருவூரார், ஆதிரையார், நெடும்பார், அறிஞர், ஓதுவார், யாவர், இவர், மற்றையர் ஆகிய பெயர்கள் 'ர' கர ஈறு பெற்றுவரும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் ஆகும்.

**பொருட்பெயர்**

பொருட்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் கிளை, எண், குழு என்னும் பகுப்புகளில் 'ர' கர ஈறு பெற்றமையும்.

எ.கா- தமர், நமர், - கிளையால் வருபெயர்
இருவர், மூவர் - எண்ணால் வருபெயர்
அவையத்தார் - குழுவால் வருபெயர்

இவை தவிர பொன்முடியார் என்பனவும் 'ர' கர ஈறு பெற்றமையும் உயர்திணைப் பலர்பால் பொருட்பெயர்களாகும்.

**இடப்பெயர்**

இடப்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் திணை, தேயம், ஊர், வான், அகம், புறம் என்னும் பகுப்புகளில் 'ர' கர ஈறு பெற்றமையும்.

எ.கா- குறவர், ஆயர் - திணையால் வருபெயர்

மலைநாட்டவர் - தேயத்தால் வருபெயர்

நன்னாட்டார், அகத்தார் - ஊரால் வருபெயர்

வானத்தர், அகத்தார்,புறத்தார் - வான், அகம், புறம் இவற்றால் வருபெயர்

இவை தவிர மண்ணகத்தார், பூதலத்தார் என்பனவும் ‘ர’ கர ஈறு பெற்றமையும் உயர்திணைப் பலர்பால் இடப்பெயர்களாகும்.

**காலப்பெயர்**

காலப்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் ஆண்டு, பருவம், மாதம், நாள், மீன் ஆகியவற்றின் அடிப்படையில் ‘ர’ கர ஈறு பெற்றமையும்.

எ.கா- மூவாண்டினர் - ஆண்டால் வருபெயர்

வேனிலார் - பருவத்தால் வருபெயர்

பரணியார் - மாதத்தால் வருபெயர்

ஓணத்தார் - நாளால் வருபெயர்

ஆதிரையாள் - மீனால் வருபெயர்

இவை தவிர ஐயாண்டினர், நெருநலார், காலையார் ‘ர’ கர ஈறு பெற்றமையும் உயர்திணைப் பலர்பால் காலப்பெயர்களாகும்.

**சினைப்பெயர்**

சினைப்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் புயம், மயிர், மார்பு, கண், காது ஆகியவற்றின் அடிப்படையில் ‘ர’ கர ஈறு பெற்றமையும்.

எ.கா- நெடுமார்பர் - புயத்தால் வருபெயர்

கரிகுழலார் - மயிரால் வருபெயர்

திடமார்பர் - மார்பால் வருபெயர்

கூர்விழியார் - கண்ணால் வருபெயர்

குழைக்காதர் - காதால் வருபெயர்

இவை தவிர கருங்கையர், நெடுங்கையர், பல்லர் என்பனவும் ‘ர’ கர ஈறு பெற்றமையும் உயர்திணைப் பலர்பால் சினைப்பெயர்களாகும்.

**பண்புப் பெயர்**

பண்புப் பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், கதி, சாதி, குடி, சிறப்பு இவற்றின் அடிப்படையில் 'ர' கர ஈறு பெற்றமையும்.

எ.கா- பெரியர் - அளவால் வருபெயர்

புலவர் - அறிவால் வருபெயர்

கரியர் - நிறத்தால் வருபெயர்

பொன்மனத்தார் - ஒப்பால் வருபெயர்

முடவர் - வடிவால் வருபெயர்

தேவர் - கதியால் வருபெயர்

அந்தணர் - சாதியால் வருபெயர்

பாண்டியர் - குடியால் வருபெயர்

தலைவர் - சிறப்பால் வருபெயர்

இவை தவிர நல்லர், தீயர் என்பனவும் 'ர' கர ஈறு பெற்றமையும் உயர்திணைப் பலர்பால் பண்புப் பெயர்களாகும்.

**தொழிற்பெயர்**

தொழிற்பெயர் நிலையில் அமையும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் ஓதல், ஈதல் என்பனவற்றின் அடிப்படையில் 'ர' கர ஈறு பெற்றமையும்.

எ.கா- ஓதுவார் - ஓதலால் வருபெயர்

ஈவார் - ஈதலால் வருபெயர்

இவை தவிர தட்டார், தச்சர், கொல்லர் என்பனவும் 'ர' கர ஈறு பெற்றமையும் உயர்திணைப் பலர்பால் தொழிற்பெயர்களாகும்.

**இடைச்சொற்கள்**

சுட்டு, வினா, பிற, மற்று என்னும் இடைச்சொற்கள் 'ர' கர ஈறு பெற்று உயர்திணைப் பலர்பாலை உணர்த்தும்.

எ.கா- அவர், இவர், உவர் - சுட்டால் வருபெயர்

எவர், ஏவர், யார் - வினாவால் வருபெயர்

பிறர், மற்றையர் - பிற, மற்று என்பனவற்றால் வருபெயர்

இவை தவிர கள் விகுதி பெற்று பலர்பாலுக்கு பொருந்தி வரும் உயர்திணைப் பெயர்களும் (கோக்கள், நபர்கள், தலைவிகள்) மாந்தர், மகார், சிறார், வேளிர் என வரும் பெயர்களும் உயர்திணைப் பலர்பாற் பெயர்களாகும்.

எனவே பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆறுவகைப் பெயர்களின் அடிப்படையிலும் சுட்டு வினா, பிற, மற்று என்னும் இடைச்சொற்களின் அடிப்படையிலும் 'ர' கர ஈறு மற்றும் கள் விகுதி பெற்று பலர்பாலுக்கு பொருந்தி வரும் பெயர்களும் பிறவும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் ஆகும்.

**கிளந்த கிளைமுதல் உற்றாவ் வீற்றும்**
**கள்என் ஈற்றின் ஏற்பவும் பிறவும்**
**பல்லோர் பெயரின் பகுதி யாகும் (நன் : 278)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**அஃறிணை ஒன்றன்பால் பெயர்**

எது, ஏது, யாது என்னும் வினாப் பெயர்கள் அது, இது, என்னும் சுட்டுப் பெயர்கள் அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் 'து' ஈறு பெற்று அ.்.றிணை ஒன்றன்பாலை உணர்த்தும்.

எ.கா - பொன்னது (பொருள்)

நிலத்தது (இடம்)

ஆதிரையது (காலம்)

கொம்பினது (சினை)

நீண்டது (குணம்)

ஆடலது (தொழில்)

என வரும் அறுவகைப் பெயர்கள் அஃறினை ஒன்றன்பாலை உணர்த்துகின்றன.

வந்தது எது? கூறினது யாது? வீடு எது?

தலையிது, காலிது, இடமது, குணமது

இத்தொடர்கள் வினா எழுத்துக்களாலும் சுட்டெழுத்துக்களாலுமான அ.்.றிணை ஒன்றன்பால் பெயர்கள் ஆகும். இவ்வாறே வினாவும் சுட்டும் அல்லாத குழையது, நிலத்தது, மூலத்தது, கோட்டது, குறியது, ஆடலது என்பன முறையே பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆகிய அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் 'து' ஈறு பெற்று அ.்.றிணையும் ஒன்றன்பாலையும் உணர்த்துகின்றன.

அஃது, இஃது, உஃது என வரும் ஆய்தம் சேர்ந்த சுட்டுப் பெயர்கள் இணைந்த 'து' ஈற்றுப் பெயர்கள் ஒன்றன்பாலையும் அ.்.றிணையையும் மட்டும் உணர்த்தும்.

எ.கா- ஒன்று வந்தது, ஒன்று வீழ்ந்தது

இதில் 'ஒன்று' என்பது ஒன்றன் பாலையும் அ.்.றிணையும் குறிக்கிறது. இவை தவிர பிறிது, மற்றையது என்னும் 'து' ஈற்று இடைச்சொற்களும் ஒன்றன்பாலையும் அ.்.றிணையையும் குறிக்கும்.

எனவே அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் 'து' ஈறு பெற்று அமையும் வினா, சுட்டு முதலிய பெயர்களும் வினாவும் சுட்டும் இன்றி அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் 'து' ஈறு பெற்றமையும் பெயர்களும் ஆய்தத்துடன் இணைந்து 'து' ஈறு பெற்றமையும் சுட்டுப்பெயர்களும் ஒன்று என அமையும் எண்ணுப் பெயரும் 'து' ஈறு பெற்றமையும் பிற, மற்று என்னும் இடைச்சொற் பெயர்களும் அ.்.றிணை ஒன்றன்பாலைக் குறிக்கும் பெயர்களாகும்.

**வினாசுட் டுடனும் வேறுமாம் பொருள்**

**ஆதி யுறுதுச் சுட்டணை ஆய்தம்**

**ஒன்றென்என் இன்னன ஒன்றன் பெயரே (நன் : 279)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**அஃறிணைப் பலவின் பால் பெயர்கள்**

எவை, யாவை, அவை, இவை, உவை முதலியன 'வை' விகுதி பெற்ற வினா சுட்டாகும். இவை பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் 'வை' விகுதி பெற்றமைந்து அ.்.றிணைப் பலவின்பாலை உணர்த்தும்.

| | | |
|---|---|---|
| எ.கா- | குழையன, பொருளன | - பொருட்பெயர் |
| | அகத்த, நாட்டின | - இடப்பெயர் |
| | வேனில, வேனிலியை | - காலப்பெயர் |
| | கோட்ட, கொம்பின | - சினைப் பெயர் |

கரிய, கரியன - குணப்பெயர்

ஆடலவ, ஓதுவன - தொழிற்பெயர்

இவை அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் இடம் பெற்ற அன்சாரியை பெற்றும் பெறாமலும் வந்துள்ள அகர ஈற்றுப் அஃறிணைப் பலவின் பால் பெயர்களை உணர்த்தும்.

நெடியவை, கரியவை, சிறியவை என்பன 'வை' விகுதி பெற்ற வினா, சுட்டு அல்லாத பெயர்கள் ஆகும்.

அவ், இவ், உவ் - லகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர்களும் அஃறிணைப் பலவின் பாற் பெயர்களை உணர்த்தும்.

காடுகள், மாடுகள், மரங்கள், பிணங்கள் - இவை 'கள்' விகுதி பெற்று அஃறிணைப் பலவின் பாற் பெயர்களை உணர்த்தும்.

இரண்டு, பத்து, மூன்று – இவை ஒன்றிற்கு மேற்பட்டவற்றைக் குறித்த அஃறிணையைக் குறிக்கும் எண்ணுப் பெயர்கள்.

உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில என்னும் குறிப்பு வினையாலணையும் பெயர்களும் அஃறிணைப் பலவின் பால் பெயர்களை உணர்த்தும். இவை தவிர யா, பிற, மற்றைய என்னும் இடைச்சொற்களும் அஃறிணைப் பலவின் பாலை உணர்த்தும். எனவே அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் 'வை' விகுதி பெற்றமையும் வினா, சுட்டுப்பெயர்களும்

வினா, சுட்டு இன்றி அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் 'வை' விகுதி பெற்றமையும் பெயர்களும்

அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் அன்சாரியைப் பெற்றும் பெறாமலும் அமையும்

அகர ஈற்றுப் பெயர்களும்

வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்களும் 'கள்' விகுதி பெற்றமையும் பெயர்களும் ஒன்றிற்கு மேற்பட்டவைகளைக் குறிக்கும் எண்ணுப் பெயர்களும்

உள்ள, இல்ல, சில்ல, பல்ல, உள, இல, பல, சில என்னும் குறிப்பு வினையாலணையும் பெயர்களும்

யா, பிற, மற்றைய என்னும் இடைச்சொற் பெயர்களும்

அ.ஂ.றிணைப் பலவின்பாலைக் குறிக்கும் பெயர்களாகும்.

**முன்னர் அவ்வொடு வருபவை அவ்வும்**

**சுட்டுஇறு வவ்வும் கள்இறு மொழியும்**

**ஓன்றுஅல் எண்ணும் உள்ள இல்ல**

**பல்ல சில்ல உளஇல பலசில**

**இன்னவும் பலவின் பெயராகும்மே.** (நன் : 280)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**பால்பகா அஃறிணைப் பெயர்**

ஒன்றன் பால், பலவின் பால் எனப் பகுக்க முடியாத பெயர்ச்சொற்கள் அ.ஂ.றிணையின் இருபால்களுக்கும் பொதுவான பெயர்களாகும். இத்தகைய பெயர்கள் பால்பகா அ.ஂ.றிணைப் பெயர்கள் எனப்படும்.

எ.கா- பறவை பறந்தது - பறவை பறந்தன

மரம் பழுத்தது - மரம் பழுத்தன

யானை வந்தது - யானை வந்தன

அஃறிணையில் ஒன்றன் பாலையும் பலவின் பாலையும் உணர்த்தும் பெயர்ச் சொற்கள் சில உள்ளன. முன் நூற்பாக்களில் கூறப்பட்ட ஒன்றன்பால், பலவின் பாலை உணர்த்தும் விகுதிகளுக்கு (து, வை, அ, கள்) பொதுவாக அமைந்துள்ளமையால் இவை பால்பகா அ.ஂ.றிணைப் பெயர்கள் ஆகும். இதனை,

**பால் பகா அஃறினைப் பெயர்கள் பாற் பொது மைய** (நன் : 281)

என்னும் நூற்பா விளக்குகிறது.

பறவை, மரம் என்னும் பெயர்ச் சொற்கள் ‘கள்’ விகுதி பெறாமலே பன்மைப் பெயராக குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

**இருதிணைப் பொதுப் பெயர்**

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக அமையும் பெயர்களை இருதிணைப் பொதுப்பெயர் என்பர்.

எ.கா- சாத்தனிவன், சாத்தனிவ்வெருது

இத்தொடர் சாத்தனிவன் என்னும் பொழுது உயர்திணையையும் சாத்தனிவ்வெருது என்னும் பொழுது அஃறிணையையும் உணர்த்தும். ’சாத்தன்’ என்பது இரு திணைக்கும் பொதுவாக அமையும் பெயராகிறது. இவை

முதற்பெயர்
சினைப்பெயர்
சினை முதற்பெயர்

முறைப்பெயர்

தன்மைப்பெயர்

முன்னிலைப் பெயர்

எல்லாம், தாம், தான் என்னும் பெயர்

என வகைப்படுத்தப்படுகின்றன.

**முதற்பெயர்**

காரணம் கருதாது ஒருபொருளைக் குறிக்கும் பெயர் முதற்பெயராகும். இது நான்காக அமையும். அவை,

ஆண்மை முதற்பெயர் - சாத்தன்

பெண்மை முதற்பெயர் - சாத்தி

ஒருமை முதற்பெயர் - கோதை

பன்மை முதற்பெயர் - கோதைகள்

**சினைப்பெயர்**

உறுப்பின் காரணமாக அமையும் பெயர் சினைப்பெயராகும். இது நான்காக அமையும். அவை,

ஆண்மை சினைப்பெயர் - முடவன்

பெண்மை சினைப்பெயர் - முடத்தி

ஒருமை சினைப்பெயர் - செவிலி

பன்மை சினைப்பெயர் - செவிலிகள்

**சினை முதற்பெயர்**

உறுப்பையும் உறுப்பை உடைய முதற்பொருளையும் காரணமாகக் கொண்டமையும் பெயர் சினை முதற்பெயராகும். இது நான்காக அமையும். அவை,

ஆண்மை சினை முதற்பெயர் - முடக்கொற்றன்

பெண்மை சினை முதற்பெயர் - முடக்கொற்றி

ஒருமை சினை முதற்பெயர் - கொடும்புற மருதி

பன்மை சினை முதற்பெயர் - கொடும்புற மருதிகள்

**முறைப்பெயர்**

உறவினை அடிப்படையாகக் கொண்டமையும் பெயர் முறைப் பெயராகும். இது இரு நிலையில் அமையும். அவை,

ஆண்மை முறைப்பெயர் - தந்தை

பெண்மை முறைப்பெயர் - தாய்

என்பனவாகும்.

**தன்மைப்பெயர்**

தம்மை உணர்த்தக் காரணமாக அமையும் பெயர் தன்மைப் பெயராகும். இது நான்காக அமையும். அவை,

யான், யாம், நான், நாம்

என்பனவாகும்.

**முன்னிலைப் பெயர்**

முன் நிற்பவரை உணர்த்தக் காரணமாக அமையும் பெயர் முன்னிலைப் பெயராகும். இது ஐந்தாக அமையும். அவை,

எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ

என்பனவாகும்.

**எல்லாம், தாம், தான்**

எல்லாம், தாம் என்பன பன்மையையும்

தான் என்பது ஒருமையையும் உணர்த்தும்.

உயர்திணை, அ∴றிணை ஆகிய இருதிணைக்கும் பொதுவாக அமையும்.

இத்தகைய 26 பெயர்கள் ஒவ்வொன்றும் இரு திணையிலும் தம்தம் பால்களை

ஏற்றுவரும். அதாவது,

ஆண்மைப் பொதுப்பெயர் உயர்திணை ஆண்பாலையும் அ∴றிணை ஆண்பாலையும்

பெண்மை பொதுப்பெயர் உயர்திணை பெண்பாலையும் அ∴றிணை பெண்பாலையும்

ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணை ஆண் பெண் ஒருமைகளையும் அ∴றிணை ஒருமையையும்

ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணைப் பன்மையும் அ∴றிணை பன்மைமையையும்

ஏற்று நிற்கும். இவ்வாறே தன்மை முன்னிலைப் பெயர்களும் எல்லாம், தான், தாம் என்னும் பெயர்களும் அமையும்.

**முதற்பெயர்**

சாத்தனிவன், சாத்தனிவ்வெருது – ஆண்மை முதற் பெயர் இருதிணை ஆண்பாலுக்குப் பொதுவாயிற்று.

சாத்தியிவள், சாத்தியிப் பசு – பெண்மை முதற் பெயர் இருதிணைப் பெண்பாலுக்குப் பொதுவாயிற்று.

கோதையிவன், கோதையிவள், கோதையிது – ஒருமை முதற்பெயர் இருதிணை ஒருமை ஆண், பெண், ஒன்றன் பாலுக்குப் பொதுவாயிற்று.

கோதைகளிவர், கோதையிவை – பன்மை முதற்பெயர் இருதிணைப் பன்மைக்குப் பொதுவாயிற்று.

**சினைப்பெயர்**

முடவனிவன், முடவனிவ்வெருது – ஆண்மை சினைப்பெயர், இருதிணை ஆண்பாலுக்குப் பொதுவாயிற்று

முடத்தியவள், முடத்தி, முடத்தியிப்பசு - பெண்மை சினைப்பெயர், இருதிணை பெண்பாலுக்குப் பொதுவாயிற்று

செவிலியிவன், செவிலியிவள், செவிலியிது – ஒருமை சினைப்பெயர் இருதிணை ஒருமை மூன்றிற்கும் பொதுவாயிற்று.

செவிலிகளிவர், செவிலிகளிவை – பன்மை சினைப்பெயர் இருதிணை பன்மைக்குப் பொதுவாயிற்று.

**சினை முதற்பெயர்**

முடக்கொற்றனிவன், முடக்கொற்றனிவ்வெருது – ஆண்மை சினை முதற் பெயர் இருதிணை ஆண்பாலுக்குப் பொதுவாயிற்று.

முடக்கொற்றியிவள், முடக்கொற்றியிப்பசு – பெண்மை சினை முதற் பெயர் இருதிணை பெண்பாலுக்குப் பொதுவாயிற்று.

கொடும்புற மருதியிவன், கொடும்புற மருதியிவள், கொடும்புற மருதியிது – ஒருமை சினை முதற்பெயர் இருதிணை ஒருமை மூன்றிற்குப் பொதுவாயிற்று.

கொடும்புற மரதிகளிவர் கொடும்புற மருதிகளிவை – பன்மை சினை முதற்பெயர் இருதிணைப் பன்மைக்குப் பொதுவாயிற்று.

**முறைப்பெயர்**

தந்தையிவன், தந்தையிவ்வெருது – ஆண்மை முறைப்பெயர் இருதிணை ஆண்பாலுக்குப் பொதுவாயிற்று.

தாயிவள், தாயிப்பசு - பெண்மை முறைப்பெயர் இருதிணை பெண்பாலுக்குப் பொதுவாயிற்று.

**தன்மைப் பெயர்**

யானம்பி, யானங்கை, யான்பூதம் - யான் என்னும் தன்மைப் பெயர் இருதிணை ஒருமை மூன்றிற்கும் பொதுவாயிற்று.

நானம்பி, நானங்கை, நான்பூதம் - நான் என்னும் தன்மைப் பெயர் இருதிணை ஒருமை மூன்றிற்கும் பொதுவாயிற்று.

யாம்மக்கள், யாம்பூதங்கள், - 'யாம்' என்னும் தன்மைப் பெயர் இருதிணை ஒருமைக்கும் பொதுவாயிற்று.

நாம்மக்கள், யாம்பூதங்கள், - 'நாம்' என்னும் தன்மைப் பெயர் இருதிணைப் ஒருமைக்கும் பொதுவாயிற்று.

**முன்னிலைப் பெயர்**

நீ நம்பி, நீ நங்கை, நீ மலர் - 'நீ' என்னும் முன்னிலைப் பெயர் இருதிணை ஒருமை மூன்றிற்கும் பொதுவாயிற்று.

நீர் மக்கள், நீர் பூதங்கள் - நீர் என்னும் முன்னிலைப் பெயர் இருதிணைப் பன்மை மூன்றிற்கும் பொதுவாயிற்று.

இவ்வாறே எல்லீர் நீயிர், நீவிர் என்பனவும் இருதிணைக்கும் பொதுவாக அமையும்.

**எல்லாம், தாம், தான்**

அவரெல்லாம், அவையெல்லாம் - 'எல்லாம்' என்பது இது திணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவர்தாம், அவைதாம் - 'தாம்' என்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று

அவன்தாம், அவள் தான், அது தான் - 'தான்' என்பது இருதிணை ஒருமை மூன்றிற்கும் பொதுவாயிற்று.

எனவே, இருதிணைக்கும் பொதுவாக அமைவன முதற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர், முறைப்பெயர், தன்மைப்பெயர், முன்னிலைப் பெயர், எல்லாம், தான், தாம் என்னும் பெயர்கள் 26 என்றும் இவை ஒவ்வொன்றும் இரு திணையிலும் தத்தம் பால்களை ஏற்று அமையும் என்றும் அறியலாம்.

முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற் பெயர் நான்கும் முறை இரண்டும்
தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்
எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர் (நன் : 282)


ஆண்மை பெண்மை ஒருமை பன்மையில்
ஆம் அந்த நான்மைகள் ஆண்பெண் முறைப்பெயர் (நன் : 283)

அவற்றுள்
ஒன்றே இருதிணை தன்பால் ஏற்கும் (நன் : 284)

என்னும் நூற்பாக்கள் வாயிலாக மேற்குறித்த கருத்துக்களை அறியலாம்.

**தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள்**

பெயர்ச்சொற்கள் தன்னையோ முன் நிற்பவரையோ அயலிடத்தில் உள்ளவரையோ சுட்டி நிற்கும் தன்மை உடையன. இதனடிப்படையில் பெயர்களைத் தன்மைப் பெயர்கள், முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்கள் என மூன்றாகக் கொள்ளலாம். எனவே இது மூவிடப்பெயர் எனப்படும். இதனை,




இவ் அட்டவணை வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

நான் பாடம் படித்தேன் - 'நான்' என்னும் பெயர்ச்சொல் தன்னைக் குறிக்கும்.

நீ பாடம் படி - 'நீ' என்னும் பெயர்ச்சொல் முன் நிற்பவரைக் குறிக்கும்.

அவன் பாடம் படித்தான் - 'அவன்' என்னும் பெயர்ச்சொல் தன்னையோ முன் நிற்பவரையோ குறிக்காது. அயல் இடத்திலுள்ளவரைக் குறிக்கும்.

தன்னைக் குறிக்கும் பெயர்கள் தன்மைப் பெயர்களாகும். அவை,

யான், யாம், நான், நாம் என நான்காகும்.

முன் நிற்பவரைக் குறிக்கும் பெயர்கள் முன்னிலைப் பெயர்களாகும். அவை,

எல்லீர், நீயிர், நீவீர், நீர், நீ என ஐந்தாகும்.

யான், யாம், நான், நாம், எல்லீா், நீயிா், நீவீா், நீா், நீ என்னும் ஒன்பதும் அல்லாத பெயா்கள் படா்க்கைப் பெயா்களாகும்.

எல்லாம் என்னும் பெயா் தன்மை, முன்னிலை, படா்க்கை ஆகிய மூவிடத்திற்கும் உரிய பெயராகும்.

எனவே யான், யாம், நான், நாம் என்னும் நான்கும் தன்மைப் பெயா்கள் எனவும் எல்லீா், நீயிா், நீவீா், நீா், நீ என்னும் ஐந்தும் முன்னிலைப் பெயா்கள் எனவும் இவ் ஒன்பதும் அல்லாத பெயா்கள் படா்க்கைப் பெயா்கள் எனவும் 'எல்லாம்' என்னும் பெயா் மூவிடத்திற்கும் உரிய பெயா் எனவும் அறியலாம்.

**தன்மை யான்நான் யாம்நாம் முன்னிலை**

**எல்லீா் நீயிா் நீவிா் நீா் நீ**

**அல்லன படா்க்கை எல்லாம் எனல்பொது (நன் : 285)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**தொழிற் பெயா் - வினையாலணையும் பெயா்கள்**

தொழிற்பெயா் என்பது தொழிலைக் குறிக்காமல் தொழில் செய்தவரைக் குறிக்கும். இப் பெயா்சொற்கள் காலம் காட்டாது. ஆனால் இப்பெயா்கள் மூவிடத்திற்கும் பொருந்தி வரும்.

வினையைச் செய்யும் பொருளுக்குப் பெயராகிக் காலம் காட்டுவனாய், வேற்றுமைகளை ஏற்று, மூவிடத்திற்கும் பொருந்தி வருவன வினையாலணையும் பெயா் ஆகும்.

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன அந்தணா்களுக்குரிய தொழில் ஆகும். இச் சொற்கள் ஓது, ஓதுவி, வேள், வேட்பி, ஈ, ஏல் என்னும் வினைப் பகுதிகளின் அடியாகப் பிறந்தவை. ஆல், தல் என்னும் விகுதிகளைப் பெறும்பொழுது அந்தந்தத் தொழிலை உணா்த்தும் பெயராகின்றன. இது படா்க்கை இடத்திற்கு உரியதாக அமையும்.

| | | |
|---|---|---|
| எ.கா- பசு வந்தது | - | வந்தது போயிற்று |
| சிறுவன் ஓடி வந்தான் | - | வந்தவனைக் கண்டாள் |
| வாசலில் நிற்கிறான் | - | நிற்கிறவனுக்கு உணவு கொடு |

இத்தொடா்களில் இடம்பெறும் வந்தது, வந்தான், நிற்கிறான் என்பன வினைமுற்றுக்கள் ஆகும். இவை, வந்தது, வந்தவனை, நிற்கிறவனுக்கு என பெயராகி வேற்றுமை உருபுகளை (அது, ஐ, கு) ஏற்றுள்ளன.

**வினையின் பெயரே படர்க்கை, வினையால்**

**அணையும் பெயரே யாண்டும் ஆகும்** (நன் : 286)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**பன்னிரன்டு பொதுப்பெயர்கள்**

ஒருமைப் பெயர்களாகிய நான்கும் பன்மைப் பெயர்களாகிய எட்டும் இணைந்த பன்னிரண்டும் இரு திணைகளை உணர்த்தும் பொதுப் பெயர்களாகும்.

ஒருமைப் பெயர்களான தான், யான், நான், நீ என்னும் நான்கும் இருதிணை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகியவற்றிற்குப் பொதுவாக அமையும்.

தாம், யாம், நாம், எல்லாம், நீயிர், நீவிர், நீர் என்னும் எட்டும் இருதிணைக்கும் பொதுவாக அமையும் பன்மைப் பெயர்களாகும்.

**தான்யான் நான்நீ ஒருமை பன்மைதாம்**

**யாம்நாம் எல்லாம் எல்லீ நீயிர்நீ நீவிர்** (நன் : 287)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**எண்ணால் வரும் உயர்திணைப் பெயருக்குப் புறநடை**

ஒன்று என்னும் எண்ணுப் பெயர் ஒருவன் என வரும் வழி ஆண்பாலையும் ஒருத்தி என வரும் வழி பெண்பாலையும் உணர்த்தும்.

ஒன்றிற்கு மேற்பட்ட எண்களை அடிப்படையாகக் கொண்டு இருவன், இருத்தி, மூவன், மூத்தி என ஆண்பால், பெண்பால் பெயர்கள் வராது. ஆனால் ஒன்றிற்கு மேற்பட்டவை இருவர், மூவர், நால்வர் என பலர்பாலில் இடம்பெறும்.

எனவே ஒன்று என்னும் எண்ணுப் பெயர் ஒருவன், ஒருத்தி என ஆண்பால், பெண்பாலில் அமையும். ஒன்றிற்கு மேற்பட்டவை இவ்வாறு அமையாது.

**ஒருவன் ஒருத்தி பெயர்மேல் எண்ணில** (நன் : 288)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**ஒருவன் என்பது இருதிணைக்கும் பொது**

ஒருவர் என்பது உயர்திணை இருபாலுக்கும் பொதுவாய் அத்திணைக்குரிய பன்மை முடிவுடன் அமையும்.

எ.கா- ஆடவர் ஒருவர் வந்தார்

பெண்டிர் ஒருவர் வந்தார்

இத்தொடரிலுள்ள ஒருவா் என்னும் சொல் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக அமைந்துள்ளது. ஒருவா் என்பது ஒருமையைக் குறிக்கும். ஆனால் அது ‘ஆா’ என்னும் பன்மை விகுதி பெற்றுள்ளது.

எ.கா- சாத்தனாா் வந்தாா், முடவனாா் வந்தாா்

இத்தொடரில் சாத்தனாா், முடவனாா் என்பன இருதிணைப் பொதுப்பெயா்கள் ஆகும். இவை ‘ா்’ எனும் விகுதி பெற்றுப் பன்மை முடிவு பெற்றுள்ளன.

எ.கா- நரியாா் வந்தாா்

இத்தொடரில் நரியாா் என்பது இருபாலுக்கும் உரிய பொதுப்பெயா் ஆகும். இதுவும் ‘ஆா்’ விகுதி பெற்றுப் பன்மை முடிவு பெற்றுள்ளது.

எ.கா- தொல்காப்பியனாா் வந்தாா், இறைவனாா் வந்தாா்

இத்தொடரிலுள்ள உயா்திணைப்பெயா்கள் சிறப்பு நிலையில் ‘ஆா்’ விகுதி பெற்றுப் பன்மை முடிவு பெற்றுள்ளன.

**ஒருவா் என்பது உயா்இரு பாற்றாய்ப்**
**பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப** (நன் : 289)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

## ஆகுபெயா்

ஒன்றன் இயற்பெயா் அதனோடு தொடா்புடைய பிறிதொரு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயா் எனப்படும்.

உலகம் உருண்டை

உலகம் வியந்தது

முதல் தொடரிலுள்ள ‘உலகம்’ என்னும் சொல் இடத்தைக் குறிக்கிறது. இரண்டாம் தொடரிலுள்ள ‘உலகம்’ நிலத்தைக் குறிக்காது. நிலத்திலுள்ள மக்களைக் குறிக்கிறது. ‘உலகம்’ என்னும் நிலத்திற்குரிய பெயா் மக்களுக்கு ஆகி வந்துள்ளது. இவ்வாறு ஒன்றன் பெயா் அதனோடு தொடா்புடைய பொருளுக்கு தொன்றுதொட்டே ஆகிவருவது ஆகுபெயராகும்.

ஆகுபெயா் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயா்களின் அடிப்படையிலும் நால்வகை (எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்) அளவைப் பெயா்களின் அடிப்டையிலும் சொல், தானி, கருவி, காரியம், கருத்தா, உவமை ஆகியவற்றின் அடிப்படையிலும் பலவாறு பகுத்து வழங்கப்படும். இது 16 வகைப்படும்.

**பொருளாகு பெயர்**

முதற்பொருளின் பெயர் சினைப்பெயருக்கு ஆகி வருவது பொருளாகு பெயராகும்.

எ.கா- தாமரை முகம்

இத்தொடரிலுள்ள ‘தாமரை’ என்னும் முதற்பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய ‘மலர்’ என்னும் உறுப்பிற்குப் பெயராகி வந்துள்ளது.

**இடவாகு பெயர்**

இடப்பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருதல் இடவாகு பெயராகும்.

எ.கா- ஊர் திரண்டது

இத்தொடரிலுள்ள ‘ஊர்’ என்பது அதனோடு தொடர்புடைய மக்களுக்குப் பெயராகி வந்துள்ளது.

**காலவாகு பெயர்**

காலப்பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவதால் காலவாகு பெயராகும்.

எ.கா- கார் அறுத்தான் (நெல்)

இத்தொடரிலுள்ள கார் என்னும் காலப்பெயர் அதனோடு தொடர்புடைய விளைபொருளுக்கு ஆகி வந்துள்ளது.

**சினையாகு பெயர்**

சினைப் பெயர் அதனோடு தொடர்புடைய முதல் பொருளுக்கு ஆகி வருவதால் சினையாகு பெயராகும்.

எ.கா- வெற்றிலை நட்டான்

இத்தொடரில் வெற்றிலை என்னும் சினைப் பெயர் அதனோடு தொடர்புடைய கொடிக்கு ஆகி வந்தது.

**தெழிலாகுபெயர்**

தொழிற்பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகுபெயர் ஆகும்

எ.கா- வறுவல் உண்டான்

இத்தொடரில் வறுத்தல் என்னும் தொழிற்பெயர் அதனோடு தொடர்புடைய வறுவல் என்னும் உணவுக்கு ஆகி வந்துள்ளது.

**எண்ணல் அளவை ஆகுபெயர்**

எண்ணல் அளவைப் பெயர் அதனுடன் தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது எண்ணல் அளவை ஆகுபெயர் ஆகும்.

எ.கா- பழங்களில் இரண்டு கொடு

இத்தொடரில் இரண்டு என்னும் எண்ணுப்பெயர் அதனோடு தொடர்புடைய பழத்திற்கு ஆகிவந்துள்ளது.

**எடுத்தல் அளவை ஆகுபெயர்**

எடுத்தல் அளவைப் பெயர் அதனுடன் தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது எடுத்தல் அளவை ஆகுபெயர் ஆகும்.

எ.கா- இரண்டு கிலோ கொடு

இத்தொடரில் இரண்டு என்னும் எடுத்தல் அளவைப் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகிவந்துள்ளது.

**முகத்தல் அளவை ஆகுபெயர்**

முகத்தல் அளவைப் பெயர் அதனுடன் தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது முகத்தல் அளவை ஆகுபெயர் ஆகும்.

எ.கா- உண்பது நாழி

இத்தொடரில் நாழி என்னும் முகத்தல் அளவைப் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகிவந்துள்ளது.

**நீட்டல் அளவை ஆகுபெயர்**

நீட்டல் அளவைப் பெயர் அதனுடன் தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது நீட்டல் அளவை ஆகுபெயர் ஆகும்.

எ.கா- ஒரு முழம் கொடு

இத்தொடரில் முழம் என்னும் நீட்டல் அளவைப் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகிவந்துள்ளது.

**சொல்லாகு பெயர்**

சொல்லின் பெயர் அதனுடன் தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது சொல்லாகுபெயர் ஆகும்.

எ.கா- திருக்குறளுக்கு உரை செய்தார்

இத்தொடரில் உரை என்னும் சொல் அதனோடு தொடர்புடைய விளக்கத்திற்கு ஆகிவந்துள்ளது.

**தானியாகு பெயர்**

தானியின் பெயர் அதனுடன் தொடர்புடைய தானத்திற்கு ஆகிவருவது தானியாகுபெயர் ஆகும்.

எ.கா- கழலைச் சேவித்தான்

இத்தொடரில் கழல் என்னும் தானிப் பெயர் அதனோடு தொடர்புடைய தானத்திற்கு (இடத்திற்கு) ஆகிவந்துள்ளது.

**கருவியாகு பெயர்**

கருவியின் பெயர் அதனுடன் தொடர்புடைய காரியத்திற்கு ஆகிவருவது கருவியாகுபெயர் ஆகும்.

எ.கா- திருவாசகம் வாங்கினேன்

இத்தொடரில் வாசகம் என்னும் கருவிப் பெயர் அதனோடு தொடர்புடைய நூலிற்கு ஆகிவந்துள்ளது.

**காரியவாகு பெயர்**

காரியத்தின் பெயர் அதனுடன் தொடர்புடைய கருவிக்கு ஆகிவருவது காரியவாகு பெயர் ஆகும்.

எ.கா- யாப்பு கற்றுக் கொண்டேன்

இத்தொடரில் யாப்பு என்னும் காரியத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய கருவிக்கு ஆகிவந்துள்ளது.

**கருத்தாவாகு பெயர்**

கருத்தாவின் பெயர் அதனுடன் தொடர்புடைய நூலுக்கு ஆகிவருவது கருத்தாவாகு பெயர் ஆகும்.

எ.கா- கம்பனைக் கற்றேன்

இத்தொடரில் கம்பன் என்னும் கருத்தாவின் பெயர் அதனோடு தொடர்புடைய நூலிற்கு ஆகிவந்துள்ளது.

**உவமையாகு பெயர்**

உவமைப் பெயர் அதனுடன் தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது உவமையாகு பெயர் ஆகும்.

எ.கா- பாவை வந்தாள்

இத்தொடரில் பாவை என்னும் உவமைப் பெயர் அதனோடு தொடர்புடைய பெண்ணிற்கு ஆகிவந்துள்ளது.

இவை தவிர ஆகு பெயர் இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர், அடையடுத்த ஆகுபெயர் எனவும் வரப்பெறும். மேற்குறித்த ஆகு பெயர் வகைகளை பின்வரும் அட்டவணை வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

| வகை | விளக்கம் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| பொருளாகு பெயர் | முதற்பொருளின் பெயர் சினைப் பொருளுக்கு ஆவது | தாமரை முகம் (பூ - முதல், முகம் - சினை) |
| இடவாகு பெயர் | இடத்தின் பெயர் இடத்திலுள்ள பொருளுக்கு ஆவது | உலகே போற்றியது – மக்கள் |
| காலவாகு பெயர் | காலத்தின் பெயர், அக் காலத்திலுள்ள பொருளுக்கு ஆவது | கார் அறுத்தான் (நெல்) |
| சினையாகு பெயர் | உறுப்பின் பெயர் (பகுதி) முதற் பொருளுக்கு ஆவது | தலைக்கு ஒரு பழம் கொடு |
| குணவாகு பெயர் | குணத்தின் பெயர் அக்குணத்தை உடைய பொருளுக்கு ஆவது | வெள்ளையைப் பிடித்துக் கட்டு (மாடு) |
| தொழிலாகு பெயர் | தொழிலின் பெயர், அத்தொழிலை உடைய பொருளுக்கு ஆவது | வற்றல் உண்டான் |
| எண்ணல் அளவை ஆகுபெயர் | எண்ணின் பெயர், அவ் அளவுடைய பொருளுக்கு ஆவது | இரண்டே பெறுக (இரண்டு மழலைகள்) |
| எடுத்தல் அளவை ஆகுபெயர் | ஏடை பெயர் அவ் அளவுடைய பொருளுக்கு ஆவது | ஒரு கிலோ கொடு (பொருள் - சர்க்கரை) |
| முகத்தல் அளவை ஆகுபெயர் | முகக்கும் அளவுக் கருவியின் பெயர் அளக்கும் பொருளுக்கு ஆவது | அரை லிட்டர் கொடு (பால்) |
| நீட்டல் அளவை ஆகுபெயர் | நீளத்தை அளக்கும் - அளவுப்பெயர், அளக்கும் பொருளுக்கு ஆவது | இரண்டு முழம் கொடு (பூ) |
| சொல்லாகுபெயர் | சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆவது | என் சொல்லைக் கேள் (சொல் - அறிவுரை) |
| தானி ஆகுபெயர் | இடத்திலுள்ள பொருளின் பெயர், இடத்துக்கும் ஆவது | பாலை வண்டியில் ஏற்று (குடம்) |

| | | |
|---|---|---|
| கருவி ஆகுபெயர் | கருவியின் பெயர், கருவியால் ஆன காரியத்துக்கு ஆவது | குழல் கேட்டு மகிழ்ந்தேன் (இசை) |
| காரிய ஆகுபெயர் | காரியத்தின் பெயர், அதனைச் செய்த கருவிக்கு ஆவது | அலங்காரம் கற்றேன் (நூல்) |
| கருத்தா ஆகுபெயர் | செயல் செய்தவன் பெயர் செய்யப்பட்ட பொருளுக்கு ஆவது | கம்பனைக் கற்றேன் (கம்பராமாயாணம்) |
| உவமை ஆகுபெயர் | உவமையாகிய பெயர் உவமித்த பொருளுக்கு ஆவது | மயில் ஆடினாள் (பெண்) |

எனவே ஆகுபெயர் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், என்னும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையிலும் எண்ணல், எழுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் அளவைப் பெயர்களின் அடிப்படையிலும் சொல், தானி, கருவி, கருத்தா என்பனவற்றின் அடிப்படையிலும் ஆதி என்பதனால் உவமை, இருபடி, மும்மடி அடையெடுத்த என்னும் நிலைகளிலும் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு தொன்றுதொட்டே ஆகிவரும் என்பதை அறியலாம். இதனை,

**பொருள் முதல் ஆறோடு அளவை, சொல், தானி**
**கருவி, காரியம், கருத்தன் ஆதியுள்**
**ஒன்றன் பெயரால் அதற்கு இயை பிரிதைத்**
**தொன்முறை உரைப்பன ஆகுபெயரே (நன் : 290)**

என்னும் நூற்பா வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

## வேற்றுமை

ஒரு பெயர்ச்சொல் பயனிலை கொண்டு முடியும்பொழுது பொருளுக்கு ஏற்பத் தன் அமைப்பில் ஏற்படுத்தும் மாறுபாடு வேற்றுமை எனப்படும். இப்பகுதியில் வேற்றுமையின் இலக்கணம் - வகை - உருபுகள் - உயர்திணை, அஃறிணை விளியேற்கும் பெயர்கள் - விளியுருபுகள் - புறநடை – முதற்பொருள் சினைப்பொருள் பிண்டப்பொருள் - உருபு மயக்கம் ஆகியன தெளிவுபடுத்தப்படுகின்றன.

இராமன் பார்த்தான்

இராமனைப் பார்த்தான்

இவ்விரு தொடர்களுக்கு இடையே மிகுந்த பொருள் வேறுபாடு உள்ளது. இப்பொருள் வேறுபாட்டைத் தருவது ‘இராமனை’ என்பதிலுள்ள ‘ஐ’ ஆகும். இவ்வாறு ஒரு பெயர்ச்சொல் பயனிலை கொண்டு முடியும்பொழுது பொருளுக்கு ஏற்பத் தன் அமைப்பில்

மாறுபட்டுள்ளது. இம்மாறுபாடே வேற்றுமை எனப்படுகிறது. இவ் வேற்றுமை எட்டு வகைப்படும்.

**ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்**

**வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை** (நன் : 291)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**எண்வகை வேற்றுமை**

1. எழுவாய் வேற்றுமை (முருகன்)
2. இரண்டாம் வேற்றுமை – ஐ (முருகனை)
3. மூன்றாம் வேற்றுமை - ஆல் (முருகனால்)
4. நான்காம் வேற்றுமை - கு (முருகனுக்கு)
5. ஐந்தாம் வேற்றுமை -இன் (முருகனின்)
6. ஆறாம் வேற்றுமை - அது (முருகனது)
7. ஏழாம் வேற்றுமை - கண் (முருகன்கண்)
8. விளி வேற்றுமை (முருகா)

'முருகன்' என்னும் பெயர்ச்சொல் அதன் ஈற்றில் இடம்பெறும் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பனவற்றால் பொருள் வேறுபாட்டைப் பெறுகிறது. இவ்வாறு பெயர்ச்சொல்லின் ஈற்றில் இடம்பெற்றுப் பொருளை வேறுபடுத்தும் இவை வேற்றுமை உருபுகள் எனப்படும். இவ்வேற்றுமை உருபுகளின் அடிப்படையில் முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை) எனப் பெயர் பெற்று எட்டாக விரிவு பெறும்.

இவற்றுள் முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமையாகிய விளிவேற்றுமை ஆகிய இரண்டிற்கும் உருபுகள் இல்லை. ஏனையவை ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் உருபுகளை முறையே பெறும்.

பெயர்ச்சொல்லே இவ்வெட்டு வேற்றுமைகளுள் முதல் வேற்றுமை, விளிவேற்றுமை தவிர ஏனைய ஆறு வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

**பெயரே ஐஆல் குஇன் அதுகண்**

**விளி என்றாகும் அவற்றின் பெயர்முறை** (நன் : 292)

**ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே (நன் : 293)**

என்னும் நூற்பாக்கள் இதனை விவரிக்கின்றன.

**வேற்றுமை உருபேலாப் பெயர்கள்**

நீயிர், நீவிர் என்னும் முன்னிலைப் பெயர்கள் 'நும்' எனத் திரிந்தே நும்மை, நுமக்கு, நும்மால், நுமது என வேற்றுமை உருபுகளை ஏற்கும். ஆனால் இவை நேரடியாக வேற்றுமை உருபுகளை ஏற்பதில்லை.

யான் என்னும் தன்மைப்பெயர் 'என்' எனத் திரிந்தே என்னை, என்னால், எனக்கு, எனது என வேற்றுமை உருபுகளை ஏற்கும். இதுவும் நேரடியாக வேற்றுமை உருபுகளை ஏற்பதில்லை.

நான் என்னும் தன்மைப்பெயர் 'நன்' எனத் திரிதலும் வேற்றுமை உருபுகளை ஏற்பதும் இல்லை.

நீயிர், நீவிர் என்னும் முன்னிலைப் பெயர்களும் நான் என்னும் தன்மைப் பெயரும் எழுவாய் அல்லாத ஐ முதலிய பிற வேற்றுமைகளை ஏற்காது என்பது அறியத்தக்கது.

**நீயிர், நீவிர் நான்எழுவாய் அலபெறா (நன் : 294)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**முதல் வேற்றுமை**

முதல் வேற்றுமை என்பது எழுவாய் வேற்றுமை, கருத்தா வேற்றுமை, பெயர் வேற்றுமை எனவும் பெயர் பெறும். இவ்வேற்றுமைக்கு உருபு இல்லை. இது கருத்தாப் பொருளை ஏற்று வரும் திரிபில்லாத பெயராகும். மேலும் வினைப்பெயர், வினா என்பவற்றைப் பயனிலையாக ஏற்று வரும்.

எ.கா- வினைப் பயனிலை - சிற்பி செதுக்கினான்

பெயர்ப் பயனிலை - அவன் சிற்பி

வினாப் பயனிலை - சிற்பி யார்?

எனவே முதல்வேற்றுமை என்பது கருத்தாப் பொருளை ஏற்றுவரும் திரிபில்லாப் பெயரென்றும் வினையையும் பெயரையும் வினாவையும் பயனிலையாகப் பொருள் நிலையில் கொண்டமையும் என்றும் அறியலாம்.

**அவற்றுள்**

**எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே**

**வினைப்பெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே (நன் : 295)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**இரண்டாம் வேற்றுமை**

இரண்டாம் வேற்றுமை செயப்படு பொருளை ஏற்று 'ஐ' என்னும் வேற்றுமை உருபை கொண்டமையும். 'ஐ' மட்டுமே இவ்வேற்றுமைக்குரிய உருபாகும்.

எ.கா- குடத்தை வனைந்தான்.

இத்தொடரில் வனைதல் என்பது கருத்தாவின் தொழிலை உணர்த்துகிறது. கருத்தாவால் செய்யப்பட்ட பொருள் 'குடம்' ஆகும்.

இரண்டாம் வேற்றுமை. ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை முதலிய பொருளில் வரும்.

எ.கா- ஆக்கல் - சிற்பி சிலையைச் செதுக்கினான்
அழித்தல் - தச்சன் காட்டை அழித்தான்
அடைதல் - வேடன் மலையை அடைந்தான்
நீத்தல் - வீட்டை விட்டுப் புறப்பட்டான்
ஒத்தல் - வீரன் புலியைப் போன்றவன்
உடைமை - நான் பொன்னை உடையேன்

எனவே, 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு செயப்படுபொருளை ஏற்று ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய பொருளில் அமைந்திருப்பதை அறியலாம்.

**இரண்டா வதனஉருபு ஐயெ அதன்பொருள்**
**ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்**
**ஓத்தல் உடைமை ஆதியாகும் (நன் : 296)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**மூன்றாம் வேற்றுமை**

மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாகும். இவை கருவி, கருத்தா, உடன் நிகழ்ச்சி ஆகிய பொருள்களில் இடம்பெறும் என்பதை அறியலாம்.

எ.கா வாளால் வெட்டினான்

வாளான் வெட்டினான்

இத்தொடர்களில் வெட்டுதல் கருத்தாவின் தொழிலையும் 'வாள்' அதற்குக் காரணமான கருவியாக அமைதலையும் காணலாம். இவ்வாறு அமைவதனைக் கருவிப்பொருள் என்பர்.

எ.கா- தச்சனால் நாற்காலி செய்யப்பட்டது.

இத்தொடரில் 'தச்சன்' என்னும் கருத்தாப் பொருள் செயப்படு பொருளோடு செயப்பாட்டு வினைப் பயனிலை கொண்டு முடிகிறது. இவ்வாறு அமைவதைக் கருத்தாப் பொருள் என்பர்.

எ.கா- தந்தையோடு வந்தான்

தாயோடு வந்தாள்

இத்தொடர்களில் தந்தை என்பது 'வருதல்' என்னும் வினை கொண்டு முடிகிறது. அவ்வினை தன்னுடன் வினை நிகழ்த்தும் மற்றொன்றினையும் சுட்டுகிறது. இவ்வாறு அமைவதனை உடன் நிகழ்ச்சிப் பொருள் என்பர்.

எ.கா- தலையால் வணங்கினான்

தலையான் வணங்கினான் } கருவிப் பொருள்

கம்பரால் இயன்ற காவியம்

கம்பரான் இயன்ற காவியம் கருத்தாப் பொருள்

ஒடு, ஓடு என்னும் இரண்டும் உடன் நிகழ்ச்சிப் பொருளில் இடம்பெறும்

மைந்தனொடு தந்தை வந்தார்

மைந்தனோடு தந்தை வந்தார் } உடன் நிகழ்ச்சிப் பொருள்

எனவே ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன மூன்றாம் வேற்றுமை உருபுகள் என்றும் அவற்றுள் ஆல், ஆன் என்பன கருவி மற்றும் கருத்தாப் பொருட்களிலும் ஒடு, ஓடு என்பன உடன் நிகழ்ச்சிப் பொருளிலும் இடம் பெறும் என்பதை அறியலாம்.

**மூன்றா வதன் உருபு ஆல்ஆன் ஒடுஓடு**

**கருவி கருத்தா உடன்நிகழ்வு அதன்பொருள் (நன் : 297)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**நான்காம் வேற்றுமை**

நான்காம் வேற்றுமை உருபு 'கு' ஆகும். இது கொடை, பகை, நேர்ச்சி (நட்பு), தகவு, அதுவாதல், பொருட்டு, முறை முதலிய பொருளில் இடம்பெறும்.

**எ.கா**-புலவனுக்கு ஆடை கொடு.

இத்தொடரில் அமைந்துள்ள பெயர்ச்சொல்லின் ஈற்றில் 'கு' இடம் பெற்றுள்ளது. இதனை நான்காம் வேற்றுமை உருபு என்பர். இதற்கு இது என்னும் பொருளில் இவ்வேற்றுமை அமையும்.

எ.கா- கொடைப் பொருள் - புலவர்க்குப் பரிசு வழங்கினான்

பகைப் பொருள் - எலிக்குப் பகை பூனை

நட்புப் (நேர்ச்சி) பொருள் - பாரிக்கு நண்பர் கபிலர்

தகுதிப் பொருள் - அரசர்க்கு உரியது மணி மகுடம்

அதுவாதல் பொருள் - தாலிக்குத் தங்கம்

பொருட்டுப் பொருள் - கூலிக்குக் குற்றேவல் செய்தான்

முறைப் பொருள் - செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ

இவை தவிர 'கு' உருபின் மேல் 'ஆக' என்னும் சொல் வருதலும் 'கு' உருபு நிற்றற்குரிய இடத்தில் 'பொருட்டு', 'நிமித்தம்' என்னும் சொல்லுருபுகள் வருதலும் உண்டு.

எ.கா- கூலிக்காக வேலை - 'கு' உருபின் மேல் 'ஆக' வந்தது

பரிசு பெறுவதன் பொருட்டுப் பாடினான் - பொருட்டு என்னும் சொல்லுருபு

பரிசு பெறுவதன் நிமித்தம் வந்தான் - நிமித்தம் என்னும் சொல்லுருபு

எனவே 'கு' என்பது நான்காம் வேற்றுமை உருபு என்றும் இதற்கு இது என்னும் பொருள்பட வரும் என்றும் கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை முதலிய பொருட்களில் இடம் பெறும் என்றும் அறியலாம்.

**நான்கா வதற்கு உருபு ஆகும் குவ்வே**

**கொடைபகை, நேர்ச்சி தகவுஅது வாதல்**

**பொருட்டுமுறை ஆதியின் இதற்குஇது எனல்பொருளே (நன் : 298)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**ஐந்தாம் வேற்றுமை**

'இல்' 'இன்' என்பன ஐந்தாம் வேற்றுமை உருபுகள் ஆகும். அவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது பொருட்களில் வரும். 'இல்' உருபுகளின் மேல் 'நின்று', 'இருந்து' என்னும் சொல்லுருபுகளும் இடம் பெறும்.

**எ.கா-** மலையில் உள்ள வீடு

கண்ணின் மணி

இத்தொடர்களிலுள்ள பெயர்ச்சொற்களின் ஈற்றில் 'இல்', 'இன்' என்பன இடம் பெற்றுள்ளன. இவை இரண்டும் ஐந்தாம் வேற்றுமை உருபுகள் ஆகும்.

எ.கா- மலையின் வீழ் அருவி - நீங்கல் பொருள்

காக்கையின் கரிது களாம்பழம் - ஒப்புப் பொருள்

மதுரையின் வடக்கு சிதம்பரம் - எல்லைப் பொருள்

கல்வியிற் பெரியர் கம்பர் - ஏதுப் பொருள்

நீங்கல் பொருளிலும் எல்லைப் பொருளிலும் இல், இன் உருபுகளின் மேல் நின்று, இருந்து என்பன 'உம்' ஈறு பெற்றும் பெறாமலும் சொல்லுருபுகளாக வரும்.

எ.கா - கல்லூரியினின்றும் போனான்

கல்லூரியிலிருந்து போனான் - நீங்கல் பொருள்

வீட்டினின்றும் கல்லூரி ஒரு நாழிகை

வீட்டிலிருந்து நேர் வடக்கே குளம் - எல்லைப்பொருள்

எனவே 'இல்' 'இன்' என்பன ஐந்தாம் வேற்றுமை உருபுகள் என்றும் அவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது பொருட்களில் வரும் என்றும் 'இல்' உருபுகளின் மேல் 'நின்று' 'இருந்து' என்னும் சொல்லுருபுகள் இடம் பெறும் என்றும் அறியலாம்.

**ஐந்தா வதன்உருபு இல்லும் இன்னும்**

**நீங்கல் ஒப்புஎல்லை ஏதுப் பொருளே (நன் : 299)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**ஆறாம் வேற்றுமை**

அது, ஆது என்பன ஒருமைக்கும் 'அ' என்பது பன்மைக்குமான ஆறாம் வேற்றுமை உருபுகளாகும். ஆறாம் வேற்றுமை கிழமைப் பொருளில் வரும். இக்கிழமை தற்கிழமை, பிறிதின் கிழமை என இரு வகைப்படும்.

தற்கிழமை என்பது தன்னின் நீங்காப் பொருளின் உறவைக் குறிக்கும்.

பிறிதின்கிழமை என்பது தன்னின் வேறாய பொருளின் உறவைக் குறிக்கும்.

தற்கிழமைப் பொருளில் பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் ஆகிய ஐந்தும் இடம் பெறும்.

தற்கிழமை – பிரியாத தொடர்பு

பிறிதின் கிழமை – பிரிந்து வேறாவது

எ.கா - பண்புத் தற்கிழமை - செழியனது கருமை

உறுப்புத் தற்கிழமை - யானையது தந்தம்

ஒன்றன் கூட்டத் தற்கிழமை - ஆட்டு மந்தை

பலவின் ஈட்டத் தற்கிழமை - பறவைகளது கூட்டம்

திரிபின் ஆக்கத் தற்கிழமை - நெல்லினது அவல்

பிறிதின் கிழமை மூன்றாகும்.

எ.கா - பொருட் பிறிதின் கிழமை - எனது வீணை

இடப் பிறிதின் கிழமை - எனது வீடு

காலப் பிறிதின் கிழமை - தமிழரது திருநாள்

ஆறாம் வேற்றுமை உருபாகிய 'அது', 'ஆது' என்பன ஒருமைக்கு அமைந்து வரும்.

எ.கா – எனது கை

நினாது தலை

ஆறாம் வேற்றுமை உருபாகிய 'அ' பன்மைக்கு அமைந்து வரும்.

எ.கா – என் கைகள்

தன் பொருட்கள்

மேலும் ஆறாம் வேற்றுமைக்கு 'உடைய' என்பது சொல்லுருபாக இடம் பெறும்.

எ.கா - இராமனுடைய வீடு

எனவே ஆறாம் வேற்றுமை உருபுகளில் அது, ஆது ஒருமைக்கும் 'அ' பன்மைக்கும் பொருந்தி வரும் என்றும் இவ்வேற்றுமை தற்கிழமை, பிறிதின் கிழமை எனக் கிழமைப் பொருளில் வரும் என்றும் பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் ஆகிய ஐந்து தற்கிழமைப் பொருளிலும் பொருள், இடம், காலம் ஆகிய பிறிதின் கிழமைப் பொருளிலும் இடம் பெறும் என்றும் 'உடைய' என்பது ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபாக அமையும் என்றும் அறியலாம்.

**ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்**
**பன்மைக்கும் அவ்வும் உருபாம் பண்புஉறுப்பு**
**ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்**
**திரிபின் ஆக்கம் ஆம்தற் கிழமையும்**
**பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே** (நன் : 300)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**ஏழாம் வேற்றுமை**

'கண்' 'இல்' முதலியன ஏழாம் வேற்றுமை உருபுகளாகும். ஏழாம் வேற்றுமை இடப் பொருளில் வரும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறும் தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் இருவகைக் கிழமைகளில் இடமாக அமையும்.

பொருள் இடமாதல்

| | |
|---|---|
| முகத்தின்கண் இருக்கின்றது குளிர்ச்சி | - தற்கிழமை |
| பனையின்கண் வாழும் அன்றில் | - பிறிதின் கிழமை |

இடம் இடமாதல்

| | |
|---|---|
| ஊரின் கண் உள்ளது வீடு | - தற்கிழமை |
| கடலின் கண் உள்ளது முத்து | - பிறிதின் கிழமை |

காலம் இடமாதல்

| | |
|---|---|
| காலையில் தோன்றும் கதிரவன் | - தற்கிழமை |
| வானில் பறக்கும் பறவை | - பிறிதின் கிழமை |

சினை இடமாதல்

| | |
|---|---|
| கையின்கண் உள்ளது விரல் | - தற்கிழமை |
| விரலில் உள்ளது மோதிரம் | - பிறிதின் கிழமை |

குணம் இடமாதல்

| | |
|---|---|
| இளமையில் வாய்த்தது அழகு | - தற்கிழமை |
| இளமையில் வாய்த்தது செல்வம் | - பிறிதின் கிழமை |

தொழில் இடமாதல்

| | |
|---|---|
| ஆடற்கண் உள்ளது தாளம் | - தற்கிழமை |
| போரில் புகுந்தன பேய்கள் | - பிறிதின் கிழமை |

ஏழாம் வேற்றுமைக்கு உருபுகளாக அமைந்த கண், இல் என்பவற்றோடு கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உழை, விழி, உழி, உளி, உள், அகம், புறம், இல் என்பனவும் இடப் பொருளுக்குரிய ஏழாம் வேற்றுமை உருபுகளாகும்.

மேலும் பக்கல், பாங்கர், முகம், மாடு, பால், இன் என்பனவும் இடப்பொருளுக்குரிய ஏழாம் வேற்றுமை உருபுகளாக அமையும்.

எ.கா- சாத்தன் பக்கல்

காட்டுப் பாங்கர்

போர் முகத்து

யாவர் மாட்டும்

அவன்பால்

நாட்டின்

எனவே, கண், இல் என்பனவற்றோடு இணைந்த இருபத்தெட்டும் ஏழாம் வேற்றுமைக்கு உருபுகள் ஆகும் என்றும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் ஏழாம் வேற்றுமைக்குரிய இடம் ஆகும் என்றும் இது அறு வகைப் பெயர்களில் தற்கிழமை, பிறிதின்கிழமை என்னும் இரண்டு நிலைகளிலும் அமைந்து வரும் என்றும் அறியலாம்.

**ஏழ னுருபுகண் ணாதி யாகும்**
**பொருண்முத லாறு மோரிரு கிழமையின்**
**இடனாய் நிற்ற லிதன்பொ ளென்ப** (நன் : 301)

**கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்**
**முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்**
**பின்பாடு அளைதேம் உழைவழி உழிஉளி**
**உள்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே** (நன் : 302)

என்னும் நூற்பாக்கள் இடப்பொருள் உணர்த்தும் கண் முதலான உருபுகளைத் தொகுத்துக் காட்டுகின்றன.

**எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை)**

எட்டாம் வேற்றுமைக்கு உருபு இல்லை. படர்க்கைப் பொருளை முன்னிலைப்படுத்தி அழைத்தல் இதன் பொருள் ஆகும். எனவே விளி (விளித்தல்) எட்டாம் வேற்றுமை ஆகும்.

பெயர்கள் விளி ஏற்கும்பொழுது இயல்பாதல், ஈறு குன்றுதல், ஈறு மிகுதல், ஈறு திரிதல், ஈற்றயல் திரிதல் முதலிய இயல்புகளைப் பெறும். இவற்றையே எட்டாம் வேற்றுமை உருபுகளாகக் கொள்வர்.

எ.கா - தந்தை வருக ! தலைவன் வருக - இயல்பாதல்
மன்ன! ஏமக்கருள் - ஈறு குன்றுதல்
தாயே ! வணங்குகின்றேன் - ஈறு மிகுதல்
பிள்ளாய் ! இதனைக் கொள் - ஈறு திரிதல்
மக்காள் ! இங்கே வம்மின் - ஈற்றயல் திரிதல்

எனவே எட்டாம் வேற்றுமைக்கு உருபு இல்லை என்றும் படர்க்கைப் பொருளை முன்னிலைப்படுத்தி அழைத்தல் இதன் பெருள் என்றும் விளி ஏற்கும்பொழுது இயல்பாதல்,

ஈறு குன்றுதல், ஈறு மிகுதல், ஈறு திரிதல், ஈற்றயல் திரிதல் என்னும் தன்மைகளை ஏற்கும் என்றும் அறியலாம்.

**எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்**
**திரிபு குன்றல் மிகுதல் இயல்புஅயல்**
**திரிபும் ஆம்பொருள் படர்க்கை யோரைத்**
**தன்முக மாகத் தானழைப் பதுவே** (நன் : 303)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**விளிக்கப்படு பெயர்கள்**

பெயர்கள் உயர்திணை, அஃறிணை, இருதிணைப் பொதுப்பெயர் என மூன்று வகைப்படும். இம்மூவகைப் பெயர்களும் சில வரன்முறைக்குட்பட்டு விளியேற்கும் தன்மை உடையன.

| | | | |
|---|---|---|---|
| நம்பி | - இ | ஐயன் | - ன் |
| வேந் | - உ | வேள் | - ள் |
| ஆடூ | - ஊ | ஐயர் | - ர் |
| விடலை | - ஐ | குரிசில் | - ல் |
| கோ | - ஓ | சேய் | - ய் |

இவ் உணர்திணைப் பெயர்கள் இ, உ, ஊ, ஐ, ஓ என்னும் உயிர்களும் ன், ள், ர், ல், ய் என்னும் மெய்களுமாகிய பத்து எழுத்துக்களையும் ஈற்றில் கொண்டு முடிந்துள்ளன. இவை விளியேற்கும்.

| | | | |
|---|---|---|---|
| சாத்தி | - இ | சாத்தான் | - ன் |
| கூற்று | - உ | கடவுள் | - ள் |
| பேடு | - ஊ | பிதா | - ஆ |
| தந்தை | - ஐ | தூங்கல் | - ல் |
| ஆண் | - ண் | தாய் | - ய் |

உயர்திணைக்கு ஈறாக அமையும் எழுத்துக்களுள் ஒகர, ரகரம் எழுந்த எட்டுடன் ணகர, ஆகாரம் இணைந்த பத்தும் (இ, உ, ஊ, ஐ, ண், ன், ள், ஆ, ல், ய்) ஈறாக அமைந்த இருதிணைப் பொதுப்பெயர்கள் விளியேற்கும் தன்மை உடையன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மக | - அ | நாரை | - ஐ | நாய் | - ய் |
| புறா | - ஆ | சோ | - ஓ | தகர் | - ர் |
| கிளி | - இ | வண்டு | - உ | குயில் | - ல் |

(உ – குற்றியலுகரம்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தீ | - ஈ | மண் | - ண் | தெவ் | - வ் |
| முக | - உ | கராம் | - ம் | பூழ் | - ழ் |
| பூ | - ஊ | அலவன் | - ன் | புள் | - ள் |
| சே | - ஏ | | | | |

12 உயிர்களும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் 11 மெய்களும் குற்றியலுகரமும் ஆகிய 24 எழுத்துக்களும் மொழிக்கு ஈறாகும். இவற்றுள் ஞகர, நகரங்களும் அளபெடையில் மாத்திரமே ஈறாகும் எகர ஒகார ஔகாரம் நீங்கலாக உள்ள 19 எழுத்துக்களையும் ( அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ண், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், உ ( குற்றியலுகரம்) ஈற்றில் கொண்டுள்ள அ.்.றிணைப் பெயர்கள் விளியேற்கும் தன்மை உடையன.

எனவே இ, உ, ஊ, ஐ, ஒ என்னும் உயிர்களும் ன, ள, ர, ல, ய என்னும் மெய்களுமாகிய 10 எழுத்துக்களையும் ஈறாக உடை உயர்திணைப் பெயர்கள் விளி ஏற்கும் என்றும்

இவற்றுள் ஒகார உயிரும் ரகர மெய்யும் ஒழிந்த எட்டுடன் ணகரமும் ஆகாரமும் இணைந்த 10 எழுத்துக்களையும் ஈறாக உடைய பொதுப்பெயர்கள் விளி ஏற்கும் என்றும்

மொழிக்கு ஈறாகும் 24 எழுத்துக்களுள் ஞகரமும் நகரமும் அளபெடையில் மாத்திரமே ஈறாகும் எகர, ஒகர, ஔகாரங்கள் ஒழிந்த 19 எழுத்துக்களையும் ஈறாக உடைய இருதிணைப் பொதுப் பெயர்கள் விளி ஏற்கும் என்றும் அறியலாம்.

**இஉ ஊவோடு ஐஒ னளரல**
**யவ்வீற்று உயர்திணண ஒரஅல் இவற்றோடு**
**ன.்.கான் ஆஈறு ஆகும் பொதுப்பெயர்**
**ஞநவொழி அனைத்தீற்று அ.்.றிணை விளிப்பன (நன் : 304)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**மூவகைப் பெயருக்கும் பொதுவான விளியுருபுகள்**

உயர்திணைப் பெயர் இயல்பாகவும் ஏகாரம் மிகுந்தும் இகர நீட்சி பெற்றும் விளியேற்கும்

நம்பி கூறாய்

நம்பியே கூறாய்

நம்பீ கூறாய்

இத்தொடர்களிலுள்ள நம்பி என்னும் உயர்திணைப் பெயர் இயல்பாகவும் ஏகாரம் மிகுந்தும் இகர நீட்சி பெற்றும் விளியேற்றுள்ளதைக் காணலாம்.

இவ்வாறே அ.்.றிணைப் பெயரும் இருதிணைப் பொதுப் பெயரும் இயல்பாகவும் ஏகாரம் மிகுந்தும் இகர நீட்சி பெற்றும் விளியேற்கும்.

எ.கா – கிளி நல்லாய் - அ.்.றிணைப் பெயர் இயல்பு

கிளியே வாராய் - அ.்.றிணைப் பெயர் ஏகாரம் மிகுதல்

தும்பி வாராய் - அ.்.றிணைப் பெயர் இகர நீட்சி

அன்னை கூறாய் - இருதிணைப் பொதுப்பெயர் இயல்பு

அன்னையே கூறாய் - இருதிணைப் பொதுப்பெயர் ஏகாரம் மிகுதல்

சாத்தீ கூறாய் - இருதிணைப் பொதுப்பெயர் இகர நீட்சி

இவ்வாறு இயல்பாகவும் ஏகாரம் மிகுந்தும் இகரம் நீட்சி பெற்றும் வருதல் மூவகைப் பெயர்களுக்கும் பொதுவாய் அமையும் விளியுருபுகளாகும்.

**இம்முப் பெயர்க்கண் இயல்பும் ஏயும்**

**இகர நீட்சியும் உருபாம் மன்னே** (நன் : 305)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**விளியுருப்பிற்குரிய சிறப்பு விதி**

அன்னை, அம்மை என 'ஐ' கார இறுதி பெற்றுள்ள இருதிணைப் பொதுப்பெயர்கள் இயல்பாதல் மற்றும் ஏகாரமாகத் திரிதல் இன்றி 'ஆய்' ஆகவும் 'ஆ' வாகவும் திரிந்து விளியேற்கும்.

எ.கா – அன்னை - அன்னாய் - ஆய் ஆகத் திரிதல்

அம்மை - அம்மா - ஆவாகத் திரிதல்

இவ்வாறே உயர்திணை அ.்.றிணைப் பெயர்கள் 'ஐ' கார இறுதி பெற்று வரும்பொழுது 'ஆய்' ஆக மட்டுமே திரிந்து விளியேற்கும்.

எ.கா – விடலை - விடலாய் - ஆய் ஆகத் திரிதல்

நாரை - நாராய் - ஆய் ஆகத் திரிதல்

சில இடங்களில் அன்னை, அம்மை இருதிணைப் பொதுப்பெயர்களின் 'ஐ' காரம் ஏகாரமாகத் திரிந்தும் விளியெற்கும்.

எ.கா - அன்னை - அன்னே

அம்மை - அம்மே

எனவே 'ஐ' கார இறுதி பெற்றுள்ள இருதிணைப் பொதுப்பெயர்கள் 'ஆய்' ஆகவும் 'ஆ' வாகவும் திரிந்து விளியுருபுகள் ஏற்கும் என்றும் 'ஐ' 'கா' இறுதி பெற்றுள்ள உயர்திணை அஃறிணைப் பெயர்கள் 'ஆ' வாகத் திரிந்து விளியுருபுகள் ஏற்கும் என்றும் அறியலாம்.

**ஐயிறு பொதுப் பெயர்க்கு ஆயும்ஆவும்**

**உருபுஆம் அல்லவற்று ஆயும் ஆகும் (நன் : 306)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**'ன' கர ஈற்று உயர்திணைப் பெயர் விளியேற்கும் முறை**

மூவகைப் பெயர்களும் விளியேற்கும்பொழுது இயல்பாதல், ஏகாரம் மிகுதல், இகர நீட்சி பெறல் என்பது பொது விதியாகும். ஆனால் 'ன' கர உயர்திணைப் பெயர்களில் சில பின்வரும் முறைகளில் விளியுருபு ஏற்கும்.

| | | |
|---|---|---|
| எ.கா – கிழான் | - கிழா அன் | - அளபெடுத்தது |
| புலவன் | - புலவ | - ஈறு கெட்டது |
| பெருமன் | - பெருமான் | - ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டது |
| மன்னன் | - மன்னோ | - ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டு ஓகாரம் நீண்டது |
| திரையன் | - திரையவோ | - ஈறுகெட்டு ஓகாரம் மிக்கது |
| வாயிலான் | - வாயிலாப் | - னகரம் யகரமாயிற்று |
| வாயிலான் | - வாயிலோயே | - னகரம் யகரமாகி ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரம் மிக்கது |
| ஐயன் | - ஐயே | - ஈறழிந்து அயல் அகரம் ஏகாரமாயிற்று |

எனவே பொது விதியால் இயல்பும் ஏகாரமும் மிகுதல் இன்றி, னகர, மெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும்; சில ஈறு கெடும். சில ஈற்றயல் நீளும், சில ஈற்றயல் நீண்டு ஈறு கெடும். சில ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டு ஓகாரம் மிகும். சில ஈறுகெட்டு ஓகாரம் மிகும்.சில னகர மெய் யகர மெய்யாகும். சில ஈற்று னகரமெய் யகர மெய்யாகத் திரிந்து ஆகாரம் ஓகாரமாகி ஏகாரமாகும். சில ஈறு கெட்டு அயல் அகரம் ஏகாரமாகும் ஆகிய கருத்துக்களை அறியலாம். இவையே அதன் விளியுருபுகளாகும்.

**ஒருசார் னவ்வீற்று உயர்திணைப் பெயர்க்கண்**

**அளபுஈறு அயல்வழி நீட்சி அதனோடு**

**ஈறுபோதல் அவற்றோடு ஓவுறல்**

**ஈறழிந்து ஒவுறல் இறுதியல் வாதல்**

**அதனோடு அயல் திரிந்து ஏவுறல் ஈறழிந்து**

**அயலெ ஆதலும் விளியுருபு ஆகும் (நன் : 307)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**'ள' கர ஈற்று உயர்திணைப் பெயர் விளி உருபேற்கும் முறை**

மூவகைப் பெயர்களும் விளியேற்கும்பொழுது இயல்பாதல், ஏகாரம் மிகுதல், இகர நீட்சி பெறல் என்பது பொது விதியாகும். ஆனால் 'ள' கர உயர்திணைப் பெயர்களில் சில, பின்வரும் நிலைகளில் விளியுருபேற்கும்.

| | | |
|---|---|---|
| எ.கா- வேள் | - வேஎள் | - அளபெடுத்தது |
| எல்லாள் | - எல்லா | - ஈறு அழிந்தது |
| மக்கள் | - மக்காள் | - ஈற்றயல் நீண்டது |
| குழையாள் | - குழையாய் | - ளகரம் யகரமாயிற்று |
| அடிகள் | - அடிகேள் | - ஈற்றயல் அகரம் ஏகாரமாயிற்று |

எனவே பொதுவிதியின்றி ளகர ஈற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுத்தலும் சில ஈறுகெடுதலும் சில ஈற்றயல் நீளலும் சில இறுதி ளகரம் யகரமாதலும் சில ஈற்றயல் அகரம் ஏகாரமாதலும் உண்டு என்பதை அறியலாம். இவையே அதன் விளியுருபுகளாகும்.

**ண.்.கான் உயர் பெயர்க்கு அளவுஈறு அழிவுஅயல்**

**நீட்சி இறுதி யவ்வொற்று ஆதல்**

**அயலில் அகரம்ஏ ஆதலும் விளித்தது (நன் : 308)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**ரகர ஈற்று உயர்திணைப் பெயர் விளி உருபேற்கும் முறை**

மூவகைப் பெயர்களும் விளியேற்கும்பொழுது இயல்பாதல், ஏகாரம் மிகுதல், இகர நீட்சி பெறல் என்பது பொது விதியாகும். ஆனால் ரகர ஈற்று உயர்திணைப் பெயர்களுள் சில விளியுருபுகளை ஏற்கும்பொழுது பின்வரும் முறையில் அமையும்.

| | | |
|---|---|---|
| எ.கா- சிறார் | - சிறா அர் | - அளபெடுத்தது |
| தெவ்வர் | - தெவ்விர் | - ஈற்றயல் அகரம் இகரமாயிற்று |
| வணிகர் | - வணிகீர் | - ஈற்றயல் அகரம் ஈகரமாயிற்று |
| சான்றோர் | - சான்றீர் | - ஈற்றயல் ஆகரம் ஈகரமாயிற்று |

| | | |
|---|---|---|
| கணியார் | - கணியீரே | - ஈற்றயல் ஆகரம் ஈகரமாய் ஏகாரம் மிக்கது |
| நம்பியார் | - நம்பீரே | - ஈற்றயல் ஏகாரம் மிக்கு அயல் யா கெட்டு அதன் அயல் இகரம் ஈகரமாயிற்று |
| எமர் | - எமரீர் | - ஈர் ஏற்றது |

எனவே பொதுவிதியின்றி ளகர ஈற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும். சில ஈற்றயல் அகரம் இகரமாகவும் ஈகாரமாகவும் திரியும். சில அவ்வீற்றயல் ஆகாரம் ஈகாரமாகும். சில அதனோடு ஏகாரமேற்கும். சில ஈற்றில் ஏகாரம் மிக்கு அயலில் யா கெட்டு அதன் அயல் இகரம் ஈகாரமாகும். சில ஈற்றில் ஈர் ஆகும். இவ்வாறு அமைவன விளியுருபுகள் ஆகும்.

**ரவ்வீற்று உயர்பெயர்க்கு அளபுஎழல் ஈற்றுஅயல்**
**அகரம் இஈ ஆதல் ஆண்டை ஆ**
**ஈயாதல் அதனோடு ஏயுறல் ஈற்றுஏ மிக்குஅயல்**
**யாக்கெட்டு அதன்அயல் நீடல்**
**ஈற்றின் ஈருறல் இவையும் ஈண்டு உருபே (நன் : 309)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**லகர யகர ஈற்று உயர்திணைப் பெயர் விளி உருபேற்கும் முறை**

மூவகைப் பெயர்களும் விளியேற்கும்பொழுது இயல்பாதல், ஏகாரம் மிகுதல், இகர நீட்சி பெறல் என்பது பொது விதியாகும். ஆனால் லகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் சில அளபெடுத்தும் சில ஈற்றயல் நீண்டும் விளியுருபேற்கும்.

எ.கா – மால் - மாஅல் - அளபெடுத்தது
மடவரல் - மடவரால் - ஈற்றயல் நீண்டது

யகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் அளபெடுத்து விளியுறுபேற்கும்.

எ.கா – சேய் - சேஎய்

எனவே பொது விதியேயன்றி லகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்கள் சில அளபெடுக்கும் என்றும் சில ஈற்றயல் நீளும் என்றும் யகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்கள் சில அளபெடுக்கும் என்றும் அறியலாம். இவ்வாறு விளியுருபுகள் அமையும்.

**லகரஈற்று உயர்பெயர்க்கு அளபுஅயல் நீட்சியும்**
**யகர ஈற்றிற்கு அளபுமாம் உருபே (நன் : 310)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**னகர இறுதி அஃறிணைப் பொதுப்பெயர் விளி உருபேற்கும் முறை**

மூவகைப் பெயர்களும் விளியேற்கும்பொழுது இயல்பாதல், ஏகாரம் மிகுதல், இகர நீட்சி பெறல் என்பது பொது விதியாகும். ஆனால் னகர இறுதி அஃறிணைப் பெயர்களும் சில பொதுப் பெயர்களும் ஈறுகெட்டும் ஈற்றயல் நீண்டும் விளியுறுபேற்கும்.

எ.கா – அலவன் - அவல - அஃறிணை ஈறுகெட்டது

அலவரன் - அலவா - அஃறிணைப் பெயர் கெட்டு ஈற்றயல் நீண்டது.

சாத்தன் - சாத்த - பொதுப்பெயர் ஈறுகெட்டது.

சாத்தன் - சாத்தா - பொதுப்பெயர் ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டது.

எனவே பொது விதியின்றிச் சில னகர மெய்யீற்று அஃறிணைப் பெயர்களும் சில இருதிணைப் பொதுப்பெயர்களும் ஈறு கெட்டும் ஈறுகெட்டு ஈற்றயல் விளியுறுபேற்கும் என்பதை அறியலாம்.

**னவ்வீற்று உயர்திணை அல்இலு பெயர்க்கண்**
**இறுதி அழிவுஅத னோடுஅயல் நீட்சி** (நன் : 311)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**லகர, ளகர அஃறிணைப் பெயரும் பொதுப்பெயர் விளி உருபேற்கும் முறை**

மூவகைப் பெயர்களும் விளியேற்கும்பொழுது இயல்பாதல், ஏகாரம் மிகுதல், இகர நீட்சி பெறல் என்பது பொது விதியாகும். ஆயினும் லகர, ளகர ஈற்று அஃறிணைப் பெயர்களுக்கும் பொதுப் பெயர்களுக்கும் ஈற்றயல் நீளுதல் விளியுருபாம் என்பதை அறியலாம்.

எ.கா- கிளிகள் - கிளிகாள் - அஃறிணைப் பெயர்

பிள்ளைகள் - பிள்ளைகாள் - பொதுப்பெயர்

எனவே லகர, ளகர ஈற்று அஃறிணைப் பெயர்களுக்கும் பொதுப்பெயர்களுக்கும் பொது விதியேயன்றி ஈற்றயல் நீளுதல் விளியுருபாகும் என்பதை அறியலாம்.

**லளஈற்று அஃறிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்**
**ஈற்றுஅயல் நீட்சியும் உருபுஆ கும்மே** (நன் : 312)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**விளியுருபுகளுக்குப் புறநடை**

விளித்தல் என்பது பொதுவாக அருகில் இருப்பவரை விளித்தல், தூரத்திலிருப்பவரை விளித்தல், வேதனையில் விளித்தல் என்னும் நிலைகளில் அமையும். அவை முறையே அண்மை விளி, சேய்மை விளி, புலம்பல் என்றழைக்கப்படும்.

முன் குறிப்பிடப்பட்டுள்ள விளியுருபுகளுள் அண்மையில் இருப்பவரை விளிக்கும்பொழுது இயல்பாயும் ஈறுகெட்டும் அமையும்.

எ.கா – தம்பி - அண்மைவிளி இயல்பு

அரச - அண்மைவிளி ஈறுகெட்டது.

தூரத்திலுள்ளவரை விளிக்கும்பொழுது விளியுருபுகள் அளபெடுக்கும்.

எ.கா – சிறாஅர், மாஅல், சேஎய்

வேதனையுடன் இணைந்த புலம்பலில் விளியுருபுகள் ஓகார நீட்சியைப் பெறும்.

எ.கா – ஐயாவோ, அப்பாவோ

எனவே முன்சொல்லப்பட்ட விளியுருபுகளுள் இயல்பாதலும் ஈறுகெடுதலும் அண்மை விளியில் இடம் பெறும் என்றும் அளபெடுத்தல் சேய்மை விளியில் இடம் பெறும் என்றும் ஓகாரம் மிகுதல் புலம்பல் விளியில் இடம்பெறும் என்றும் அறியலாம்.

**அண்மையின் இயல்பும் ஈறு அழிவும் சேய்மையின்**

**அன்பும் புலம்பின் ஓவும் ஆகும்.** (நன் : 313)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**விளியுருபேலாப் பெயர்கள்**

நுவ்வொடுற்ற ன, ள, ர ஈற்றுப் பெயர்களும் ன, ள, ர, வை, து ஈற்று வினாச் சுட்டுப் பெயர்களும் ன, ள, ர, வை, து ஈற்று சுட்டுப் பெயர்களும் தாம், தான் என்னும் பெயர்களும் பிறவும் விளியுருபேலாப் பெயர்களாகும்.

எ.கா- நுமன், நுமள், நுமர் - நுவ்வொடுற்ற ன, ள, ர ஈற்றுப் பெயர்கள்

எவன், எவள், எவர், எவை, எது - ன, ள, ர, வை, து

யாது, யாவன், யாவர், யாவை, யாது - ஈற்று வினா

ஏவன், ஏவள், ஏவர், ஏவை, ஏது - ன, ள, ர, வை, து

அவன், அவள், அவர், அவை, அது - சுட்டுப் பெயர்கள்

இவன், இவள், இவர், இவை, இது - ன, ள, ர, வை, து

உவன், உவள், உவர், உவை, உது - ஈற்றுச் சுட்டுப் பெயர்கள்

மேலும் மற்றையான், மற்றையாள், மற்றையார், மற்றையது, மற்றையன, பிறன், பிறள், பிறர், பிறிது, பிற என்பனவும் விளியுருபேலாப் பெயர்களாகும்.

**நுவ்வொரு வினாச்சுட்டு எற்ற ன ள ர**

**வை து தாம் தான் இன்னனி விளியா** (நன் : 314)

என்னும் நூற்பா விளியேலாப் பெயர்களைத் தொகுத்துச் சுட்டுகிறது.

**முதற்பெயர் சினைப் பெயர்களின் வேற்றுமைக்குப் புறநடை**

முதற்பெயரை ‘ஐ’ உருபு பொருந்தினால் சினைப் பெயரைக் ‘கண்’ உருபு பொருந்தும். முதற்பெயருக்கு ‘அது’ உருபு வரின் சினைப் பெயருக்கு ஐ உருபு வரும்.

எ.கா- யானையைக் காலின்கண் வெட்டினான்.

இத்தொடரில் யானை என்னும் முதற்பெயர் இரண்டாம் வேற்றுமை உருபாகிய ‘ஐ’ பெற்று வந்துள்ளது. அதனால் கால் என்னும் சினைப் பெயர் ஏழாம் வேற்றுமை உருபாகிய ‘கண்’ என்பதைப் பெற்று அமைந்துள்ளது.

எ.கா- யானையது காலை வெட்டினான்.

இத்தொடரில் யானை என்னும் முதற்பெயர் ஆறாம் வேற்றுமை உருபாகிய ‘அது’ என்பதைப் பெற்றுள்ளது. அதனால் கால் என்னும் சினைப்பெயர் ‘கண்’ என்னும் ஏழாம் வேற்றுமை உருபு இன்றி அமைந்துள்ளது.

**முதலை ஐயுறின் சினையைக் கண்உறும்**

**அதுமுதற் காயின் சினைக்கு ஐ ஆகும்.** (நன் : 315)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**முதல் சினைக்கும் பிண்டப் பொருளுக்கும் புறனடை**

உலகத்திலுள்ள முதற்பொருளும் சினைப்பொருளும் கூறக் கூடியவரின் குறிப்பால், முதற்பொருளே சினைப் பொருளாகவும் சினைப் பொருளே முதற்பொருளாகவும் மாறுபட்டு வரும்.

கை என்பது, மனிதனை நோக்கும்பொழுது சினைப்பொருளாகவும் விரலை நோக்கும்பொழுது முதற்பொருளாகவும் அமையும்.

அவ்வாறே பிண்டப் பொருள் (தொகுதிப் பொருள்) தொகுத்த பொருளிவை, தொகுக்கப்பட்ட பொருளிவை என வெவ்வேறு பொருள்களை உடையனவல்ல. குறிப்பால் தொகுதிப் பொருளாகவும் தொகுக்கப்பட்ட பொருளாகவும் வேறு வேறாகக் கூறலாம்.

எ.கா - நெல்லைப் பொலியின்கண் வாரினான்

பொலியின்கண் நெல்லை வாரினான்

நெல்லினது பொலியை வாரினான்

இவ் எடுத்துக்காட்டுகளால் பிண்டப் பொருளாகிய பொலிக் குப்பைகளும் பிண்டித்த பொருளாகிய நெல்லும் வேறாகாமையை அறியலாம்.

எனவே முதற்பெயர் இவை சினைப்பெயர் இவை என வேறுபட உரைப்பது உரைப்பவரின் குறிப்பைக் கொண்டே அமையும். பிண்டப் பொருளும் அத்தன்மை உடையதாகும்.

**முதலிவை சினையிவை எனவேறு உளவில்**

**உரைப்போர் குறிப்பின் அற்றே பிண்டமும்** (நன் : 316)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**உருபுகள் தொடர்பான சிறப்பு இலக்கணங்கள்**

எட்டு வேற்றுமைகளையும் அவற்றுக்கான உருபுகளையும் வரிசையாக விளக்கிய நன்னூலாசிரியர் பெயரியலின் முடிவில் வேற்றுமை உருபுகள் தொடர்பான சிறப்பு இலக்கணக் கூறுகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறார். அவை உருபு மயக்கம், முதற்பெயர், சினைப் பெயர், உருபு மாற்றம் என்பனவாகும். இவற்றை அறிவது அவசியமாகும்.

**உருபு மயக்கம்**

ஒவ்வொரு வேற்றுமைக்கும் பொருளும் உருபும் வரையறுக்கப்பட்டுள்ளன. சில வேற்றுமைப் பொருட்கள் தமக்குரிய உருபை விட்டு வேறு வேற்றுமை உருபை ஏற்று வருதல் உண்டு. அங்ஙனம் வரினும் பொருளுக்கு ஏற்ப உருபு திரியுமேயன்றி உருபுக்கேற்பப் பொருள் திரியாது.

எ.கா - காலத்தினாற் செய்த நன்றி

தகுந்த காலத்தின் கண் செய்த உதவி என்பது பொருள். இதில் ஏழாம் வேற்றுமை உருபு வரவேண்டிய இடத்து மூன்றன் உருபு வந்துள்ளது. இவ்வாறு ஒரு வேற்றுமை உருபு நிற்க வேண்டிய இடத்து வேறொரு வேற்றுமையின் உருபு வந்து மயங்குவதை உருபு மயக்கம் என்பர்.

**யாதன் உருபின் கூறிற்று ஆயினும்**

**பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.** (நன் : 317)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**சில வேற்றுமை உருபுகள் செய்யுளிள் திரிந்து வரும் முறை**

உயர்திணையில் ஐ, ஆன், கு ஆகிய மூன்று வேற்றுமை உருபுகளும் செய்யுளில் அமையும்பொழுது அகரமாகத் திரியும்.

எ.கா – காவலனோக் களிறஞ்சுமே - காவலோனை

புலவரான - புலவரான்

கடிநிலையின்றே ஆசிரியற்க - ஆசிரியற்கு

அஃறிணையில் செய்யுளிடத்து 'ஆன்' உருபு மட்டுமே அகரமாகத் திரியும்.

எ.கா – புள்ளினான - புள்ளினான்

எனவே ஐ, ஆன், கு என்னும் வேற்றுமை உருபுகள் செய்யுளில் உயர்திணைப் பொருளில் இடம்பெறும்பொழுது அகரமாகத் திரியும் என்றும் இவற்றுள் ஆன் மட்டும் செய்யுளில் அஃறிணைப் பொருளில் இடம்பெறும்பொழுது அகரமாகத் திரியும் என்றும் அறியலாம்.

**ஐஆன்குச் செய்யுட்கு அவ்வும் ஆகும்**

**ஆகா அஃறிணைக்கு ஆன்அல் லாதன. (நன் : 318)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**எட்டு வேற்றுமைகளுக்கும் உரிய முடிக்கும் சொல்**

எல்லைப் பொருளில் வரும் ஐந்தாம் வேற்றுமையும் கிழமைப் பொருளில் வரும் ஆறாம் வேற்றுமையும் முடிக்கும் சொல்லாகப் பெயரைக் கொண்டமையும்.

எல்லைப் பொருள் ஒழிந்த நிலையில் அமையும் ஏனைய வேற்றுமைகள் வினையைக் கொண்டு முடியும்.

**எ.கா-** கருவூரன் கிழக்கு

இத்தொடர் எல்லைப் பொருளை உணர்த்தும் ஐந்தாம் வேற்றுமை 'இன்' உருபு கொண்டு முடிந்துள்ளது.

எ.கா- சாத்தனது கை

இத்தொடர் தற்கிழமைப் பொருளுக்குரிய ஆறாம் வேற்றுமையினது உருபு கொண்டு முடிந்துள்ளது.

எ.கா – சாத்தன் வந்தான்

குடத்தை வனைந்தான்

வாளால் வெட்டினான்.

நான்காம் ஏழாம் வேற்றுமைகள் வினையை அன்றிப் பெயரையும் முடிக்கும் சொல்லாகப் பெறும்.

எ.கா – மணியின் கண்ஒளி

பிணிக்கு மருந்து

இத்தொடர்கள் மணியின்கண் (இருக்கும்) ஒளி எனவும் பிணிக்கு (கொடுக்கும்) மருந்து எனவும் வினையை வேண்டி நிற்பதனால் வினையோடு பொருந்தும் பெயர்களாயின.

வினையைக் கொண்டு முடியும் சில வேற்றுமைகள் தொழிற்பெயரையும் விணையாலணையும் பெயரையும் கொண்டு முடியும்.

எ.கா – சாத்தன் வருதல்

குடத்தை வனைந்தவன்

முதல் வேற்றுமை, பெயரையும் வினாவையும் கொண்டு முடியும்.

எ.கா – சாத்தன் இவன்

சாத்தன் யாவன்

எனவே எல்லைப் பொருளில் வரும் ஐந்து மற்றும் ஆறாம் வேற்றுமைகள் பெயர் கொண்டு முடியும் என்றும் ஒழிந்த எழுவாய் முதலிய வேற்றுமைகள் வினைகொண்டு முடியும் என்றும் அவற்றுள் நான்காம், ஏழாம் வேற்றுமைகள் வினையன்றிப் பெயரையும் கொண்டு முடியும் என்றும் பெரும்பாலும் என்பதனால் வினைகொண்டு முடியும். சில வேற்றுமைகள் தொழிற் பெயர், விணையாலணையும் பெயர்களைக் கொண்டு முடியும் என்றும் எழுவாய் வேற்றுமை, பெயரையும் வினாயையும் கொண்டு முடியும் என்றும் அறியலாம்.

**எல்லை என்றும் அதுவும் பெயர் கொளும்**

**அல்ல வினைகொளும் நான்குஏழ் இருமையும்**

**புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர்** (நன் : 319)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

## வினையியல்

வினையியலில் வினைச் சொல்லின் இலக்கணம் விவரிக்கப்படுகிறது. இதன்கண் வினைச் சொல்லின் விளக்கம், பகுப்பு - வினை முற்றின் இலக்கணம், பகுப்பு - பெயரெச்சம் - வினையெச்சம் - முற்றெச்சம் ஆகியன விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

பொருளின் புடைப் பெயர்ச்சியே வினையாகும். இது வினையடி எனப்படும். முதனிலையினடியாகத் தோன்றி, பல்வேறு வடிவங்களைப் பெறும். நட, போ, உண், எழு, படு, செல் முதலியன வினைப் பகுதிகளாகும். இவை பின்வரும் நிலைகளில் விரிவு பெறும்

நட - ஏவல் ஒருமை வினைமுற்று

நடக்க - வியங்கோள் வினைமுற்று

நடந்தான் - தெரிநிலை வினைமுற்று

நடந்த - பெயரெச்சம்

நடந்து - வினையெச்சம்

நடந்தவன் - வினையாலணையும் பெயர்

நடத்தல் - தொழிற்பெயர்

இவற்றில் நடந்தவன், நடத்தல், என்னும் இரண்டும் பெயர்களாகும்.

வினை என்பது வேற்றுமை ஏற்காது. தொழிலையும் காலத்தையும் காட்டும். ஆனால் பெயர், காலம் காட்டாது. வேற்றுமை ஏற்கும்.

ஆயினும் நடத்தல் என்பது நடந்தனை, நடத்தலால் என வேற்றுமை ஏற்றும் நடந்தவன் என்பது காலம் காட்டுவதோடு வேற்றுமை ஏற்றும் வரும். நடத்தல் என்னும் தொழிற்பெயர் நடந்தவன் என்னும் வினையடியாகவே பிறந்துள்ளன.

இவை தவிர ஏனைய ஆறு விரிகளும் (நட, நடக்க, நடந்தான், நடந்த, நடந்து) முற்றுவினை, பெயரெச்சவினை, வினையெச்சவினை என பாகுபடுத்தப்படும். இம்மூன்றும் தெரிநிலைவினை, குறிப்புவினை என மேலும் விரிவு பெறும்.

**தெரிநிலை வினை**

கருத்தா, கருவி, நிலம் (இடம்), செயல், காலம், செயப்படுபொருள் என்னும் ஆறினையும் வெளிப்படையாக உணர்த்தும் வினை தெரிநிலைவினை ஆகும்.

'படித்தான்' என்பது தெரிநிலை வினையாகும்.

படித்தான் என்பது 'ஆன்' விகுதி பெற்று உயர்திணை ஆண்பாலைக் கருத்தாவாக உணர்த்துகிறது. 'படி' என்னும் இடைநிலை இறந்த காலத்தை வெளிப்படுத்துகிறது. படிப்பதற்குக் கண், வாய், ஆகியன காரணமாகின்றன. படிக்கும் இடம் பாடசாலை அல்லது வீடு என்பது உணர்த்தப்படுகிறது. பாட அறிவு செயப்படு பொருளாகிறது.

செயல் முழுமை பெற்று வினைமுற்று இறந்த காலம் (வந்தான்) நிகழ்காலம் (வருகின்றான்) எதிர்காலம் (வருவான்) என யாதானும் ஒரு காலத்தைத் தெளிவாகத் தெரிவிப்பதால் தெரிநிலை வினைமுற்று ஆகும்.

எனவே படித்தான் என்னும் வினைச்சொல் செய்பவன், கருவி, நிலம் (இடம்), செயல், காலம், செயப்படுபொருள் என்னும் ஆறினையும் வெளிப்படுத்துவதை அறியலாம்.

**செய்பவன் கருவி நிலம் செயல் காலம்**

**செய்பொருள் ஆறும் தருவது வினையே** (நன் : 320)

என்னும் நூற்பா இதனை விளக்குகின்றது.

**குறிப்பு வினை**

பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடியாகத் தோன்றி, கருத்தாவை மட்டும் வெளிப்படையாக உணர்த்தி கருவி, நிலம், காலம், செயல், செயப்படுபொருள் ஆகியவற்றைக் குறிப்பால் உணர்த்தும் வினை குறிப்பு வினை ஆகும்.

எ.கா- பொன்னன் - பொருள் குறிப்புவினை

சிதம்பரத்தான் - இடக் குறிப்புவினை

ஓணத்தான் - காலக் குறிப்புவினை

மூக்கன் - சினைக் குறிப்புவினை

நல்லவன் - பண்புக் குறிப்புவினை

நடையன் - தொழில் குறிப்புவினை

இத்தொடர்கள் 'அன்' விகுதி பெற்று உயர்திணை ஆண்பாலைக் கருத்தாவாக வெளிப்படுத்துகின்றன. இவை தெரிநிலை வினையைப் போன்று வெளிப்படையாக அமையவில்லை. இவற்றைப் படிப்பவரே குறிப்பால் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பொன்னன் என்பது பெயர்ச்சொல் போல் தோன்றினும் பொன்னை உடையவனாக இருந்தான் எனத் தொழிலை உணர்த்துவதால் வினைச்சொல் ஆயிற்று. முன்பு இருந்தான் என குறிப்பாகக் கொண்டு கருவி, நிலம், காலம், செயல், செயப்படுபொருள் ஆகியவற்றை வருவித்துக் கொள்ள வேண்டும்.

பொன்னன் என்பது பொருட்பெயரடியாகவும் சிதம்பரத்தான் என்பது இடப்பெயரடியாகவும் ஓணத்தான் என்பது காலப்பெயரடியாகவும் மூக்கன் என்பது

சினைப்பெயரடியாகவும் நல்லவன் என்பது பண்புப்பெயரடியாகவும் நடையன் என்பது தொழிற்பெயரடியாகவும் வந்துள்ளன.


**பொருள்முதல் ஆறினும் தோன்றிமுன் ஆறனுள்**

**வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே** (நன் : 321)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**வினைச்சொல் பாகுபாடு**

தெரிநிலை வினை, குறிப்பு வினை என பாகுபடுத்தப்பட்ட வினைச்சொல், முற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூன்றாகப் பகுக்கப்படும். இம்மூன்றும் திணை, பால் இடங்களுள் ஒன்றிற்குச் சிறப்பாகவும் பலவற்றிற்குப் பொதுவாகவும் வரும்.




என்னும் அட்டவணை வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

**அவைதாம்**


**முற்றும் பெயர்வினை எச்சமும் ஆகி**

**ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்** (நன் : 322)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வினை முற்று (முற்று வினை)**

வினைச் சொற்கள் திணை, பால் காட்டும் விகுதிகளோடு முற்றுப் பெற்று நிற்கும் வினைகளைக் கொண்டுள்ளன. இவை முற்றுவினை அல்லது வினைமுற்று எனப்படும். இதனை தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருபிரிவாகக் கொள்ளலாம். இதனை,




இவ்அட்டவணை விளக்குகிறது. செய்பவன் கருவி, நிலம், காலம், செயல், செய்பபடுபொருள் என்னும் ஆறினையும் முறையாக வெளிப்படுத்தி அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் திணை, பால் விகுதிகளோடு முற்றுப்பெற்று நிற்கும் வினை தெரிநிலை வினைமுற்று ஆகும்.

செய்பவனை மட்டும் வெளிப்படுத்தி கருவி, நிலம், காலம், செயல், செயப்படுபொருள் அகியவற்றைக் குறிப்பால் வெளிப்படுத்தி அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் திணை பால் விகுதிகளோடு முற்று பெற்று நிற்கும் வினை குறிப்பு வினை முற்று ஆகும்.

| எ.கா- தெரிநிலை வினை | குறிப்பு வினை | அறுவகைப்பெயர் |
|---|---|---|
| செய்தான் இராமன் | பெரியன் இராமன் | பொருள் |
| குளிர்ந்தது நிலம் | வலியது நிலம் | இடம் |
| வந்தது கார் | கரியது கார் | காலம் |
| குவிந்த கை | சிறியது கை | சினை |
| வந்தது நன்மை | உள்ளது நன்மை | பண்பு |
| ஒழிந்தது பிறப்பு | கொடியது பிறப்பு | தொழில் |

இத்தொடர்கள் செய்பவன் கருவி, நிலம், காலம், செயல், செயப்படுபொருள் என்னும் ஆறினையும் முறையாக வெளிப்படுத்தியும் குறிப்பாக வெளிப்படுத்தியும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் அமைந்துள்ளன.

**பொதுஇயல்பு ஆறையும் தோற்றிப் பொருட்பெயர்**
**முதல்அறு பெயர்அலது ஏற்பிலது முற்றே (நன் : 323)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடுகள்**

தெரிநிலைவினை முற்றுகள் படர்க்கை இடத்தில் அமைந்து வரும். ஐம்பாலையும் முக்காலத்தையும் உணர்த்தும். எனவே படர்க்கை இடத்தில் அமையும் தெரிநிலை வினைமுற்றுக்கள் பதினைந்து (1 நூ 5 நூ 3) ஆகும். இது ஆண்பால் வினைமுற்று, பெண்பால் வினைமுற்று, பலர்பால் வினைமுற்று, ஒன்றன்பால் வினைமுற்று, பலவின் பால் வினைமுற்று எனும் 5 பாகுபாடுகளை உடையது.

படர்க்கை இடத்தில் அமையும் தெரிநிலை வினைமுற்றுக்கள் பதினைந்து ஆகும். அவை தன்மை இடத்தில் ஒருமை, பன்மை எண்களில் அமையும். இத் தெரிநிலை வினைமுற்றுக்கள் ஆறு ஆகும். இவை படர்க்கை இடத்தில் ஒருமை, பன்மை எண்களில் அமையும் தெரிநிலை வினைமுற்றுக்கள் ஆறு ஆகும். ஆக மொத்தம் மூன்று இடங்களிலும் ஐம்பால்களிலும் ஒருமை, பன்மை எண்களிலும் இடம்பெறும் தெரிநிலை வினைமுற்றுக்கள் மொத்தம் 27 ஆகும்.

| இடம் | பால் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| படர்க்கை | ஆண்பால் | நடந்தான் | நடக்கிறான் | நடப்பான் |
| | பெண்பால் | நடந்தாள் | நடக்கிறாள் | நடப்பாள் |
| | பலர்பால் | நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் |
| | ஒன்றன்பால் | நடந்தது | நடக்கின்றது | நடப்பது |
| | பலவின்பால் | நடந்தன | நடக்கின்றன | நடப்பன |

எனவே தெரிநிலைவினை முற்றுகள் படர்க்கை இடத்தில் அமைந்து வரும். ஐம்பாலையும் முக்காலத்தையும் உணர்த்தும். எனவே படர்க்கை இடத்தில் அமையும் தெரிநிலை வினைமுற்றுக்கள் பதினைந்து (1 நூ 5 நூ 3) ஆகும் என்பதை அறியலாம்.

| இடம் | எண் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| தன்மை | ஒருமை | நடந்தேன் | நடக்கின்றேன் | நடப்பேன் |
| | பன்மை | நடந்தோம் | நடக்கின்றோம் | நடப்போம் |

இத்தெரிநிலை வினைமுற்றுக்கள் தன்மை இடத்தில் அமைந்து ஒருமை, பன்மை எண்களையும் முக்காலத்தையும் உணர்த்துகின்றன. எனவே தன்மை இடத்தில் அமையும் ஒருமை, பன்மை, தெரிநிலை வினைமுற்றுக்கள் ஆறு (2 நூ 3) ஆகும்.

| இடம் | பால் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| முன்னிலை | ஒருமை | நடந்தாய் | நடக்கிறாய் | நடப்பாய் |
| | பன்மை | நடந்தீர் | நடக்கின்றீர் | நடப்பீர் |

எனவே படர்க்கை இடத்தில் அமையும் தெரிநிலை வினைமுற்றுக்கள் பதினைந்தும் என்றும் தன்மை இடத்தில் ஒருமை, பன்மை எண்களில் அமையும் தெரிநிலை வினைமுற்றுக்கள் ஆறு என்றும். படர்க்கை இடத்தில் ஒருமை, பன்மை எண்களில் அமையும் தெரிநிலை வினைமுற்றுக்கள் ஆறு என்றும் அறியலாம். ஆக மொத்தம் மூன்று இடங்களிலும். ஐம்பால்களிலும் ஒருமை, பன்மை எண்களில் இடம்பெறும் தெரிநிலை வினைமுற்றுக்கள் 27 ஆகும். இதனை,

**ஒருவன்முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும்**
**ஒருமைப் பன்மையைத் தன்மைமுன் னிலையிலும்**
**முக்கா லத்தினும் முரண முறையே**

**மூவைந்து இருமூன்று ஆறாய் முற்று**

**வினைப்பதம் ஒன்றே முஒன் பானாம்** (நன் : 324)

என நன்னூலார் விவரிக்கின்றார்.

**படர்க்கை வினைமுற்று**

படர்க்கை வினைமுற்று என்பது ஆண்பால் படர்க்கை, பெண்பால் படர்க்கை, பலர்பால் படர்க்கை ஒன்றன்பால் படர்க்கை, பலவின்பால் படர்க்கை என பலவகைப்படும். இதனை

படர்க்கை வினைமுற்று →
- ஆண்பால் படர்க்கை வினைமுற்று
- பெண்பால் படர்க்கை வினைமுற்று
- பலர்பால் படர்க்கை வினைமுற்று
- ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று
- பலவின்பால் படர்க்கை வினைமுற்று

இவ்அட்டவணை தெளிவுபடுத்துகிறது. இவற்றை விளங்கிக்கொள்வது அவசியம்.

**ஆண்பால் படர்க்கை வினைமுற்று**

அன், ஆன் விகுதிகளை இறுதியாக உடைய வினைச் சொற்கள் ஆண்பால் படர்க்கை தெரிநிலை வினைமுற்றும், குறிப்பு வினைமுற்றும் ஆகும்.

எ.கா- நடந்தான், நடந்தனன் - இறந்த காலம்

நடக்கின்றான், நடக்கின்றனன் - நிகழ்காலம் } தெரிநிலை

நடப்பான், நடப்பன் - எதிர்காலம்

குழையான், குழையாள் } குறிப்பு வினைமுற்று

குழையன், குழையள்

இத் தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுக்கள் அன், ஆன் என்னும் இரண்டு விகுதிகளைப் பெற்று படர்க்கை இடத்தையும் உயர்திணை ஆண்பாலையும் முக்காலங்களையும் உணர்த்துகின்றன.

எனவே அன், ஆன் விகுதிகளை இறுதியாக உடைய வினைச் சொற்கள் ஆண்பால் படர்க்கை தெரிநிலை வினைமுற்றும், குறிப்பு வினைமுற்றும் ஆகும்.

**அன்ஆன் இறுமொழி ஆண்பால் படர்க்கை** (நன் : 325)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**பெண்பால் படர்க்கை வினைமுற்று**

அள், ஆள் விகுதிகளை இறுதியாக உடைய வினைச் சொற்கள் பெண்பால் படர்க்கை தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் ஆகும்.

எ.கா- நடந்தாள், நடந்தனள் - இறந்த காலம்

நடக்கின்றாள், நடக்கின்றனள் - நிகழ்காலம் } தெரிநிலைவினை

நடப்பாள், நடப்பள் - எதிர்காலம்

குழையள், குழையாள் - குறிப்பு வினைமுற்று

இத் தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்கள் அள், ஆள் என்னும் விகுதிகளைப் பெற்று படர்க்கை இடத்தையும் உயர்திணைப் பெண்பாலையும் முக்காலங்களையும் உணர்த்துகின்றன.

எனவே அள், ஆள் விகுதிகளை இறுதியாக உடைய வினைச் சொற்கள் பெண்பால் படர்க்கை தெரிநிலை வினைமுற்றும், குறிப்பு வினைமுற்றும் ஆகும்.

**அள்ஆன் இறுதிமொழி பெண்பால் படர்க்கை** (நன் : 326)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**பலர்பால் படர்க்கை வினைமுற்று**

அர், ஆர், ப, மார் என்னும் நான்கு விகுதிகளையும் பெற்றுவரும் சொற்கள் பலர்பால் வினை முற்றுகளாகும்.

எ.கா- நடந்தார், நடந்தனர் - இறந்த காலம்

நடக்கின்றார், நடக்கின்றனர் - நிகழ்காலம் } - தெரிநிலை வினைமுற்று

நடப்ப - எதிர்காலம்

நடப்பர், குழையர்

நடப்பார், குழையார்

நடப்ப } - குறிப்பு வினைமுற்று

கொண்மார்

இத் தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்கள் அர், ஆர், ப, மார் என்னும் நான்கு விகுதிகளைப் பெற்று, படர்க்கை இடத்தையும் உயர்திணைப் பலர்பாலையும் படர்க்கை இடத்தையும் உணர்த்துகின்றன.

இவற்றுள் அர், ஆர் பலர்பால் படர்க்கை தெரிநிலை வினைமுற்றாகவும் பலர்பால் படர்க்கைக் குறிப்பு வினைமுற்றாகவும் முக்காலங்களையும் உணர்த்தும்.

ஏனைய இரண்டும் (ப, மார்) தாமே காலம் காட்டுவதால் பலர்பால் படர்க்கை குறிப்பு வினையாகாது.

எனவே அர், ஆர், ப, மார் என்னும் நான்கு விதிகளும் பலர்பால் படர்க்கை வினைமுற்றுக்கள் என்றும், இவற்றுள் அர், ஆர் என்பன பலர்பால் படர்க்கை இடத்தில் தெரிநிலை வினையாகவோ குறிப்பு வினையாகவோ வரும் என்றும் ப, மார் ஆகியன தாமே காலம் காட்டுவதால் குறிப்பு வினை ஆகாது என்றும் அறியலாம்.

**அர்ஆர் பவ்வூர் அகரமார் ஈற்று**

**பல்லோர் படர்க்கை மார் வினையோடு முடிமே** (நன் : 327)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று**

து, று, டு என்னும் மூன்று விகுதிகளையும் உடைய சொற்கள் ஒன்றன் பால் வினைமுற்றுகள் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா- | நடந்தது, ஓடிற்று | - இறந்தகாலம் | தெரிநிலை வினை |
| | நடக்கின்றது, ஆகின்றது | - நிகழ்காலம் | |
| | நடப்பது | - எதிர்காலம் | |

பொன்னது, குழையது, ஆயிற்று, பொருட்டு - குறிப்பு வினை

இத் தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்கள் து, று, டு என்னும் மூன்று விகுதிகளையும் உடைய சொற்கள் குற்றுகர விகுதிகளைப் பெற்று அஃறிணையையும் ஒன்றன்பாலையும் படர்க்கை இடத்தையும் உணர்த்துகின்றன. இது ஒன்றன் பால் வினைமுற்றுகள் ஆகும்.

இவற்றுள் 'று' விகுதி இறந்த காலத்திற்கு மட்டுமே வரும். அவ்வாறே 'டு' விகுதி முக்காலத்திற்கும் வராது. குறிப்பு வினைக்கு மட்டுமே வரும்.

எனவே து, று, டு ஆகியவை ஒன்றன் பால் தெரிநிலை குறிப்பு வினைமுற்றுகள் என்றும் அவற்றுள் 'று' விகுதி இறந்த காலத்தில் மட்டுமே வரும் என்றும் 'டு' விகுதி குறிப்பு வினையில் மட்டுமே இடம்பெறும் என்றும் அறியலாம்.

**துறுடுக் குற்றிய லுகர ஈற்று**

**ஒன்றன் படர்க்கை டுக்குறிப்பின் ஆகும்** (நன் : 328)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**பலவின் பால் படர்க்கை வினைமுற்று**

குறிப்பு வினைமுற்றுக்கள் அ, ஆ என்னும் இரண்டு விகுதிகளையும் பெற்று அ..றிணையையும் பலவின்பாலையும் படர்க்கை இடத்தையும் உணர்த்தும். இது பலவின்பால் படர்க்கை வினைமுற்ற ஆகும்.

எ.கா- நடந்தன, நடக்கின்றன, நடப்பன - அ தெரிநிலை வினை

குழையன - அ குறிப்பு வினை

நடவா - ஆ எதிர்மறை வினை

இத் தொடரில் குறிப்பு வினைமுற்றுக்கள் அ, ஆ என்னும் இரண்டு விகுதிகளையும் பெற்று அ..றிணையை உடைய சொற்கள் பலவின்பால் வினைமுற்றுகள் ஆகும். இவை பலவின் பாலையும் படர்க்கை இடத்தையும் உணர்த்துகின்றன.

இவற்றுள் 'ஆ' விகுதி எதிர்மறைப் பொருளில் மட்டுமே இடம் பெற்று இறந்த காலத்தைக் காட்டும்.

எனவே அ, ஆ அ..றிணைப் பலவின்பால் படர்க்கை தெரிநிலை குறிப்பு வினை முற்றுக்கள் என்றும் 'ஆ' இறந்த காலத்தில் எதிர்மறைப் பொருளில் மட்டுமே இடம்பெறும் என்றும் அறியலாம்.

**அஆ ஈற்ற பலவின்பால் படர்க்கை**

**ஆவே எதிர்மறைக் கண்ண தாகும்** (நன் : 329)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**இருதிணைப் பொது வினை**

தன்மை, முன்னிலை, வியங்கோள் வினை முற்றுக்களும் வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்களும் தெரிநிலையும் குறிப்புமாகிய பெயரெச்ச வினை எச்சங்களும் உயர்திணை, அ..றிணை ஆகிய இருதிணைகளுக்கும் பொது வினைகளாக அமையும். இது இருதிணைப் பொதுவினை எனப்படும்.

**தன்மை முன்னிலை வியங்கோள் வேறுஇலை**

**உண்டு ஈர் எச்சம் இருதிணைப் பொதுவினை** (நன் 330)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**தன்மை வினைமுற்று**

தன்மை வினைமுற்று என்பது பேசுவோர் தம்மைக் குறிப்பதாகும். இவ்வினைமுற்று ஒருமை, பன்மை என்னும் இரு பாகுபாடுகளை உடையது.

**தன்மை வினைமுற்று**

**தன்மை ஒருமை வினைமுற்று** **தன்மை பன்மை வினைமுற்று**

என்னும் அட்டவணை மேற்குறித்த கருத்தினை விளக்குகிறது.

எ.கா - நான் வந்தேன் - தன்மை ஒருமை வினைமுற்று

நாங்கள் வந்தோம் - தன்மை பன்மை வினைமுற்று

இவற்றை அறிந்துகொள்வது அவசியம்.

**தன்மை ஒருமை வினை முற்று**

தன்மைப் பெயர்களான யான், யாம், நான், நாம் என்பன கு, டு, து, று, அல், அன், என், ஏன் எனும் விகுதிகளை ஈற்றில் கொண்டுள்ள வினைச் சொற்களைப் பெற்று ஒருமை எண்ணைச் சுட்டும். இவ்வாறு தன்மைப் பெயர்களுடன் இவ்விகுதிகளைக் கொண்டு ஒருமை எண்ணைச் சுட்டும் வினைச் சொற்கள் தன்மை ஒருமை வினை முற்று எனப்படும்.

கு, டு, து, று ஆகியன வல்லினத்தின் மேல் உகரம் ஏறிவந்த குற்றுகரங்கள் ஆகும். இவற்றை ஈற்றில் பெற்றுள்ள வினைச் சொற்கள் காலம் காட்டும். எனவே இவை குறிப்பு வினையில் வராது.

எ.கா - கு – நான் உண்கு (உண்பேன்)– எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று

டு – நான் உண்டு - இறந்த காலத் தன்மை ஒருமை வினைமுற்று

து – நான் வருது - இறந்த கால எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று

று – நான் சேறு - இறந்த கால எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று

அல் - நான் செய்வல் - எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று

'அல்' விகுதி இடைநிலையோடு இணைந்து தெரிநிலையில் எதிர்காலத்தில் மட்டுமே வரும். இது குறிப்பு வினையில் வராது.

எ.கா – யான் செய்வல் - எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று

அன், என், ஏன் என்பன தெரிநிலையிலும் குறிப்பு வினையிலும் இடம்பெறும்.

| **தெரிநிலை வினை** | **குறிப்பு வினை** | **விகுதி** |
|---|---|---|
| உண்டனன், உண்கின்றனன், உண்பன் | குழையன் | அன் |
| உண்டனென், உண்கின்றெனன், உண்பென் | குழையென் | என் |

| | | |
|---|---|---|
| உண்டேன், உண்கின்றேன், உண்பேன் | குழையேன் | ஏன் |

கு, டு, து, று, அல், அன், என், ஏன் ஆகிய எட்டையும் விகுதியாகக் கொண்ட தன்மை வினைமுற்றுக்கள் இருதிணையிலும் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்று பாலிலும் இடம்பெற்று ஒருமை எண்ணை மட்டுமே உணர்த்தும்.

எனவே கு, டு, து, று என்னும் நான்கு குற்றியலுகர விகுதிகளையும் அல், அன், என், ஏன் என்னும் மெய்யீற்று விகுதிகளையும் ஈற்றில் கொண்டுள்ள வினைச் சொற்கள் இருதிணைக்கும் முப்பாலுக்கும் ஒருமை எண்ணுக்கும் உட்பட்டு அமையும் இவை பொதுவாகிய தன்மை ஒருமை தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்களாகும்.

**குடுதுறு என்னும் குன்றிய லுகரமோடு**

**ஆல்அன் என்ஏ ஆகும் ஈற்று**

**இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை** (நன் : 331)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**தன்மைப் பன்மை வினைமுற்று**

**உடன்பாட்டுத் தன்மை பன்மை வினைமுற்றுக்கள்**

விகுதிகள் யாவும் தன்மை இடத்தோடு கூடிய முன்னிலையையும் படர்க்கையையும் தன்னுடன் இணைத்து தன்மை இடத்தைச் சுட்டும். எனவே இதனை உடன்பாட்டுத் தன்மைப் பன்மை என்பர்.

| **இடம்** | **தெரிநிலைவினை** | **குறிப்பு வினை** | **விகுதி** |
|---|---|---|---|
| முன்னிலை | உண்டனம், உன்கின்றனம், உண்பன் | குழையம் | அம் |
| (யானும், நீயும்) | உண்டாம், உண்கின்றாம், உண்பாம் | குழையாம் | ஆம் |

இத்தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்கள் அம், ஆம் விகுதிகளை ஈற்றில் பெற்று தன்மை, முன்னிலை இடத்தையும் பன்மை எண்ணையும் குறிக்கின்றன.

தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்கள் எம், ஏம், ஒம் விகுதிகளை ஈற்றில் பெற்றுப் படர்க்கை இடத்தையும் பன்மையையும் குறிக்கும்.

| **இடம்** | **தெரிநிலைவினை** | **குறிப்பு வினை** | **விகுதி** |
|---|---|---|---|
| படர்க்கை | - உண்டனெம், உன்கின்றெனம், உண்பெம் | - குழையெம் | எம் |
| யானும் நீயும் | - உண்டேம், உண்கின்றேம், உண்பேம் | - குழையேம் | ஏம் |

யானும் அவனும் - உண்டோம், உண்கின்றோம், உண்போம் - குழையோம்
ஒம்

இத்தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்கள் எம், ஏம், ஒம் விகுதிகளை ஈற்றில் பெற்றுப் படர்க்கை இடத்தையும் பன்மையையும் குறிக்கின்றன.

தெரிநிலை வினைமுற்றுக்கள் கும், டும், தும், உம் விகுதிகளை ஈற்றில் பெற்று முன்னிலை, படர்க்கை ஆகிய இரு இடங்களையும் பன்மையையும் குறிக்கின்றன. இவை தாமே காலம் காட்டுவதால் குறிப்பு வினை ஆகாது. மேலும் இவற்றில் 'கும்' விகுதி எதிர்காலத்தையும் 'டும்' இறந்த காலத்தையும் தும், உம் ஆகியன இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும்.

| **இடம்** | **இறந்த காலம்** | **எதிர்காலம்** | **விகுதி** |
|---|---|---|---|
| முன்னிலை | ------- | உண்கும் | கும் |
| -------- | உண்டும் | --------------- | டும் |
| படர்க்கை (யானும் அவனும்) | வந்தும் | வருதும் | தும் |
| (யானும் நீயும்) | சென்றும் | சேறும் | உம் |

இத்தெரிநிலை வினைமுற்றுக்கள் கும், டும், தும், உம் விகுதிகளை ஈற்றில் பெற்று முன்னிலை படர்க்கை ஆகிய இரு இடங்களையும் ஈற்றில் பெற்று பன்மையைக் குறிக்கின்றன. இவை தாமே காலம் காட்டுவதால் குறிப்பு வினை ஆகாது. மேலும் இவற்றில் 'கும்' விகுதி எதிர்காலத்தையும் 'டும்' இறந்த காலத்தையும் தும், உம் ஆகியன இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும்.

இவ்விகுதிகள் யாவும் தன்மை இடத்தோடு கூடிய முன்னிலையையும் படர்க்கையையும் தன்னுடன் இணைத்து தன்மை இடத்தைச் சுட்டுவதால் இது உடன்பாட்டுத் தன்மைப் பன்மை ஆகும்.

எ.கா - யானும் நீயும் உண்டனம் - அம்

யானும், அவனும் உண்டோம் - ஒம் - தெரிநிலை

யானும் நீயும் குழையெம் - எம்

யானும், அவனும் குழையாம் - ஆம் - குறிப்புவினை

எனவே அம், ஆம் என்னும் இவ்விரு விகுதிகளையும் இறுதியில் பெற்றுவரும் சொற்கள் முன்னிலை இடத்தாரையும் எம், ஏம், ஒம் என்னும் இம்மூன்று விகுதிகளை இறுதியில் பெற்று வரும் சொற்கள் படர்க்கை இடத்தாரையும் கும், டும், தும், றும் என்னும் இந்நான்கு விகுதிகளை இறுதியிலுடைய சொற்கள் முன்னிலை படர்க்கை என்னும் ஈரிடத்தார்களையும்

தன்னுடன் சுட்டும் உடன்பாட்டுத் தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினை முற்றும் ஆகும்.

**அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்**

**எம்ஏம் ஓம் இவைபடர்க்கை யாரையும்**

**உம்ஊர் கடதற இருபா லாரையும்**

**தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை** (நன் : 332)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**வினையுடன் முடியும் தன்மை வினைமுற்றுகள்**

செய்கு என்னும் தன்மை ஒருமை வினைமுற்றும், செய்யும் என்னும் தன்மை பன்மை வினைமுற்றும், பெயருடனேயன்றி வினையுடனும் முடியும். அவை வினையுடன் முடியும் தன்மை வினை முற்றுக்கள் என்றழைக்கப்படும்.

எ.கா- உண்கு யான் - தன்மை ஒருமை வினைமுற்று

உண்கும் யாம் - தன்மை பன்மை வினைமுற்று

இத்தொடர்களில் உண்கு, உண்கும் என்றும் வினைமுற்றுக்கள் பெயரைக் கொண்டு முடிந்துள்ளன.

எ.கா- உண்கு வந்தேன் - தன்மை ஒருமை வினைமுற்று

உண்கும் வந்தோம் - தன்மை பன்மை வினைமுற்று

இத்தொடர்களில் உண்கு, உண்கும் என்னும் வினைமுற்றுக்கள் வினையைக் கொண்டு முடிந்துள்ளன.

எனவே உண்கு, உண்கும் என்பன பெயரையும் வினையையும் கொண்டு முடியும் என்பதை அறியலாம்.

உண்கு, உண்கும் என்பன எச்சப் பொருளில் வந்துள்ளன போலத் தோன்றினும் இவை எச்சங்கள் அல்ல. இவை வினைமுற்றுக்களே, உண்கு என்பது செய்கு என்னும் வாய்ப்பாட்டுத் தன்மை ஒருமை வினைமுற்று என்றும் உண்கும் என்பது செய்யும் என்னும் வாய்ப்பாட்டுத் தன்மை பன்மை வினைமுற்று என்றும் பெயர் பெறும்.

**செய்குஎன் ஒருமையும் செய்கும் என் பன்மையும்**

**வினையொடு முடியினும் விளம்பிய முற்றே** (நன் : 333)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**உடன்பாட்டு முன்னிலை பன்மை வினைமுற்று**

தன்மையுடன் கூடிய முன்னிலை, படர்க்கைத் தன்மையாதல் போன்று, முன்னிலையோடு கூடிய படர்க்கை முன்னிலையாகும். இவை தெரிநிலை வினையிலும் குறிப்பு வினையிலும் இடம் பெறும். இதனை

எ.கா – உண்டனிர், உண்டீர், உண்மின் - தெரிநிலை - நீர் (நீயும் அவனும்)
குழையினர், குழையீர் - குறிப்பு

என்னும் எடுத்துக்காட்டுகள் வாயிலாக அறியலாம்.

**முன்னிலை ஒருமை வினைமுற்று**

ஐ, ஆய், இ எனும் மூன்று விகுதிகளை இறுதியிலுடைய மொழிகளும் விகுதி குன்றியும் குன்றாமலும் வரும் இருபத்து மூன்று ஈற்று மொழிகளும் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்னும் மூன்றுக்கும் பொதுவாகிய முன்னிலை ஒருமைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்று ஆகும்.

| **இடம்** | **தெரிநிலைவினை** | **குறிப்புவினை** | **விகுதி** |
|---|---|---|---|
| முன்னிலை | உண்டனை - உண்கின்றனை - உண்பை | குழையை | ஐ |
| (நீ) | உண்டாய் - உண்கின்றாய் - உண்பாய் | குழையாய் | ஆய் |
| | உண்டி - உண்ணாநின்றி - சேறி | வில்லி | இ |

இத்தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுக்கள் ஐ, ஆய், இ என்னும் விகுதிகளைப் பெற்று முன்னிலை இடத்தையும் ஒருமை எண்ணையும் குறிக்கின்றன.

விகுதி குன்றியும் குன்றாமலும் நிற்பனவாகிய ஏவல் பொருளில் வரும் இருபத்து மூன்று

(நன் : 137) ஈற்று வினைச் சொற்களும் ஏவல் முன்னிலை ஒருமை வினை முற்றுக்களாகும். இவை தெரிநிலையில் மட்டுமே இடம்பெறும்.

எ.கா - நடந்தான், வவ்வினான், அ.்.கினான் முதலியன

அய், இ, அள், ஏல், ஆல் என்னும் விகுதிகளை உடைய வினைச் சொற்களும் ‘ஆய்’ விகுதி இல்லாமல் பகுதி மட்டுமே நிற்கும் வினைச் சொற்களும் ஏவல் ஒருமை வினைச் முற்றுகளாகும். இவற்றுள் அல், ஏல், ஆல் என்பன எதிர்மறையில் மட்டுமே வரும் என்பது அறியத்தக்கது.

எ.கா – உண்ணாய், உண்ணுதி, உண்

உண்ணல், உண்ணேல், மறால் - நீ

எனவே ஐ, ஆய், இ எனும் மூன்று விகுதிகளை இறுதியிலுடைய மொழிகளும் விகுதி குன்றியும் குன்றாமலும் வரும் இருபத்து மூன்று ஈற்று மொழிகளும் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்னும் மூன்றுக்கும் பொதுவாகிய முன்னிலை ஒருமைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் ஆகும்.

**ஐஆய் இகர ஈற்று மூன்றும்**
**ஏவலின் வருஉம் எல்லா ஈற்றவும்**
**முப்பால் ஒருமை முன்னிலை மொழியே** (நன் : 335)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஏவல் வினைமுற்று**

முன்னிலை ஏவல் ஒரு வினைமுற்றிற்கு முன் ஈகாரமும் ஏகாரமும் அவ்விடத்து நிற்பதற்குரிய தன்மையினை உடைய ஏதேனும் ஒரு மெய்யின்மேல் ஏறிவரும்.

எ.கா- ''சென்றீ பெருமடநிற் றகைக்குநர் யாரே''

''அட்டில் ஓலை தொட்டனை நின்மே''

இத்தொடர்களில் இடம் பெறும் 'சென்றீ', 'நின்மே' என்பனவற்றிற்கு ஈறாக அமையும் ஈகாரமும் ஏகாரமும் விகுதிகள் அல்ல. அவை 'ஆய்' விகுதி குறைந்த ஏவலில் வரும் முன்னிலை அசைகளாகும். அவை முறையே 'ற'கர ஒற்றையும் 'ம'கர ஒற்றையும் எழுத்துப்பேறாகக் கொண்டுள்ளன.

எனவே முன்னிலை ஏவல் ஒரு வினைமுற்றிற்கு முன் ஈகாரமும் ஏகாரமும் அவ்விடத்து நிற்றற்குரிய தன்மையினை உடைய ஏதேனும் ஒரு மெய்யின்மேல் ஏறிவரும் என்பது அறியத்தக்கது.

**முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்**
**அந்நிலை மரபின் மெய்ஊர்ந்து வருமே** (நன் : 336)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**முன்னிலைப் பன்மை வினைமுற்று**

தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்கள் இர், ஈர் விகுதிகளை ஈற்றில் பெற்று முன்னிலை இடத்தையும் பன்மையையும் குறிக்கின்றன. இவை இருதிணைக்கும் பொதுவாக அமையும்.

| இடம் | தெரிநிலைவினை | குறிப்புவினை | விகுதி |
|---|---|---|---|
| முன்னிலை | - உண்டனிர், உண்கின்றனிர், உண்பிர் | குழையிர் | இர் |
| | உண்டீர், உண்கின்றீர், உண்பீர் | குழையீர் | ஈர் |

இத்தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்கள் இர், ஈர் விகுதிகளை ஈற்றில் பெற்று முன்னிலை இடத்தையும் பன்மையையும் குறிக்கின்றன. இவை இருதிணைக்கும் பொதுவாக அமையும்.

'மின்' விகுதியன்றி ஈர், உம் விகுதிகளும் முன்னிலைப் பன்மை ஏவலுக்கு வரும்.

எ.கா – உண்மின், உண்ணீர், உண்ணும்

எனவே இர், ஈர் என்னும் இரண்டு விகுதிகளை இறுதியிலுடைய சொற்கள் இருதிணைக்கும் பொதுவாகிய முன்னிலைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் ஆகும். 'மின்' விகுதியும் ஈர், உம் விகுதிகளும் முன்னிலைப் பன்மை ஏவலில் இடம்பெறும் என்பதை அறியலாம்.

**இர்ஈர்ஈற்று இரண்டும் இரு திணைப்**

**பன்மை முன்னிலை மின்அவற்(று) ஏவல்** (நன் : 337)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வியங்கொள் வினைமுற்று**

வியங்கோள் வினைமுற்று என்பது காரணப்பெயர். அது ஏவுதலைக் கொள்வது என பொருள்படும்.

எ.கா- வாழ்க, வாழிய, வாழியர்

இவை க, இய, இயர் என்னும் மூன்று விகுதிகளை இறுதியில் பெற்று வரும் வினைமுற்றுகள் ஆகும். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களிலும் ஒருமை, பன்மை, ஐம்பால் மூவிடங்களிலும் வரும். வியங்கோள் பொருளைத் தரும் முற்று ஆகையால் வியங்கோள் வினைமுற்று எனப் பெயர் பெற்றது.

எ.கா – யான், யாம்,

நீ, நீவிர்

அவன், அவள், அது, அவை - வாழ்க, வாழிய, வாழியர்

இவ் ஈறுகளின்றி இ, அ, தல், அல், என்பனவும் வியங்கோள் வினைமுற்றில் ஈறுகளாக இடம் பெறும்.

எ.கா – போற்றி - இ

ஓங்க - அ

வாழ்தல் - தல்

பதடி எனல் - அல்

இவற்றுள் 'அல்' ஈறு உடன்பாட்டு எதிர்மறைப் பொருட்களிலும் இடம்பெறும்.

எ.கா – மகனெனல் - எதிர்மறை

மக்கட்பதடி எனல் - உடன்பாடு

இவ் வியங்கோள், வேண்டிக்கோடற் பொருளுடன் வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் என்னும் பொருட்களிலும் அமையும்.

எ.கா – அருளுக, தருக - கோடற்பொருள்

வெல்க, சிறக்க - வாழ்த்துதல்

உண்க - விதித்தல்

ஒழிக - வைதல்

எனவே க, இய, இயர் என்னும் விகுதிகளையும் இ, அ, தல், அல் என்னும் விகுதிகளையும் ஈற்றில் பெற்று வேண்டிக்கோடல், வாழ்த்துதல், வைதல், விதித்தல் என்னும் பொருட்களைத் தாங்கி ஐம்பால் மூவிடங்களுக்கும் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று ஆகும் என்பதை அறியலாம்.

**கயவொடு தவ்வொற்று ஈற்று வியங்கோள்**

**இயலும் இடம்பால் எங்கும் என்ப** (நன் : 338)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஐம்பால் மூவிடங்களிலும் வரும் குறிப்பு வினைமுற்று**

வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்கள் ஐம்பால் மூவிடங்களுக்கும் உரியனவாகும்.

யான், யாம், நீ, நீர்

அவன், அவள், அது, அவை - வேறு, இல்லை, உண்டு

இவை யான் வேறு, நீ வேறு, அவள் வேறு, அவை வேறு, (இல்லை உண்டு என்பவற்றை இது போல் அமைத்துக் கொள்ளலாம்.) என ஐம்பால் மூவிடங்களிலும் ஒருமைப் பன்மையிலும் அமையும்.

இவை தவிர வேண்டும், தகும், படும் என்பனவும் குறிப்பு வினைமுற்றுக்கள் ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும்.

எ.கா- அவர் ஓத வேண்டும்

இது உண்ணத் தகும்

அதன்கண் வைக்கப்படும்


எனவே வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்கள் ஐம்பால் மூவிடங்களுக்கும் உரியனவாகும் என்பது அறியத்தக்கது.

**வேறுஇல்லை உண்டுஐம் பால்மூ விடத்தன** (நன் : 339)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

## எச்சம்

எச்சம் எனப்படுவது முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்பதாகும். இது பெயரெச்சம் வினையெச்சம், முற்றெற்றம் அவற்றோடு தொடர்புடைய பிறவும் என பலவகைப்படும்.




எனும் அட்டவணை வாயிலாக இதனை அறியலாம். இவற்றை விளங்கிக் கொள்வது அவசியம்.

**பெயரெச்சம்**

பெயர் கொண்டு முடியுமாறு எஞ்சி நிற்கும் வினைச் சொற்கள் பால் காட்டுவதற்குரிய ஈறுகளைப் பெறாது கருத்தா, கருவி, நிலம், செயல், காலம் செயப்படுபொருள் என்ற ஆறுவகைப் பொருள்களின் அடிப்படையில் எஞ்சி நிற்பது பெயரெச்சமாகும்.

**எ.கா-** மேயும் பசு

உண்ட கண்ணன்

இத்தொடரில் இடம்பெறும் மேயும், உண்ட என்னும் சொற்கள் வினைமுற்றாக இல்லாமல் எச்ச வினையாகப் பசு, கண்ணன் என்னும் பெயர்களைக் கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு பெயர் கொண்டு முடியுமாறு எஞ்சி நிற்கும் வினைச் சொற்கள் பால் காட்டுவதற்குரிய ஈறுகளைப் பெறாது கருத்தா, கருவி, நிலம், செயல், காலம் செயப்படுபொருள் என்ற ஆறுவகைப் பொருள்களின் அடிப்படையில் எஞ்சி நிற்கும்.

பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்பு பெயரெச்சம் என இருவகைப்படும். அவற்றுள் தெரிநிலைப் பெயரெச்சம் செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்ப்பாட்டில் காலமும் தொழிலும் காட்டும்.

பெயரெச்சம்

தெரிநிலைப் பெயரெச்சம் → குறிப்பு பெயரெச்சம்

என்னும் அட்டவணை இதனை விளக்குகிறது.

**தெரிநிலைப் பெயரெச்சம்**

தெரிநிலைப் பெயரெச்சம் என்பது செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்ப்பாட்டில் காலமும் தொழிலும் காட்டும் வகையில் அமைவதாகும்.

| | | |
|---|---|---|
| எ.கா – (இறப்பு) உண்டு | சாத்தன் | - கருத்தா |
| | காலம் | - கருவி |
| (நிகழ்வு) உண்கின்ற | இடம் | - நிலம் |
| | ஊண் | - தொழில் |
| (எதிர்வு) உண்ணும் | நாள் | - காலம் |
| | சோறு | - செயப்படு பொருள் |

இவற்றின் வாயிலாக காலத்தையும் தொழிலையும் காட்டும் தெரிநிலைப் பெயரெச்சத்தை விளங்கிக் கொள்ளலாம்.

**குறிப்புப் பெயரெச்சம்**

பெரிய, சிறிய, நல்ல, கரிய முதலிய குறிப்பு வினைகள் அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் எச்சப் பொருளை உணர்த்திப் பெயர் கொண்டு முடியும்பொழுது குறிப்புப் பெயரெச்சமாக அமைகிறது.

| | | |
|---|---|---|
| | சாத்தான் | - கருத்தா |
| | கலம் | - கருவி |
| | இடம் | - நிலம் |
| எ.கா – பெரிய, சிறிய, நல்ல | ஊண் | - தொழில் |
| | நாள் | - காலம் |
| | சோறு | - செயப்படுபொருள் |

எ.கா - நல்ல மாணவன்

கரிய காகம்

இவற்றில் இடம் பெற்ற நல்ல – கரிய – என்னும் சொற்கள் முற்றுப் பெறவில்லை. எனவே இவை எச்சங்களே ஆகும். மாணவன், காகம் என்னும் பெயர்ச்சொற்களைக் கொண்டு இவை

முடிந்துள்ளன. பெயரெச்சங்கள், கால இடைநிலைகளைப் பெறவுமில்லை காலத்தைத் தெளிவாகக் காட்டவுமில்லை. எனவே இது குறிப்புப் பெயரெச்சம் ஆகும்.

பெயரெச்சம் தெரிநிலை, குறிப்பு ஆகிய இருநிலைகளில் எதிர்மறைப் பொருளிலும் அமையும். அந்த வகையில் இதனை எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம், எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படுத்தலாம்.

**எதிர்மறைப் பெயரெச்சம்**

**எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம்** | **எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்**

அட்டவணை உணர்த்தும் எதிர்மறைப் பெயரெச்சங்களை விளங்கிக்கொள்வது அவசியம்.

உண்ணாத குதிரை
செய்யாத குற்றெம் } - எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம்

இல்லாத ஊர்
அல்லாத பொழுது } - எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்

இவற்றில் உண்ணாத, செய்யாத என்பன எதிர்மறைப் பொருளில் காலம் காலம் காட்டவில்லை. ஆனால் உண்ட, செய்த என உடன்பாட்டுப் பொருளில் காலம் காட்டும். ஆகவே இது எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம் ஆகும். அல்லாத, இல்லாத என்பன காலம் காட்டாது எதிர்மறைப் பொருளில் குறிப்புப் பெயரெச்சமாயிற்று.

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

எதிர்மறைப் பெயரெச்சம் ஈறு கெட்டு எதிர்மறைப் பொருளைத் தந்து பெயர் எஞ்சி நிற்பதாகும். இது ஈறுகெட்ட எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும்.

**ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்**

**ஈறுகெட்ட எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம்** | **ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்**

அட்டவணை காட்டும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச வகைகளை விளங்கிக் கொள்வது அவசியம்.

**ஈறுகெட்ட எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம்**

ஈறுகெட்ட எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம் என்பது ஈறு கெட்டு எதிர்மறைப் பொருளில் எச்சவினைகளாகி பெயர் கொண்டு முடிந்து காலம் காட்டும் இயல்புடையது.

எ.கா- ஓடாக் குதிரை

உண்ணாப் பையன்

இத்தொடர்களிலுள்ள ஓடா, உண்ணா என்பன ஈறு கெட்டு எதிர்மறைப் பொருளில் எச்சவினைகளாகி பெயர் கொண்டு முடிந்துள்ளன. இவை ஓடும், உண்ணும் என உடன்பாட்டுப் பொருளில் அமைந்து காலம் காட்டும் எனவே இவை ஈறுகெட்ட எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம் ஆகும்.

**ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்**

ஈறுகெட்ட நிலையில் எதிர்மறைப் பொருளில் காலம் காட்டாது குறிப்புப் பொருளில் அமைவன ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம் ஆகும்.

எ.கா- இல்லா ஊர்

அல்லாப் பொருள்

இத்தொடர்களில் உள்ள இல்லா, அல்லா சொற்கள் ஈறுகெட்ட நிலையில் எதிர்மறைப் பொருளில் காலம் காட்டாது குறிப்புப் பொருளில் அமைந்து ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சமாகி உள்ளன.

எனவே செய்த, செய்கின்ற, செவய்யும் என்னும் வாய்ப்பாட்டில் காலமும் செயலும் காட்டி பால்காட்டும் ஈறு பெறாமல் கருத்தா முதலிய அறுவகைப் பெயரும் எஞ்சுமாறு நிற்கும் எச்சவினை தெரிநிலைப் பெயரெச்ச வினை என்றும் பெயரின் அடியாகத் தோன்றி, காலம் காட்டாமல் பால் நீங்க கருத்தா முதலிய அறுவகைப் பெயரும் கொண்டு முடியும் எச்ச வினை குறிப்புப் பெயரெச்ச வினை என்றும் இவ்விரு வகையும் எதிர்மறைப் பொருளிலும் ஈறுகெட்ட நிலையிலும் அமையும் என்றும் அறியலாம்.

**செய்த செய்கின்ற செய்யும் என் பாட்டில்**
**காலமும் செயலும் தோன்றிப் பாலொடு**
**செய்வ தாதி அறுபொருள் பெயரும்**
**எஞ்ச நிற்பது பெயரெச்ச சம்மே (நன்: 340)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**செய்யுமென் எச்சத்தின் சிறப்பு விதி**

செய்யுமென்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சத்தின் ஈற்று உயிர் மெய் கெட்டு செய்யுளில் 'உம்', 'உந்து' எனத் திரியும். செய்யும் என்னும் முற்றாயின் அதன் இறுதி உயிராயினும் உயிர் மெய்யாயினும் கெட்டு வரும். இது செய்யுமென் எச்சத்தின் சிறப்பாகும்.

ஆகும் பொருள் - ஆம் பொருள்

போகும் பொருள் - போம் பொருள் - உலக வழக்கு

"ஆம்பொருள் களாகுமவை யார்க்கும்" - செய்யுள் வழக்கு

இத்தொடர்களில் அமைந்துள்ள ஆகும், போகும் என்னும் செய்யுமெனும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சங்களின் ஈற்று உயிர்மெய் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் கெட்டு வந்துள்ளன.

தென்கடல் திரைமிசைப் பாயும் (பாய்ந்து)

நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து

இச்செய்யுளடிகளில் அமைந்துள்ள பாயும், கூப்பெயர்க்கும் ஆகிய செய்யுமென்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சங்களின் ஈற்று 'உம்' என்பது 'உந்து' எனத் திரிந்து வந்துள்ளது. உலக வழக்கில் இத்தகைய திரிபு ஏற்படாது.

சாரல் நாட என் தோழியும் கலுழுமே

அம்பலூரும் அவனொடு மொழிமே

இச்செய்யுளடிகளில் அமைந்துள்ள கழலும், மொழியும் என்னும் செய்யுமென்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சங்கள் முற்றாகிய இடத்தில் கலழும், மொழியும் என உயிரும் உயிர்மெய்யும் கெட்டு அமைந்துள்ளன. உலக வழக்கில் இவ்வாறு அமைவதில்லை.

எனவே செய்யுமென்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சத்தினுடைய ஈற்று உயிர் மெய் கெடும். செய்யுளில் 'உம்' என்பது 'உந்து' எனத் திரியும். செய்யும் என்னும் முற்றாயின் அதன் இறுதி உயிராயினும் உயிர் மெய்யாயினும் கெடும் என்பது அறியலாகிறது.

**செய்யுமென் எச்சவீற்று உயிர்மெய் சேறலும்**

**செய்யுள் உம்உந்து ஆகலும் முற்றேல்**

**உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே (நன் : 341)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வினைஎச்சம்**

வினை எச்சம் என்பது தொழிலையும் காலத்தையும் காட்டி வினை முடிதற்கு வேண்டிய பாலும் வினையும் எஞ்சுமாறு நிற்பது ஆகும். இவை தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும்.

**வினைஎச்சம்**

**தெரிநிலை வினையெச்சம்** **குறிப்பு வினையெச்சம்**

எனும் அட்டவணை வாயிலாக இதனை அறியலாம்.

எ.கா- இராமன் உண்டு வந்தான்

இத்தொடரில் ‘உண்டு’ என்பது பால் விகுதியின்றி வந்தான் என வினையைக் கொண்டு முடியுமாறு எஞ்சி நிற்கிறது. மேலும் இது உண்ணுதல் என்னும் தொழிலையும் இறந்த காலத்தையும் காட்டுகிறது.

இவ்வாறு தொழிலையும் காலத்தையும் காட்டி வினை முடிதற்கு வேண்டிய பாலும் வினையும் எஞ்சுமாறு நிற்பது வினையெச்சம் ஆகும்.

வினை எனப் பொதுப்படக் கூறியமையால் உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வரும் தெரிநிலையும் குறிப்புமாகிய வினைமுற்றும் பெயரெச்சமும் வினையாலணையும் பெயரும் தொழிற் பெயருமாகிய ஐவகை வினைச் சொற்களும் அடங்கும்.

எ.கா- கற்று வந்தான் - தெரிநிலை வினைமுற்று

கற்று வல்லன் - குறிப்பு வினைமுற்று

கற்று வா - ஏவல் வினைமுற்று

கற்று வாழ்க - வியங்கோள் வினைமுற்று

கற்று வந்த - தெரிநிலைப் பெயரெச்சம்

கற்று வல்ல - குறிப்புப் பெயரெச்சம்

கற்று வந்த - தெரிநிலை வினையெச்சம்

கற்று அன்றி - குறிப்பு வினையெச்சம்

கற்று வந்தவன் - தெரிநிலை வினையாலணையும் பெயர்

கற்று வல்லன் - குறிப்பு வினையாலணையும் பெயர்

கற்று வரல் - தொழிற்பெயர்

இவை உடன்பாட்டுப் பொருளில் ஐவகை வினை விகற்பங்களைக் கொண்டு தெரிநிலையிலும் குறிப்பிலும் அமைந்துள்ளன.

இவ்வாறே எதிர்மறைப் பொருளிலும் ஐவகை வினை, விகற்பங்களைக் கொண்டு தெரிநிலையிலும் குறிப்பிலும் அமையும்.

எ.கா- தெரிநிலை - ஓடிவரான், ஓடிவரேல், வாடிவதங்கற்க, ஓடிவராத, ஓடிவராமல்,

ஓடிவராதவள், ஓடிவராமை

குறிப்பு - அறிவின்றி இவன், அறிவின்றி இல்லாத, அறிவின்றி இல்லாது,

அறிவின்றி இல்லாதவன், அறிவின்றி இன்மை

எனவே தொழிலும் காலமும் வெளிப்படையாகத் தோன்றி வினை முற்றுதற்கு வேண்டும். பாலும் வினையும் எஞ்சி நிற்பன தெரிநிலை வினை எச்சமும் குறிப்புவினை எச்சமும் ஆகும்.

**தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை**
**ஒழிய நிற்பது வினையெச் சம்மே (நன் : 342)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வினையெச்ச வாய்ப்பாடுகள்**

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யிர், என்னும் ஒன்பது வாய்ப்பாடுகளால் வருவனவும் வான், பான், பாக்கு என்னும் மூன்று விகுதிகளைப் பெற்று வருவனவும் இவை போல்வன பிறவும் தெரிநிலை வினையெச்ச வாய்ப்பாடுகளாகும். முதல் ஐந்தும் இறந்த காலத்தையும் செய என்னும் வாய்ப்பாடு நிகழ்காலத்தையும் ஏனைய ஆறும் எதிர்காலத்தையும் உணர்த்துவனவாகும்.

எ.கா- நடந்து வந்தான்

உண்குபு (உண்டு) போனான்

பெய்யாக் (பெய்து) கொடுத்து

காணூ (கண்டு) மகிழ்ந்தான்

உண்டெனப் (உண்டு) போனான்

இவை முறையே செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் வினையெச்ச வினைகளாகி இறந்த காலத்தை உணர்த்துகின்றன. இவற்றுள் செய்து என்பது இடைநிலையாலும் ஏனையவை விகுதியாலும் காலத்தைக் காட்டுகின்றன.

நடக்க வல்லன் ‘நடக்க’ என்பது செய என்னும் வினையெச்ச வினையாகி நிகழ்காலத்தை உணர்த்துகின்றது.

வரின் (வந்தால்) கொள்ளும்

ஆடிய (ஆடுதற்கு) தருவான்

உண்ணியர் (உண்ணுதற்கு) வருவான்

| | | | |
|---|---|---|---|
| கொல்வான் | வந்தான் | - | வான் |
| தின்பான் | வந்தான் | - | பான் |
| செய்பாக்கு | வந்தான் | - | பாக்கு |

இவை முறையே செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு என்னும் வினையெச்ச வினையாகி எதிர்காலத்தை உணர்த்துகின்றன.

‘இன்ன’ என நூற்பா சுட்டுவதால் இ, ய், உ என்பன இறந்த காலத்திற்கும் ஆல், கு, கால், குடை, வழி, இடத்து என்பன எதிர்காலத்திற்கும் மல், மை, மே என்பன எதிர்மறைப் பொருளுக்கும் அறி, ஆல் என்பன குறிப்பு வினையெச்சத்திற்கும் பிறவும் விகுதிகளாக அமையும்.

நிகழ்காலத்தைச் சுட்டும் செய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம், காரணப் பொருளாகும்பொழுது இறந்த காலத்தையும் உடன் நிகழ்ச்சிப் பொருளாகும்பொழுது நிகழ்காலத்தையும் காரியப் பொருளாகும்பொழுது எதிர்காலத்தையும் காட்டும்.

எ.கா- மழை பெய்ய நெல் விளைந்தது - காரணப்பொருள் இறந்த காலம்

சூரியன் உதிக்கச் சாத்தன் வந்தான் - உடன் நிகழ்ச்சிப் பொருள் நிகழ்காலம்

நெல்விளைய மழை பெய்தது - காரியப் பொருள் எதிர்காலம்

எனவே செய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் சிறுபான்மை முக்காலத்திற்கும் பொதுவான வினையெச்சம் எனவும் குறிப்பிடுவர்.

எனவே செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யிர், என்னும் ஒன்பது வாய்ப்பாடுகளால் வருவனவும் வான், பான், பாக்கு என்னும் மூன்று விகுதிகளைப் பெற்று வருவனவும் இவை போல்வன பிறவும் தெரிநிலை வினையெச்ச வாய்ப்பாடுகளாகும். முதல் ஐந்தும் இறந்த காலத்தையும் செய என்னும் வாய்ப்பாடு நிகழ்காலத்தையும் ஏனைய ஆறும் எதிர்காலத்தையும் உணர்த்தும்.

**செய்து செய்ப செய்யாச் செய்யூச்**

**செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்**

**வான்பான் பாக்கின் வினையெச் சம்பிற**

**ஐந்தொன்றாறுமுக் காலமும் முறைதரும் (நன் : 343)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வினையெச்சங்களும் முடிவு வேறுபாடு**

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சங்களும் வான், பான், பாக்கு ஆகிய விகுதிகளை ஈற்றிலுடைய வினையெச்சங்களும் தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடியும். செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சங்களும் பிறவும் தன் கருத்தாவின் வினையை மட்டுமின்றிப் பிற கருத்தாவின் வினையையும் ஏற்கும்.

| | | |
|---|---|---|
| இராமன் நடந்து வந்தான் | - | செய்து |
| பொன்னன் உண்குபு சென்றான் | - | செய்பு |
| புயல் பெய்யாக் கொடுக்கும் | - | செய்யா |
| மகள் காணூ மகிழ்ந்தான் | - | செய்யூ |
| புலி கொல்வான் சென்றது | - | வான் |
| வேடர் அலைப்பான் புகுந்தனர் | - | பான் |
| வள்ளல் தருபாக்கு வருவான் | - | பாக்கு |

மேற்குறிப்பிட்ட செய்து, செய்பு, செய்யா, செய்யூ, வான், பான், பாக்கு என்னும் ஏழு வினையெச்ச வாய்ப்பாடுகள் தம் கருத்தாவின் வினையைக் கொண்டு முடிந்துள்ளன.

சாத்தன் உண்டென மகிழ்ந்தான்

சாத்தன் உண்டென யான் மகிழ்ந்தேன் - செய்தென

இராமன் உண்ண வருகிறான்

இராமன் உண்ண நீ காணாய் - செய

இராமன் உண்ணின் மகிழ்வான்

வறியன் உண்ணின் வள்ளல் மகிழ்வான் - செயின்

மகன் உண்ணிய வருவான்

மகன் உண்ணிய தாய் தருவாள் - செய்யிய

தந்தை உண்ணியர் போவான்

பிறர் உண்ணியர் தான் தருவான் - செய்யியர்

மேற்குறிப்பிட்ட செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஐந்து வினையெச்ச வாய்ப்பாடுகளும் தம் கருத்தாவையும் வேறு கருத்தாவின் வினையையும் கொண்டு முடிந்துள்ளன.

'பிற' என நூற்பா சுட்டுவதால் முன் நூற்பாக்களில் குறிப்பிட்டுள்ள இகர யகர ஈற்று வினையெச்சங்களும் உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சமும் தம் கருத்தாவின் வினையையும் மற்றவை தம் கருத்தாவின் வினை, பிற கருத்தாவின் வினைகளைக் கொள்ளும்.

| | | |
|---|---|---|
| எ.கா- | மகன் ஓடி வந்தான் | |
| | மகள் போய்க் கண்டாள் | தம் கருத்தாவின் வினை கொண்டன |
| | தான் வலியப் பேசினான் | |
| | அவன் உண்டால் உவக்கும் | |
| | யான் உண்டால் பசி தீரும் | தம் கருத்தாவின் வினையையும் |
| | மழையின்றிப் பொய்ப்பின் | பிற கருத்தாவின் வினையையும் |
| | விருந்தின்றி அவன் உண்ணான் | கொண்டன. |

எனவே முன் நூற்பாவில் குறிப்பிட்டுள்ள பன்னிரெண்டு வாய்ப்பாட்டு வினையெச்சங்களுள் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சங்களும் வான், பான், பாக்கு என்னும் விகுதிகளை ஈற்றிலுடைய வினையெச்சங்களும் தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடியும். செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சங்களும் பிறவும் தன் கருத்தாவின் வினையை மட்டுமின்றிப் பிற கருத்தாவின் வினையையும் ஏற்கும் என்பதை அறியலாம்.

**அவற்றுள்**

**முதலில் நான்கும் ஈற்றின் மூன்றும்**

**வினைமுதல் கொள்ளும் பிறவும்ஏற் கும்பிற (நன் : 344)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

### வினை முதல் கொள்ளும் என்பனவற்றிற்கு ஒரு புறநடை

செய்து, செய்பு, செய்யா, செய்யூ ஆகியன முதலில் நான்காகவும் வான், பான், பாக்கு ஆகியன ஈற்றில் மூன்றாகவும் அமையும் வினையெச்சங்கள் ஆகும். இவை சினைவினையாயின் முன்னர் வினை முதற்கொள்ளும் என்னும் விதியினால் சினையுடனேயன்றி ஒற்றுமை பற்றி முதலுடன் முடியும்.

எ.கா- கால் ஒடிந்து விழுந்தது

கண் சிவந்து நொந்தது

இத்தொடர்களிலுள்ள சினை வினைகள் அதனோடு தொடர்புடைய முதற்பெயர்களின் வினைகளோடு முடிந்துள்ளன.

எனவே முதலில் நான்கும் (செய்து, செய்பு, செய்யா, செய்யூ) ஈற்றில் மூன்றும் (வான், பான், பாக்கு) என்ற வினையெச்சங்கள் சினைவினையாயின் அவை, முன்னர் வினைமுதற்கொள்ளும் என்ற விதியினாலே சினையுடனேயன்றி ஒற்றுமை பற்றி முதலுடன் முடியும்.

**சினை வினை சினையொடும் முதலொடும் செறியும்** (நன் : 345)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வினையெச்ச வாய்ப்பாடுகளின் திரிபு**

முதலில் நான்கும் ஈற்றில் மூன்றுமான முன் கூறப்பட்ட வினையெச்ச வாய்ப்பாடுகள் வேறு வாய்ப்பாடுகளாக மாறி வரினும் அவற்றின் பொருள் வேறுபடாது.

எ.கா - கதிரவன் வந்து பனி விலகியது

இது கதிரவன் வர பனி விலகியது என இருக்க வேண்டும். செய என்னும் வினையெச்ச வாய்ப்பாட்டுக்குப் பதில் செய்து என்னும் வினை எச்ச வாய்ப்பாடு அமைந்தது. எனினும் பொருள் மாறவில்லை.

எ.கா- மழை பெய்து நெல் விளைந்தது

இத்தொடரில் ‘பெய்ய’ என்னும் காரணப் பொருட்களாகிய ‘செய’ என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் ‘செய்து’ எனத் திரிந்துள்ளது.

எ.கா- யான் கொள்வான் பொன் கொடுத்தான்

இத்தொடரில் ‘கொள்’ என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் ‘கொள்வான்’ எனத் திரிந்துள்ளது.

எனவே முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் என்னும் வினையெச்ச வாய்ப்பாடுகள் வேறு வாய்ப்பாடுகளாக மாறி வரினும் அவற்றின் பொருள் வேறுபடாது என்பதை அறியலாம்.

**சொல் திரியினும் பொருள் திரியா வினைக் குறை** (நன் :346)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**குறிப்பு வினைக்கு புறநடை**

நல்லன், பெரியன், வல்லன் போன்றவை குறிப்பு வினைச் சொற்கள். இவை சாத்தன், நல்லன், பெரியன், வல்லன் என அமையும்பொழுது எவ்வித அடைகளையும் பெறவில்லை. இவ்வாறு அமைவது இயற்கை வினைக் குறிப்பு ஆகும்.

இயற்கை வினைக் குறிப்பு சொற்கள் சாத்தன், நல்லன் ஆகினான், கல்வியால் பெரியன் ஆயினான். கற்று வல்லன் ஆயினான் என வேறு சொற்களை ஆக்கமாகக் கொண்டு அமையும் பொழுது ஆக்க வினைக் குறிப்பு என பெயர் பெறும்.

இவ்வாறு ஆக்கத்தைக் கொண்டமையும் வினைக் குறிப்புச் சொற்கள் விரிந்தாயினும் தொக்காயினும் வரும். ஆக்கச் சொல் இல்லாமல் வராது. இதனை,

**ஆக்க வினைக்குறிப்பு ஆக்கமின்று இயலா (நன் : 347)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**செய்யும் என்னும் முற்று**

செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று படர்க்கைப் பலர் பாலிலும் முன்னிலையிலும் தன்மையிலும் வராது.

எ.கா- அவன் உண்ணும்

அவள் உண்ணும்

அது உண்ணும்

அவை உண்ணும்

எனவே இது படர்க்கைப் பலர்பால் ஒழிந்த ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்கு பால்களிலும் இடம் பெறும் என்பதை அறியலாம்.

**பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்**

**சல்லா தாகும் செய்யுமென முற்றே (நன்: 348)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**பால் பொதுவினை**

யார் என்னும் வினாப் பொருளைத் தரும் குறிப்பு வினைமுற்று உயர் திணை மூன்று பால்களுக்கும் பொதுவானது ஆகும். இவை பலர் பால் முற்று அன்று. இவை உயர்திணைப் பொதுக் குறிப்பு முற்று ஆகும். இதில் 'ர்' என்பது விகுதி ஆகும்.

எ.கா - அவன் யார்? அவள் யார்? அவர் யார்?

நான் யாா?, நாம் யார்?, நீ யாா?, நீர் யார்?

எனத் தன்மை முன்னிலைகளில் வருதல், புதியன புகுதல் ஆகியவற்றால் அமையும்.

யார் என்பது 'ஆர்' என விகாரப்பட்டு வரும். சொல்லியது யார் என்பது யாவர் என்னும் உயர்திணைப் பலர்பால் சொல்லானது விகாரப்பட்ட யார் என்பது அன்று. இது வினா வினைக் குறிப்பு ஆகும். எனவே யார் என்னும் வினாப்பொருளைத் தரும் குறிப்புவினைமுற்று அ∴றிணை படர்க்கை இரு பால்களுக்கும் பொதுவாகும். இதனை,

**யார்என் வினாவினைக் குறிப்புஉயர் முப்பால்** (நன் : 349)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**எவன் என்னும் குறிப்பு வினை முற்றுக்கு சிறப்பு விதி**

எவன் என்பது ஆண்பால் முற்றன்று. இது அ∴றிணைப் பொதுக் குறிப்பு முற்று ஆகும். எவன் என்பது எது என்றும் எவை என்றும் பொருள்படும். அண் என்பது பொது விதியாகும்.

எ.கா – அது எவன்

அவை எவன்

இவை 'அது என்' என விகாரப்பட்டும் அது பின்பு என்னை, என்ன, என்னே, என்னோ, ஏன் எனப் பலவாறு விகாரப்பட்டும் வரும்.

எனவே எவன் என்னும் வினாப் பொருளைத் தரும் குறிப்பு வினைமுற்று அ∴றிணைப் படர்க்கை இரு பால்களுக்கும் பொதுவாகும். இதனை,

**எவனென் வினாவினைக் குறிப்புஇழி இருபால்** (நன் : 350)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**முற்றெற்றம்**

வினைமுற்று எச்சப் பொருளில் வருதல் முற்றெற்றம் ஆகும். தெரிநிலை வினைமுற்று வினையெச்சமாகவும் குறிப்பு வினையெச்சமாகவும் குறிப்பு வினைமுற்று வினையெச்சமாகவும் பெயரெச்சமாகவும் வரும்.

எ.கா- கண்டனன் வணங்கினான்

காணான் போனான்

இவற்றில் கண்டனன் வணங்கினான் என்பது கண்டு வணங்கினான் என்றும் காணான் போனான் என்பது காணாமற் போனான் என்றும் பொருள்படும்.

கண்டனன், காணான் என்னும் வினைமுற்று வினை எச்ச வினையாகி வணங்கினான் போனான் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்து தெரிநிலை வினையெச்சமாயிற்று.

எ.கா- சாத்தன் வில்லினன் வந்தான்

இது சாத்தன் வில்லையுடையவனாய் வந்தான் எனப் பொருள்படும். வில்லினன் என்னும் குறிப்பு வினை எச்சப் பொருளில் வந்தான் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்து குறிப்பு வினையெச்சமாயிற்று.

எ.கா- குழையினன் கொற்றன் வந்தான்

இது குழையை உடைய கொற்றன் வந்தான் எனப் பொருள்படும். குழையினன் என்னும் குறிப்புவினை எச்சப் பொருளில் கொற்றன் என்னும் பெயரைக் கொண்டு முடிந்து குறிப்புப் பெயரெச்சமாயிற்று.

இவ்வாறு தெரிநிலை வினைமுற்றுச் சொல் வினையெச்சப் பொருளாகி வருதலும் குறிப்பு வினைமுற்றுச் சொல் வினையெச்சப் பொருளிலும் பெயரெச்சப் பொருளிலும் வருதலும் உண்டு.

எனவே வினைமுற்று எச்சப் பொருளில் வருதல் முற்றெற்றம் என்பதும் தெரிநிலை வினைமுற்று, வினையெச்சம் குறிப்பு வினையெச்சமாகவும் குறிப்பு வினைமுற்று, வினையெச்சம் பெயரெச்சமாகவும் வரும் என்பதும் அறியத்தக்கது.

**வினைமுற்றே வினையெச்சம் ஆகலும்**

**குறிப்புமுற்று ஈரெச்சம் ஆகலும் உளவே** (நன் : 351)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

## பொதுவியல்

நன்னூல் சொல்லதிகாரத்தின் மூன்றாம் இயல் பொதுவியல் ஆகும். இலக்கண நெறியான் நால்வகைப்பட்ட சொற்கள் ஒவ்வொன்றையும் தனித்தனி இயல்களில் விளக்குவது நன்னூலின் அமைப்பு முறை ஆகும். அவ்வடிப்படையிலேயே பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்னும் இயல்கள் அமைந்தன. பெயர் - வினை என்னும் இரு இயல்களுக்குப் பின்னும் இடை – உரி என்னும் இரு இயல்களுக்கு முன்னும் பொதுவியல் அமைந்துள்ளது.

நான்கு இயல்களிலும் இடம் பெறாத பொதுச் செய்திகள் பல பொதுவியலில் விளக்கப்படுகின்றன. தொகை நிலை, தொகாநிலை, வழுவமைதிகள், செய்யுள் தொடர்களுக்குப் பொருள் கொள்ளும் முறை முதலான பொதுவியல் செய்திகள் தொடரியல் என்னும் இலக்கண நெறியின் கீழ் அமைவனவாகும்.

பொதுவியலில் விளக்கப்படும் இலக்கணச் செய்திகளை நான்கு பிரிவுகளில் காணலாம்.

தொகைநிலை – தொகாநிலை

வழு – வழா நிலை – வழுவமைதி

பொருள்கோள்

சில சிறப்பு விதிகள் (தொகுப்பு) முதலியனவாகும்.

**பால் பொதுமை நீங்கும் நெறி**

இருதிணையிலும் ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும் அத்தகைய வினைச் சொற்களும் அவ் ஆண்பால், பெண்பால்களுள் ஒரு பாலைக் குறிப்பினால் நீக்கும். இது பால் பொதுமை நீங்குதல் ஆகும்.

எ.கா- ஆயிரம் மக்கள் போர் செய்தனர்

இத்தொடரிலுள்ள மக்கள் என்பது உயர்திணைப் பொதுப்பெயர். செய்தனர் என்னும் வினை இருபால் பொதுவினை ஆகும். போர் என்னும் குறிப்பினால் மக்கள் என்பது ஆண்மக்களை மட்டும் குறித்தது.

எ.கா- இப் பெற்றங்கள் பால் சொரிந்தன.

இத் தொடரிலுள்ள பெற்றங்கள் என்பது அ∴றிணைப் பெயர். சொரிந்தன என்பது இருபால் பொதுவினை ஆகும். பால் என்னும் குறிப்பினால் பெற்றங்கள் என்பது பெண்பாலை மட்டுமே குறித்தது. இதனை,

**இருதிணை ஆண்பெணுள் ஒன்றினை ஒழிக்கும்**
**பெயரும் வினையும் குறிப்பி னானே** (நன் : 352)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**பெயர் வினையிடத்து ஈற்றயல் திரிதல்**

பெயரிடத்தும் வினையிடத்தும் னகர, ளகர, யகர ஈற்றிற்கு அடுத்துள்ள ஆகாரம் ஓகாரமாகத் திரிதல் பெயர் வினையிடத்து ஈற்றயல் திரிதல் ஆகும். இது செய்யுளிடத்து உரியதாகும்.

எ.கா- வில்லான் - வில்லோன்

தொடியாள் - தொடியோள்

நல்லார் - நல்லோர்

பெரியாய் - பெரியோய்

இப்பெயர்ச் சொற்கள் ன், ள், ர், ய் என்னும் ஈறுகளை உடையன. இவ் ஈற்றை அடுத்துள்ள ஆகாரம் ஓகாரமாகத் திரிந்து வந்துள்ளதைக் காணலாம்.

எ.கா- படைத்தான் - படைத்தோன்

பெயர்ந்தாள் - பெயர்ந்தோள்

சென்றார் - சென்றோர்

வந்தாய் - வந்தோர்

இவ்வினைச் சொற்களும் ன், ள், ர், ய் ஈற்றினைப் பெற்று அடுத்துள்ள ஆகாரம் ஓகாரமாகத் திரிந்து அமைந்துள்ளன.

இவ்வாறு ஆகாரம் ஓகாரமாகத் திரிதல் செய்யுளில் மட்டுமே இடம் பெறும்.

மேலும் நூற்பாவில் ஆ ஓவாகலும் எனக் குறிப்பதால் கிழவன் - கிழவோன், புலவர் - புலவோர், சிலர் - சிலோர் என சில இடங்களில் அகரம் ஓகாரமாதலும் செய்யுளுக்கே உரியது எனக் கொள்ள வேண்டும்.

எனவே பெயரிடத்தும் வினையிடத்தும் னகர, ளகர, யகர ஈற்றிற்கு அடுத்துள்ள ஆகாரம் ஓகாரமாகத் திரிதல் செய்யுளிடத்து உரியதாகும் என்பது அறியத்தக்கது.

**பெயர்வினை யிடத்து னளரய ஈற்றயல்**

**ஆ ஓ வாகலும் செய்யுளுள் உரித்தே (நன் : 353)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**உருபும் வினை ஈறும் எதிர்மறையிலும் திரியாமை**

எட்டு வேற்றுமை உருபுகளும் மூவகை வினைச் சொற்களும் எதிர்மறைப் பொருளை உணர்த்துமிடத்து தம்தம் விகுதிகளினின்றும் உருபுகளினின்றும் வேறுபடாது. இத்தன்மையே உருபும் வினை ஈறும் எதிர்மறையிலும் திரியாமை ஆகும்.

எ.கா- இராமன் வாரான்

பாடத்தைப் படியான்

கத்தியால் எறியான்

புலவர்க்குக் கொடான்

நிலையின் நீங்கான்

பொருளினது இன்மை

தீயர்கண் சேரான்

சாத்தா போகேல்

இத்தொடர்களில் எட்டு வேற்றுமை உருபுகளையும் முறையே பெற்று எதிர்மறைப் பொருளைத் தந்து தம்தம் உருபு மாறுபடாதவாறு வந்துள்ளன.

எ.கா- நடவான், நடவாத, நடவாக்கால்

என்பன எதிர்மறைப் பொருளில் அமைந்த வினைமுற்றும் வினையெச்சமும் பெயரெச்சமும் ஆகும். இவையும் எதிர்மறைப் பொருளில் தம் தம் விகுதி மாறுபடாதவாறு வந்துள்ளன.

எ.கா- உரையிற் கோடலால் செய்ய

செய்யாமல், செய்யாது, செய்யாமே, செய்யாமை என வினையெச்சமும் நடத்தல் - நடவாமை என தொழிற் பெயரும் உண்ணாய் - உண்ணேல், உண்ணாதே என ஒருமை ஏவலும் மற்றும் சிலவும் ஈறு திரிந்து வரும்.

எனவே எட்டு வேற்றுமை உருபுகளும். மூவகை வினைச் சொற்களும் எதிர்மறைப் பொருளை உணர்த்துமிடத்தும் தம்தம் விகுதிகளினின்றும் உருபுகளினின்றும் வேறுபடாது என்பதை அறியலாம்.

**உருபும் வினையும் எதிர்மறுத் துரைப்பினுந்**
**திரியா தத்தமீற் றுருபி னென்ப** (நன் : 354)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**உருபும் வினையும் அடுக்கி முடிதல்**

எட்டு வேற்றுமை உருபுகளும் விரிந்தும் தொக்கியும் பல அடுக்கிவரினும் மூவகை வினைச் சொற்கள் வெவ்வேறு பல அடுக்கிவரினும் தாம்தாம் கொண்டு முடியும் சொல் ஒன்று இறுதியில் வர எல்லாம் அதனோடு முடியும். இதனை உருபும் வினையும் அடுக்கி முடிதல் என்பர்.

எ.கா- இராமன் வாளால் பகைவனை வெட்டினான்.

இத்தொடர் ‘ஐ’ ‘ஆல்’ என இரு வேற்றுமை உருபுகளை வெளிப்படையாகக் கொண்டு வெட்டினான் என்பது ஒரே ஒரு வினையுடன் முடிவடைந்துள்ளது.

வாள் கைக்கொண்டான் (வாளினைக் கையில் கொண்டான்)

இத்தொடரில் வேற்றுமை உருபுகள் (ஐ, இன்) தொக்கி நிற்பதையும் ஒரே ஒரு வினைமுற்றுடன் முடிந்துள்ளதையும் காணலாம்.

ஓடினான் சாடினான் இராமன்

இத்தொடரிலுள்ள தெரிநிலை வினைமுற்றுக்கள் ஒரே ஒரு பெயரினைக் கொண்டு முடிந்துள்ளன.

இளையல் மெல்லியள் சீதை

இத்தொடரிலுள்ள குறிப்பு வினைமுற்றுக்கள் ஒரே ஒரு பெயருடன் வந்துள்ளன.

கற்று கேட்ட இராமன்

இத்தொடரிலுள்ள தெரிநிலைப் பெயரெச்சங்கள் ஒரே ஒரு பெயருடன் முடிந்துள்ளன.

நெடிய பெரிய இராமன்

இத்தொடரிலுள்ள குறிப்புப் பெயரெச்சங்களும் அவ்வாறே முடிந்துள்ளன.

படித்து கேட்டு அறிந்தார்.

இவை வினைமுற்றுடன் வந்துள்ளன.

விருப்பு வெறுப்பின்றி நின்றான்

இக்குறிப்பு வினையெச்சங்களும் அவ்வாறே அமைந்துள்ளன.

**உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்**

**ஒருதம் எச்சம் ஈறுற முடியும்** (நன்னூல் : 355)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**இடைப்பிற வரல்**

வேற்றுமை உருபுகளும் வினைமுற்றுகளும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டு முடியும் பெயருக்கும் வினைக்கும் இடையில் அவ்விடங்களுக்குப் பொருத்தமான பிற சொற்கள் வருதலும் உண்டு. இவ்வாறு வருதல் ஏற்கத் தக்கதாகும். இதனை இடைப்பிறவரல் என்பர்.

எ.கா- இராமன் (நன்றாக) உண்டான்

சாதனை (அழகுறச்) செய்தான்

கத்தியால் (ஓங்கி) வெட்டினான்

தேவர்க்குக் (வாழும் பொருட்டு) கொடுத்தான்

நதியினின்று (உருண்டு) வீழ்ந்தான்

சாத்தனது (வலக்கை) யானை

ஊர்க்கண் (உயர்ந்த) கோபுரம்

இராமா (வேகமாக) வா

இவை எட்டு வேற்றுமைகளின் அடிப்படையில் பொருத்தமான சொற்களை அடைப்புக் குறிக்குள் பெற்று வந்துள்ளன.

எ.கா- வந்தான் (நேற்றுப் போன) சாத்தன்

வந்த (புகழுடைய) மன்னன்

வந்து (அழகாகச்) சேர்ந்தான்

இவ்வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் பொருத்தமான சொற்களை அடைப்புக் குறிக்குள் பெற்று வந்துள்ளன.

**உருபு முற்றுஈ ரெச்சங் கொள்ளும்**

**பெயர்வினை இடைப்பிறவ வரலுமாம் ஏற்பன (நன் : 356)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**முடிக்கும் சொல் நிற்குமிடம்**

வேற்றுமை உருபு, வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், ஆகியன கொண்டு முடியும் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இறுதியில் வரும். ஈற்றினும் என்னும் எச்ச உம்மையால் முதலிலும் வரும் என்பதை அறியலாம். இதன் வாயிலாக முடிக்கும் சொல் நிற்குமிடத்தை விளங்கிக் கொள்ளலாம்.

| ஈறு | முதல் |
|---|---|
| இராமன் வந்தான் | வந்தான் இராமன் |
| குடத்தை வனைந்தான் | வனைந்தான் குடத்தை |
| இராமனால் செத்தான் | செத்தான் இராமனால் |
| இராமனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் இராமனுக்கு |
| சீதையின் நீங்கினான் | நீங்கினான் சீதையின் |
| சாத்தனது ஆடை | ---------------- |
| வாலியின் கண் அடைந்தான் | அடைந்தான் வாலியின் கண் |
| வீட்டில் விளக்கு | --------------- |
| கண்ணா வா | வா கண்ணா |
| வந்தான் சாத்தன் | சாத்தன் வந்தான் (வினை முற்று) |

வந்த ராதை ----------------- (பெயரெச்சம்)

வந்து நின்றான் நின்றான் வந்து (வினையெச்சம்)

இவ் எடுத்துக்காட்டுகளில் ஈறாக இருப்பது முதலாகவும் முதலாக இருப்பது ஈறாகவும் மாறி அமைந்திருப்பதைக் காணலாம். இவற்றுள் ஆறாம் வேற்றுமை உருபும் ஏழாம் வேற்றுமை உருபும் (இல்) பெயரெச்சம் கொண்டு முடியும் பெயர்ச்சொற்களும் ஏனையவை போன்று மாறி அமையாது. அவ்வாறு அமைவது சிறப்பன்று.

சாத்தனது ஆடை என்பது ஆடை சாத்தனது என அமையாது. அவ்வாறு அமைந்தால் சாத்தனது என்பது குறிப்பு வினைமுற்றாகி விடும்.

**எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும் (நன் : 357)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**ஒருமொழி வேறொன்றை அமைத்தல் (உபலட்சணம்)**

பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களும் தன்னை உணர்த்துவதோடு, ஒழிந்துநின்ற தம் இனங்களையும் தழுவிக் கொள்ளும். இதனை ஒருமொழி வேறொன்றை அமைத்தல் (உபலட்சணம்) என்பர்.

எ.கா- சோற்றை உண்டான்

இது சோற்றை மட்டும் குறிக்காது, அதனோடு இணைந்த அனைத்தையும் குறிக்கும்.

எ.கா- வெற்றிலை போட்டான்

இது வெற்றிலையுடன் தொடர்புடைய பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை ஆகியவற்றையும் சுட்டும்.

நஞ்சு உண்டவன் சாவான் என்றால் நஞ்சு உண்டவள் சாவாள், நஞ்சு உண்டவர் சாவார், நஞ்சு உண்டவை சாகும், நஞ்சு உண்டது சாகும் ஆகியனவற்றை கூறாமலே புரிந்து கொள்ளலாம். உண்டவன், சாவான் என்னும் ஆண்பாற் பெயர்வினைகள் ஏனைய நான்கு பால் பெயர் வினைகளையும் கொள்வதற்கு ஏற்றதாக உள்ளன.

**ஒருமொழி ஒழீதன்இனம் கொளற்கு உரித்தே (நன் : 358)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**திணைபால் இடப்பொதுமை நீங்கும் நெறி**

திணை, பால், இடம், காலங்களுக்குப் பொதுவாகிய பெயர், வினைச் சொற்கள் அவற்றிற்கு பொதுவான தன்மையை அடுத்து வரும் சிறப்புப் பெயர்ச்சொற்களும் வினைச் சொற்களும்

நீங்கி, ஒரு திணை, பால் காலத்துக்கே உரிமை செய்யும். இது திணைபால் இடப்பொதுமை நீங்கும் நெறி ஆகும்.

எ.கா- சாத்தன் இவன், சாத்தன் இது, சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது

இவற்றில் சாத்தன் என்பது இருதிணைப் பொதுப் பெயர். சாத்தன் என்பது இவன், வந்தான் ஆகிய சிறப்புப் பெயர் மற்றும் வினையையும் கொண்டு முடியும்பொழுது உயர்திணையைச் சுட்டும். அது வந்தது என சிறப்புப் பெயர், வினையைக் கொண்டு முடியும்பொழுது அ.ஃறிணையைச் சுட்டும்.

ஒருவர் என் ஐயா, ஒருவர் என் தாயார்

இவற்றில் ஒருவர் இருபாற் பெயர் ஆகும். ஐயா எனச் சிறப்புரைக் கொள்ளும்பொழுது ஆண்பாலையும் தாயார் எனும்பொழுது பெண்பாலையும் குறிக்கும்.

அவ்வாறே மரம் எனும் அ.ஃறிணைப் பொதுப்பெயர், வளர்ந்தது எனும்பொழுது ஒன்றன் பாலையும் வளர்ந்தன எனும்பொழுது பலவின் பாலையும் சுட்டும்.

மூவிடப் பொதுப் பெயர்களுக்கு முன் வந்த சிறப்புப் பெயரும் பின் வந்த சிறப்பு வினையையும் நீங்கி ஓரிடத்தை மட்டுமே குறிக்கும்.

| | | |
|---|---|---|
| எ.கா – | யாமெல்லாம் வருவோம் | - தன்மை |
| | நீரெல்லாம் வருவீர் | - முன்னிலை |
| | அவரெல்லாம் வருவார் | - படர்க்கை |

திணை பாலிடங்களுக்குரிய பொதுவினைகள் பின் வந்த சிறப்புப் பெயர்கள் நீக்கி ஒரு திணைபால் இடத்தைக் குறிக்கும்.

| | | |
|---|---|---|
| வாழ்க | அவன் | - உயர்திணை ஆண்பால் படர்க்கை |
| | அவள் | - உயர்திணை பெண்பால் படர்க்கை |
| | அவர் | - உயர்திணை பலர்பால் படர்க்கை |
| | அது | - அ.ஃறிணை ஒன்றன்பால் படர்க்கை |
| | அவை | - அ.ஃறிணை பலவின்பால் படர்க்கை |
| | நான் | - உயர்திணைத் தன்மை ஒருமை |
| | நாம் | - உயர்திணைத் தன்மை பன்மை |
| | நீ | - உயர்திணை முன்னிலை ஒருமை |
| | நீர் | - உயர்திணை முன்னிலை பன்மை |

திணைபால் இடத்திற்குரிய பொதுவினைகள் பின் வந்த சிறப்பு வினைகளை நீக்கி ஒன்றுக்கு உரியதாகும்.

| | | |
|---|---|---|
| உண்டு - | வந்தான் | - உயர்திணை ஆண்பால் படர்க்கை இறந்தகாலம் |
| | வந்தாள் | - உயர்திணை பெண்பால் படர்க்கை இறந்தகாலம் |
| | வந்தார் | - உயர்திணை பலர்பால் படர்க்கை இறந்தகாலம் |
| | வந்தது | - அ∴றிணை ஒன்றன்பால் படர்க்கை இறந்தகாலம் |
| | வந்தன | - அ∴றிணை பலவின்பால் படர்க்கை இறந்தகாலம் |
| | வந்தேன் | - உயர்திணை ஆண்பால் தன்மை ஒருமை இறந்தகாலம் |
| | வந்தோம் | - உயர்திணை பலர்பால் தன்மை பன்மை இறந்தகாலம் |
| | வந்தாய் | - இருதிணை முன்னிலை ஒருமை இறந்தகாலம் |
| | வந்தீர் | - இருதிணை முன்னிலை பன்மை இறந்தகாலம் |

**பொதுப் பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்**

**மேல்வரும் சிறப்புப் பெயர் வினை தாமே (நன் : 359)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**எச்சங்களின் முடிவு**

எச்சங்கள் 10 வகைப்படும். அவை பெயரெச்சம், வினையெச்சம், உம்மையெச்சம், சொல்லெச்சம், பிரிநிலையெச்சம், என எச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறையெச்சம், இசையெச்சம், குறிப்பெச்சம் என்பனவாகும். இவற்றை விளங்கிக்கொள்வது அவசியம்.

**பெயரெச்சம்**

தெரிநிலை குறிப்புப் பெயரெச்சங்கள் தம் எச்சங்களாகிய செய்பவர்களது பெயர்களைக் கொண்டு முடியும். இது பெயரெச்சம் ஆகும்.

எ.கா- செய்த இராமன்

நல்ல சாத்தன்

**வினையெச்சம்**

தெரிநிலை குறிப்பு வினையெச்சங்கள் தம் எச்சங்களாகிய வினைமுற்றுக்களைக் கொண்டு முடியும். இது வினையெச்சம் ஆகும்.

எ.கா- செய்து வந்தான்

மெல்ல வந்தான்

**உம்மையெச்சம்**

உம்மையெச்சம் என்பது முன்னுள்ள எச்சத்தையும் உணர்த்தும்.

எ.கா- இராமனும் வந்தான்

இராமனும் என்பதிலுள்ள உம்மையெச்சம் முன்னே பரதனும் வந்தான் என்னும் எச்சத்தை உணர்த்துகிறது.

**சொல்லெச்சம்**

சொல்லெச்சம் என்பது தம் எச்சத்தைக் கொண்டு அமையும்.

எ.கா- நல்லவன் என்றான்

இச்சொல்லெச்சம் நல்லவன் என்று சொன்னான் என்னும் தம் எச்சத்தைக் கொண்டுள்ளது.

**பிரிநிலை எச்சம்**

பிரிநிலை எச்சம் பிறர்கொண்டிலர் எனத் தம் எச்சங்களைக் கொண்டு அமையும்.

எ.கா- சாத்தனே கொண்டான்

சாத்தனோ கொண்டான்

இப்பிரிநிலை எச்சங்கள் பிறர்கொண்டிலர் எனத் தம் எச்சங்களைக் கொண்டன. சாத்தனின்று பிரிக்கப்பட்டார். பிறராதனில் இது பிரிநிலை ஆயிற்று.

**எனவெச்சம்**

என என்னும் எச்சம் தம் எச்சங்களாகிய வினைகளைக் கொண்டு அமையும். இது விகுதிப் பொருளைத் தரும் இடைச்சொல்லாகும்.

எ.கா- இசை மெல்லென ஒலித்தது.

தலை விண்ணென வலித்தது

இத் தொடர்களிலுள்ள என என்னும் எச்சங்கள் தம் எச்சங்களாகிய வினைகளைக் கொண்டன. மிகவும் ஒலித்தது, மிகவும் வலித்தது என்பன இவற்றிற்குப் பொருளாகும். எனவே இவ் எனவென்னும் எச்சம், விகுதிப் பொருளைத் தரும் இடைச்சொல்லாகும்.

**ஒழியிசை யெச்சம்**

ஒழியிசையெச்சம் தம் எச்சங்களை உணர்த்தி நிற்கும்.

எ.கா- கூரியதோர் வாள்மன்

படித்தற்கோ வந்தான்

இத்தொடர்களிலுள்ள ஒழியிசையெச்சங்கள் முறையே இப்பொழுது ஒழிந்தது, விளையாட வந்தான் என தம் எச்சங்களை உணர்த்தி நிற்கின்றன.

**எதிர்மறையெச்சம்**

எதிர்மறையெச்சம் தம் எச்சங்களை உணர்த்தி நிற்கும்.

எ.கா- மறப்பினும் படித்துக் கொள்ளலாகும்

யானோ செய்தேன்

இத்தொடர்களிலுள்ள எதிர்மறையெச்சங்கள் முறையே மறக்கலாது, செய்திலேன் எனத் தம் எச்சங்களை உணர்த்தி நின்றன.

**இசையெச்சம்**

ஒரு தொடரில் ஒரு சொல்லோ பல சொற்களோ வருவித்துக் கொள்ளுதலை இசையெச்சம் என்பர். இவ் இசையெச்சமும் தம் எச்சத்தைக் கொண்டு முடியும்.

எ.கா- கற்றதனாலாய பயனென்

என்னும்பொழுது நூலைக் கற்றதனால் பயனென் என நூல் என்னும் சொல்லை வருவித்துக் கொள்கிறது. இவ்வாறே ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் வருவித்துக் கொள்ளப்படுதலும் உண்டு. **குறிப்பெச்சம்**

பெயரியல் நூற்பா 259 இல் ஒன்றொழி பொதுச் சொல் முதலாக இன்ன பிறவும் வரைக்கும் கூறப்பட்டவை குறிப்பெச்சமாகும். இதன் விளக்கத்தை 259 ஆம் நூற்பாவில் அறிந்து கொள்ளலாம்.

பத்து எச்சங்களுள் பெயரெச்சம், வினையெச்சம், என எச்சம் என்னும் மூன்றிற்கும் எச்சச் சொற்கள் தொடர்களில் வெளிப்பட்டு நிற்கும். ஏனைய எச்சங்களில் எச்சச் சொற்கள் வருவித்து உரைக்கப்படும் என்பது அறியத்தக்கது.

**பெயர்வினை உம்மைசொல் பிரிப்புஎன ஒழியிசை**

**எதிர்மறைஇசையெனும் சொல்ஒழிவு ஒன்பதும்**

**குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும் (நன் : 360)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

## தொகை நிலைத் தொடர்மொழிகள்

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்து உருவாவது தொடர் எனப்படும்.

சாத்தன் மைந்தன்

இத்தொடர் சாத்தனுக்கு மைந்தன் என விரிவு பெறும். இங்கு ‘கு’ என்னும் நான்காம் வேற்றுமை தொக்கி வந்துள்ளது.

பவளவாய்

என்பது பவளம் போன்ற வாய் எனப் பொருள்படும். ‘போன்ற’ என்ற உவமை உருபு மறைந்து வந்துள்ளது.

ஒரு தொடரின் இடையில் ஏதேனும் ஒரு சொற் கூறு மறைந்து வருவது தொகை நிலைத் தொடர் எனப்படும். அவ்வாறன்றி வெளிப்படையாக அமையும் தொடர் - தொகா நிலைத் தொடர் எனப்படும்.

(பெயர்ச் சொல்லோடு பெயர்ச் சொல்லும், வினைச் சொல்லும்வேற்றுமை முதலான அறுவகைப் பொருட்புணர்ச்சியில் அவற்றினுடைய உருபுகள் நடுவில் தொக்கி நிற்க இரண்டு முதலாகப் பல சொற்கள் தொடர்ந்து ஒரு சொல்போல் நடப்பவை தொகைநிலைத் தொடர் எனப்படும்.)

**பெயரோடு பெயரும் வினையும் வேற்றுமை**
**முதலிய பொருளின் அவற்றின் உருவிடை**
**ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு**
**மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்** **(நன் : 361)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

**தொகை நிலைத்தொடர்கள் (6)**

தொடர்களில் உருபுகள் தொக்கி வருவது தொகை அல்லது தொகைநிலைத் தொடர் எனப்படும். இது வேற்றுமைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என ஆறு வகைப்படும். இதனை,

**வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை**
**அன்மொழி எனஅத் தொகை ஆறு ஆகும்** **(நன் :362)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம். இவற்றை விளங்கிக் கொள்வது அவசியம்.

**வேற்றுமைத் தொகை**

வேற்றுமைத் தொடர்களில் வேற்றுமை உருபு மறைந்து வருவது அதாவது தொக்கி வருவது வேற்றுமைத் தொகை ஆகும்.

எ.கா- நூல் படித்தான் (ஐ) இரண்டாம் வேற்றுமைத் தொகை

தலை வணங்கினான் (ஆல்) மூன்றாம் வேற்றுமைத் தொகை

சாத்தன் மைந்தன் (கு) நான்காம் வேற்றுமைத் தொகை

ஊர் நீங்கினான் (இன்) ஐந்தாம் வேற்றுமைத்தொகை

சாத்தன் கை (அது) ஆறாம் வேற்றுமைத் தொகை

குன்றக் குகை (கண்) ஏழாம் வேற்றுமைத் தொகை

இவ் எடுத்துக்காட்டுகளில் எழுவாய் வேற்றுமையும் விளி வேற்றுமையும் தவிர பிற ஆறு வேற்றுமைகளின் உருபுகள் தொக்கி அமைந்துள்ளதைக் காணலாம். இவ்வாறு வேற்றுமைத் தொடர்களில் வேற்றுமை உருபு மறைந்து வருவது அதாவது தொக்கி வருவது வேற்றுமைத் தொகை ஆகும்.

எ.கா- கைக் களிறு – கையை உடைய களிறு

பொற்குடம் - பொன்னாற் செய்யப்பட்ட குடம்

கடந்தான் நிலம் - கடந்தான் நிலத்தை

இருந்தான் குன்றத்து - இருந்தான் குன்றத்துக் கண்

இவ்வாறு இறுதியில் வேற்றுமை உருபுகள் தொக்கி நிற்றலும் உண்டு. இதனையும் வேற்றுமைத் தொகையாகக் கருத வேண்டும்.

எ.கா- கந்தனை அடித்தான்

கந்தனோடு வந்தான்

இத்தொடர்களில் ஐ உருபும் ஒடு உருபும் விரிந்து நின்று செயப்படுபொருளையும் உடன்நிகழ்ச்சிப் பொருளையும் தருகின்றன.

எ.கா- முருகன் வந்தான்

முருகன் அடித்தான்

என இத்தொடர்கள் அமையுமாயின் உருபுகள் தொக்கி நிற்பதாகப் பொருள் கொண்டால் அவை மேற்குறித்த பொருளைத் தராது. இத்தகைய இடங்களில் உருபுகள் தொக்கி நிற்பதாகக் கருதக் கூடாது. ஏனெனில் வேற்றுமை உருபுகள் இடையிலே தொக்கி நிற்கும் என கூறினாலும் அவை விரிந்து நிற்குமிடத்து எப்பொருள் படுமோ அப்பொருள் படுமிடத்தில் மட்டுமே தொக்கி நிற்கும். அப்பொருள் படாத இடத்தில் தொக்கி நிற்காது.

எனவே எழுவாய் வேற்றுமைக்கும் விளி வேற்றுமைக்கும் இடையே நின்ற இரண்டு முதல் ஆறு வேற்றுமை உருபுகளும் தொக்கி நிற்கும் தொடர்கள் வேற்றுமைத் தொடர்கள் எனப்படும்.

**வினைத் தொகை**

மூன்று காலத்தையும் காட்டும். காலம் காட்டும் வினையுருபாகிய இடைநிலையும் விகுதியும் முதலியன மறைந்து நின்ற பெயரெச்சங்கள் வினைத்தொகை எனப்படும்.

எ.கா- பாய்புலி - பாய்ந்த புலி, பாய்கின்ற புலி, பாயும் புலி

வீழ்புனல் - வீழ்ந்த புனல், வீழ்கின்ற புனல், வீழும் புனல்

இவை இரண்டும் பெயர் எச்சத் தொடர்கள் ஆகும். இவற்றில் மூன்று காலம் மறைந்துள்ளது.

| | | |
|---|---|---|
| பாய்ந்த புலி - | - வீழ்ந்த புனல் | - இறந்தகாலம் |
| பாய்கின்ற புலி | - வீழ்கின்ற புனல் | - நிகழ்காலம் |
| பாயும் புலி | - வீழும் புனல் | - எதிர்காலம் |

என இரண்டு உதாரணங்களையும் விரித்து எழுதும்பொழுது மூன்று காலங்களும் மறைந்திருப்பதை உணரலாம். இவ்வாறு ஒரு தொடரில் காலம் மறைந்து வருவதை வினைத்தொகை என்பர்.

பெயரெச்ச வினையின் உருபாகிய விகுதியும் இடைநிலையும் தொக்கி நிற்க, பகுதி (பாய், வீழ்) மட்டும் நின்று முக்காலத்திற்கும் பொதுவாகி பெயரெச்சப் பொருளை உணர்த்தி பெயரைக் கொண்டு முடிந்துள்ளன.

**காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை (நன் :364)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

**பண்புத்தொகை**

பண்பை விளக்கும் உருபு மறைந்து தொக்கி வருவது பண்புத்தொகை ஆகும். வண்ணம், வடிவம் அளவு, சுவை, எனப் பண்பு நான்கு வகைப்படும்.

எ.கா- செம்மொழி

வெண்பொங்கல்

இவை செம்மை ஆகிய மொழி, வெண்மை ஆகிய பொங்கல் என விரியும் செம்மை, வெண்மை என்பன மொழி, பொங்கல் ஆகியவற்றின் பண்புகள் ஆகும். பண்போடு பண்பினை இணைக்கும் 'ஆகிய' என்னும் உருபு மறைந்துள்ளது. இவ்வாறு பண்பை விளக்கும் உருபு மறைந்து தொக்கி வருவது பண்புத்தொகை ஆகும். இது வண்ணம், வடிவம் அளவு, சுவை, எனப் பண்பு நான்கு வகைப்படும்.

எ.கா- செந்தாமரை - செம்மை ஆகிய தாமரை - வண்ணப் பண்புத்தொகை

வட்டப் பலகை - வட்டம் ஆகிய பலகை - வடிவப் பண்புத்தொகை

முத்தமிழ் - மூன்று ஆகிய தமிழ் - அளவுப் பண்புத்தொகை

இன்சொல் - இனிமை ஆகிய சொல் - சுவைப் பண்புத்தொகை

**இருபெயரொட்டுப் பண்புத் தொகை**

சிறப்புப் பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் அமைந்த ஆகிய என்னும் பண்புருபு தொக்கி வருதல் இருபெயரொட்டுப் பண்புத் தொகை எனப்படும்.

எ.கா- அரிமா, நரிமா, சாரைப்பாம்பு

இவை அரியாகிய மா, நரியாகிய மா, சாரையாகிய பாம்பு என விரியும். அரி, நரி, சாரை என்பன பண்புகள் அல்ல. அவை மா, பாம்பு என்பவற்றின் சிறப்புப் பெயர்கள் ஆகும்.

எனவே பண்போடு பண்பிற்குள்ள ஒற்றுமையை விளக்குவதற்கு ‘ஆகிய’ என்னும் பண்புருபு மறைந்து நிற்பனவும் பண்புருபு மறைந்து நிற்க ஒரு பொருளுக்கு சிறப்புப் பெயரும் பொதுப்பெயருமான இரு பெயர்களும் வருவனவும் பண்புத்தொகையாகும் என்பதை அறியலாம்.

**பண்பை விளக்கும் மொழிதொக் கெனவும்**
**ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை** **(நன் : 365)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

**உவமைத் தொகை**

உவமேயத்திற்கும் உவமானத்திற்கும் இடையே உவமை உருபு மறைந்து (தொக்கி) வருவது உவமைத் தொகை எனப்படும்.

எ.கா- புலி வீரன்
வேல் விழி

இவற்றை புலி போன்ற வீரன், வேல் போன்ற விழி என விரித்துப் பொருள் கொள்ள வேண்டும். புலி, வேல் என்பன உவமானம். வீரன், விழி என்பன உவமேயம் ஆகும். இவ்வாறு உவமேயத்திற்கும் உவமானத்திற்கும் இடையே உவமை உருபு மறைந்து வருவது உவமைத் தொகை ஆகும். இரண்டிலும் போல (போன்ற) என்னும் உவமை உருபு மறைந்து வந்துள்ளது.

உவமை உருபுகள் வினை (தொழில்), பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்) ஆகிய பொருண்மைகளில் அமையும்.

எ.கா- புலி கொற்றன் - வினை உவமைத்தொகை

கற்பக வள்ளல் - பயனுவமைத் தொகை

துடி இடை - மெய்யுவமைத் தொகை

கார் கூந்தல் - உரு உவமைத் தொகை

இவ்வாறு உவமை உருபு மறைந்து வருவது உவமைத் தொகை ஆகும்.

**உவம உருபு இலது உவமத் தொகையே (நன் :366)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

**உவமை உருபுகள்**

போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர என்னும் செயவென் எச்ச மொழிகள் பத்தும்

அன்ன, இன்ன என்னும் குறிப்புப் பெயரெச்சங்கள் இரண்டும் பிறவும் உவமை உருபுகளாகும்.

போல, புரைய முதலிய வினையடிகளும் அவ்வடியாற் பிறத்தற்குரிய மற்றை வினையெச்சங்களும் வினைமுற்றுக்களும் பெயரெச்சங்களும்

பொறாவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிண, மலைய முதலியனவும் உவம உருபுகளாகக் கொள்ளத் தக்கனவாகும்.

**போலப் புரைய ஒப்ப உறழ**

**மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப**

**நேர நிகர அன்ன இன்ன**

**என்பனவும் பிறவும் உவமத்து உருபே (நன் : 367)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

**உம்மைத் தொகை**

எண்ணிச் சொல்லும் பெயர்களில் மட்டுமின்றி எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவுகள் தொடர்பான தொடர்களில் ‘உம்’ மறைந்து வரும். அவ்வாறு ‘உம்’ மறைந்து (தொக்கி) வருவது உம்மைத் தொகை ஆகும்.

எ.கா- கபில பரணர்

நீ நான்

இவை கபிலரும் பரணரும், நீயும் நானும் என விரியும். இரண்டிற்கும் இடையே உம் என்னும் இடைச்சொல் மறைந்து வந்துள்ளது.இவ்வாறு ‘உம்’ மறைந்து வருவது உம்மைத் தொகை ஆகும்.

எ.கா- பாரி பேகன் - பாரியும் பேகனும் - எண்ணல் உம்மைத் தொகை

கழஞ்சே கால் - கழஞ்சும் காலும் - எடுத்தல் (நிறுத்தல்) உம்மைத் தொகை

படியே மரக்கால் - படியும் மரக்காலும் - முகத்தல் உம்மைத் தொகை

அடி முழம் - அடியும் முழமும் - நீட்டல் உம்மைத் தொகை

எனவே எண்ணிச் சொல்கின்ற பெயர்களில் மட்டுமின்றி எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய நான்கு அளவுகள் தொடர்பான தொடர்களில் உம் மறைந்து வரும்.

**எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்**
**எனும்நான்கு அளவையுள் உம்இலது அத்தொகை (நன் : 368)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

**அன்மொழித் தொகை**

தொகைச் சொற்களுக்கென வரையறுக்கப்பட்ட உருபுகள் தவிர அவை அல்லாத பிறவும் மறைந்து வருதல் அன்மொழித் தொகை (அல் + மொழி) எனப்படும்.

எ.கா- பூங்குழல் வந்தாள்

பூங்குழல் என்பது பூவை அணிந்த கூந்தல் என இரண்டாம் வேற்றுமைத்தொகையைச் சுட்டும். இது வந்தாள் என்னும் பயனிலையை நோக்க, பூவை அணிந்த கூந்தலை உடைய பெண்ணைக் குறிக்கும். இதில் இரண்டாம் வேற்றுமை உருபும் பெண் என்பதை உணர்ந்து நிற்கும் ஈற்றுமொழியும் மறைந்து நிற்பதைக் காணலாம்.

பூங்குழல் வந்தாள்

இது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆகும்.

பொற்றொடி

என்பது பொன்னாலாகிய தொடியை உடைய பெண் என விரிந்த மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆனது.

அணி இலக்கணம்

என்பது அணிக்கு இலக்கணம் கூறிய நூல்கள் என விரிந்து நான்காம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையானது.

மலையருவி ஏந்தினாள்

என்பது மலையினின்று வீழும் நீரை ஏந்தினாள் என விரிந்து ஐந்தாம் வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையானது.

சேரன்குடி

என்பது சேரனது குடிமக்கள் குடியிருக்கும் இடம் என விரிந்து ஆறாம் வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையானது.

கீழ் வயிற்றுக் கழலை

என்பது கீழ்வயிற்றின் கண் கழலை உடையவன் என விரிந்து ஏழாம் வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையானது.

தாழ்குழல்

என்பது தாழ்ந்த குழலினை உடைய பெண் என விரிந்து காலம் காட்டும் இடைநிலையும் விகுதியும் மறைந்து அவை அல்லாத பிறவும் தொக்கி வந்துள்ளதால் வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையானது.

ஆண்ட கை

என்பது ஆண்மை ஆகிய தன்மை உடையவன் என விரிந்து ஆகிய என்னும் பண்புருபு மட்டுமின்றி அவை அல்லாத பிறவும் தொக்கி வந்துள்ளதால் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழி தொகையானது.

துடியிடை

என்பது துடிபோன்ற இடையை உடைய பெண் என விரிந்து போலும் என்னும் உவமை உருபு மட்டுமின்றி அவை அல்லாத பிறவும் தொக்கி நிற்பதால் உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழி தொகையானது.

உயிர்மெய்

என்பது உயிரும் மெய்யும் கூடிப் பிறந்த எழுத்து என விரிந்து உம் என்னும் இடைச்சொல் மட்டுமின்றி அவை அல்லாத பிறவும் தொக்கி நிற்பதால் உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழி தொகையானது.

எனவே வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, என்னும் 5 தொகைகளும் தொக்கத் தொகையாற்றலால் அவற்றின் புறத்தே தோன்றும் மொழி அன்மொழித் தொகையாகும்.

**ஐந்தொகை மொழி மேல் பிற தொகல் அன்மொழி** (நன் :369)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

**தொகை நிலைத் தொடர் மொழிகளில் பொருள் சிறக்கும் இடங்கள்**

தொகை நிலைத் தொடர்களில் முன்நின்ற மொழிகள் தம் இனம் இல்லாமலே பொருட் சிறப்பு பெறுகின்றன. இத்தொகைநிலைத் தொடர்கள் முன்மொழிகளால் சிறப்புறுகின்றன. இத்தன்மையை விளங்கிக் கொள்வது அவசியம்.

வேற்றுமைத் தொகை - குடம் வனைந்தான்

வினைத் தொகை - விரிபூ

பண்புத் தொகை - செந்தாமரை

உவமைத் தொகை - வேற்கண்

இவை தொகைநிலைத் தொடர்களாகும். இவற்றிலுள்ள வனைந்தான், பூ, தாமரை, கண் என்பன முன்நின்ற குடம், விரி, செம்மை, வேல் என்பனவற்றால் சிறப்புறுகின்றன. இத்தொகை நிலைத் தொடர்களில் முன்நின்ற மொழிகள் தம் இனம் இல்லாமலே பொருட்சிறப்பு அடைகின்றன. எனவே இத்தொகைநிலைத் தொடர்கள் முன்மொழிகளால் சிறப்புறுவதைக் காணலாம்.

வேற்றுமைத் தொகை - நிலம் உழுதான்

வினைத் தொகை - சுடுதீ

பண்புத் தொகை - செஞ்ஞாயிறு

உவமைத் தொகை - புலி பாய்ந்தான்

இவை தொகை நிலைத் தொடர்களாகும். இவற்றிலுள்ள உழுதான், தீ, ஞாயிறு, பாய்ந்தான் என்னும் பின் மொழிகளைக் கூறிய மாத்திரத்தில் நிலம், சூடு, செம்மை, புலி ஆகிய முன்மொழிகள் தாமே வந்து இயைந்து பொருள் தருகின்றன. இவற்றின் முன் மொழிகள் தனித்து நிற்கும் பொழுது பொருட் சிறப்பு அடைவதில்லை. எனவே இவை பின் மொழிகளால் பொருட்சிறப்பைப் பெறுவதைக் காணலாம்.

உம்மைத் தொகை - இரவு பகல்
சேர சோழ பாண்டியன்

அன்மொழித் தொகை - பொற்றொடி / தாழ்குழல் / வெள்ளாடை } வந்தாள்

இவ் அன்மொழி தொகைநிலைத் தொடரின் கருத்துப் பொருள் இவற்றின் தொகைச் சொற்களில் இல்லை. தொகைச் சொற்களின் புறத்தே அமைந்த மொழிகளில் உள்ளன.

இவ்வாறு தொகைநிலைத் தொடர்களின் பொருட்சிறப்பு முன்நின்ற மொழிகள், பின் நின்ற மொழிகள், அனைத்து மொழிகள், புற மொழிகள் என நான்கு நிலைகளில் அமையும்.

உம்மைத் தொகையில் அனைத்து மொழிகளிலும் அன்மொழித் தொகையில் பிற மொழிகளிலும் ஏனைய நான்கில் இடத்திற்கு ஏற்றவாறு முன்மொழிகளிலும் பின்மொழிகளிலும் பொருட்சிறப்பு அமையும்.

எனவே முன்மொழி, பின்மொழி, அனைத்து மொழி, அனைத்து மொழிக்கும் புறத்தில் வரும் மொழி ஆகிய இந்நான்கு இடங்களுள் ஒன்றில் தொகை நிலைத் தொடர் பொருள் சிறந்து நிற்கும்.

**முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி**
**என்னும் நான்கு இடத்தும் சிறக்கும் தொகைப் பொருள்** (நன் : 370)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

**இடத்தொகை பெயர்த் தொகைகளுக்கு வேற்றுமை அறியும் முறை**

நிலைமொழி வருமொழிகளின் இடையே வல்லொற்று வந்தால் இடம்பொருள்கண் தொக்கி நிற்கும் ஏழாம் வேற்றுமைத் தொகை ஆகும். மெல்லொற்று வந்தால் பெயரின்கண் தொக்கிய இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகும்.

எ.கா- வடுகக் கண்ணன் - வடுக நாட்டில் பிறந்த கண்ணன்

துளுவச் சாத்தன் - துளுவ நாட்டில் பிறந்த சாத்தன்

இவ்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்களில் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே வல்லொற்று (க்) இடம் பெற்றுள்ளது. இவ்வாறு வல்லொற்றுத் தோன்ற அமைவன ஏழாம் வேற்றுமையின் இடம் பொருளைச் சுட்டும். எனவே இவை ஏழாம் வேற்றுமைத் தொகையாகும்.

எ.கா- வடுகங் கண்ணன் - வடுகனாகிய கண்ணன்

கன்னடங் கொற்றன் - கன்னடனாகிய கொற்றன்

இப்பண்புத் தொகைகள் மெல்லொற்று (ங்) பெற்று வந்துள்ளன. இவை பொதுப் பெயரையும் சிறப்புப் பெயரையும் ஒருங்கே கொண்டு பண்பு உருபு தொக்கி அமைந்துள்ளன. எனவே இவை இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.

**வல்லொற்று வரினே இடத்தொகை ஆகும்**
**மெல்லொற்று வரினே பெயர்த்தொகை ஆகும்** (நன் : 371)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**உம்மைத் தொகைக்குப் புறனடை**

உயர்திணை ஒருமையில் வரும் உம்மைத் தொகைகள் பலர்பால் விகுதிகளை ஈற்றிலுடையனவாக அமையும்.

எ.கா- கபில பரணர்

சேர சோழ பாண்டியர்

தேவன் தேவிகள்

இவை உயர்திணைப் பெயர்கள் ஆகும். இவை உம்மைத்தொகை உயர்திணை ஒருமையில் 'ர' கர வொற்றும் 'கள்' என்னும் விகுதியும் பெற்று வந்துள்ளன.

எ.கா- இராப்பகல் - இராப்பகல்கள்

தந்தை தாய் - தந்தை தாயார்

சாத்தன் சாத்தியர் - சாத்தன் சாத்திகள்

இவ் அ∴றிணைப் பெயரும் இருதிணைப் பொதுப்பெயர்களும் ஒருமை ஈறாகளாவும் பன்மை ஈறுகளாகவும் அமைந்துள்ளன. இதனையே 'பலர் ஈறே' என நூற்பா சுட்டுகிறது.

**உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே (நன் : 372)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**தொகைநிலைத் தொடர்மொழிகள் பல பொருள்படுதல்**

வேற்றுமை உருபு முதலியன தொக்கி நிற்குமிடங்களில் பொருளால் மயங்கி நிற்கும் இயல்புடைய தொடர்மொழிகள் இரண்டாம், ஏழாம் வேற்றுமை ஈறான பொருள்களில் மயங்கி வரும்.

தெய்வ வணக்கம் - தெய்வத்தை வணங்கும் வணக்கம்

தெய்வத்துக்கு வணக்கம்

என இரு பொருள்பட மயங்கும்.

தற்சேர்ந்தார் - தன்னைச் சேர்ந்தார்

தன்னொடு சேர்ந்தார்

தன் கண் சேர்ந்தார்

என மூன்று பொருள்பட மயங்கும்.

சொல்லின் இலக்கணம் - சொல்லுக்கு இலக்கணம்

சொல்லினது இலக்கணம்

சொல்லின் கண் உள்ள இலக்கணம்

சொல்லிலக்கணம் கூறிய நூல்

என நான்கு பொருள்பட மயங்கும்.

பொன்மணி - பொன்னை உடைய மணி
பொன்னாலாகிய மணி
பொன்னின் கண் உள்ள மணி
பொன்னும் மணியும்

என ஐந்து பொருள்பட மயங்கும்.

மரவேலி - மரத்தை காக்கும் வேலி
மரத்தாலாகிய வேலி
மரத்திற்கு வேலி
மரத்தினது வேலி
மரத்தின் புறத்து வேலி
மரமாகிய வேலி

என ஆறு பொருள்பட மயங்கும்.

சொற் பொருள் - சொல்லால் அறியப்படும் பொருள்
சொல்லுக்குப் பொருள்
சொல்லினது பொருள்
சொல்லின் கண் பொருள்
சொல்லாகிய பொருள்
சொல்லும் பொருளும்
சொல்லானது பொருள்

என ஏழு பொருள்பட மயங்கும். மேற் குறிப்பிட்ட தொடர்களில் எளிதில் உணரும் பொருளைத் தவிர வேறு பல பொருள்களையும் வலிந்து பொருள் கொண்டுள்ளதைக் காணலாம். இவ்வாறு வலிந்து பொருள் கொள்ளும்பொழுது பொருளின் எல்லை வரையறை இல்லாமல் ஏழுக்கு மேலும் பலவாகப் பெருகிவிடும்.

**தொக்குழி மயங்குந இரண்டு முதல்ஏழ்**
**எல்லைப் பொருளின் மயங்கும் என்ப** (நன் : 373)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

## தொகா நிலைத் தொடர் மொழிகள்

நிலைமொழி, வருமொழி இரண்டிற்கும் இடையே வேற்றுமை உருபுகள் முதலியவை மறையாமல் வெளிப்பட்டு விளங்கும் தொடர்கள் தொகாநிலைத் தொடர்களாகும். தொக்கி நிற்கும் ஆற்றலின்றி சொற்கள் ஒன்றொடன்று தொடர்ந்து நிற்பது தொகாநிலைத் தொடர் ஆகும். இது 9 வகையாக அமையும். அவற்றை அறிவது அவசியம்.

1. வினைமுற்றுத் தொடர் - படித்தான் எழிலன் - தெரிநிலை
   நல்லன் குமரன் - குறிப்பு
2. பெயர் எச்சத் தொடர் - படித்த எழிலன் - தெரிநிலை
   நல்ல நண்பன் - குமரன்
3. வினை எச்சத்தொடர் - படித்து முடித்தான் - தெரிநிலை
   விருந்தின்றி உண்டான் - குறிப்பு
4. எழுவாய்த் தொடர் - எழிலன் வந்தான்
5. விளித்தொடர் - முருகா ! வா!
6. வேற்றுமைத் தொடர் - நூலைப் படித்தான் - (இரண்டாம் வேற்றுமை)
   வாளால் வெட்டினாள் - (மூன்றாம் வேற்றுமை)
7. இடைச்சொல் தொடர் - மற்று ஒன்று
8. உரிச்சொல் தொடர் - நனி சிறந்தது
9. அடுக்குத் தொடர் - பாடு பாடு

எனவே வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், எழுவாய், விளி என்னும் ஐவகைப் பொருள் பற்றிப் புணரும் புணர்ச்சியும் இரண்டாம் வேற்றுமை முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும் விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணர்ந்து வரும் புணர்ச்சியும் தொகா நிலைத் தொடர்களாகும்.

**முற்று ஈரெச்சம் எழுவாய் விளிப் பொருள்**
**ஆறுருபு இடை உரி அடுக்கிவை தொகாநிலை** (நன் : 374)

என்னும் நூற்பா தொகா நிலைத் தொடரின் வகைகளை விளக்குகிறது.

## வழு, வழாநிலை, வழு அமைதி

சொல்லதிகாரத்தின் நடுவில் அமைந்த இயல் பொதுவியல் என்பதை அறிவோம். அவ்வியல் நால்வகைச் சொற்களுக்கும் பொதுவான பொருள் நிலைகள் பலவற்றை விளக்குவது ஆகும். அவற்றில் ஒரு பகுதி வழு என்பது பற்றிய இலக்கணமாகும். தொகை நிலை, தொகாநிலை, பொருள் கோள், ஒன்றொழி பொதுச் சொல் முதலானவற்றுக்கு ஒப்பாக வழு தொடர்பான இலக்கணங்களும் தொடரியல் நோக்குடையவை. ஒரு தொடரில் குற்றம் இல்லாத சொற்பொருள் அமைப்பை உறுதிப்படுத்துவதாக இப்பகுதி விளங்குகிறது.

**வழுநிலை – வழாநிலை**

ஒரு தொடர் முறையாக இலக்கண நெறிப்படி அமைவதும் அதாவது முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் மாறுபாடு இல்லாமல் அமைவதும் வழா நிலை ஆகும்.

எ.கா- முருகன் வந்தான்

முருகன் என் தம்பி

இத்தொடர்கள் இலக்கண முறையில் முறையாக இலக்கண நெறிப்படி அமைந்துள்ளன. அ.்.தாவது முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் மாறுபாடு இல்லாமல் தொடர்கின்றன. எனவே இவை வழா நிலை எனப்படும்.

எ.கா- முருகன் வந்தது

முருகன் என் தங்கை

இத்தொடர்கள் எழுவாய்க்கு ஏற்ற பயனிலையின்றித் திணையும் பாலும் வழுவி இலக்கண நெறியின்றி அமைந்துள்ளன. இது வழு ஆகும்.

தருமர் அறத்தைச் செய்வார்

இரண்டு கண்ணும் சிவந்தது

இத்தொடர்கள் இலக்கண நெறியின்றி அமைந்துள்ளன. அதாவது தருமர் என்ற பெயர் பலர்பால் முடிவிவைப் பெற்றுள்ளது. இரண்டு கண்ணும் சிவந்தது எனப் பன்மைக்கு ஒருமை முடிவு வந்துள்ளது என்றாலும் இவ்வாறு அமைதல் அதிக குற்றம் இல்லை எனப் பெரியோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரு வழுவை வழுவின்றி அமைத்திளயாக ஏற்றுக்கொள்வது வழு அமைதி ஆகும்.

**வழு – வகைகள்**

திணை, பால், இடம், காலம், விடை, வினா, மரபு ஆகிய ஏழும் முறை தவறி வரும்பொழுது அவை வழுவாக அமையும். இதனடிப்படையில் வழு ஏழு வகைப்படும். அவற்றை அறிவது அவசியம்.

எ.கா- அப்பா வந்தது - திணை வழு (உயர்திணைக்கு அஃறிணை முடிவு வந்தது).

சிறுவன் சிரித்தாள் - பால் வழு (ஆண்பாலுக்கு பெண்பால் முடிவு வந்தது).

நான் சொன்னான் - இடவழு (தன்மைக்குப் படர்க்கை முடிவு வந்தது)

நாளை வந்தேன் - கால வழு (எதிர்காலத்துக்கு இறந்தகால முடிவு வந்தது).

கறப்பது பசுவா காளையா? - இது வினா வழு (கறப்பது என்றாலே பசுவாகவே இருக்க முடியும் வினாவே பிழை).

சென்னைக்கு வழி கேட்டால், எண்ணெய் எழுபது ரூபாய் என்பது - விடை வழு

(கேட்ட வினாவுக்குப் பொருந்தாத விடையைச் சொல்வது).

ஆடு மேய்ப்பவனைப் பாகன் என்பது – மரபு வழு (ஆடு மேய்ப்பவனை இடையன் என்பது மரபு. அது மாறி உள்ளது).

எனவே இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் வினாவும் விடையும் பல்வகை மரபும் ஆகிய ஏழும் மயங்கித் தத்தம் முறை மாறி வந்தால் வழுவாகும்.

**திணையே பாலிடம் பொழுது வினாவிடை**
**மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே** (நன் : 375)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**வினா திணை பால்களில் வழுவாமை**

ஒன்றினை கண்டதும் திணையில் ஐயம் எழும்பொழுது இரண்டிற்கும் பொதுவான சொல்லால் வினவுதல் வேண்டும். திணை அல்லது பால் வேறுபாடு துணிய முடியாத இடங்களில் பொதுச் சொல்லால் குறிப்பிட வேண்டும்.

அங்கே தோன்றும் உரு கல்லா? மனிதனா? (திணை)

ஆணா பெண்ணா அங்கே தோன்றுபவர்? (பால்) - உயர்திணை

ஒன்றா பலவா இவ்வயல் புகுந்த மாடு? (பால்) - அஃறிணை

இத்தொடர்களை இரு திணைக்கும் பொதுவாகிய உரு என்னும் சொல்லால் வினவுதல் வேண்டும்.

மரக்கட்டையோ மகனோ?

இதில் தோன்றும் உரு அடிப்படையில் இரு திணைக்கும் பொதுவான சொல்லால் வினவுதல் அவசியம். இவ்வாறு கூறாமல் மரக்கட்டையோ மகனோ தோன்றுகிறது என்றோ மரக்கட்டையோ மகனோ தோன்றுகிறான் என்றோ சிறப்புச் சொல்லால் வினவினால் அது திணை வழுவும் வினா வழுவுமாக அமையும்.

ஆணோ பெண்ணோ என பாலில் ஐயம் தோன்றும்பொழுது இரு பாலுக்கும் பொதுவான சொல்லால் வினவுதல் வேண்டும். அதாவது ஆணோ பெண்ணோ அங்கே தோன்றுகின்றவர் என்னும் பொதுச் சொல்லால் வினவுதல் வேண்டும். அல்லாமல் தோன்றுகின்றவன் என்றோ, தோன்றுகின்றவள் என்றோ வினவினால் அது பால் வழுவும் வினா வழுவுமாக அமையும்.

ஒன்றா பலவா என அஃறிணையில் ஐயம் தோன்றும்பொழுது இருபாலுக்கும் பொதுவான சொல்லால் வினவுதல் வேண்டும். அதாவது ஒன்றா பலவா பெற்றம்? என

இருபாலுக்கும் பொதுவான பெற்றம் என்னும் பொதுச் சொல்லால் வினவுதல் வேண்டும். மாறாக ஒன்றோ பலவோ புகுந்தது என்றோ ஒன்றோ பலவோ புகுந்தன என்றோ சிறப்புச் சொல்லால் வினவினால் அது பால் வழூவும் வினா வழுவுமாக அமையும்.

**விடை திணை பால்களில் வழுவாமை**

மேற்குறிப்பிட்ட வினாக்களுக்கு விடை வழுவாமல் அமைய வேண்டுமாயின் திணை ஐயத்தின்கண் உண்மையாகத் துணியப்பட்ட பொருளின் மேல் அல்லாத தன்மை வைத்து விடை கூறுதல் வேண்டும்.

எ.கா- மகனன்று மரக்கட்டை

இதில் மரக்கட்டை அல்ல மகன் என திணை ஐயத்தின்கண் உண்மையாகத் துணியப்பட்ட பொருளின் மேல் அல்லாத தன்மை வைத்து விடை கூறுதல் வேண்டும்.

அவ்வாறே உயர்திணையில் பால் ஐயத்தினால் எழும் வினாவிற்கு விடையாக பெண்மகளல்லள் ஆண்மகன், ஆண்மகனல்லன் பெண்மகள் என விடை அமைதல் வேண்டும்.

அ.ஃ.றிணைப்பால் ஐயத்தினால் எழும் வினாவிற்கு விடையாக பலவன்று ஒன்று என்றும் ஒன்றல்ல பல என்றும் விடை பகர்தல் வேண்டும். இவ்விடையே வழுவின்றி அமையும்

எனவே திணைப் பொருளிலும் பால் பொருளிலும் ஐயம் தோன்றியவிடத்து அதனை அகத்திணைகளுக்கும் பால்களுக்கும் பொதுச் சொல்லாலும் உண்மையாகத் துணிந்த பொருளின்மேல் அல்லாத தன்மையை வைத்தும் விளங்கக் கூறவேண்டும்.

**ஐயம் திணைபால் அவ்வப் பொதுவினும்**
**மேயதிரி பொருள்மேல் அண்மையும் விளம்புவ (நன் : 376)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**திணைவழு அமைதி**

உயர்திணை எழுவாய்க்குரிய பயனிலையோடு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடியாகப் பிறக்கும் அ.ஃ.றிணை எழுவாயும் உயர்திணை எழுவாயோடு சேர்த்து முடிக்கப்படும். இது திணை வழுவமைதி ஆகும்.

எ.கா- கண்ணப்பன் அன்பு பெரியன்

இலக்குவன் மனம் தூயன்

இங்கு 'அன்' என்னும் அ∴றிணை எழுவாய் கண்ணப்பன் என்னும் உயர்திணை எழுவாயினது பயனிலையாகிய 'பெரியன்' என்னும் உயர்திணைக் குறிப்பு வினைமுற்று கொண்டு முடிந்தது. மனம் என்பதும் அவ்வாறே முடிந்தது.

| | | |
|---|---|---|
| எ.கா - | நம்பி பொன் பெரியன் | - பொருள் |
| | நம்பி நாடு பெரியன் | - இடம் |
| | நம்பி வாழ்நாள் பெரியன் | - காலம் |
| | நம்பி மூக்குக் கூரியன் | - சினை |
| | நம்பி குடிமை நல்லன் | - குணம் |
| | நம்பி நடை கடியன் | - தொழில் |

எனவே உயர்திணை எழுவாயைச் சார்ந்து வரும் அ∴றிணைப் பொருளாதி ஆறும் அவ் உயர் திணையோடு சார்த்திக் கூறின் உயர்திணை முடிவைப்பெறும்.

**உயர்திணை தொடர்ந்த பொருள் முதலாறும்**
**அதனோடு சார்த்தின் அத்திணை முடிபின்** (நன் : 377)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**திணை பால் மரபு வழுவமைதி**

ஒரு தொடரில் பலபொருள் கலந்து வரும்பொழுது திணை, பால், மரபு ஆகியன வழுவமைதி பெறும். அவற்றை அறிவது அவசியம்.

**திணை**

முருகனும் மயிலும் வந்தனர்

இத்தொடரில் உயர்திணையும் அ∴றிணையும் கலந்து சிறப்பினால் வந்தனர் என்ற உயர்திணை முடிவைப் பெற்றுள்ளது.

பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு

இத்தொடரில் அ∴றிணையைக் (பசு) காட்டிலும் உயர்திணைப் பெயர்கள் மிகுதியாக வந்துள்ளதால் 'இவர்' என உயர்திணை முடிவைப் பெற்று வந்துள்ளது.

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா

என்பதில் இருதிணையும் கலந்து இழிவினால் விடா என அஃறிணை முடிவு பெற்றுள்ளது. இவ்வாறு உயர்திணையும் அஃறிணையும் மயங்கி நிற்குமிடத்து வழுவின்றி ஏற்றுக் கொள்ளப்படுவது திணை வழுவமைதி ஆகும்.

**பால்**

'நானும் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்'

என்பதில் ஆண்பாலும் ஒன்றன்பாலும் விரவிச் சிறப்பால் ஆண்பால் முடிவு அமைந்துள்ளது. இவ்வாறு பால் வழுவும்பொழுது வழுவின்றி ஏற்றுக்கொள்ளப்படவது பால் வழுவமைதி ஆகும்.

**மரபு**

கறியும் சோறும் உண்டான்

மாலையும் முடியும் கவித்தான்

என்பவற்றில் வெவ்வேறு வினைகளுக்கு உரிய பல பொருட்கள் கலந்து சிறப்பினால் உண்டான், கவித்தான் என ஒரு பொருளுக்குரிய முடிவு அமைந்துள்ளது. இதில் மரபு வழு, வழுவின்றி அமைதியாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளதால் மரபு வழுவமைதி ஆகும்.

எனவே திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருட்களும் ஒன்றோடன்று கலந்து ஒரு தொடராக வருமாயின் அவை சிறப்பின் காரணமாகவும் மிகுதி காரணமாகவும் இழிவு காரணமாகவும் ஒரு முடிவைப் பெறுமாயின் அது திணை, பால், மரபுகளுக்குரிய வழுவமைதியாகும்.

**திணைபால் பொருள்பல விரவின் சிறப்பினும்**

**மிகவினும் இழிபினும் ஒரு முடி பினவே** (நன் : 378)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**திணை பால் வழுவமைதி**

திணையும் பாலும் வழுவமைதி பெறுவது திணை பால் வழுவமைதி எனக் குறிப்பிடப்படுகிறது. இதனை அறிவது அவசியம்.

**திணை**

'என் அம்மை வந்தாள்' என ஒரு பசுவைக் குறிப்பிடுவது உவப்பினால் உயர்திணை பெற்றது.

'தம் பொருள ளென்ப தம்மக்கள்' என்பது சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று

‘போ மளவு மோர் நோய்’ என்பது கோபத்தினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

‘நாம் அரசனது உடைமை’ என்பது இழிவினால் உயர்திணை அஃறிணையாயிற்று

**பால்**

‘என் அம்மை வந்தாள்’ என தன் புதல்வனைக் கூறுதல் ஒருமைப் பால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

‘ஒருவனை அவர் வந்தார்’ என்பது உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று

‘தாய் மூவேழ் உலகுக்கும் தாயே’ என்பது சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

‘எனைத் துணையராயினு மென்னாம் தினைத் துணையும் தேரான் பிறனில் புகல் என்பது கோபத்தினால் ஒருமை முடிவைப் பெற்றுள்ளது.

பெண் வழிச் செல்பவனை இவன் பொட்டை (பெண்)

என்பது இழிவினால் பெண்பாலாயிற்று

எனவே மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, சினம், எள்ளல் காரணமாகத் திணையும் பாலும் வழுவி வருதல் உண்டு. அவ்வாறுவரின் அதனை இயல்பாகவே கொள்ள வேண்டும்.

**உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்**
**இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே** (நன் : 379)

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**எண் இட வழுவமைதி**

ஒருமைப் பாலில் பன்மைப் பால் சொல்லையும் பன்மைப் பாலில் ஒருமைப்பால் சொல்லையும் மூவிடங்களில் ஒன்றிற்குரிய சொல்லில் பிற இடங்களுக்குரிய சொற்களையும் விரவிக் கூறுவது எண் மற்றும் இட வழுவமைதி ஆகும்.

**எண்**

இலக்கணத்தில் ஒருமைப் பன்மை என்னும் இரண்டும் எண் எனப்படும். இதில் ஏற்படும் பிழை எண் வழு ஆகும். இதனை வழுவின்றி ஏற்றுக் கொள்வது வழுவமைதியாகும். இதனை சான்று காட்டி விளக்கலாம்.

வெயில் எல்லாம் மறைத்தது மேகம்

என்பதில் வெயில் என்னும் ஒருமைப்பாலில் எல்லாம் என்னும் பன்மைப்பால் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. இது ஒருமை பன்மை மயக்கம் ஆகும். மேலும்

இரண்டு கண்ணும் சிவந்தது

என்பதில் இரண்டு என்னும் பன்மை சிவந்தது என ஒருமை முடிவுடன் வந்துள்ளது. இதுவும் ஒருமைப் பன்மை மயக்கம் ஆகும். இவ்வாறு வழுவான ஒருமைப் பன்மை மயக்கம் வழுவின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டால் அது எண் வழுவமைதி ஆகும்.

**இடம்**

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகியவை இலக்கணத்தில் மூவிடமாகும். இம் மூவிடங்களை உணர்த்தும் சொற்களில் ஏற்படும் பிழை இட வழுவாகும். இதனை அமைதியாக ஏற்றுக் கொள்வதற்கு இட வழுவமைதி என்று பெயர்.

அமுதன் தாய் இவை செய்வதோ

என்னும் தொடர் அமுதன் தாயாகிய யான் என தன்மை இடமாக வருதல் வேண்டும். ஆனால் தாய் என படர்க்கை இடத்தில் வந்துள்ளது. இது தன்மை பன்மை மயக்கம் ஆகும்.

எம்பியை ஈங்க பெற்றேன்

என்பது நின்னை ஈங்க பெற்றேன் என முன்னிலைப் பொருளில் வருதல் வேண்டும். ஆனால் எம்பி என படர்க்கை இடத்தில் வந்துள்ளது. எனவே இது முன்னிலை படர்க்கை மயக்கம் ஆகும்.

நீயோ அவனோ யாரிது செய்தார்

யானோ அவனோ யாரிது செய்தார்

நீயோ யானோ யாரிது செய்தார்

நீயோ அவனோ யானோ யாரிது செய்தார்

இவற்றில் இடம் என்பது விரவி ஓர் இடத்திற்குப் பதிலாக பிற இடம் வந்துள்ளதைக் காணலாம். இவ்வாறு ஒருமைப் பாலில் பன்மைப் பால் சொல்லையும் பன்மைப் பாலில் ஒருமைப்பால் சொல்லையும் மூவிடங்களில் ஒன்றிற்குரிய சொல்லில் பிற இடங்களுக்குரிய சொற்களையும் விரவிக் கூறுதல் இட வழுவமைதி ஆகும். இதனை,

**ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும்**
**ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே (நன் : 380)**

என்னும் நூற்பா வாயிலாக விளங்கிக்கொள்ளலாம்.

**இடம் வழுவாமை காத்தல்**

மூவிடங்களை உணர்த்தும் சொற்களில் பிழையின்றி அல்லது மயக்கமின்றி காத்தல் இலக்கணத்தில் முக்கிய இடம் பெறுகிறது.

தரல், வரல், கொடை, செலல் என்னும் நான்கு சொற்களும் படர்க்கை ஏற்கும். இவற்றில் தரல், வரல் என்பனவற்றை தன்மை முன்னிலைகள் ஏற்கும். இவ்வாறு அமைவது இடம் வழுவாமல் காக்கும். இதனை,

**தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை**

**எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும் (நன் : 381)**

என்னும் நூற்பா வாயிலாக விளங்கிக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| அவனுக்குத் தந்தான் | ---------- தரல் | படர்க்கை |
| அவனிடத்து வந்தான் | ---------- வரல் | |
| அவனுக்குக் கொடுத்தான் | ---------- கொடை | |
| அவனிடத்துச் சென்றான் | --------- செலல் | |
| எனக்குத் தந்தான் | ---------- தரல் | தன்மை |
| என்னிடத்து வந்தான் | ---------- வரல் | |
| உனக்குத் தந்தான் | ---------- தரல் | முன்னிலை |
| உன்னிடத்து வந்தான் | ----------- வரல் | |


இவற்றின் வாயிலாக தரல், வரல், கொடை, செலல் என்னும் நான்கினுள் படர்க்கையில் இடம் பெறும். ஆயினும் கொடை செலல் என்னும் இரண்டும் படர்க்கைக்கே சிறப்பாக அமைவனவாகும்.

தரல், வரல் என்பன படர்க்கைக்கு சிறப்புடையன அல்ல. எனினும் அவை தன்மை முன்னிலையில் அமைந்து வரும்.

அவ்வாறே கொடை, வரல் என்பன தன்மை முன்னிலையில் இடம் பெறாது. மேலும் இவை அரிதாக முறைதவறி எனக்குக் கொடுத்தான், நின்பால் சென்றான் என வரும். இது இட வழுவமைதி ஆகும்.

**காலம்**

இலக்கணத்தில் காலம் என்பது இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என மூவகைப்படும். இதனை ஓர் அட்டவணை வாயிலாக விளக்கலாம்.




இதனை

**இறப்பு எதிர்வு நிகழ்வென காலம் மூன்றே** (நன் : 382)

எனும் நூற்பா விவரிக்கின்றது.

**கால வழுவமைதி**

ஒரு காலத்தை உணர்த்த வேண்டிய சொல்லுக்குப் பதிலாக மற்றொரு காலத்தை உணர்த்தும் சொல் எடுத்தாளப்படுவது கால வழுவாகும். இதனை வழுவின்றி ஏற்றுக் கொள்வது கால வழுவமைதியாகும். பொதுவாக தம் தொழிலில் இடையறாமல் மூன்று காலங்களிலும் ஒரே தன்மை உடையனவாக நிகழும் பொருட்களை நிகழ் காலத்தில் குறிப்பது வழக்கமாகும்.

எ.கா – மலை நிற்கின்றது

கடவுள் அளிக்கின்றார்

தெய்வம் இருக்கின்றது

இங்கு மலைக்கு நிற்றலும் கடவுளுக்கு அளித்தலும் தெய்வத்திற்கு இருத்தலும் முக்காலத்திற்கும் பொருந்தும் இயல்பாகும். ஆனால் நிகழ் காலத்தில் குறித்திருப்பது வழுவமைதியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே மூன்று காலங்களிலும் நிகழும் தொழிலை நிகழ் காலத்தில் குறிப்பது வழுவின்மை ஆகும். இதனை,

**முக்கா லத்தினம் ஒத்தியல் பெருளைச்**
**செப்புவர் நிகழும் காலத்தானே** (நன் :383)

என்னும் நூற்பா விவரிக்கின்றது.

**கால வழுவமைதி அமையும் முறை**

கால வழுவமைதி அமையும் முறையினை சில சான்றுகள் வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

‘இந்தக் காட்டு வழியில் செல்வாயாயின் கைப் பொருளை இழந்தாய்’

என்பதில் காட்டு வழியில் சேரலால் கைப் பொருள் இழத்தல் பெரும்பாலும் நடைபெறுவதாகும். எனவே இங்கு எதிர்காலம் இறந்த காலமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரு காலத்திற்குரியதை மற்றொரு காலத்தினால் குறிப்பது வழுவாயினும் அது வழுவமைதியாகக் கொளளப்படும்.

எ.கா – 1. அழைத்துப் போக வந்தவன் உண்டு கொண்டிருப்பவனை 'நீ இன்னும் உண்ணவில்லையா' என கேட்கும் பொழுது அவன், 'இதோ உண்டு விட்டேன்' என்பான். உண்ணப் போகிறவனும் அவ்வாறே கூறுவான். இதில் விரைவு அடிப்படையில் எதிர் காலமும் நிகழ் காலமும் இறந்த காலமாக அமைந்துள்ளன.

2. 'களவு செய்ய நினையின் கையறுப்புண்டான்' என்பது மிகுதி அடிப்படையில் எதிர்காலம் இறந்த காலமாக வந்துள்ளது.

3. 'எறும்பு முட்டை கொண்டு திட்டையேறின் மழை பெய்தது' என்பது தெளிவு அடிப்படையில் எதிர்காலம் இறந்த காலமாயிற்று.

4. 'யாம் பண்டு விளையாடுவது இச்சோலை, யாம் பண்டு விளையாடுகிறது இச்சோலை'. இதில் காரணம் ஏதுமின்றி இயல்பினால் இறந்த காலம் எதிர் காலமாகவும் நிகழ் காலமாகவும் கூறப்பட்டுள்ளது.

எனவே மிகுதி, விரைவு, தெளிவு, இயல்பு முதலியவற்றால் ஒரு காலத்தை மற்றொரு காலமாகக் கூறுவது கால வழுவாயினும் கால வழுவமைதியாகக் கொள்ளப்படுகிறது. இதனை


**விரைவினும் மிகுவினும் தெளிவினும் இயல்பினும்**

**பிறவும் பெறூஉம்முக் காலமும் ஏற்புழி** (நன் : 384)

என்னும் நூற்பா வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**வினா**

வினா ஆறு வகைப்படும். இதனை அறுவகை வினா என்பர். இதனை



என்னும் அட்டவணை வாயிலாக அறியலாம். இவற்றை விளங்கிக் கொள்வது அவசியம்.

**அறிவு அறியாமை ஐயுளல் கொளல்கொடை**
**ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார்.** (நன் : 385)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**அறிவினா**

தனக்குத் தெரிந்த ஒன்றை அறிந்துகொள்ள தெரியாதவரிடம் வினவுதல் அறிவினா ஆகும்.

எ.கா – ஆசிரியர் மாணவரிடம் தனக்குத் தெரிந்த ஒன்றை அறியும் பொருட்டு, 'இதன் பொருள் யாது?' என வினவுதலைக் குறிப்பிடலாம்.

**அறியா வினா**

தனக்குத் தெரியாத ஒன்றை அறிந்துகொள்ள தெரிந்தவரிடம் வினவுதல் அறியாவினா ஆகும்.

எ.கா – மாணவன் ஆசிரியரிடம் தனக்குத் தெரியாத ஒன்றை அறியும் பொருட்டு, இதன் பொருள் யாது ? என அமையும் வினாக்களைக் குறிப்பிடலாம்.

**ஐயவினா**

ஐயம் ஏற்படுத்தும் ஒன்றை அறியும் பொருட்டு வினவுதல் ஐயவினா ஆகும்.

எ.கா – அங்கே கிடப்பது பாம்போ கயிறோ? என அமையும் வினாக்களைக் குறிப்பிடலாம்.

**கொளல்வினா**

ஒரு பொருளைப் பெறுவதற்காக வினவுதல் கொளல்வினா ஆகும்.

எ.கா – ஒருவர் கடையில் சென்று 'உப்பு உள்ளதோ வணிகரே?' என வினவுவதைக் குறிப்பிடலாம்.

**கொடைவினா**

ஒரு பொருளை மற்றொருவருக்குக் கொடுக்கும் பொருட்டு வினவுதல் கொடைவினா ஆகும்.

எ.கா – ஒருவர் மற்றொருவரிடம் 'உனக்கு உணவு வேண்டுமா?' என வினவுதலைக் குறிப்பிடலாம்.

**ஏவல்வினா**

ஒருவர் மற்றொருவரை ஒரு பணியின் பொருட்டு ஏவுதல் பொருளில் வினவுதல் ஏவல்வினா ஆகும்.

எ.கா – ஒருவர் மற்றொருவரிடம் ‘நீ இன்னும் உணவு உண்ணவில்லையா ?’ என வினவுதலைக் குறிப்பிடலாம்.

அறிதலும் அறியாமையும் ஐயப்படுதலும் கொள்ளுதலும் கொடுத்தலும் ஏவுதலும் ஆகிய அறுவகைப் பொருளையும் தருவதால் அறுவகை வினாக்கள் என அழைக்கப்படுகின்றன.

**விடை**

ஒருவர் வினவும் வினாவிற்கு மற்றொருவர் பதில் கூறுவது விடை ஆகும். இது எட்டு வகைப்படும். எனவே இதனை எண்வகை விடை என குறிப்பிடுகின்றனர். இதனை ஓர் அட்டவணை வாயிலாக அறியலாம்.

**எண்வகை விடை** →
- **சுட்டு விடை**
- **நேர் விடை**
- **மறை விடை**
- **ஏவல் விடை**
- **வினாதல் விடை**
- **உற்றது உரைத்தல் விடை**
- **உறுவது கூறல் விடை**
- **இனமொழி விடை**

இவற்றை சான்றுடன் விளங்கிக் கொள்வது அவசியம். இதனை

**சுட்டுமறை நேர் ஏவல் வினாவுதல்**
**உற்றது உரைத்தல் உருவது கூறல்**
**இனமொழி எனும்எண் இறையுள் இறுதி**
**நிலவிய ஐந்தும் அப்பொருண்மையின் நேர்ப**     **(நன் : 386)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**சுட்டு விடை**

ஒரு பொருளை சுட்டிக் காட்டும் விடை சுட்டு விடை ஆகும்.

எ.கா – பல்கலைக் கழகத்திற்கு வழி யாது? என்னும் வினாவிற்கு ‘வழி இது’ என சுட்டிக்

காட்டுவது சுட்டுவிடை ஆகும்.

**நேர் விடை**

ஒரு வினாவிற்கு நேரடியாக விடை கூறுவது நேர் விடை ஆகும்.

எ.கா – நீ வருவாயா? என்னும் வினாவிற்கு 'நான் வருவேன்' என கூறுவது நேர் விடை ஆகும்.

**மறை விடை**

ஒரு வினாவிற்கு மறைமுகமாக விடை கூறுவது மறை விடை ஆகும்.

எ.கா – நீ படிப்பாயா? என்னும் வினாவிற்கு 'படியேன்' என கூறுவது மறை விடை ஆகும்.

**ஏவல் விடை**

ஒரு வினாவிற்கு ஏவல் பொருளில் விடை கூறுவது ஏவல் விடை ஆகும்.

எ.கா – நீ படிப்பாயா என்னும் வினாவிற்கு 'நீ படி' என கூறுவது ஏவல் விடை ஆகும்.

**வினாதல் விடை**

ஒரு வினாவிற்கு மற்றொரு வினாவினை விடையாகக் கூறுவது வினாதல் விடை ஆகும்.

எ.கா – நீ படிப்பாயா? என்னும் வினாவிற்கு 'நான் படிப்பேனா' என கூறுவது வினாதல் விடை ஆகும்.

**உற்றது உரைத்தல் விடை**

ஒரு வினாவிற்கு தனக்கு ஏற்பட்ட நிலையினை விடையாகக் கூறுவது உற்றது உரைத்தல் விடை ஆகும்.

எ.கா – நீ வருவாயா? என்னும் வினாவிற்கு 'கால் வலித்தது' என கூறுவது உற்றது உரைத்தல் விடை ஆகும்.

**உறுவது கூறல் விடை**

ஒரு வினாவிற்கு தனக்கு ஏற்படும் நிலையினை விடையாகக் கூறுவது உறுவது கூறல் விடை ஆகும்.

எ.கா - நீ வருவாயா? என்னும் வினாவிற்கு 'கால் வலிக்கும்' என கூறுவது உறுவது கூறல் விடை ஆகும்.

**இன மொழி விடை**

ஒரு வினாவிற்குத் தொடர்புடைய மற்றொரு செயலை விடையாகக் கூறுவது இனமொழி விடை ஆகும்.

எ.கா - நீ வருவாயா? என்னும் வினாவிற்கு ‘வேண்டுமானால் வீட்டுக்குச் செல்கிறேன்’ என கூறுவது இனமொழி விடை ஆகும்.

மேற்குறிப்பிட்ட எண்வகை விடையுள் சுட்டு, நேர், மறை ஆகிய மூன்றும் விடையை வெளிப்படையாகத் தருவனவாகும். எனவே இவற்றை செவ்வண் இறை என்பர். ஏவல், வினாதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், இனமொழி ஆகிய ஐந்தும் குறிப்பாக விடை தருவனவாகும். எனவே இறை பயப்பன என்பர். எண்வகை விடைகளில் ஈற்றில் இடம்பெறும் ஐந்தும் அவ்விடைப் பொருளைத் தருவதால் அவற்றையும் அறிஞர்கள் விடைகளாகவே அமைத்துக் கூறுகின்றனர்.

**வினா விடைகளின் முன் முதல் சினை வழுவாமை**

வினவுதலின் போதும் விடை கூறுதலின் போதும் சினையும் முதலும் மயங்கி நிற்பதில்லை. இதனை

**வினாவினும் செப்பினும் விரவா சினை முதல்** (நன் : 387)

என்னும் நூற்பா வாயிலாக விளங்கிக் கொள்ளலாம். இது வினா – விடை இரண்டிலும் சினையும் முதலும் மயங்குதல் (மாறுதல்) கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

எ.கா – கண் பிறழ்ந்ததோ

நம்பி நல்லனோ?

என வினவினால் கண் பிறழ்ந்தது. நம்பி நல்லன் என விடை அமையும்.

கண் பிறழ்ந்ததோ என சினையை வினவுவான் அதனை ஒழித்துக் கண் உடையாளைக் கருத்தில் கொண்டு இவள் பிறழ்ந்தாளோ எனக் கேட்டலும் இவள் பிறழ்ந்தாள் எனக் கூறலும் விடையாக அமையும்பொழுது வழுவாகும். இவ்வாறு வினவுவானும் செப்புவானும் முதலை ஒழித்து சினையை வினவுதலும் செப்புதலும் வழுவல்ல.

எனவே வினவுதற் கண்ணும் விடைகொடுத்தல் கண்ணும் சினையுதம் முதலும் ஒற்றுமை கருதி மயங்கக் கூறப்படுவதில்லை எனலாம்.

## மரபு

மரபு எனப்படுவது காலம் காலமாக மாறாமல் சான்றோர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் வழக்காறுகள் ஆகும். உயர்ந்தோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் கூறினார்களோ அவ்வாறே தொடர்ந்து கூறுவது மரபாகும் என நன்னூலார் குறிப்பிடுகிறார். இதனை

**எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்**

**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே** (நன் :388)

என்னும் நூற்பாவால் அறியலாம்.

எ.கா – பசுக்கன்று, தென்னம்பிள்ளை, குதிரைக்குட்டி, எலிக்குஞ்சு முதலியன தொன்று தொட்டு வழங்கி வரும் மரபு. இவை பிழையான சொற்றொடராக இருப்பது போல் அமையினும் மரபாக வழங்கப்பட்டு வருகின்றன.

## மரபு வழாநிலை

மரபு மாறாமல் சொற்கள் வழங்கப்படுவதை வலியுறுத்துவது மரபு வழாநிலை ஆகும். இதற்கு சில விதிகள் உள்ளன. அவை மரபு வழாநிலையினை தெளிவு படுத்துகின்றன. அவற்றை அறிவது அவசியம்.

வெவ்வேறு வினைக்குரிய பல பொருட்களை உள்ளடக்கி நிற்கும் பொதுச் சொல்லுக்கு பொது வினை கொண்டு முடிக்க வேண்டும்.

எ.கா - அணி அணிந்தார்

அணி என்பது கவித்தல், கட்டுதல், இடுதல், தொடுதல், பூணுதல் முதலியவற்றிற்குப் பொதுவாக அமைகிறது. எனவே வெவ்வெறு வினைகளுக்குரிய பல பொருட்களையும் தழுவி நிற்கும் பொதுச் சொல்லும் சிறப்பான பலவற்றை எண்ணி நிற்கும் பல சொற்களும் ஒரு பொது வினையினால் முடிக்கப்பட வேண்டும். இது வழுவாமல் காத்தல் எனும் நிலையில் கையாளப்படுகிறது. இதனை

**வேறுவினை பல்பொருள் தழுவிய பொதுச்சொல்லும்**

**வேறுஅவற்று எண்ணும்ஓர் பொதுவினை வேண்டும்** (நன் : 389)

என்னும் நூற்பா விவரிக்கின்றது. அடிசில் அயின்றார் (உணவு உண்டார்) என்பதும் அவ்வாறே பொது வினை முடிவாகும்.

## சிறப்பு வினை வழாநிலை

பலபொருள் ஒரு சொல்லை வேறுபடுத்தி அறிவதற்குச் சிறப்புச் சொல்லாகிய அடைமொழி கொடுத்து கூறுவது மரபு வழாமல் காத்தல் ஆகும். இவை சுட்டும் பொருளைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இதனை,

**வினைச்சார்பு இனம்இடம் மேவி விளங்காப்**

**பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பு எடுத்தே (நன் : 390)**

எனும் நூற்பாவினால் அறியலாம்.

எ.கா - மா ஓடியது (மா – விலங்கு)

மா பூத்தது (மா – மரம்)

மா வீழ் மலர் (மா – வண்டு)

பாய் மா (விலங்கு)

காய் மா (மரம்)

இவற்றில் மா என்பது பல பொருள் ஒரு சொல் ஆகும். இதனுடன் சிறப்புச் சொல் சேரும் பொழுது இவற்றிற்கிடையிலான வேறுபாடு புலப்படுகிறது.

**ஓலி வேறுபாட்டால் பொருள் துணிவு**

சொல்லும் பொருளும் தெளிவின்றி நிற்கும் தொடர் மொழிகளை இசை நயம் தோன்றப் பிரித்துக் கூறுதல் மரபாகும். எழுத்தின் தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபட்டு சொல்லும் பொருளும் ஐயுற நிற்கும் முறையினால் அதன் பொருள் முடிவு செய்யப்படும். இதனை,

**எழுத்தியல் திரியா பொருள்திரி புணர்மொழி**

**இசைத்திரி பால்தெளி வெய்தும் என்ப (நன் : 391)**

என்னும் நூற்பாவினால் அறியலாம்.

எ.கா – குன்று ஏறா மா – குன்று ஏறு ஆமா

குறும்பா அம்பு – குறும்பரம்பு

செம்பொன் பதின் தொடி - செம்பு ஒன்பதின் தொடி

என இரண்டு நிலைகளில் பொருள் விளங்கி நிற்கும். இவற்றில் இசை அறுத்துக் கூறும்பொழுது அவை சுட்டும் பொருளை தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

**மரபு வழாநிலையும் வழுவமைதியும்**

ஒரு பொருள் மேல் பல பெயர்கள் அடுக்கிக் கூறும் பொழுது பொருள் ஒன்றே எனும் நிலையில் முடிக்கும் சொல் ஒன்றைக் கொடுத்துக் கூறுவதுண்டு. இது மரபு வழாமல் காத்தல் ஆகும். இதனை,

**ஒருபொருள் மேற்பல பெயர்வரின் இறுதி**

**ஒருவினை கொடுப்ப தணியும் ஒரேவழி (நன் : 392)**

எனும் நூற்பா விவரிக்கின்றது.

எ.கா - ஆசிரியன் பன்னூற் புலவன் செந்தமிழ்க்குரிசில் இளங்குமரனார் வந்தார்.

பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி இவன்.

இத்தொடர்களை ஆசிரியன் வந்தான், பன்னூற் புலவன் வந்தான், செந்தமிழ்க்குரிசில் வந்தான், இளங்குமரன் வந்தான் என்றோ பாண்டியன் இவன், முதுகுடுமி இவன், பெருவழுதி இவன் என்றோ. தனித்தனி சொல்லால் முடித்தால் அவை பல பொருள் உடையதாகிவிடும். எனவே இத்தொடர்கள் வந்தான், இவன் என்னும் ஒரு சொல்லால் முடிக்கப்பட்டு ஒரே பொருளை மட்டுமே உணர்த்தின.

**இயற்பெயர் வரும் இடம்**

ஒரு பொருள் தொடர்பான பல பெயர்கள் வருமானால், அனைத்தும் ஒன்றே என்பது தோன்ற இறுதியில் முடிக்கும் சொல் ஒன்று மட்டும் அமைத்தல் வேண்டும். திணையும் நிலமும் குலமும் குடியும் உடையதாக இருக்கும் பொருளும் குணமும் செயலும் கல்வியும் பற்றி வரும் சிறப்பு பெயர்களும் இயற்பெயரை ஏற்குமாயின் அது பின் வருவது சிறந்த மரபாகும். இதனை,

**திணைநிலம் சாதி குடியே உடைமை**
**குலம் தொழில் கல்வி சிறப்பாம் பெரோடு**
**இயற்பெயர் ஏற்றிடின் பின்வரல் சிறப்பே** (நன் : 393)

எனும் நூற்பா விவரிக்கிறது.

| | பின் இயற்பெயர் | முன் இயற்பெயர் |
|---|---|---|
| **திணை** | - குன்றவன் கொற்றன் | கொற்றன் குன்றவன் |
| **நிலம்** | - சோழியன் சாத்தன் | சாத்தக் சோழியன் |
| **சாதி** | - பார்ப்பான் துரோணன் | துரோணன் பார்ப்பான் |
| **குடி** | - பாண்டியன் குலசேகரன் | குலசேகரன் பாண்டியன் |
| **உடைமை** | - பொன்னன் நம்பி | நம்பி பொன்னன் |
| **குணம்** | - கரியன் கம்பன் | கரியன் கம்பன் |
| **தொழில்** | - நடையன் நாகன் | நடையன் நாகன் |
| **கல்வி** | - புலவன் வள்ளுவன் | வள்ளுவன் புலவன் |

இத்தொடர்களில் இயற்பெயர் என்பது சிறப்புப் பெயர்களுக்கு முன்னும் பின்னும் வந்துள்ளன. இயற்பெயர் பின் வருவது வழா நிலையாகும். இதுவே சிறப்பு என கருதப்படும். இயற்பெயர் முன்வருவது வழுவமைதி ஆகும். இவ்வாறு திணை, நிலம், சாதி, குடி, உடைமை, குணம், தொழில், கல்வி,எனப் பல நிலைகளில் சிறப்புப் பெயர்கள் அமையும்.

**சுட்டுப் பெயர் அமையும் முறை**

சுட்டுப் பெயர் என்பது இயற்பெயருக்குப் பின் அமைந்து வரும். இயற்பெயர் மூவகைப்படும். அவை உயர்திணை இயற்பெயர், அஃறிணை இயற்பெயர், பொதுப்பெயர் என்பனவாகும். இதனை எடுத்துக்காட்டு வாயிலாக அறியலாம்.

1. நம்பி வந்தான் அவனுக்கு உணவளிக்க - உயர் திணை இயற்பெயர் பின் சுட்டு
2. பூனை வந்தது அதற்குப் பால் சோறிடுக - அஃறிணை இயற்பெயர் பின் சுட்டு
3. சாத்தன் வந்தான் அவனுக்கு உணவளிக்க<br>சாத்தன் வந்தது அதற்குப் புல் இடுக } - பொதுப் பெயரின் பின் சுட்டு

சில தொடர்களில் முடிக்கும் சொல்லாக வினைச் சொல் இல்லாமையால் சுட்டுப் பெயர் முன்னும் பின்னும் அமைவதும் உண்டு. இது உலக வழக்காகும்.

எ.கா தம்பி அவன் - அவன் தம்பி
அது காகம் – காகம் அது

செய்யுளில் சுட்டுப் பெயர் வரையறை இன்றி வேண்டியவாறு முன்னும் பின்னும் அமையும். படர்க்கை இடத்திற்குரிய உயர்திணை அ.்.றிணை பொதுப்பெயர்களோடு சுட்டுப் பெயர் சேரும்பொழுது அங்கு முடிக்கும் சொல் வினையாக வருமானால் அம்மூவகைப் பெயருக்கும் பின்னால் சுட்டுப் பெயர் வரவேண்டும். அம்முடிக்கும் வினைச் சொல் இல்லையானால் சுட்டுப் பெயர் மூவகைப் பெயருக்கு முன்னும் பின்னும் வரும். இம்மரபு உலக வழக்கத்திற்குரியது. செய்யுளில் வரையறையின்றி வேண்டியவாரே வரும்.

எ.கா அவனணங்கு நோய்செய்தா னாயிழையாய் வேலன்
-------------------------------------------------------------------------------
தன்னை யலர்கடப்பந்த தாரணியினென்னை கொல்
பின்னை யதன்கண் விழைவு

இச்செய்யுளில் 'அவன்' என முன்னரும் 'அதன்' எனப் பின்னரும் வரையறையின்றிச் சுட்டுப்பெயர் அமைந்துள்ளது. இதனை

**படர்க்கைமுப் பெயரோடு அணையின் சுட்டுப்**
**பெயர்பினள் வரும்வினை எனின் பெயர்க்கு எங்கும்**
**மருவும் வழக்கிடைச் செய்யுட்கு ஏற்புழி (நன் : 394)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக அறியலாம்.

**இரட்டைக் கிளவி (இரட்டைச்சொல்)**

ஒரே சொல் இரு முறை வந்து பிரித்தால் பொருள் தராமல் வழங்கும் இரட்டைச் சொல் இரட்டைக் கிளவி ஆகும். இச்சொல் பிரியாமல் இரண்டிரண்டாகவே இடம் பெறல் வேண்டும். இதனை

**இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்து இசையா (நன் :396)**

என்னும் நூற்பா விளக்குகிறது. இதனை மரபு வழாநிலை என்பர்.

எ.கா - கிளை **மடமட**வென முறிந்தது

கூரை **பொலபொல**வென உதிர்ந்தது.

மழை **சலசல**வென பொழிந்தது

அவன் **வளவள**வெனப் பேசினான்

இத்தொடர்களின் வாயிலாக இரட்டைக் கிளவியை அடையாளம் காணலாம். இதனை மரபு வழாநிலை எனவும் வழங்குவர்.

**அடுக்குத் தொடர்**

ஒரு சொல் இரு முறைக்கு மேல் அடுக்கி வருவதும் பிரித்தால் பொருள் தருவதுமான சொற்கள் அடுக்குத் தொடர் ஆகும். ஒரு சொல்லை பல முறைக் கூறுவது வழுவாகும். ஆனால் அசைநிலை, விரைவு, வெகுளி, அச்சம், அவலம், உவகை ஆகிய பொருள் நிலைகளில் இசை நிறைக்கும் ஒரு சொல் இரண்டு முதல் நான்கு முறைவரை அடுக்கிக் கூறப்படும் இது வழுவாயினும் வழுவமைதியாகும். அடுக்கி வரும் இத்தகைய சொற்களை அடுக்குத் தொடர் என்பர்.

எ.கா அன்றே அன்றே - அசைநிலை

வா வா, போ போ - விரைவு

ஒழிக ஒழிக - வெகுளி

பாம்பு பாம்பு, தீ தீ - அச்சம்

ஐயோ ஐயோ - அவலம்

வாழ்க வாழ்க - உவகை

ஏ ஏ, ஓ ஓ - இசைநிறை

எனவே ஒரு சொல் மேற்குறித்த பொருண்மையின் அடிப்படையில் அடுக்கி வந்துள்ளமையால் இவற்றை அடுக்குத் தொடர் எனலாம்.

**அடுக்குத் தொடர் இரட்டைக் கிளவி வேறுபாடு**

| | |
|---|---|
| 1. அடுக்குத் தொடர் வழுவமைதியாகும் | 1. இரட்டைக் கிளவி வழா நிலையாகும். |
| 2. அடுக்குத் தொடர் மக்களிரட்டையும் விலங்கிரட்டையும்போன்று பிரிந்து தனித் தனி பொருள் தரும். | 2. இரட்டைக் கிளவி பூ இரட்டையும் இலை இரட்டையும் போல பிரிக்க முடியாமல் இணைந்து நின்று பொருள் தரும். |
| 3. அடுக்குத் தொடர் இரண்டு முதல் நான்கு முறை வரை அடுக்கி வரும். | 3. இரட்டைக்கிளவி இரண்டுக்கு மேற்பட்டு அடுக்கி வராது |
| 4. அடுக்குத் தொடர் பிரித்தால் பொருள் தரும். | 4. இரட்டைக் கிழவி பரித்தால் பொருள் தராது. |

**ஒருபொருள் பன்மொழி**

ஒரு பொருளை உணர்த்தும் பொருட்டு பல பெயர்களைக் கூறி கேட்பவர் அப்பொருளை உணரும் வகையில் அமைப்பது ஒரு பொருள் பன்மொழி ஆகும். பிரிவு இல்லாமல் பல பொருள்கள் ஒரு பொருளின் மேல் அடுக்கி வரும்.

எ.கா பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி பெருவழுதி வந்தான்

ஆசிரியன் பேரூர் கிழான் சாத்தன் வந்தான்

இவற்றில் பாண்டியனையும் ஆசிரியனையும் குறிக்க பல பெயர்கள் அடுக்கி வந்துள்ளன. இவ்வாறு ஒரு பொருள் மேல் பல பெயர்கள் குறிப்பிடும்பொழுது அப்பொருளில் இருந்து பிரிவில்லாதவற்றை நீங்காமல் கொள்வது அவசியம். இதனை

**ஒருபொரு பல்பெயர் பிரிவில் வரையார்    (நன் : 397)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக அறியலாம்.

## மரபு வழுவமைதி

பல சொற்கள் ஒரு பொருள் தந்து இன்பம் பயப்பதாக வருமாயின் அவை செய்யுளில் வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

எ.கா- மீமிசை ஞாயிறு

உயர்ந்தோங்கு மலை

நாகிளங் கமுகு

இத்தொடர்களில் ஒரு பொருளை குறித்து வரும் சொற்கள் குறிப்பிடத்தக்க காரணமின்றி செவிகின்பம் தரும் நோக்கில் வந்திருப்பதால் அது வழுவாகும். ஆயினும் அது வழுவமைதியாக ஏற்றுக் கொள்ளப்படும். எனவே இது மரபு வழுவமைதி ஆகும். இதனை

**ஒரு பொருள் பன்மொழி சிறப்பி னின்வழா (நன் : 398)**

என்னும் நூற்பா அறிவுறுத்துகிறது.

**மரபு வழாநிலை**

அளவு இவ்வளவுதான் என்ற தெளிவாகத் தெரிந்த இடத்திலும் அறியப்பட்ட பொருட்களாகிய இறைவன் நாற்திசை ஆகியவற்றை வினைப்படுத்திச் சொல்லுமிடத்திலும் உலகில் இல்லாத பொருளைப் பற்றிச் சொல்லும் இடத்திலும் முற்றும்மை கொடுத்து முடித்தல் வேண்டும். உம்மை பலவகைப்படும். முடிவு பெற்ற நிலையை உணர்த்துவது முற்றும்மை எனப்படும். உலகில் எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளையும் இவ்வளவுடையது என அறியப்பட்ட பொருளையும் முடிக்கும் சொல்லுடன் சேர்த்துக் கூறும்பொழுது முற்றும்மை அமைப்பது மரபு வழுவாமல் காத்தல் ஆகும்.

எ.கா வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது

நாதன் நாமம் நமச்சிவாயவே

ஆகாயப் பூ மணத்தல் என்றும் இல்லை

இறைவனுக்குக் கண் வுன்றும் முச்சுடர்

நாற்றிசையிலும் ஒளி பரவியது

பாலும் தேனும் ஆறாக ஓடுதல் இல்லை

இத் தொடர்கள் வாயிலாக மரபு வழாநிலையை அதாவது முற்றும்மை பெற்று வருவதை அறியலாம். இதனை

**இணைத்து என்று அறிபொருள் உலகில் இல்லா பொருள்**
**வினைப்படுத்து உரைப்பின் உம்மை வேண்டும். (நன் : 399)**

என நன்னூலார் விவரிக்கின்றார்.

**மரபு வழுவமைதி – விளக்கம்**

மரபு வழுவமைதி என்பது வழுவான ஒன்றை வழுவமைதியாக்கி ஏற்பது மரபாக இருப்பின் அதனை மரபு வழுவமைதியாகக் கொள்வர்.

எ.கா    இப்பசுவை யான் வாங்கினேன்

இந்நூலை யான் படித்தேன்

என்னும் தொடர்கள் வழாநிலைத் தொடர்கள் ஆகும்.

இப்பசு யான் வாங்கியது

இந்நூல் யான் படித்தது

இத்தொடர்களில் வாங்கிய தொழிலைச் செய்தது பசு என்றும் படித்த தொழிலைச் செய்தது நூல் என்றும் பொருள்பட்டு வரும். இது வழுவாகும். ஆனால் இவ்வழுவை அமைதியாக்கிக் கூறுவது மரபாகும். எனவே இது மரபு வழுவமைதி ஆகும்.

கருவி, நிலம், செயல், காலம் ஆகியன சில இடங்களில் கருத்தாவாக அமைந்து வரும். இவ்வழுவும் மரபு வழுவமைதியாக வழக்கில் உள்ளது.

எ.கா இவ்வெழுதுகோல்   யான் எழுதியது – கருவி

இத்தொழில் யான் செய்தது - செயல்

இப்பள்ளி யான் படித்தது - இடம் (நிலம்)

இந்நாள் அவர் பிறந்தது - காலம்

இத்தொடர்களில் செயப்படு பொருளை கருத்தாவைப் போன்று வைத்து அதன்மேல் வினையை ஏற்றி கூறுவதால் மரபு வழுவாயினும் வழுவமைதியாகும். இதனை

**செயப்படுபொருளை செய்தது போலத்**
**தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே (நன் : 400)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**மரபு வழுவாமல் காத்தலும் மரபு வழுவமைதியும்**

சில பொருள்களை அடைமொழியின்றி குறிப்பிட்டால் குறித்த பொருளை விளக்குவது அறிதாகும். எனவே இனமுள்ளவற்றை அடைமொழியாக கொள்வது அவசியமாகும். இது மரபு வழுவாமல் காக்கும் முயற்சியாகும். எடுத்துக்காட்டாக சிலவற்றை குறிப்பிடலாம்.

பொருள் அடிப்படை – நெய்க் குடம்

இடம் அடிப்படை - வயல் நெல்

காலம் அடிப்படை - கார்த்திகை விளக்கு

சினை அடிப்படை - பூ மரம்

குணம் அடிப்படை - செந்தாமரை

தொழில் அடிப்படை - ஊன்று கோல்

சில அடைமொழி தேவைப்படாத இடத்திலும் அடைமொழியுடன் வருவதுண்டு. எடுத்துக்காட்டாக சிலவற்றைக் குறிப்பிடலாம்.

பொருள் அடிப்படை – உப்பளம்

இடம் அடிப்படை - ஊர் மன்று

காலம் அடிப்படை - நாளரும்பு

சினை அடிப்படை - இலை மரம்

குணம் அடிப்படை - செம்போத்து

தொழில் அடிப்படை - தோய் தயிர்

இவ்வாறே செய்யுள் வழக்கிலும் இனம் உள்ளவையும் இனம் இல்லாதவையும் அடைமொழியோடும் அடைமொழியின்றியும் வருவது உண்டு.

| | | **இனமுள்ளவை** | **இனமில்லாதவை** |
|---|---|---|---|
| பொருள் அடிப்படை | – | பொருள் பெண்டிர் | பொற்கோட்டி மயம் |
| இடம் அடிப்படை | - | காண் யாறு | வட வேங்கடம் |
| காலம் அடிப்படை | - | முந்நாட்பிறை | வேனிற்கோங்கின்பூ |
| சினை அடிப்படை | - | கலவமாமயில் | சிறகர் வண்டு |
| குணம் அடிப்படை | - | சிறுகோட்டுப்பெரும்பழம் | செஞ்ஞாயிறு |
| தொழில் அடிப்படை | - | ஆடறவு | முழங்கு கடல் |

இவற்றில் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறும் அடை மொழிகளாகி அடையெடுத்து வரும் மொழிகள் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இனமுள்ளவை, இனமில்லாதவை என இரு வகையில் அமைந்துள்ளன. இவற்றில் இனமுள்ளவற்றை அடை கொடுத்துக் கூறுவது வழாநிலை என்றும் இனமில்லாதவற்றை அடை கொடுத்துக் கூறுவது வழுவமைதி என்றும் வழங்கப்படுகின்றன. இதனை

**பொருள் முதல் ஆறாம் அடைசேர் மொழிஇனம்**
**உள்ளவும் இல்லவும் ஆம்இரு வழக்கினும் (நன் : 404)**

என்னும் நூற்பா அறியத் தருகிறது.

**குறிப்புப் பொருள் மரபு வழாநிலை**

பெயர்ச் சொல்லைச் சிறப்பிக்கவும் வகை வேறுபடுத்தி இனம் பிரித்துக் காட்டவும் அச் சொல்லின் முன் இடம் பெறும் சொல் அடைமொழி எனப்படும்.

அடை மொழிகள் இனத்தைத் தருவது போலவே பொருந்தி வருகின்ற இடங்களில் அவ் அடைமொழி இனம் அல்லாத ஒன்றையும் உணர்த்தும். இது சிறப்பு மரபாக அமைகிறது.

எ.கா - உழைத்தால் வெற்றி பெறுவான்

இத் தொடர் உழைக்காதவன் வெற்றி பெறமாட்டான். என்ற உண்மையையும் உணர்த்துகிறது. அது இனத்தைத் தருவது ஆகும். ஒருவன் வெற்றிக்கான காரணம் எது என்பதையே அறியாதவனாக இருக்கிறான் என்பது இனம் அல்லாததை உணர்த்தியது ஆகும்.

எ.கா – கோழி கூவிற்று - இதில் ஏனைய பறவைகள் கூவவில்லை எனும் இனம் சார்ந்த பொருளையும் பொழுது விடிந்தது எனும் இனம் சாராப் பொருளையும் பெறமுடிகிறது. இதனை

**அடைமொழி இனம் அல்லது தரூஉம்**

**ஆண்டு உறின்** (நன் : 402)

என்னும் நூற்பா வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**அடை, சினை, முதல் வழுவமைதியும் வழுவாமல் காத்தலும்**

உலக வழக்கினைப் போன்று செய்யுள் வழக்கிலும் அடை, சினை, முதல் ஆகியவற்றை சிறப்பித்தல் உண்டு. ஓர் அடையும் ஒரு சினையும் ஒரு முதலும் ஒன்றையொன்று சிறப்பித்து வருதலும் உண்டு. இரண்டு அடைகள் ஒரு முதலை சிறப்பித்து வருதலும் உலக வழக்காகும். இரு அடைகள் சினையைச் சிறப்பித்தலும் இவ்வரம்பு பிறழ்ந்து வருதலும் செய்யுள் வழக்காகும். இவற்றுள் இரு அடைகள் சினையை சிறப்பிப்பது மரபு வழுவாமல் காத்தல் ஆகும். ஏனையவை மரபு வழுவமைதியாகும். இதனை எடுத்துக்காட்டுகள் வாயிலாக விறங்கிக் கொள்ளலாம்.

எ.கா – சிறு பைந்தூவி

கருநெடுங் கண்

இவற்றில் இரு அடைகள் சினையை சிறப்பித்துள்ளன.

பெரும்தோட் சிறுமருங்குல் பேராமர்க்கட் பேதை

என்னும் அடியில் இரண்டிற்கு மேற்பட்ட அடைகள் வந்து வரம்பு கடந்துள்ளன.

வேற்கை முருகன் - இதில் ஓர் அடைமொழியும் (வேல்) ஒரு சினையும் (கை) ஒரு முதலுமாகி (முருகன்) ஒன்றையொன்று சிறப்பித்து வந்துள்ளன.

சிறு கருங் காக்கை - இதில் இரு அடைமொழிகள் (சிறு, கருங்) முதலை சிறப்பித்துள்ளன. இதனை

**அடை சினை முதன்முறை அடைதலும் ஈரடை**
**முதலோடு ஆதலும் வழக்கியல் ஈரடை**
**சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே (நன் : 403)**

என்னும் நூற்பா விவரிக்கின்றது.

**பொருள் மரபு வழுவமைதி**

பொருள் என்பது

1. இயற்கைப் பொருள்
2. செயற்கைப் பொருள்

என இருவகைப்படும். இவ்விருவகை பொருள்களிலும் வழுவமைதி அமைவதுண்டு. அவற்றை விளங்கிக் கொள்வது அவசியம்.

**இயற்கைப் பொருள் வழுவமைதி**

இயற்கைப் பொருள் என்பது தனக்குப் பின் தோன்றாமல் தாம் தோன்றிய பொழுது உடன் தோன்றிய நன்மை உடைய பொருள் ஆகும். இயற்கைப் பொருளை ஆக்கமும் காரணமும் கெடாமல் இத்தன்மையது என குறிப்பிடுவது வழுவமைதியாகும்.

எ.கா – நிலம் வலிது

பால் வெள்ளிது

மயிர் கரிது

தீ வெய்து

என்னும் சொற்றொடர்கள் இயற்கைப் பொருளை உணர்த்துவன எனவே இவை இயற்கையானவை. இவை இத்தன்மையது என வினைகளால் சுட்டப்பட்டுள்ளன. இவ்வாறு இயற்கைப் பொருள் ஆக்கமும் காரணமும் கெடாமல் இத்தன்மையது என சுட்டப்படுவது இயற்கைப் பொருள் வழுவமைதியாகும். இது

**இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் (நன் :404)**

என்னும் நூற்பாவால் அறியத்தருகிறது.

**செயற்கைப் பொருள் - மரபு வழாநிலை**

செயற்கைப் பொருள் என்பது தனக்குப் பின் தோன்றிய தன்மை உடைய பொருள் ஆகும். செயற்கைப் பொருள், காரணச் சொல் முன்னரும் ஆக்கச் சொல் பின்னரும் வருமாறு அமைதல் வேண்டும். இவை இல்லாமலும் அமையும்.

எ.கா - உரமிட்டுக் களை எடுத்ததால் பயிர் நல்ல வாயின

உரமிட்டுக் களை எடுத்தல் (காரணச் சொல்)

பயிர் நல்ல வாயின (ஆக்கச்சொல்)

பயிர் நல்லவாயின - இதில் காரணம் இன்றி ஆக்கச் சொல் மட்டுமே வந்துள்ளது. எனவே செயற்கைப் பொருளானது காரணச் சொல் முன் வர ஆக்கச் சொல் பின்வரப் பெறும். காரணச்சொல் இன்றி ஆக்கச் சொல் வரப்பெற்றும் ஆக்கச்சொல் இன்றி காரணச் சொல் வரப்பெற்றும் ஆக்கமும் காரணமும் இன்றி வரப்பெற்றும் அமையும். இதில் காரணம் முதலாக ஆக்கம் பெறுதல் மட்டும் வழுவாமல் காத்தல் ஆகும். ஏனைய மூன்றும் வழுவமைதியாகும். இதனை

**காரணமுதலா ஆக்கம் பெற்றும்**
**காரணமின்றி ஆக்கம் பெற்றும்**
**ஆக்கமின்றி காரணம் அடுத்தும்**
**இருமையும் இன்றியும் இயலும் செயும் பொருள் (நன் : 405)**

எனும் நூற்பா விவரிக்கின்றது.

**விடை மரபு வழுவாமை**

விடை கூறுதலில் வழு இல்லாமல் அமைவது விடை மரபு வழுவாமை ஆகும். ஒரு பொருள் உள்ளதா? என்னும் வினாவிற்கு விடை தரும் மரபு ஒன்று உண்டு. அப்பொருள் தம்மிடம் இல்லாத பொழுது இல்லை என்னும் சொல்லை தம்மிடம் இருக்கும் ஒரு பொருள் மேல் ஏற்றிச் சொல்வது விடை மரபு ஆகும்.

எ.கா - வினா - பயறு உளதோ வணிகரே?

விடை - உளுந்து உள்ளது

(பயிறு - இல்லாதது : உளுந்து – வணிகரிடம் இருப்பது)

இவ்வாறு விடை கூறுவதால் அடுத்து என்ன உண்டு எனும் வினா எழ வேண்டிய தேவை இல்லை.

வினா – பயறு உண்டோ வணிகரே ?

விடை – ஒரு கிலோ உள்ளது

இவ்வாறு விடை கூறுவதால் அடுத்து எவ்வளவு உண்டு எனும் வினா எழத் தேவையில்லை. எனவே தம்மிடம் இல்லாத பொருளை இல்லை எனக் கூறுமிடத்து தம்மிடம் உள்ள இனமான பொருளைக் கூறி அதனை இல்லை என உணர்த்தியும் உள்ளதாயின் இவ்வளவு உண்டு என உணர்த்தியும் வினாவும் விடையுமாக சுருக்கி உரைப்பர். இவ்வாறு உரைப்பது விடை மரபு வழுவாமை ஆகும். இதனை

**தம்பால் இல்லது இல்எனின் இன்னாய்**
**உள்ளது கூறி மாற்றியும் உள்ளது**
**சுட்டியும் உரைப்பர் சொற் சுருங்குதற்கே** (நன் : 406)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**இரப்புரை**

ஈ, தா, கொடு, என்னும் மூன்று சொற்களும் இரப்புரை சொற்கள் ஆகும். இவை முறையே இழிந்தவனும் ஒப்பவனும் உயர்ந்தவனும் கூறும் இரப்புரைகளாகும். இம்மூன்றையும் வழங்க ஒரு மரபு உள்ளது.

ஈ - இழிந்தவன் உயர்ந்தவரைக் கேட்பது – தந்தையே ஈ (க)

தா – சமமானவர் சமமானவரைக் கேட்பது – தோழா ! தா !

கொடு – உயர்ந்தவர் இழிந்தவனைக் கேட்பது – மகனே ! கொடு

இவ்வாறு முறை தவறி வருமாயின் புதியன புகுதலும் வழுவல என கொள்ள வேண்டும். இதனை

**ஈ தா கொடு எனும் மூன்றும் முறையே**
**இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை** (நன் : 407)

என்னும் நூற்பாவால் அறியலாம்.

## மரபு வழுவமைதி – குறிப்புப் பொருள்

ஒருவர் கேட்பவர் வருத்தப்பட்டால் பொருள் விளங்க குறிப்பால் உணர்த்துதல் மரபாகும்.

எ.கா – குளை கொண்டு கோழியெறியும் வாழ்க்கையர் - இதில் பெரும் செல்வந்தர் என குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு குறிப்பாகப் பொருளறியும் முறையும் வழுவமைதியாகும். இதனை

**முன்னத்தின் உணரும் கிழவியும் உளவே** (நன் 408)

என்னும் நூற்பாவால் அறியலாம்.

**மரபு வழுவமைதி**

திணை, பால், இடம், காலம், வினா, விடை, மரபு எனும் ஏழு நிலைகளும் சொற்களை உரியவாறு வழங்குதல் வழாநிலை எனப்படும். மாற்றி வழங்குதல் வழு ஆகும். அவ் வழுக்களை ஏற்றுக் கொள்ளலாம் என இலக்கண நூலார் வழங்கும் கருத்து வழு அமைதி எனப்படும்.

**திணை**

அ∴றினையை உயர்திணையாக்கிக் கூறுவது திணை வழுவமைதி ஆகும். உயர் திணைச் சொல்லின் பின் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்கள் இடம் பெற்றாலும் அதன் பின் உயர்திணை முடிவைப் பெறும்.

எ.கா - குமரன் பொன் பெரியன் - பொருள்

சோழன் வீடு பெரியன் - இடம்

வளவன் வாழ்நாள் பெரியன் - காலம்

சேரன் பொறுமையில் நல்லன் - குணம்

நம்பி நடை உயர்ந்தவன் - தொழில்

நன்னீரை வாழி அனிச்சமே - இத்தொடரில் கேளாதது கேட்பதாகக் கூறப்பட்டது.

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் - இத் தொடரில் பேசாதது பேசுவதாக கூறப்பட்டது.

இவ்வழி அவ்வூர்க்குப் போகும் - இத்தொடரில் நடவாதது நடப்பதாகக் கூறப்பட்டது.

தன்னெஞ்சே தன்னைச் சுடும் - இத்தொடரில் செய்யாதது செய்வதாகக் கூறப்பட்டது.

இவ்வாறு அ∴றிணையிடத்துக் கேளாதவற்றைக் கேட்பவை போலவும் பேசாதவற்றைப் பேசுவது போலவும் நடவாதவற்றை நடப்பது போலவும் இயங்காதவற்றை இயங்குவது போலவும் செய்யாதவற்றை செய்வது போலவும் கூறுவது வழுவமைதியாகும்.

**கேட்டுந போலவும் கிளக்குந போலவும்**
**இயக்குந போலவும் இயற்றுந போலவும்**
**அ∴றிணை மருங்கினும் அறையப்படுமே (நன் : 409)**

எனும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**திணை – பால்**

திணை பால் இரண்டும் கலந்து வரும் தொடர்கள் இழிவு, உயர்வு அடிப்படையில் ஒரு முடிவைப் பெறும்.

எ.கா - திணை – மன்னனும் குதிரையும் வந்தார்கள் - உயர்திணை முடிவு

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா - அஃறிணை முடிவு

பால் - சிவனும் தையலும் ஆண்டான் - ஆண்பால் முடிவு

தோழியும் அவனும் வந்தாள் - பெண் பால் முடிவு

மகிழ்ச்சி, மேன்மை, சிறப்பு, சினம், பழிப்பு - இவை காரணமாக திணையும் பாலும் மயங்கி வரலாம்.

எ.கா - பால் : தாய் புதல்வனை என் அம்மை வந்தாள் என்பது (மகிழ்ச்சி)

திணை : பசுவை என் அம்மை வந்தாள் என்பது (மகிழ்ச்சி)

இவ்வாறே பிறவும் வரும்

**பால் - இடம்**

ஒருமையில் பன்மையும், பன்மையில் ஒருமையும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன ஓரிடத்தில் மற்றொன்றும் மாறி வரலாம்.

எ.கா - வெயில் (ஒருமை) எல்லாம் (பன்மை) மறைத்தது மேகம்

சாத்தன் தாய் இவை செய்வேனோ ! (தன்மையில் படர்க்கை கலந்தது)

**கால வழு அமைதி**

இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் காலம் மூன்று வகைப்படும். முக்காலத்திற்கும் ஒரு தன்மையாக விளங்கும் பொருள்களை நிகழ்காலத்தில் அமைத்துக் கூறுதல் கால வழுவமைதியாகும்.

எ.கா - மலை நிற்கின்றது

தெய்வம் இருக்கின்றது.

விரைவு, மிகுதி, தெளிவு, என்னும் காரணங்களால் காலம் மாறி வருதல் ஏற்புடையதாகும்.

எ.கா - உண்டு கொண்டு இருப்பவன் - உண்டேன் உண்டேன் என்பது – விரைவு

காட்டுக்குப் போனால் (எதிர் காலம்)

தொலைந்தான் (இறந்த காலம்) என்பது – மிகுதி

நல்லன செய்தால் (எதிர் காலம்)

நல் உலகு அடைந்தான் (இறந்த காலம்) – தெளிவு

**விடை வகையும் வழு அமைதியும்**

விடை எட்டு வகைப்படும். அவற்றை நேர் விடை, மறை விடை என இரு நிலைகளில் குறிப்பிடுவர். சுட்டு, மறை, நேர் என்னும் மூன்றும் நேர்விடையாகும். ஏவல், வினாதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல் முதலியன மறைவிடையாகும்.

இனமொழி என்னும் ஐந்து முதல் மூன்று நேர் விடைகளும் இயல்பானவை அடுத்து வரும் ஐந்தும் மறைமுகமாக விடை தருவன இவற்றை ஏற்றுக் கொள்ளலாம். எனவே இதனை வழு அமைதியாகக் கூறலாம்.

சுட்டு – எது புதிய ஆடை? என்னும் வினாவிற்கு இது என்று விடை கூறுவது.

மறை – கடைக்குப் போவாயா? என்னும் வினாவிற்கு, மாட்டேன் என மறுத்துக் கூறுவது.

நேர் - கடைக்குப் போவாயா? என்னும் வினாவிற்கு போவேன் என உடன்பட்டுக் கூறுவது

ஏவல் - கடைக்குப் போவாயா? என்னும் வினாவிற்கு, நீ போ என கூறுவது.

வினா எதிர் வினாதல் - இது செய்வாயா? என்னும் வினாவிற்கு, செய்ய மாட்டேனா? என கூறுவது.

உற்றது உரைத்தல் - கடைக்குப் போவாயா? என்னும் வினாவிற்கு கால் வலிக்கும் என கூறுவது.

உறுவது கூறல் - கடைக்குப் போவாயா? என்னும் வினாவிற்கு கால் வலிக்கும் என கூறுவது.

இனமொழி – தமிழ் படிப்பாயா? என்னும் வினாவிற்கு வரலாறு படிப்பேன் என கூறுவது.

**செயப்படு பொருளைக் கூறுதல்**

செயப்படு பொருளைச் செய்தவர் மேல் வைத்துக் கூறுவது வழுவமைதியாகும்.

எ.கா - இம் மாடு யான் கொண்டது.

(மாட்டை நான் கொண்டேன் என்பதை மாற்றிக் கூறியது)

**உருவகம் - உவமையில் திணை மாறுபாடு**

உருவக அணியிலும் உவமை அணியிலும் திணை சினை முதலானவை தம்முள் மயங்கி வரும். இவை ஏற்கத் தக்கவையே.

**உருவகம்**

அரசனாகிய சிங்கத்திற்கு பகைவர் கூட்டமாகிய யானைகள் அஞ்சி ஓடின - இத்தொடரில் உயர்திணையுடன் அ∴றிணை மயங்கி உள்ளது.

கல்வி மங்கையை நல்லோர் விரும்புவர் - இத்தொடரில் அ∴றிணை உயர்திணையுடன் மயங்கிற்று

அரசனின் தம்பியர் இருவரும் இரு தோள்கள் - இதில் உயர்திணை முதல் உணர்திணைச் சினையுடன் மயங்கிற்று.

முகமாகி மதி - இதில் உயர்திணைச் சினை அ∴றிணை முதலுடன் மயங்கிற்று

**உவமை**

மயில் போலும் மங்கை – அ∴றிணை முதல் உயர்திணை முதலுடன் மயங்கிற்று

முற்றிய நெற்கதிர்கள் கற்றார் போல் கவிழ்ந்தன - அ∴றிணை சிணை உயர்திணை சினையுடன் மயங்கிற்று

கயல்போலும் கண் - உயர்திணை சிணை அ∴றிணை முதலுடன் மயங்கிற்று

தளிர்போலும் மேனி – உயர்திணை முதல் அ∴றிணை சினையுடன் மயங்கிற்று

இவை தவிர இவன் கலை மகளுக்கு ஒப்பாவான் என பால் மயங்கி வருதல் உண்டு. (எ.கா . செங்கோல் வீரக்கழல்) இவ்வாறு உருவகத்திலும் உவமையிலும் உயர்திணை அ∴றிணைகளும் சினை முதலும் தம்முள் மயங்கி வருதலும் இவை தவிர பிற தம்முள் மயங்கி வருதலும் உண்டு. இவை வழுவமைதியாகும். இதனை

**உருவக உவமையில் திணை சினை முதல்கள்**
**பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளவே** (நன் : 410)

என்னும் நூற்பா வாயிலாக நன்னூலார் தெளிவுபடுத்துகிறார்.

## பொருள்கோள்

பொருள்கோள் என்பது செய்யுளில் பொருள் அமைந்து நிற்கும் முறையாகும். பொருள் + கோள் எனப் பிரித்துப் புரிந்து கொள்ளலாம். பொருள் கொள்ளும் முறை என்பது பொருள். செய்யுளில் இடம்பெறும் சொற்களை உள்ளவாறும், முன்பின்னாக மாற்றியும் பொருள் கொள்ளும் முறை பொருள் கோள் எனப்படும். பொருள்கோள் எட்டு வகைப்படும். இதனை

**யாற்று நீர் மொழிமாற்று நிரல்நிரை விற்பூண்**

**தாப்பிசை அளைமறிபாப்பக் கொண்டு கூட்டு**

அடிமறி மொழி மாற்று எனப் பொருள் கோள் எட்டே (நன் : 411)

என்னும் நூற்பா வழி அறியலாம். அவை

1. யாற்று நீர்ப் பொருள்கோள்
2. மொழி மாற்றுப் பொருள்கோள்
3. நிரல் நிரைப் பொருள்கோள்
4. பூட்டுவில் பொருள்கோள்
5. தாப்பிசைப் பொருள்கோள்
6. அளை மறி பாப்புப் பொள்கோள்
7. கொண்டு கூட்டுப் பொருள்கோள்
8. அடிமறி மாற்றுப் பொருள்கோள்

என்னும் எட்டு வகைகளாகும். அவற்றை விளங்கிக்கொள்வது அவசியம்.

**1. யாற்று நீர்ப் பொருள்கோள்**

ஆற்று நீரானது முன்னும் பின்னும் திரும்பாது ஒரே சீராக இடையில் தடையின்றி செல்லும் ஆற்று நீரின் ஓட்டம் போலப் பாடலின் சொற்கள் நேராகப் பொருள் கொள்ளுமாறு அமைவது யாற்றுநீர் பொருள்கோள் ஆகும். இதனை ஆற்று நீர்ப் பொருள்கோள் என்றும் குறிப்பிடுவர். யாறு என்பது ஆறு ஆகும்.

எ.கா - சொல்லரும் சூல் பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்வியே மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தலே

இப்பாடலில் சொல் என்னும் எழுவாய், இருந்து, ஈன்று, நிறுவி என்னும் எச்சங்களை முறையாகக் கொண்டு காய்த்த என்னும் பயனிலையை ஈற்றில் பெற்று முடிந்துள்ளது. ஆற்று நீர் ஓட்டம் போல ஓர் ஒழுங்கு முறையுடன் இடையில் தடைபடவில்லை. சொற்களை முன் பின்னாக மாற்ற வேண்டிய நிலை இல்லை, ஒன்றோடொன்று அடுத்தடுத்துத் தொடர்ந்து நின்ற நிலையில் பொருள் கொள்ளும் முறையில் அமைந்துள்ளன. எனவே மொழிமாற்று முதலிய பிற பொருள்கோள்களைப் போன்று பிறழ்ந்து செல்லாமல் யாற்றுநீர் ஒழுங்கைப் போன்று அடிதோறும் சிறந்த பொருள் கொண்டு நடப்பது யாற்று நீர்ப் பொருள்கோள் ஆகும்.

**மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்**

**அற்று அற்று ஒழுகும் அ∴துயாற்றுப் புனலே (நன் : 412)**

என்னும் நூற்பா வாயிலாக மேற்குறித்த கருத்துக்களை அறிந்து கொள்ளலாம்.

2. **மொழிமாற்றுப் பொருள் கோள்**

செய்யுளில் அமைந்த சொற்களைப் பொருள் நிலைக்கு ஏற்ப ஓர் அடிக்குள் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொள்ளும் நிலை மொழிமாற்றுப் பொருள்கோள் ஆகும்.

எ.கா - சுரை ஆழ அம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலை என்ப

கானக நாடன் சனை

காடுகள் சூழ்ந்த நாட்டையுடைய அரசனது மலைச்சுனை, சுரைக்காய் மிதக்க அம்மி அமிழ மலை போன்ற யானைக்கு கால் நிலைக்கும் ஆழமும் முயலுக்கு நீந்தத்தக்க தன்மையும் உடையதாகும் என்பது கற்றறிந்தோர் கருத்தாகும். ஆனால் (சுனையில்) சுரைக்காய் ஆளும், உள்ளே போகும், அம்மி மேலே மிதக்கும், யானை நிற்க முடியாமல் நீந்தும், முயல் மூழ்காமல் நிற்கும் என்று பொருள் கொள்ளும்படியாக இப்பாடல் உள்ளது. இது பொருள் பொருத்தம் உடையதாக இல்லை. எனவே கீழ்க்கண்டவாறு ஒரே அடிக்குள் மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

சுரை மிதப்ப அம்மி ஆழ வரையனைய

யானைக்கு நிலை முயற்கு நீத்து என்ப

கானக நாடன் சுனை

என்ற பொருள் மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

முதல் அடியில் ஆழ என்னும் பயனிலைக்கு இயைந்த அம்மியை மிதப்ப என்னும் பயனிலைக்கும் மிதப்ப என்னும் பயனிலைக்கு இயைந்த சுரையை ஆழ என்னும் பயனிலைக்கும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் அடியில் நீத்து என்னும் பயனிலைக்கு இயைந்த முயலை நிலை என்னும் பயனிலைக்கும் நிலை என்னும் பயனிலைக்கு இயைந்த யானையை நீத்து என்னும் பயனிலைக்கும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஆனால் செய்யுளில் பயனிலைக்குப் பொருந்தும் சொற்களை மாற்றி ஏலாத பயனிலைகளை தனித்தனியே கூட்டி ஓரடிக்குள் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு பொருள் கொள்வது மொழி மாற்றுப் பொருள்கோள் ஆகும். இதனை

**ஏற்றப் பொருளுக்கு இயைபு மொழிகளை**
**மாற்றி ஓரடியுள் வழங்கல் மொழிமாற்றே (நன் : 413)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

3. **நிரல் நிறைப் பொருள் கொள்**

நிரல் நிறை என்பது வரிசை முறை ஆகும். பெயரும் வினையுமாகிய சொற்களை முறையாகவோ எதிராகவோ வரிசைப்பட நிறுத்திப் பொருள் கொள்வது நிரல் நிரைப் பொருள்கோள் ஆகும். இது இரு வகைப்படும். அவை

1. முறை நிரல் நிறை
2. எதிர் நிரல் நிறை

என்பனவாகும். அவற்றை சான்றுகளுடன் விளங்கிக் கொள்வது அவசியம்.

**முறை நிரல் நிறை**

சொற்களை நேருக்கு நேராக முறை மாறாமல் அமைப்பது முறை நிரல் நிரை ஆகும்.

எ.கா – அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை

பண்பும் பயனும் அது

இக்குறளில் அன்பு இல்வாழ்க்கைக்கு உரிய பண்பு என்றும் அறம் இல்வாழ்க்கையின் பயன் என்றும் சொற்கள் முறை மாறாமல் நிரல் நிறையாக அமைந்துள்ளன. எனவே இது முறை நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

**எதிர் நிரல் நிரை**

சொற்களை எதிர் எதிராக அமைப்பது எதிர் நிரல் நிறை ஆகும்.

எ.கா - களிறும் கந்தும் போல நளிகடல்

கூம்பும் கலனம் தோன்றும்

தோன்றல் மறந்த துறைகெழு நாடே

இப்பாடலில் களிறு போலக் கலனும் கந்து போலக் கூம்பும் தோன்றும் என எதிர் எதிராக நிறுத்திப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு சொற்களை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளும் முறைக்கு எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும். இதனை

**பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்**
**வேறு நிரனிறீஇ முறையினும் எதிரினும்**
**நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே (நன் : 414)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம். பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறு வேறு வரிசையாகக்

கொண்டு முறையாகவோ எதிராகவோ இதற்கு இது பயனிலை என்னும் பொருள்பட அமைத்துப் பாடுவது நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

4. **பூட்டுவில் பொருள்கோள்**

வில்லின் இரு முனைகளையும் நாண் பூட்டப்பெற்று இணைக்கும் செயல் வில் பூட்டு ஆகும். எனவே இதனை வில் பூட்டு பொருள்கோள் என்றும் கூறுவர். அவ்வாறே ஒரு பாடலின் இறுதிச் சொல்லும் முதற்சொல்லும் இணைந்து பொருள் முழுமை பெறுவதாக அமைப்பது பூட்டுவில் பொருள்கோள் ஆகும். இதனை ஓர் எடுத்துக்காட்டு வாயிலாக அறியலாம்.

எ.கா - திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடின் பெரிதாம் ஏதம் - உறந்தையர்கோன்
தண்ணார மார்பில் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு

இப்பாடலில் கதவு என்னும் இறுதிச் சொல் திறந்திடுமின் என்னும் முதல் சொல்லுடன் சேர்ந்து பொருள் முழுமை பெறுகிறது. அவ்வாறு சேர்ப்பது வில்லில் கயிறு பூட்டுவது போல் உள்ளது. பாடலின் முதலிலும் இறுதியிலும் நிற்கும் சொற்கள் தம்முள் பொருளை நோக்கி அமைந்திருப்பதால் இது பூட்டுவில் பொருள்கோள் ஆகும். இதனை

**எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்**
**பொருள்நோக் குடையது பூட்டுவில் ஆகும் (நன் : 415)**

என்னும் நூற்பா விவரிக்கின்றது.

5. **தாப்பிசைப் பொருள்கோள்**

தாம்பு இசை என்பது தாப்பு இசை ஆனது. தாம்பு என்பது ஊஞ்சல் கயிறு ஆகும். ஊஞ்சல் கயிறு முன்னும் பின்னும் செல்வது போன்று ஒரு பாடலின் நடுவில் அமைந்த சொல் அப்பாடலின் முன்னும் பின்னும் சென்று பொருள் தந்து நிற்குமாயின் அதனைத் தாப்பிசைப் பொருள்கோள் என்பர்.

எ.கா - உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு

இக்குறளில் இடையில் அமைந்துள்ள ஊன் என்னும் சொல் முன் சென்று ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை என்றும் பின் சென்று ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு என்றும் பொருள் தந்து நிற்கிறது. எனவே அது ஊஞ்சல் கயிறு முன்னும் பின்னும் செல்வது போன்று அமைந்திருப்பதைக் காணலாம். எனவே ஒரு செய்யுளில்

இடையில் நிற்கும் சொல், அதன் முதலிலும் ஈற்றிலும் சென்று இயைந்து பொருள் தருவது தாப்பிசைப் பொருள்கோள் ஆகும். இதனை

**இடைநிலை மொழியே ஏனையீ ரிடத்தும்**

**நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை** (நன் : 416)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**6. அளை மறி பாப்பப் பொருள்கொள்**

அளை மறி பாப்பு என்பதற்குப் புற்றினுள் நுழையும் பாம்பு என்று பொருள். பாம்பானது புற்றினுள் நுழைந்தவுடன் தானே மடங்கித் தலை மேலாகவும் வால் கீழாகவும் நிலைமாறும். அவ்வாறு மாறும் போது உடல்பகுதி முழுவதும் தலைப்பகுதியைத் தொட்டுக் கொண்டே செல்லும். அவ்வாறே பாடலின் ஒரு பகுதியுடன் பிற பகுதிகள் தொடர்பு கொண்டு பொருள் புலப்படுத்தும். இது அளைமறி பாப்புப் பொருள் கோள் ஆகும்.

எ.கா - தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து தண்டுண்றித் தளர்வார் தாமும்

சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியில் சுழல்வார் தாமும்

மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினை என்றே முனிவார் தாமும்

வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே.

இப்பாடல் எவ்வாறு அமைந்துள்ளதோ அவ்வாறே பொருள் கொண்டால் அது பொருந்தாது. எனவே வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே என்னும் ஈற்றடியினை பிற அடிகளுடன் இணைத்துப் பொருள் கொள்ள வேண்டும். அதுவே முழுமையான பொருளைத் தரும். இதனை

**செய்யுள் இறுதி மொழியிடை முதலினும்**

**எய்திய பொருள்கோள் அறைமறி பாப்பே** (நன் : 417)

என்னும் நூற்பா மூலம் அறியலாம். செய்யுளின் இறுதி அடி அதன் இடையிலும் முதலிலும் சென்று இயைந்து பொருள் தந்துள்ளது. எனவே இது அளை மறி பாப்பு பொருள்கோள் ஆகும்.

**7. கொண்டு கூட்டுப் பெருள்கோள்**

செய்யுளில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருள் அமைப்புக்கு ஏற்ப மாற்றிக் கொண்டு பொருள் காண்பது கொண்டு கூட்டுப் பெருள்கோள் எனப்படும்.

எ.கா - தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்

வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி

அஞ்சனத்து அன்ன பசலை தணிவாமே

வங்கத்துச் சென்றார் வரின்.

இப்பாடலின் சொற்களை உள்ளது போலவே வைத்துப் பொருள் கொண்டால் பொருத்தமும் தெளிவும் அமையாது. எனவே வங்கத்துச் சென்றார் வரின், அஞ்சனத்து அன்ன பைங்கூந்தலை உடையாள் மாமேனி மேல் தெங்கங்காய் போலத் திரண்டு உருண்ட, வெண்கோழி முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம் என்று மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு பல அடிகளின் சொற்களையும் கொண்டு கூட்டிப் பொருள்கொள்வது இதன் தனிச் சிறப்பாகும். இதனை

**யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை**
**ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே** (நன் : 418)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**8. அடிமறி மாற்றுப் பொருள்கோள்**

ஒரு பாடலின் அடிகளை முன்பின்னாக மாற்றி அமைத்தாலும் பொருளும் ஓசையும் மாறாமல் இருக்குமாறு அமைப்பது அடிமறி மாற்றுப் பொருள்கோள் ஆகும். அந்தந்த அடியில் பொருள் முடிந்து விட்டால் மட்டுமே அந்த அடியை எங்கு வேண்டுமாயினும் மாற்றி அமைக்க முடியும். இதனை ஓர் எடுத்துக்காட்டு வாயிலாக விளக்கலாம்.

எ.கா - ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்

ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்

வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.

இப் பாடலின் நான்கு அடிகளையும் முன் பின்னாக மாற்றினாலும் பொருள் மாறாது. ஆகவே இது அடி மறி மாற்றுப் பொருள்கோள் ஆகும். இதனை

**ஏற்புழி எழுத்துடன் கூட்டுறும் அடியவும்**
**யாப்பீறு இடைமுத லாக்கினும் பொருள்இசை**
**மாட்சியும் மாறா அடியவும் அடிமறி** (நன் : 419)

என்னும் நூற்பா விவரிக்கின்றது. பொருளுக்குப் பொருந்துமிடத்தில் கொண்டு கூட்டி உரைக்கும் அடியை உடையனவும் யாதேனும் ஓர் அடியை எடுத்து அச்செய்யுளின் இறுதி, நடு, முதல் ஆகிய இடங்களில் கொண்டு பொருத்தும் பொழுது பொருள் மாட்சியும் இசையும் மாறாமல் அமைந்துள்ளன. இத்தன்மையினால் இது அடிமறி மாற்றுப் பொருள்கோள் ஆகும்.

# இடையியல்

**இடைச் சொல்**

**இடைச் சொல்லின் பொது இலக்கணம்**

சொல்லதிகாரத்தின் நான்காம் இயலான இடையியலின் முதல் நூற்பா பொது இலக்கணம் உணர்த்துகிறது. வகைகளையும் சுட்டுகிறது.

1. தனித்து நடக்கும் தன்மை இல்லாதவை.
2. இது பெயர்ச் சொல், வினைச் சொல்லின் பின்னரோ முன்னரோ இடம்பெறும்.
3. இச்சொற்கள் ஓரிடத்தில் ஒன்றோ பலவோ வரும்.
4. பெயர்ச்சொல் அல்லது வினைச் சொல்லை இடமாகக் கொண்டு நிற்பவை; அதனால் இடைச் சொல் ஆயின. இவை 8 நிலைகளில் அமையும். அவற்றை அறிவது அவசியம்.

**வகைகள் (8)** **எடுத்துக்காட்டு**

1. வேற்றுமை உருபுகள் (பெயரியலில் இடம் பெற்றுள்ளன) - நூல்+ஐப்+படித்தான்
2. வினை உருபுகள் (பதவியலில் இடம் பெற்றுள்ளன) - நட+த்(ந்)+த்+ஆன்
3. சாரியை உருபுகள் (புணரியலில் இடம் பெற்றுள்ளன) - நட+த்(ந்)+த்+அன்+அன்
4. ஒப்பு உருபிடைச் சொல்(பொதுவியலில் இடம்பெற்றுள்ளன) -புலி போலப் பாய்ந்தான்
5. தத்தம் பொருள் தருபவை - எ, ஓ முதலியன
6. அசைநிலை - வேறு பொருள் உணர்த்தாது பெயர் வினையுடன் சார்த்திக் கூறப்படும்
7. செய்யுள் இசை நிறை - ஏஏ இவள் ஒரு பேடி (செய்யுளில் ஓசை நிறைக்கும்)
8. குறிப்பினால் பொருள் உணர்த்துவன - பொள் என ஆங்கே புறம் வேரார்

மேற்குறித்த எட்டு வகையினுள் அடங்கும் தனித்து நிற்க முடியாமல் பெயர்ச்சொல்லிடத்தும் அவற்றின் முன் பின் ஆகிய இடங்களில் ஒன்றோ பலவோ வந்து பொருந்தி நிற்கும்.

எ.கா – **ஒன்று** **பல**

குழையன் அது மற்றும் பெயர்ச்சொல்லின் பின் வந்தன

| | | |
|---|---|---|
| மற்றையவன் | இனி மற்றொன்று | பெயர்ச்சொல்லின் பின் வந்தன |
| உண்ணாய் | நடந்தன்னே | வினைச்சொல்லின் பின் வந்தன |
| அம்மபெரிது | சீ!சீ! போ | வினைச்சொல்லின் முன் வந்தன |

எனவே ஐ முதலிய வேற்றுமை உருபுகளும் வினை உருபுகளும் அன் ஆன் முதலிய சாரியைகளும் போல புரைய முதலிய உவம உருபுகளும் தத்தமக்குரிய பொருளை உணர்த்தும் எ, ஓ முதலியனவும் செய்யுளில் இசைநிறைத்தற்கே வருபனவும் அசையாக வருதலே பொருளாக நிற்பனவும் குறிப்பினால் வருதலே பொருளாக நிற்பனவும் குறிப்பினால் பொருள் உணர்த்தி வருபனவும் என்னும் இவ்வெட்டுநிலை சொற்களும் தனித்து நிற்கும் தன்மை இல்லாமல் பெயர்ச் சொல்லிடத்தும் வினைச் சொல்லிடத்தும் முன்னேயாயினும் பின்னேயாயினும் ஓரிடத்து ஒன்றாயினும் பலவாயினும் வந்து ஒன்றுபட்டு நிற்பது இடைச்சொல்லாகும். இதனை

**வேற்றுமை வினைசாரியை ஒப்பு உருபுகள்**
**தத்டதம் பொருள் இசைநிறை அசைநிலை**
**குறிப்பு எண் பகுதியின் தனித்து இயலின்றிப்**
**பெயரினும் வினையினும் முன்பின் ஓரிடத்து**
**ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல் (நன்:420)**

என்னும் நூற்பா வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

**இடைச் சொற்களும் அவற்றின் பொருட்களும்**

நன்னூல் விதிப்படி ஏ, ஓ, என, உம், தில், மன், மற்று, மற்றை, கொல், ஒடு, தெய்ய, அந்தில், ஆங்கு, அம்ம, மா என்பன இடைச்சொற்களாய் அமைவன. தெரிநிலை, தெளிவு, ஐயம், முற்று, எண், சிறப்பு எதிர்மறை, எச்சம், வினா, விருப்பம், ஒழிந்த சொல், பிரிநிலை, கழிவு, ஆக்கம் முதலியனவும் இவை போன்ற பிறவும் இடைச்சொற்களாகும்.

இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் பதினான்கும் பிறவும் தத்தம் பொருள் என்னும் நிலையில் அமையும்

1. அ, இ, உ -சுட்டுப்பொருள் தருவன
2. எ, ஏ, யா, ஆ - வினாப்பொருள் தருவன
3. பின், முன் - கால் பொருளையும் இடப்பொருளையும் தருவன
4. இனி - கால இடங்களில் எல்லைப் பொருள் உணர்த்துவன
5. தொறும் தோறும் - இடப்பன்மைப் பொருளையும் தொழிற் பயில்வுப் பொருளையும் தருவன

6. வாளா, சம்மா - பயனின்மைப் பொருளைத்தருவன

7. ஆவ, ஆதல்,ஆயின் - விகற்பப் பொருளைத் தருவன

8. ஐயோ, அந்தோ - இரக்கப் பொருளைத் தருவன

9. அ, அம்ம, ஒ - வியப்புப் பொருளைத் தருவன

10. ஐயோ, அம்ம - அச்சப்பொருளைத்தருவன

11. சீ,போ,சீச்சி - இகழ்ச்சிப் பொருளைத் தருவன

12. அம்மென, கடகடவென, படபடவென, ஒல்லென, திடுதிடுவென முதலியன - ஓசை ஒலிக்குறிப்பைத் தருவன

13. துண்ணென, திடுக்கென - அச்ச ஒலிக்குறிப்பைத் தருவன

14. பொள்ளென, கதுமென, சரேலென- விரைவு ஒலிக்குறிப்பைத் தருவன. இதனை,

**தெரிநிலை. தேற்றம், ஐயம், முற்று, எண், சிறப்பு,**

**எதிர்மறை, எச்சம் வினா, விழைவு. ஓழியிசை,**

**பிரிப்பு கழிவு, ஆக்கம், இன்ன இடைப்பொருள் (நன்:421)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**ஏகார இடைச்சொல்**

ஏகார இடைச்சொல் பிழரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறு பொருளில் வரும்.

| உணர்த்தும் பொருள் | | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. பிரிநிலை - | ஐவரில் நீயே தலைவன் | - ஒரு கூட்டத்திலிருந்து ஒருவனை மட்டும் பிரித்துக் காட்டுவதால் இது பிரிநிலைப் பொருளைத் தந்தது. |
| 2. வினா - | நீயே கொடுத்தாய்? | - வினாப் பொருளைத் தருவதால் இது வினாப்பொருள் ஏகாரம் |
| 3. எண் - | நிலமே, நீரே, காற்றே | - எண்ணப் பொருளில் வருவதால் எண்ணப் பொருள் ஏகாரம் |
| 4. ஈற்றசை - | வாழ்த்துதுமே | - வேறு பொருளைச் சுட்டாது இறதியில் |

நிற்றலால் ஈற்றசை ஏகாரமாகும்.

5. தேற்றம் - நன்றே சொன்னேன் - தேற்றப் பொருளைத் இது தேற்றேகாரம் ஆகும்.

6. இசைநிறை - ஒஓ என்ன அழகு - இது இசை நிறைத்தல் பொருட்டு வந்த ஏகார இடைச்சொல் ஆகும்.

சில இடங்களில் ‘நானே கொண்டேன்’ என வினவுகையில் ‘நான் கொண்டிலேன்’ என ஏகாரம் எதிர்மறைப் பொருளிலும் வரும். அவ்வாறே ‘ஏ ஏ பேதை’ என இகழ்ச்சிப் பொருள் தந்து நிற்பதும் உண்டு. எனவே புதியன புகுதல் என்னும் அடிப்படையில் ஏகார இடைச்சொல் எதிர்மறைப் பொருளிலும் இகழ்ச்சிப் பொருளிலும் இடம்பெறும். இதனை,

**பிரிநிலை வினா எண் ஈற்றசை தேற்றம்**

**இசை நிறை என ஆறு ஏகாரம்மே (நன்:422)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**ஓகார இடைச்சொல்**

ஓகார இடைச்சொல் ஒலியிசை, வினா, சிறப்பு, உயர்வு, இழிவு, எதிர்மறை, கழிவு, இசைநிலை, பிரிநிலை, திரிநிலை என்னும் எட்டுப் பொருளிலும் சில இடங்களில் ஐயப் பொருளிலும் வரும்.

**உணர்த்தும் பொருள் எடுத்துக்காட்டு**

1. ஒழியிசை - படிக்கவோ வந்தாய் (இல்லை விளையாட) - ஒழிந்த பொருளைத் தந்த ஒழியிசையாயிற்று

2. வினா - நீரோ நெருப்போ - வினாப் பொருளில் வந்துள்ளது

3. சிறப்பு - ஓ ஓ அழகு - உயர்வுப் பொருளில் வந்துள்ளது.
   ஓ ஓ கொடுமை - இழிவுப் பொருளில் வந்துள்ளது

4. எதிர்மறை - யானோ அரசன் (இல்லை) - எதிர்மறைப் பொருளில் வந்துள்ளது

5. தெரிநிலை - பாம்போ கயிறோ - தெளிவுபடுத்தும் நோக்கில் வந்ததால் தெரிநிலை ஓகாரம்

6. கழிவு - ஓ ஓ அழகு குலைந்தது - சிறப்பு கழிந்த பொருளில் வந்துள்ளது

7. அசைநிலை - காண்மின் + ஓ (காண்மினோ) – பொருளற்ற நிலையில் இறுதியில் வந்து அசைநிலையாயிற்று.

8. பிரிப்பு - அவர்களுள் இவனோ கொண்டான் - ஒருவரை மட்டும் பிரித்து உணர்த்துவதால் ஓகாரமாயிற்று

சில இடங்களில் இரண்டோ மூன்றோ என ஓகாரம் ஐயப் பொருளிலும் வரும். எனவே ஓகாரம் மேற்குறித்த எட்டு பொருண்மைகளில் அமைவதைக் காணலாம். இதனை

**ஓழியிசை வினாச் சிறப்பு எதிர்மறை தெரிநிலை**

**கழிவு அசைநிலை பிரிப்பு எனஎட்டு ஓவே (நன்:423)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**என என்று என்னும் இடைச்சொல்**

என எனும் இடைச்சொல் வினை, பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு என்னும் ஆறு பொருளில் இடம்பெறும்.

| உணர்த்தும் பொருள் | எடுத்துக்காட்டு |
|---|---|
| 1. வினை சார்பு | - மாணவன் பரிசு கிடைத்தது என மகிழ்ந்தான் |
| 2. பெயர் சார்பு | - கடலூர் என ஓர் ஊர் |
| 3. குறிப்பு சார்பு | - பொள் என ஆங்கே புறம்வேறார் |
| 4. இசை சார்பு | - மழை சோரெனப் பெய்தது |
| 5. எண் சார்பு | - ஒன்றென இரண்டென |
| 6. பண்பு சார்பு | - கருமை எனத் தோன்றினான். |

இவ்வாறே என்று என்னும் இடைச் சொல்லும் வினை, பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு என்னும் ஆறு பொருளில் இடம்பெறும். எடுத்துக்காட்டாக மேற்குறித்தவற்றில் என என்னும் இடைச் சொல்லிற்குப் பதில் என்று, என அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இதனை,

**வினைபெயர் குறிப்பஇசை எண்பண்பு ஆறினும்**

**எனவெனு மொழிவரும் என்றும் அற்றே (நன் : 424)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**உம் என்னும் இடைச்சொல்**

உம் என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண் (அளவை), தெரிநிலை, ஆக்கம் என்னும் எண்வகைப் பொருளைத் தரும்.

**உணர்த்தும் பொருள் எடுத்துக்காட்டு**

1. எதிர்மறை - வந்தாலும் வருவான் - உம் எனும் இடைச்சொல் வராமலும் இருப்பான்

என்னும் எதிர்மறைப் பொருளைத் தருகிறது.

2. சிறப்பு - கள்வரும் மயங்கும் நல்லிசை – உயர்வுச் சிறப்பு இழிவுச் சிறப்பு எனும் இருநிலைகளில் அமையும்

3. ஐயம் - ஒன்றாயினும் இரண்டாயினும் கொடு - ஒன்றைத் தெளிவுபடுத்திக் கூறாமல் ஐயப் பொருளைத் தந்துள்ளது.

4. எச்சம் - தாயும் வந்து விட்டார் - தந்தை முன்பே வந்து விட்டார் என குறைந்து நின்ற பொருளைச் சுட்டுகிறது. இது இறந்தது தழுவிய எச்சம் எதிரது தழுவிய எச்சம் என இருவகைப்படும்.

இராமனும் வந்தான் - முன்பு சீதையும் வந்தாள் என பொருளைத் தருவதால் இறந்தது தழுவிய எச்சமாகும்.

சீதையும் வருவாள் - இப்பொருளை உணர்த்துமாயின் எதிரது தழுவிய எச்சமாகும்.

5. முற்று - ஐந்தமிழும் நன்கறிவார் - முழுமைப் பொருளைத் தருவதால் முற்றும்மை ஆகும்.

6. எண் - காயும் கனியும் - இரண்டையும் எண்ணுதலால் எண்ணும்மை ஆகும்.

7. தெரிநிலை - பாம்பும் அன்று கயிறும் அன்று – தெளிவற்ற நிலையில் உம்மை அமைந்து தெரிநிலை ஆயிற்று.

8. ஆக்கம் - மருந்துமானது – உணவுமானது என ஆக்க உம்மை ஆயிற்று.

இத்தகைய உம்மை இடைச் சொல்லை நன்னூலார்

**எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை**

**தெரிநிலை ஆக்கமொடு உம்மை எட்டே (நன்:425)**

என்னும் நூற்பா வாயிலாக விவரிக்கிறார்.

**முற்றும்மைக்குச் சிறப்பு விதி**

முற்றுப் பொருளைத் தரும் உம்மை இடைச்சொல் முற்றும்மை எனப்படும்.

எ.கா - எல்லோரும் வந்தனர்

முற்றுப்பொருளைத் தந்த முற்றுமை சில இடங்களில் எச்ச உம்மையாக நின்று பொருள் தரும்.

எ.கா – எல்லோரும் வந்திலர்

சிலர் வந்தனர் எனப் பொருள்படுவதால் இவ் உம்மை எச்ச பொருளைத் தந்துள்ளது. எனவே முற்றும்மை சில இடங்களில் எச்சப் பொருளைத் தரும். இதனை,

**முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும் (நன் : 426)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**எச்ச உம்மைக்குச் சிறப்பு விதி**

உம்மை என்னும் இடைச்சொல் எச்சப் பொருளைத் தந்தால் அது எச்ச உம்மையாகும். பெயர் வினைகளில் எண்ணிடைச்சொல் தொக்கி நிற்றல் உண்டு. இதனைச் செவ்வெண் என்பர். செவ்வெண்ணில் எச்ச உம்மை வருமாயின் அது ஈற்றில் இடம்பெறும்.

எ.கா – கல்வி செல்வம் ஒழுக்கம் குடிப்பிறப்பும் பெறுவாரும் உளர்

இங்கு இவற்றுள் சில பெறுவாரும் உண்டு எனப் பொருள்படும் எச்ச உம்மை செவ்வெண்ணில் ஈற்றில் அமைந்துள்ளது. எனவே எச்சப் பொருளில் வரும் உம்மை செவ்வெண்ணில் வருமாயின் அது ஈற்றில் இடம் பெறும். இதனை,

**செவ்வெண் ஈற்றதாம் எச்ச வும்மை (நன் : 427)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**சில எண்ணிடைச் சொற்கள் - சிறப்பு விதி**

எண்ணிடைச் சொற்கள் இவர்களுக்கிடையில் மறைந்து வந்து இடைச்சொல் பொருளை உணர்த்தும். இத்தகைய சொற்களே எண்ணிடைச் சொற்கள் ஆகும்.

எ.கா - சாத்தன் கொற்றன் இருவரும் வந்தனர்.

இதில் அமைந்துள்ள பெயர்களின் எண்ணிடைச் சொல் மறைந்துள்ளது. இது செவ்வெண்ணாகும். இவ்வாறு அமைந்துள்ள செவ்வெண் 'இருவரும்' எனத் தொகைச் சொல்லைப் பெற்று அமைந்துள்ளது. இதனுடன் பெயரொடு தொகாது வரும் ஏ, என, என்று என்னும் சொற்களும் சேர்ந்து நான்கும் எண்ணிடைச் சொற்கள் ஆகும்.

எ.கா – சாத்தனே கொற்றனே இருவரும் வந்தனர்.

சாத்தன் எனா கொற்றன் எனா இருவரும் வந்தனர்.

சாத்தன் என்று கொற்றன் என்று இருவரும் வந்தனர்.

ஏ, என, என்று என்பன தொகை பெறாமல் வரும். வழக்கில் அதனை இசையெச்சமாகக் கொள்ள வேண்டும். செய்யுளில் தொகுத்தல் விகாரமாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

உம், என்று, என, ஓடு என்னும் நான்கு எண்ணிடைச் சொற்களும் தொகைச் சொல்லைப் பெற்றோ பெறாமலோ அமையும்.

எ.கா - சாத்தனும் கொற்றனும் இருவரும் வந்தனர்.

சாத்தனும் கொற்றனும் வந்தனர்.

சாத்தனென்று கொற்றனென்று இருவர் உளர்

சாத்தனென்று கொற்றனென்று உளர்

சாத்தனோடு கொற்றனோடு இருவர் உளர்

சாத்தனோடு கொற்றனோடு உளர்

எனவே பெயர்களிடத்தே எண்ணிடைச்சொல் தொக்கி வரும் செவ்வெண்ணும் ஏ, என்று, என தொகாமல் வரும் எண்ணடைச் சொற்களுமாகிய நான்கும் தொகைச் சொல்லைப் பெற்று வரும். உம், என்று, என, ஓடு ஆகிய நான்கு எண்ணிடைச் சொற்களும் தொகை பெற்றும் பெறாமலும் வரும். இதனை,

**பெயர்ச்சொல் வெண்ஏ என்றா எனாஎன்**

**நான்கும் தொகைபெறும் உம்மை என்று எனஓடு**

**இந்நான்கும் எண்ணும் அஃதின்றியும் இயலும்** (நன் : 428)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்கால்**

**தீயெச்சம் போலத் தெறும்** (குறள் : 674)

இக்குறளில் என்று என்னும் எண்ணிடைச் சொல் எண்ணப்படும் பொருளான வினை, பகையினை, வினை என்று, பகை என்று என இரண்டிடத்தும் நில்லாமல் ஓரிடத்தில் நின்று எண்ணப்படும் பொருள்தோறும் சென்று பொருள் உணர்த்துகிறது. இவ்வாறே என, ஓடு என்னும் எண்ணிடைச் சொற்களும் ஓரிடத்தில் நின்று எண்ணப்படும் பொருள்தோறும் சென்று பொருளை உணர்த்தும்.

எ.கா - பகைபாவ மச்சம் பழியென நான்கும் - என

பொருள்கருவி, காலம் வினையிடனோ டைந்தும் - ஓடு

என்று, என, ஓடு என்னும் இம்மூன்று எண்ணிடைச் சொற்களும் எண்ணப்படும் பொருள்கள் தோறும் நில்லாமல் ஓரிடத்தில் நிற்பினும் நின்ற இடத்தில் நின்றே எண்ணப்படும் பொருள்கள் தோறும் சென்று பொருந்தும். இதனை,

**என்றும் எனவும் ஒடவும் ஓரோவழி**

**நின்றும் பிரிந்துஎண் பொருள்தோறும் நேரும்** (நன் : 429)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**எண்ணிடைச் சொற்கள் வினையொடும் வருதல்**

பெயர்ச் சொற்களோடு எவ்வாறு எண்ணிடைச் சொற்கள் பொருந்திப் பொருளை உணர்த்தினவோ அவ்வாறே சில எண்ணிடைச் சொற்கள் வினைச் சொல்லோடும் பொருந்தி நின்று பொருளை உணர்த்தும்.

எ.கா - மயிலாட குயிலாட மாமுகில் எழுந்தது - செவ்வெண்

கற்றும் கேட்டும் கற்பனை செய்தார் - உம்

உண்ணவென்று உடுக்கவென்று வந்தான் - என்று

உண்ணவென உடுக்கவென வந்தான் - என

உண்ண உடுக்க வென்று வந்தான் - என்று (பிரிந்து கூடும் இயல்பு)

இவ்வெடுத்துக்காட்டுகளில் வினைச் சொற்களோடு செவ்வெண் உம்மை, என்று, என என்னும் எண்ணிடைச் சொற்கள் பொருந்தி நின்று பொருள் உணர்த்துவதைக் காணலாம். சில எண்ணிடைச் சொற்கள் வினைச் சொல்லோடு வந்தாலும் பெயரோடு வந்தாற்போல் அமையும்.

**வினையொடு வரினும்எண் இனைய ஏற்பன (நன் : 430)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**தில் என்னும் இடைச்சொல்**

தில் என்னும் இடைச்சொல் விழைவு (வேட்கை), காலம், ஒழியிசை என்னும் மூன்று பொருளை உணர்த்துவனவாக அமையும்.

**உணர்த்தும் பொருள் எடுத்துக்காட்டு**

1. விழைவு (ஆசை) - அரிவையைப் பெறுகதில் லம்ம யானே – அரிவையைப் பெறும்
ஆசையை உணர்த்துவதால் விழைவு ஆயிற்று

2. காலம் - பெற்றாங் கறிகதில் லம்ம இவ்வூரே - காலம்
உணர்த்தப்படுவதால் காலப் பொருள் ஆயிற்று.

3. ஒழியிசை - வருவதில் வலம் எஞ்சேரி சேர - இன்னது செய்வேன் என்னும்
ஒழிந்த பொருளை உணர்த்துவதால் ஒழியிசை ஆயிற்று

**விழைவே காலம் ஒழியிசை தில்லே (நன் : 431)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**மன் என்னும் இடைச் சொல்**

மன் என்னும் இடைச் சொல் அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு என ஆறு பொருளை உணர்த்தும்.

**உணர்த்தும் பொருள் எடுத்துக்காட்டு**

1. அசைநிலை - அதுமன் தோழி அவரது தேரே – வேறு பொருளின்றி சாத்தப்பட்டு நிற்றலால் அசைநிலை ஆயிற்று
2. ஒழியிசை -கூறிய வாள்மன் (முன்பு கூர்மையாக இருந்தது) - இப்பொழுது ஒடிந்து விட்டது என்னும் பொருளை உணர்த்துவதால்ஒழியிசை ஆயிற்று
3. ஆக்கம் - பண்டு காடுமன் - இன்று வயல் ஆயிற்று என்னும் பொருளை உணர்த்துவதால் ஆக்கமாகும்.
4. கழிவு - சிறியகட் பெரினே எமக்கீயும் மன்னே - இப்பொழுது அவன் இறந்ததால் எமக்கு ஈதல் இல்லை என்னும் கழிவுப் பொருள் ஆயிற்று
5. மிகுதி - எந்தை எமக்கு அருளுமன் - மிகுதியும் அருள்வான் என்னும் பொருள் தருவதால் மிகுதியாயிற்று
6. நிலைபேறு - மன்னியது புரியுமோ – நிலை பெறாத உலகத்தில் நிலை பெற்றதைச் செய் என்னும் பொருளைத் தருவததால் நிலைபேறு ஆயிற்று.

**மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்**
**கழிவு மிகுதி நிலைபேறு ஆகும் (நன் : 432)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**மற்று என்னும் இடைச்சொல்**

மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்றுப் பொருளிலும் அசைத்து நிற்கும் பொருளிலும் பிரிதென்னும் பொருளிலும் வரும்.

**உணர்த்தும் பொருள் எடுத்துக்காட்டு**

1. வினைமுற்று - மற்றறிவாம் நல்வினை – வினைமாற்றி உணர்த்தும் பொருளில் இடம் பெற்றுள்ளது.
2. அசைநிலை - மற்றென்னை ஆள்க – வேறு பொருளை உணர்த்தாது நின்று அசைநிலைப் பொருளில் வந்துள்ளது.

3. வேறு எனும் பொருள் - மற்றொன்று சூழினும் - ஊழ்வினைக்கு மறுதலையான

உபாயத்தை உணர்த்தி பிரிது பொருளை உணர்த்தி நிற்கிறது.

**வினைமாற்று அசைநிலை பிறிதெனும் மற்றே (நன் :433)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**மற்றை என்னும் இடைச்சொல்**

மற்றை என்னும் இடைச்சொல் ஒன்றிற்குப் பதிலாக மற்றதை உணர்த்தி நிற்கும் வகையில் அமையும். இரண்டு பழங்கள் உள்ளவிடத்து ஒன்றைக் கண்ட ஒருவர் அதனை வேண்டாது மற்றையதைக் கொண்டுவா எனக் கூறினால் அதற்கு இனமான மற்றொன்றை ‘மற்றையது’ என்னும் சொல் உணர்த்தும். மற்றையது எனவரும் இம் ‘மற்றை’ என்னும் இடைச்சொல் முன்சுட்டின பொருளை ஒழித்து அதற்கு இனமான பொருளைக் குறிக்கும். இதனை,

**மற்றையது என்பது சுட்டிய தற்குஇனம் (நன் :434)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**கொல் எனும் இடைச் சொல்**

கொல் எனும் இடைச் சொல் ஐயப் பொருளையும் அசைநிலையையும் உணர்த்தும்.

**உணர்த்தும் பொருள் எடுத்துக்காட்டு**

1. ஐயம் - அதுகொல் தோழி காமநோயே – காம நோயா வேறா என்னும்

ஐயப் பொருளைத் தந்துள்ளது

2. அசைநிலை - கற்றதனால் ஆய பயன் என்கொல் - வேறு எப்பொருளையும்

சுட்டாமல் அசைநிலைவயாக வந்துள்ளது.

**கொல்ல ஐயம் அசைநிலைக் கூற்றே (நன் : 435)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**ஓடு தெய்ய என்னும் இடைச் சொற்கள்**

ஓடு தெய்ய என்பன பொருளற்ற நிலையில் இசையை நிறைக்கும் பொருட்டு அமையும் இடைச்சொற்கள் ஆகும்.

எ.கா - விதைக்குறு வட்டில் போதொடு பொதுள

சொல்லேன் தெய்ய நின்னொடும் பெயர்த்தே

இச்செய்யுள் தொடர்களில் இடம் பெற்றுள்ள ஓடு தெய்ய என்னும் இடைச் சொற்கள் இசையை நிறைத்தற் பொருட்டு அமைந்துள்ளதைக் காணலாம்.

**ஓடுவும் தெய்ளயவும் இசைநிறை மொழியே (நன் : 436)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**பிற இடைச்சொற்கள்**

அந்தில், ஆங்கு, ஆம், அம்ம, மா, தாம், தான், கின்று, நின்று முதலிய பிற இடைச்சொற்களும் வழக்கில் உண்டு. இதனை எடுத்துக்காட்டுகள் வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

ஆந்தில், ஆங்கு என்பன அசைநிலை இடம் ஆகிய பொருள்களில் அமையும்.

| | | |
|---|---|---|
| அந்தில் | அசை நிலை | அந்திற் கழலினன் |
| | இடம் | வருமே சேயிலை அந்தில் கொழுநற் காணிய |
| ஆங்கு | அசைநிலை | ஆங்கத் திறனல்ல யாம் கழற |
| | இடம் | ஆங்கு ஆயினும் ஆகுக |
| அம்ம | உரையசை | அது மற்ற அம்ம |
| | ஏவல் | அம்ம வாழி தோழி ! |
| மா | வியங்கோள் அசை | புற்றை உண்க மா கொற்கையானே |
| ஆம் | பனியுமாமென்றும் பெருமை | |
| தாம் | நீர்தாம் | |
| தான் | நீதான் | |
| கின்று | விரும்புகின்றேன் | |
| நின்று | துணையாய் நின்றான் | |

இவ்வாறு பொருளற்ற நிலையில் சார்த்தி உரைக்கப்படும் நிலையில் இவ்வகைச் சொற்கள் எல்லா இடத்தும் இடம்பெறுவதைக் காணலாம்.

**யாகா பிறபிறக்கு அரோபோ மாதுஇகும்**

**சின்குரை ஓரும்போலும் இருந்து இட்டு**

**அன்றுஆம் தாம்தான் கின்றுநின்று அசைமொழி (நன் : 441)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**முன்னிலை அசைச் சொற்கள்**

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ. யாழ என்பன முன்னிலையினை விளித்துக் கூறும்பொழுது அசைச் சொற்களாய் அமையும் இடைச் சொற்கள் ஆகும்.

எ.கா - மியா – கேண்மியா

மோ – மொழிமோ

மதி – சொல்மதி

} பிறவும் இவ்வாறே வரும்

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஓரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று என்னும் இருபது இடைச் சொற்களும் எல்லா இடத்தும் வருவனவாகும்.

எ.கா - யா – யா பன்னிரவர் மாணாக்கர்

பிற – அல்ல மற்றுப் பிற

அரோ – குயிலாலும் அரோ

இகும் - காண்டிகும் அல்லமோ

சின் - என்றிசின்

ஆம் - பணியுமாம் என்றும் பெருமை

இவ்வாறே பிற இடைச்சொற்களும் அமைந்து வரும்.

## உரியியல்

உரியியலில் உரிச்சொற்களின் இயல்புகள் விவரிக்கப்படுகின்றன. சொல்லதிகாரத்தின் இறுதி இயலாக அமையும் உரியியலின் முதல் நூற்பா உரிச் சொல்லின் பொது இலக்கணத்தையும் அதன் வகைகளையும் விவரிக்கிறது.

**பொது இலக்கணம்**

உரிச் சொல்லின் பொது இலக்கணங்களாக

1. செய்யுளுக்கு உரிமை உடையது

2. பல்வகைப்பட்ட பண்புகளை வெளிப்படுத்துவது

3. பெயர்ச் சொல் வினைச் சொற்களை விட்டு நீங்காதவை

ஆகிய பண்புகளைக் குறிப்பிடலாம். இசை ( ஓசை ) (மனத்தாற் குறித்துணரப்படுவது) பண்பு (புலன்களால் உணரப்படுவது) ஆகியவற்றை உணர்த்தும் சொற்கள் தனித்து நிற்கும் ஆற்றல் இன்றி பெயர் வினைகளைச் சார்ந்து அவற்றின் பண்புகளைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைகின்றன.

எ.கா - உறு புகழ் - 'உறு' என்பது மிகுதி என்னும் பொருளில் புகழ் என்னும் பெயரின் பண்பை உணர்த்துகிறது.

சாலப் பேசினான் - 'சால' என்பது மிகுதி என்னும் பொருளில் வினையின் பண்பை உணர்த்துகிறது.

உறு, சால என்னும் உரிச்சொற்கள் தனித்து நிற்கும் ஆற்றலின்றி பெயர் வினைகளை சார்ந்து நின்று அவற்றின் பண்புகளை உணர்த்துகின்றன. இவ் உரிச் சொற்கள்,

பலகுணம் தழுவிய ஒரு சொல்லாகவும்
ஒரு குணம் பல குணம் தழுவிய ஒரு சொல்லாகவும்
ஒரு குணம் தழுவிய பல சொல்லாகவும்

அமையும் ஆற்றல் உடையவை.

சால, தவ, நனி, உறு கூர், கழி என்பன மிகுதி என்னும் ஒரு பண்பைத் தெளிவு படுத்தும் பல உரிச் சொற்களாகும். எனவே இவை ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள் ஆகும்.

கடி என்னும் ஓர் உரிச்சொல் காவல், கூர்மை, மணம், விரைவு, மிகுதி, ஆர்த்தல், கரிப்பு என்னும் பல பொருளைத் தரும். எனவே இது பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் ஆகும்.

எனவே இசையும், குறிப்பும், பண்பும் ஆகிய பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி அவ்வாறு உணர்த்தும் பொழுது ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவனவும் பல குணங்களை உணர்த்துவனவுமாக செய்யுளுக்கு உரியனவாய் பொருளுக்கு உரிமை பூண்டு நிற்பன உரிச்சொற்களாகும். நன்னூலார்,

**பல்வகைப் பண்பும் பகர் பெயர் ஆகி**
**ஒரு குணம் பல குணம் தழுவிப் பெயர்வினை**
**ஒருவர் செய்யுட்கு உரியன உரிச்சொல் (நன் :442)**

என்னும் நூற்பா வாயிலாக உரிச்சொல் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

ஒரு குணம் தழுவிய பல உரிச் சொல்

வகை இரண்டு

பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல்

இவ்அட்டவணை வாயிலாக உரிச்சொல்லின் வகைகளை விளங்கிக்கொள்ளலாம்.

**பண்பின் இலக்கணம்**

உரிச் சொல் பல்வகைப் பண்புகளைத் தெரிவிக்கும். உயிருடையதும் உயிரற்றதுமாகிய இரு வகையுள் அடங்கும். உலகத்தில் உள்ள அனைத்துப் பொருட்களின் குணங்களும் பண்பு எனப்படும். பண்பு என்பது யாது? பண்புடைய பொருள்களின் வகைகள் யாவை? பண்பின் வகைகள் யாவை? முதலானவற்றை நன்னூல் ஆசிரியர் உரியியலில் விளக்கியுள்ளார்.

**உயிர், உயிர் அல்லதாம் பொருட்குணம் பண்பே** (நன் :443)


என்னும் நூற்பா மேற்குறித்த கருத்தினை விவரிக்கின்றது.

**உயிர்ப் பொருள்**

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் உணர்ச்சியாகிய உறு, சுவை, நாற்றம், ஓசை முதலியவற்றை அறியுமிடத்து மெய்யால் உற்று உணரும் உணர்ச்சி முதலாகக் கீழ்ப்போன உணர்ச்சிகளையும் கொண்டு சுவை, ஒளி, நாற்றம், ஓசையென மேல் வரும் புலன்களை ஒன்றோடு ஒன்றாக உணர்தலின் ஓரறிவு உயிர் முதலாக உயிர் ஐந்து வகைப்படும். மெய், வாய், கண், மூக்கு, செவி முதலாக வரும் அறிவுகளின் அடிப்படையில் உயிர்களை ஐந்து வகைப்படுத்துவர்.

பொருள் வகை

உயிர்ப் பொருள் உயிரல்லாப் பொருள்




ஓரறிவுயிர்

மெய்யைத் தொட்டு தொடுதல் உணர்வை அறியும் உயிர்கள் ஓரறிவுயிர்களாகும். எடுத்துக்காட்டாக புல், மரம் முதலியனவற்றைக் குறிப்பிடலாம். இதனை

**புல் மரம் முதலஉற்று அறியும்ஓ ரறிவுஉயிர் (நன் : 445)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

ஈரறிவுயிர்

தொடுதல் உணர்வும், சுவை உணர்வும் உடையன ஈரறிவுயிர்களாகும்.

எடுத்துக்காட்டாக இப்பி (சிப்பி), சங்கு, கிளிஞ்சல் முதலியன மெய்யறிவுடன் நாவால் சுவையை அறியும் அறிவுடையன. எனவே இவை ஈரறிவுடையனவாகும். இதனை,

**முரள்நன் சூஆதிநா வறிவோடுஈ ரறிவுயிர்** (நன் : 446)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

மூவறிவுயிர்

தொடுதல், சுவை, நாற்றம், ஆகிய மூன்றையும் அறியும் அறிவுடையன மூவறிவுயிர்களாகும்.

எடுத்துக்காட்டாக எறும்பு, கரையான், செல், அட்டை முதலியவற்றைக் குறிப்பிடலாம். இதனை,

**சிதல் எறும்பு ஆதிமக்கு அறிவின்மூ வறிவுயிர்** (நன் : 477)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**நான்கறிவுயிர்**

தொடுதல், சுவை, நாற்றம், ஒளி (மெய் + நா + மூக்கு + கண்) ஆகியவற்றை அறியும் இயல்புடையவை நான்கறிவுயிர்களாகும்.

எடுத்துக்காட்டாக தும்பி, வண்டு, நண்டு, தேனீ, முதலியனவற்றைக் குறிப்பிடலாம். இதனை

**தும்பி வண்டு ஆதிக்கண் ணறிவின்நா லறிவுயிர் (நன் : 488)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**ஐந்தறிவுயிர்**

தொடுதல், சுவை, நாற்றம், ஒளி (மெய் + நா + மூக்கு + கண் + செவி) ஆகியவற்றோடு செவியறிவையும் உடையவை ஐந்தறிவுயிர்களாகும்.

எடுத்துக்காட்டாக தேவர், மக்கள், நரகர், விலங்கு, புள் (பறவை) முதலியனவற்றைக் குறிப்பிடலாம். இதனை,

**வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்**
**ஆதிசெவி அறிவோடு ஐயறி வுயிரே (நன் : 449)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**உயிர் இல்லாப் பொருள்கள்**

அறிவு மயமாகிய உயிர் நீங்கிய உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்கள் எல்லாம் உயிரல்லாத பொருட்கள் ஆகும். இதனை,

**உணர்விய லாம்உயிர் ஒன்றும் ஒழிந்த**
**உடன்முதல் அனைத்தும் உயிரல் பொருளே (நன் :450)**

என்னும் நூற்பா விவரிக்கின்றது.

**முன்னூற்பாவிற்குப் புறனடை**

உடலும் அதனுள் இருக்கும் உயிரும் ஒன்றுபோல் தோன்றலாம். ஆனால் உயிர் நிலையானது. அறியக்கூடியது. உடல் அழியக்கூடியது. அறியும் தன்மை இல்லாதது. உயிர் வேறு, உடல் வேறு ஆகும். இவை ஒன்றுபோல் தோன்றினாலும் அறிவுள்ளதாகவும் இல்லாததாகவும் நிற்கும் வேற்றுமையினால் உயிரும் உடலும் வேறாக விளங்குகிறது. இக்கருத்தை

**ஒற்றுமை நயத்தின் ஒன்று எனத் தோன்றினும்**
**வேற்றுமை நயத்தின் வேறே உடல் உயிர் (நன் : 451)**

என்னும் நூற்பா விளக்குகிறது.

**உயிருடைப் பொருள்களின் குணப்பண்பு**

அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நினைவு, வெறுப்பு, உவப்பு, இரக்கம், நாண், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறவி என்னும் உடம்போடு கூடிய உயிர்களின் குணப்பண்பு முப்பத்திரண்டு என்பதைப் பின்வரும் நூற்பா விவரிக்கிறது.

**அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம்**
**நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல்**
**நினைவு, வெறுப்பு, உவப்பு, இரக்கம், நாண், வெகுளி**
**துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல்**
**துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல்**
**வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம்**
**மறவி, இனைய உடல் கொள் உயிர்க் குணம்** (நன் : 452)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**உயிருடைப் பொருள்களின் தொழிற் பண்பு**

உடம்போடு கூடிய உயிர்களின் தொழிற் பண்புகள் ஐந்து ஆகும். அவற்றை விளங்கிக் கொள்வது அவசியம்.

1. துய்த்தல் - அனுபவித்தல்
2. துஞ்சல் - தூங்குதல்
3. தொழுதல் - வணங்குதல்
4. அணிதல் - அணிந்து கொள்ளுதல் (ஆடை, அணி)
5. உய்த்தல் - செலுத்துதல்

ஆகிய ஐந்து பண்புகளையும் உயிர்களின் தொழிற் குணங்களாகக் கொள்ளலாம். இவற்றுடன் வாழ்த்துதல், அரற்றுதல், வரைதல் என்னும் பிற குணங்களும் அமைந்து வரும்.

**துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்**
**உய்த்தல் ஆதி உடலுயிர்த் தொழிற்குணம்** (நன் : 453)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**உயிரற்ற பொருளின் குணப்பண்பு**

உயிருள்ள பொருள்களின் குணப்பண்புகளைப் போன்று உயிரற்ற பொருள்களுக்கும் குணப்பண்புகள் உள்ளன. அவற்றை விளங்கிக் கொள்வது அவசியம்.

1. வட்டம், சதுரம் முதலான வடிவங்கள்

2. நறு நாற்றம், தீ நாற்றம் எனும் இரு நாற்றங்கள்

3. வெண்மை, செம்மை, கருமை, பசுமை, பொன்மை என்னும் ஐவகை வண்ணங்கள்

4. கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, இனிப்பு, கார்ப்பு என்னும் அறுவகை சுவைகள்

5. வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்ம்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை

என்னும் எண்வகை ஊறுகள் (தொடுவுணர்வுகள்) முதலியன உயிரற்ற பொருள்களின் குணங்களாகும்.

**பல்வகை வடிவுஇரு நாற்றம் வண்ணம்**

**அறுசுவை ஊறுஎட்டு உயிரல் பொருட்குணம்** **(நன் : 454)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**உயிருள்ள, உயிரற்ற பொருள்களின் பொதுத் தொழிற்பண்பு**

உயிருள்ள, உயிரற்ற பொருட்களுக்கு பொதுப் பண்புகள் சில உள்ளன. அவை, தோன்றல், மறைதல், வளர்தல். சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல் என்னும் ஒன்பதும் இவை போன்ற பிறவும் (அசைதல்) ஆகியன இருவகைப் பொருளுக்கும் பொதுவாகிய தொழிற் பண்புகள் ஆகும்.

**தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்**

**நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்**

**ஈதல் இன்னை இருபொருள் தொழிற்குணம்** **(நன் : 455)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஒரு குணம் தழுவிய உரிச்சொல்**

சால, தவ, நனி, உறு, கூர், கழி என்னும் ஆறும் மிகுதி என்னும் ஒரு குணம் தழுவிய உரிச்சொற்களாகும்.

எ.கா – சாலச்சிறந்தது - சால

உறுமீன் - உறு

தவமகன் - தவ

நனிபேதை - நனி

களி கூர்மனம் - கூர்

கழி பேருவகை - கழி

சால, தவ, நனி, உறு, கூர், கழி என்பன பெயர்ச்சொல் வினைச் சொல் போலத் தனித்து நின்று பொருளை உணர்த்தாமல் பெயர்ச்சொல்லையோ, வினைச் சொல்லையோ சார்ந்து நின்று அவற்றின் குணத்தை உணர்த்துகின்றன. இவை அனைத்தும் மிகுதி என்னும் ஒரு பொருளை மட்டுமே சுட்டி நிற்கின்றன. எனவே சால, தவ, நனி. உறு, கூர், கழி என்னும் ஆறும் மிகுதியாகிய குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாகும். அதனால் இவை ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள் ஆகும்.

**சால் உறுதவ நனிகூர் கழிமிகல் (நன் : 456)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல்**

ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்களைப் போன்று பல குணம் தழுவிய ஓர் உரிச் சொற்களும் உண்டு. சொல் ஒன்று. ஆனால் அது உணர்த்தும் பொருள் (குணம்) பல என்பது இவ்வகை.

எ.கா - கடி

கடி என்பது சொல் ஆகும். இது 13 பொருள்களை உணர்த்தும். அவை காவல், கூர்மை, விரைவு, மணம், விளக்கம், அச்சம், சிறப்பு, வரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், மன்றல், கரிப்பு என்பனவாகும்.

எடுத்துக்காட்டு

கடி நகர் - காவல் - காவலை உடைய நகர்

கடி வேல் - கூர்மை - கூர்மையான வேல்

கடி சென்றான் - விரைவு – வேகமாகச் சென்றான்

கடிமலர் - மணம் – மணமுள்ள மலர்

கடிமணம் - புதுமை – புதிய மணம் (திருமணம்)

கடிமார்பு – விளக்கம் - அகன்று விளங்கும் மார்பு

கடியரம் களிர்க்கே - அச்சம் - அச்சத்தின் இயல்பு கூறுதல்

அம்புதுஞ்சும் கடியரண் - சிறப்பு - அரணின் சிறப்பு கூறுதல்

கடிகற்று - மிகுதி

கடிமுரசு - கரிப்பு

கடிவினை - மன்றல்

கடி மது நுகர்வு – வரைவு

**கடிஎன் கிளவி காப்பே கூர்மை**
**விரைவே விளக்கம் அச்சம் சிறப்பே**
**வரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்**
**விரைவே மன்றல் கரிப்பின் ஆகும் (நன் : 457)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல்** (1)

பல உரிச்சொற்கள் உணர்த்தும் குணம் (பொருள்) ஒன்று. எனவே இவ்வகை உரிச்சொற்கள் ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள் ஆகும்.

சால, தவ, நனி, உறு, கூர், கழி என்பன ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல் ஆகும். இவை பெயர் வினையைச் சார்ந்தே அமையும். தனித்து நின்று பொருள் தராது.

'ஆயிழை நொடியும்' என்னும் தொடரிலுள்ள 'நொடி' என்பது பெயரைச் சார்ந்து நின்று 'சொல்' என்னும் பொருளைத் தரும் உரிச்சொல்லாகும். ஆனால் நொடி என்பது பெயர் வினைகளைச் சாராது தனித்து நிற்கும்பொழுது 'வினாடி' எனும் பொருள் தரும். இவ்வாறு பெயர் வினைகளைச் சாராது வழங்கும் உரிச்சொற்களும் உண்டு.

வாய் மாற்றம் - மாற்றம்

அறிந்து நுவல் - நுவர்ச்சி

செப்பலுற்றேன் - செப்பு

உரைப்பவை - உரை

| | | |
|---|---|---|
| அறங்கரைநா | - | கரை |
| ஆயிழை நொடியும் | - | நொடி |
| இசையெனப் புக்கு | - | இசை |
| நாங்கள் கூற | - | கூற்று |
| புகன்ற அன்றியும் | - | புகறல் |
| கண்டது மொழிமோ | - | மொழி |
| கிளந்த கிளைமுதல் | - | கிளவி |
| விளம்பினர் புலவர் | - | விளம்பு |
| அறைகு வென்சொல்லே | - | அறை |
| அறம் பாடிற்று | - | பாட்டு |
| பகர்ந்தனர் புலவர் | - | பகர்ச்சி |
| இயம்பலுற்றேன் | - | இயம்பல் |

எனவே மாற்றம், நுவர்ச்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல் முதலிய 16 உரிச்சொற்களும் ‘சொல்’ என்னும் ஒரு குணத்தை உணர்த்துவனவாகும்.

**மாற்றம் நுவர்ச்சி செப்பு உரைகரை நொடிஇசை**
**கூற்றுப் புகறல் மொழிகிளவி விளம்புஅறை**
**பாட்டுப் பகர்ச்சி இயம்பல் சொல்லே (நன் : 458)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல்**

முன் குறிப்பிட்ட ஒரு குணத்தை உணர்த்தும் உரிச் சொற்கள் தவிர பெயர் வினைகளை விட்டு நீங்கி தனித்து இயங்கும் மேலும் பல உரிச்சொற்கள் உள்ளன. அவை,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முழங்குகடல் | - | முழங்கு | பல்லியம் துவைப்ப | - | துவை |
| குடியளைுயிரட்டும் | - | இரட்டு | பிளிறுவார் முரசு | - | பிளிறு |
| ஒலிபுன லூரன் | - | ஒலி | இரைக்கும் புனல் | - | இரை |
| கலிகெழுமூதூர் | - | கலி | இரங்கு முரசினம் | - | இரங்கு |
| பறைஇசையருவி | - | இசை | முரசமதியம்ப | - | இயம்ப |
| இமிழ் கடல் | - | இமிழ் | மாரியமுங்கினமூதூர் | - | அமுங்கு |
| குளிறு முரசம் | - | குளிறு | கௌவைக் கடல் | - | கௌவை |
| களித்திருக்கிறார் | - | அதிர் | வினைக் கம்பலை | - | கம்பலை |
| குரை புனலாறு | - | குரை | அரவத் தானை | - | அரவம் |
| கனைகடல் | - | கனை | ஆரத்த பல்லியம் | - | ஆர்ப்பு |
| சிலைத்தார் முரசம் | - | சிலை | கம்மை மிகுநாடு | - | கம்மை |

முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரங்கு, அமுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர், குரை, கனை, சிலை, கம்மை, கௌவை, கம்பலை, அரவம், ஆர்ப்பு முதலியன ஒரு குணத்தை உணர்த்தும் பல உரிச்சொற்கள் ஆகும். இவை போன்று அமையும் அமலை, துழனி, கரை முதலியனவும் ஆசை என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச் சொற்களாக அமைந்து வரும்.

**முழக்கு இரட்டு ஒலிகலி இசைதுவை பிளிறுஇரை**
**இரக்குஅமுங்கு இயம்பல் இமிழ்குளிறு அதிர்குரை**
**கனைசிலை கம்மை கௌவை கம்பலை**
**அரவம் ஆர்ப்போடு இன்னன ஓசை** (நன் : 459)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**உரியியலுக்குப் புறநடை**

பெயர், வினை, இடை, உரி ஆகிய நால்வகைச் சொற்களில் இன்னசொல் தன்மை, முன்னிலை, படர்க்கைகளிலும் வழக்கு, செய்யுள்களிலும் உரிச் சொல்லாகிய பண்புப் பெயர்களை அக்குணத்தை விரித்துக்கூறின் மற்றொன்று விரித்தல் என்னும் குற்றம் நேருமாயினும் வேண்டிய அளவு விரித்துக் கூறும் வழக்கினைக் காணலாம். இவை பற்றிய தெளிவான விளக்கம் பிங்கலத்தை, திவாகரம் முதலிய இலக்கண நூல்களில் காணப்பெறும் உரிச்சொல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. மேலும் பெயரியலுள் பெயர்ச்சொல் தொகுதியையும் வினையியலுள் வினைச்சொல் தொகுதியையும் இடையியலுள் இடைச்சொல் தொகுதியையும் விரித்துக் கூறாமைக்கு இதுவே புறநடை விதியாகும்.

**இன்னது இன்னுழி இன்னணம் இயலும்**

**என்றிசை நூலுள் குணகனிப் பெயர்கள்**
**சொல்லாம் பரத்தலில் பிங்கலம் முதலா**
**நல்லோர் உரிச்சொல்லின் நயந்தனர் கொளவே (நன் : 460)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**சொல்லதிகாரத்திற்குப் புறநடை**

சொற்கள்தோறும் இதன் இலக்கணம் இத்தகையது என முழுமையாகக் கூற முற்படின் வரம்பின்றி அமையும். எனவே எடுத்துக் கூறப்பட்ட சொற்களின் இலக்கணங்களைக் கொண்டு கூறப்படாதனவற்றின் இலக்கணங்களையும் ஒப்புமை கருதி இதுவும் அது போன்றது என தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் மாணாக்கரது கடமை என குறிப்பிடுகிறார் நன்னூலார்.

**சொல்தொறும் இற்றிதின் பெற்றியென்று அனைத்தும்**
**முற்ற மொழிகுளின் முடிவில ஆதலின்**
**சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்**
**தெற்றென உணர்தல் தெள்ளியோர் திறனே (நன் : 461)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**நன்னூலுக்குப் புறநடை**

முற்கால இலக்கணங்களுள் சில பிற்காலத்தில் மறைதலும் முற்காலத்தில் இல்லாதன சில பிற்காலத்தில் இலக்கணமாக வருதலும் உண்டு. இது குற்றமன்று. கால வேறுபாடு பற்றியது ஆதலால் இது குற்றமாகாது என்பது நன்னூலார் கருத்து. இதனை,

**பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையி னானே (நன் : 462)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

டாக்டர் கு. கதிரேசன் M.A., M.A. (yoga), M.Phil., Ph.D.
தமிழ்த்துறை, ஆதித்தனார் கலை அறிவியல் கல்லூரி
திருச்செந்தூர் - 628 216.